# பெரிய புராண விளக்கம்

## பகுதி - 9

'வாகீச கலாநிதி'
கி. வா. ஜகந்நாதன்

அல்லயன்ஸ் கம்பெனி
244, ராமகிருஷ்ணா மடம் சாலை
தபாற் பெட்டி எண் 617
மயிலாப்பூர், சென்னை - 600 004

உரிமை பதிவு
முதற் பதிப்பு — ஜூலை, 1991

விலை. ரூ. 33 - 50

©
ஆசிரியர்

பிஸ்மி பிரிண்டர்ஸ்,
சென்னை - 600 005.

## நூற்றாண்டை நோக்கி...

"தமிழில் நல்ல நூல்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸ் ஸ்தாபகர் ஸ்ரீ. வி. குப்புசுவாமி ஐயரை நான் பாராட்டுகின்றேன்."

**—மகாத்மா காந்தி**

"நீதிகளைக் கற்பிக்கும் சிறு கதைகளையும், பல நாடகங்களையும், பல மொழி பெயர்ப்புக்களையும், இன்னும் பல விஷயங்களையும் எளிய அழகிய நடையில் வெளியிட்டுவரும் அல்லயன்ஸாரை நான் பாராட்டுகிறேன்."

**—மகாமகோபாத்தியாய Dr. உ. வே சாமிநாத ஐயர்**

"Books published by Alliance Company are highly Popular Books."

**—Rt. Hon' ble V. S. Srinivasa Sastri**

"தமிழில் பல அழகிய புத்தகங்களை வெளியிட்டு வரும் அல்லயன்ஸாருக்கு நன்றி செலுத்தி அவர்களைத் தமிழ் மக்கள் ஆதரிக்க வேண்டும் என விரும்புகிறேன்."

**—சக்கரவர்த்தி ஸ்ரீ ராஜகோபாலாச்சாரியார்**

"அல்லயன்ஸ் கம்பெனியார் நல்ல நூல்களை வெளியிடுவதில் தேர்ந்தவர்கள். அவர்களுக்குத் தமிழ் நாட்டார் தக்க ஊக்கம் தர வேண்டும் என விரும்புகிறேன்."

**—தியாகி சத்தியமூர்த்தி**

"மயிலை அல்லயன்ஸ் கம்பெனியாரின் வெளியீட்டுத் திறத்தை ஈண்டு விரித்துக் கூற வேண்டியதில்லை. அதை நாடறியும். அல்லயன்ஸ் கம்பெனியாரால் வெளியிடப் பெற்ற நூல்கள் யாவும் தமிழ் நாட்டுக்குப் பல வழிகளிலும் பயன் விளைத்து வருதல் கண்கூடு. நாட்டு நலங் கருதி ஒழுங்கு முறையில் உழைக்கும் அவர்களுக்கு நாடு கடமைப் படுவதாக."

**—திரு. வி. க.**

# பொருளடக்கம்


1. குலச்சிறை நாயனார் புராணம் ... 5
2. பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம் ... 17
3. காரைக்கால் அம்மையார் புராணம் ... 47
4. அப்பூதியடிகள் நாயனார் புராணம் ... 144
5. திருநீலநக்க நாயனார் புராணம் ... 210
6. நமிநந்தியடிகள் நாயனார் புராணம் ... 268

# குலச்சிறை நாயனார் புராணம்

பெரிய புராணத்தில் 5-ஆவதாக விளங்கும் திருநின்ற சருக்கத்தில் இரண்டாவதாக வரும் குலச்சிறை நாயனார் புராணத்தின் முதற் பாடலின் கருத்து வருமாறு:

'பாராட்டிப் பல முறையும் கூறும் பழங்காலத்திலிருந்து வரும் புகழைப் பெற்ற நல்ல பாண்டி நாட்டில் சம்பா நெற் பயிர்கள் நிரம்பி வளரும் வயல்களும், இனிய சாற்றைப் பெற்ற கரும்புச் செடிகளுக்குப் பக்கத்தில் வளர்ந்து நிற்கும் கமுக மரங்களைப் பெற்ற வெளியில் உள்ள வயல்கள் சுற்றி விளங்குவது, நிலை பெற்று அமைந்த வண்மையைப் பெற்ற வள்ளல்கள் வாழ்வது திருமணமேற்குடி என்னும் சிவத்தலம்.' பாடல் வருமாறு:

"பன்னு தொல்புகழ்ப்
பாண்டிநன் னாட்டிடைச்
செந்நெ லார்வயல்
தீங்கரும் பின்னயல்
துன்னு பூகப்
புறம்பணை சூழ்ந்தது
மன்னு வண்மையி
னார்மண மேற்குடி."

பன்னு - பாராட்டிப் பல முறையும் கூறும். தொல் - பழங்காலத்திலிருந்து வரும். புகழ் - புகழைப் பெற்ற.

ப் : சந்தி. பாண்டி நன்னாட்டிடை - நல்ல பாண்டி நாட்டில். ச் : சந்தி. செந்நெல் - சம்பா நெற் பயிர்கள்; ஆகு பெயர்; ஒருமை பன்மை மயக்கம். ஆர் - நிரம்பி வளரும். வயல் - வயல்களும்; ஒருமை பன்மை மயக்கம். தீம் - இனிய சாற்றை பெற்ற. கரும்பின் - கரும்புச் செடிகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். அயல் - பக்கத்தில். துன்னு - வளர்ந்து நிற்கும். பூக - கமுக மரங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். ப் : சந்தி. புறம் - ஊருக்கு வெளியில் உள்ள. பணை - வயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். சூழ்ந்தது - சுற்றி விளங்குவது. மன்னு - நிலைபெற்று அமைந்த. வண்மையினார் - வள்ளன்மையைப் பெற்ற வள்ளல்கள் வாழ்வது; ஒருமை பன்மை மயக்கம். மணமேற்குடி - திருமணமேற்குடி என்னும் சிவத்தலம்.

பிறகு வரும் 2 - ஆம் கவியின் கருத்து வருமாறு :

'அந்தச் சிவத்தலமாகிய மணமேற்குடிக்குத் தலைமைப் பதவியை வகிப்பவரும், வன்றொண்டராகிய சுந்தர மூர்த்தி நாயனார் ஒப்புக் கூறுதற்கு அருமையாக விளங்கும் பெருநம்பி என்று பாராட்டிப் பேசப் பெற்றவரும், பாராட்டிப் பேசிய கூறுவதற்கு அருமையாக இருக்கும் சீர்த்தியைப் பெற்றவரும், பாண்டிய மன்னனுடைய முதல் அமைச்சரும் ஆகிய குலச்சிறை நாயனார் என்பவர் தம்முடைய திருவுள்ளத்தில் அமைந்த உறுதியாகிய செல்வத்தால் தாம் புரியும் பலவகைத் திருத்தொண்டுகளி லிருந்து தவறாதவர்.' பாடல் வருமாறு :

"அப்ப திக்கு முதல்வர்வன் றொண்டர்தாம்
ஒப்ப கும்பெரு நம்பிஎன் றோதிய
செப்ப ரும்சீர்க் குலச்சிறை யார்திண்மை
வைப்பி னால்திருத் தொண்டில் வழாதவர்."

அப்பதிக்கு - அந்தச் சிவத்தலமாகிய மணமேற்குடிக்கு. முதல்வர் - தலைமைப் பதவியை வகிப்பவரும். வன்

றொண்டர் தாம் - வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனார். தாம் : அசைநிலை. பெருநம்பி என்று - பெருநம்பி என்று பாராட்டிப் பேசப் பெற்றவரும்; வினையாலணையும் பெயர். குலச்சிறை நாயனாரைச் சுந்தர மூர்த்தி நாயனார் பாடியருளிய திருத்தொண்டத் தொகையில் 4-ஆம் பாசுரத்தில், "பெருநம்பி குலச்சிறைதன் அடியார்க்கும் அடியேன்" எனப் பாடியிருக்கிறார். ஓதிய-பாராட்டிப் பேசிய. செப்பரும் - எடுத்துக் கூறுவதற்கு அருமையாக இருக்கும். சீர் - சீர்த்தியைப் பெற்ற. க்:சந்தி. குலச் சிறையார் - பாண்டிய மன்னனுடைய முதல் அமைச்ச ராகிய குலச்சிறை நாயனார்; திண்மை - தம்முடைய திருவுள்ளத்தில் அமைந்த உறுதியாகிய. வைப்பினால் - செல்வத்தால். திருத்தொண்டில் - தாம் புரியும் பல வகைத் திருத்தொண்டுகளிலிருந்து; உருபு மயக்கம்; ஒருமை பன்மை மயக்கம். வழாதவர் - தவறாதவர்.

பிறகு வரும் 3-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'நெற்றியில் ஒற்றைக் கண்ணைப் பெற்றவராகிய சோமசுந்தரக் கடவுளுக்குப் பக்தர் என்ற காரணத்தினால் அவ்வாறு பாராட்டிக் கூறவே பக்தராக விளங்கி மகிழ்ச்சியை அடைந்து அந்தப் பக்தர்களுடைய திருவடி களின் மேல் நிறைந்திருக்கும் பக்தியோடு தரையில் விழுந்து வணங்கி விட்டுப் பிறகு தம்முடைய கைகளைத் தம்முடைய தலையின் மேல் வைத்து அஞ்சலியாக அரும்பி அன்பைப் பெற்ற நல்ல வார்த்தைகளைத் தம்முடைய திரு மாளிகைக்கு அந்தப் பக்தர்கள் அடைய திருவாய் மலர்ந் தருளிச் செய்திருப்பவர்.' பாடல் வருமாறு :

**"காரணம் கண்ணுதற் கன்பர் என்னவே**
**வார மாகி மகிழ்ந்தவர் தாள்மிசை**
**ஆரும் அன்பொடு வீழ்ந்தஞ் சலிமுகிழ்த்**
**தீர நன்மொழி எய்த இசைத்துளார். "**

கண்ணுதற்கு - தம்முடைய நெற்றியில் ஒற்றைக் கண்ணைப் பெற்றவராகிய சோமசுந்தரக் கடவுளுக்கு. அன்பர் - பக்தர். காரணம் - என்ற காரணத்தினால். என்னவே - அவ்வாறு பாராட்டிக் கூறவே. வாரம் ஆகி - பக்தராக விளங்கி. வாரம் : திணை மயக்கம். மகிழ்ந்து - மகிழ்ச்சியை அடைந்து. அவர் - அந்தப் பக்தர்களினுடைய: ஒருமை பன்மை மயக்கம். தாள் - திருவடிகளின்; ஒருமை பன்மை மயக்கம். மிசை - மேல். ஆரும் - நிறைந்திருக்கும். அன்பொடு - பக்தியோடு. வீழ்ந்து - தரையில் விழுந்து வணங்கி விட்டு. அஞ்சலி - பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு தம்முடைய தலையின் மேல் வைத்து அஞ்சலியாக. முகிழ்த்து - அரும்பி. ஈர - அன்பைப் பெற்ற; ''இன் சொலால் ஈரம் அளைஇ'' என்று திருக்குறளில் வருவதைக் காண்க. நன் - நல்ல. மொழி - வார்த்தை களை; ஒருமை பன்மை மயக்கம். எய்த - தம்முடைய திரு மாளிகைக்கு அந்தப் பக்தர்கள் வந்து சேர. இசைத் துளார் - திருவாய் மலர்ந்தருளிச் செய்திருப்பவர். உளார்: இடைக்குறை.

பிறகு வரும் 4-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அடையாளங்களால் அந்தணர், அரசர், வைசியர், வேளாளர் என்னும் நான்கு சாதிகளிற் பிறந்தவர்களா னாலும், தாம் வாழும் வழியில் அந்தச் சாதிகளி லிருந்து வேறுபட்ட பள்ளர், பறையர், சக்கிலியர் என்ற இழிகுலத்தில் பிறந்தவர்கள் ஆனாலும் தங்களுடைய அறிவுகள் சங்கரனாகிய சோமசுந்தரக் கடவுளுக்குப் பக்தர் என்று கூறும் பாக்கியத்தைப் பெற்றிருந்தால் அவர்களோடு கலத்தல் அமையுமாறு அந்தப் பக்தர்களை அவர்களுடைய திருவடிகளில் விழுந்து வணங்கிவிட்டு, பிறகு அந்தப் பக்தர் களைத் துதித்திருக்கும் செயலை உடையவர் அந்தக் குலச்சிறை நாயனார்.' பாடல் வருமாறு :

'' **குறியில் நான்கு குலத்தின ராயினும்**
**நெறியின் அக்குலம் நீங்கின ராயினும்**

**அறிவு சங்கரற் கன்பர் எனப்பெறில்**
**செறிவு றப்பணிந் தேத்திய செய்கையார்.''**

குறியில் - அடையாளங்களால்; உருபு மயக்கம்; ஒருமை பன்மை மயக்கம். நான்கு குலத்தினர் - அந்தணர், அரசர், வைசியர், வேளாளர் என்னும் நான்கு சாதிகளில் பிறந்தவர்கள். ஆயினும் - ஆனாலும். நெறியின் - தாம் வாழும் வழியில். அக்குலம் - அந்த நான்கு சாதிகளிலிருந்து; ஒருமை பன்மை மயக்கம். நீங்கினர் - வேறுபட்ட பள்ளர், பறையர், சக்கிலியர் என்ற இழிகுலத்தில் பிறந்தவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆயினும் - ஆனாலும். அறிவு - தங்களுடைய அறிவுகள்; ஒருமை பன்மை மயக்கம். சங்கரற்கு - சுகத்தைச் செய்பவராகிய சோமசுந்தரக் கடவுளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். என - என்று கூறுவதற்குரிய; இடைக்குறை. ப்: சந்தி. பெறில் - பாக்கியத்தைப் பெற்றிருந்தால். செறிவு - அவர்களோடு கலத்தல். உற - அமையுமாறு. ப்: சந்தி. பணிந்து - அந்தப் பக்தர்களை அவர்களுடைய திருவடிகளில் விழுந்து வணங்கிவிட்டு. ஏத்திய - பிறகு அந்தப் பக்தர்களைத் துதித்திருக்கும். செய்கையார் - செயலை உடையவர் அந்தக் குலச்சிறை நாயனார்

பிறகு வரும் 5-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள் ஏற்றுக் கொள்ளும் நன்மைகளைப் பெற்றவர்கள் ஆனாலும், அளவு இல்லாத கெட்ட செயல்களைப் புரிபவர்கள் ஆனாலும், பிறைச் சந்திரன் விளங்கும் சிவந்த சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய சோமசுந்தரக் கடவுளுக்கு அடியவர்கள் என்றால் அந்த அடியவர்களைத் தரையில் படிய விழுந்து வணங்கி விட்டு, அந்த அடியவர்களைத் துதிக்கும் தகுதியாகிய பான்மையைப் பெற்றவர் அந்தக் குலச்சிறை நாயனார்.'

பாடல் வருமாறு :

**"உலகர் கொள்ளும் நலத்தினர் ஆயினும்**
**அலகில் தீமையர் ஆயினும் அம்புலி**
**இலகு செஞ்சடை யார்க்கடி யாரெனில்**
**தலமு றப்பணிந் தேத்தும் தகைமையார்."**

உலகர் - இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். கொள்ளும் - ஏற்றுக் கொள்ளும். நலத்தினர் - நல்ல பண்புகளைப் பெற்றவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆயினும் - ஆனாலும். அலகு - கணக்கு. இல் - இல்லாத; கடைக்குறை. தீமையர் - கெட்ட செயல்களைப் புரிபவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆயினும் - ஆனாலும். அம்புலி - பிறைச்சந்திரன். இலகு - விளங்கும். செஞ்சடையார்க்கு - சிவந்த சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய சோமசுந்தரக் கடவுளுக்கு. அடியார் - அடியவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். எனில் - என்றால். தலம் - தரையில். உற - படிய. ப் : சந்தி. பணிந்து - அந்த அடியவர்களை விழுந்து வணங்கி விட்டு. ஏத்தும் - பிறகு தரையிலிருந்து நின்று கொண்டு அந்த அடியவர்களைத் துதிக்கும். தகைமையார் - தகுதியாகிய பான்மையைப் பெற்றவர் அந்தக் குலச்சிறை நாயனார்; தோன்றா எழுவாய்.

பிறகு உள்ள 6-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'நல்ல குணங்கள் மிக்கவர்களாகிய பக்தர்கள் பல பேர்களாகித் தம்முடைய திருமாளிகைக்கு வந்து சேர்ந்தாலும், உண்ணும் உணவைப் பெற விரும்பி ஒரு பக்தர் வந்து சேர்ந்தாலும், தம்முடைய எண்ணத்தில் பெருகுமாறு செய்த பக்தியோடு அந்தப் பக்தர்களுக்கு எதிரிற் சென்று வரவேற்று நேசம் மிகுதியாக அமைந்து திருவமுதை அந்தப் பக்தர்களை உண்ணச் செய்யும் நல்ல பண்பைப் பெற்றவர் அந்தக் குலச்சிறை நாயனார்.' பாடல் வருமாறு :

**" பண்பு மிக்கார் பலராய் அணையினும்
உண்ப வேண்டி ஒருவர் அணையினும்
எண்பெ ருக்கிய அன்பால் எதிர்கொண்டு
நண்பு கூர்ந்தமு தூட்டும் நலத்தினார், "**

பண்பு - நல்ல குணங்கள்; ஒருமை பன்மை மயக்கம், மிக்கார் - மிக்கவர்களாகிய பக்தர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பலராய் - பல பேர்களாகி; ஒருமை பன்மை மயக்கம். அணையினும் - தம்முடைய திருமாளிகைக்கு வந்து சேர்ந்தாலும். உண்ப - உண்ணுவதற்குரிய பண்டங் களை. அவையாவன : சம்பா அரிசிச்சோறு, வாழைக் காய்க்கறி, வெண்டைக்காய்க்கறி, புடலங்காய்க்கறி, அவரைக்காய்க்கறி, பூசணிக்காய்க்கறி, பறங்கிக்காய்க்கறி, கொத்தவரங்காய்க்கறி, கோவைக்காய்க்கறி முதலிய வியஞ்சனங்களும், குழம்பு, ரஸம், தயிர், பச்சடி, ஊறு காய், ஆசனப் பலகை, கைகழுவ நீர், வாயைத் துடைத்துக் கொள்ள துண்டு, பாயசம், வடை, அப்பளம், அதிரசம், குஞ்சாலாடு, மைசூர்ப்பாகு, பதிர்ப்பேணி, வாழைக்காய் வறுவல், கருணைக் கிழங்கு வறுவல் முதலியவை. வேண்டி - தாங்கள் பெறவிரும்பி. ஒருவர் - ஒரு பக்தர். அணையினும் - தம்முடைய திருமாளிகைக்கு வந்து சேர்ந்தாலும். எண் - தம்முடைய எண்ணத்தில். பெருக்கிய - பெருகுமாறு செய்த. அன்பால் - பக்தியோடு; உருபு மயக்கம். எதிர் கொண்டு - அந்தப் பக்தர்களுக்கு எதிரிற் சென்று அவர்களை வரவேற்று. நண்பு - நேசம். கூர்ந்து - மிகுதியாக அமைந்து. அமுது - திருவமுதை; பாற்சோற்றை. ஊட்டும் - உண்ணுமாறு செய்யும். நலத்தினார் - நல்ல பண்பைப் பெற்றவர் அந்தக் குலச் சிறை நாயனார்; இதுவும் தோன்றா எழுவாய்.

பிறகு வரும் 7-ஆம் கவியின் கருத்து வருமாறு :

'அந்தக் குலச்சிறை நாயனார் விபூதி, கௌபீன ஆடை, உருத்திராக்க மாலை, சடாபாரம் ஆகிய சைவ சமயத்துக்குரிய சாதனங்களால் விளங்கி எல்லாத் தேவர்

களுக்கும் முதல் தேவராகிய சோமசுந்தரக் கடவுளுக்கு உரிய ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரங்களாகிய அவற்றை உச்சரிக்கும் தம்முடைய நாவின் வளைவினால் ஓதுபவர்களாகிய சிவனடியார்களினுடைய திருவடிகளை ஒவ்வொரு நாளும் துதித்து வணங்கிய நல்ல பண்பைப் பெற்றவர்.' பாடல் வருமாறு :

**"பூதி கோவணம் சாதனத் தாற்பொலிந்**
**தாதி தேவர்தம் அஞ்செழுத் தாமவை**
**ஓது நாவணக் கத்தால் உரைப்பவர்**
**பாதம் நாளும் பரவிய பண்பினார்."**

பூதி - விபூதி. கோவணம் - கௌபீன ஆடை. சாதனத்தால் - உருத்திராக்க மாலை, சடாபாரம் ஆகிய சைவ சமயத்துக்குரிய சாதனங்களால்; ஒருமை பன்மை மயக்கம். பொலிந்து - விளங்கி. ஆதிதேவர்தம் - எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய சோமசுந்தரக் கடவுளுக்கு உரிய. தம் : அசைநிலை. அஞ்செழுத்து ஆம் - ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரமாகும். எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். அவை - அவற்றை. ஓது - உச்சரிக்கும். நா - தம்முடைய நாக்கின். வணக்கத்தால் - வளைவினால். உரைப்பவர் - ஓதுபவர்களாகிய சிவனடியார்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பாதம் - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். நாளும் - ஒவ்வொரு நாளிலும். பரவிய - துதித்து வணங்கிய. பண்பினார் - நல்ல பண்பைப் பெற்றவர்.

பிறகு உள்ள 8-ஆம் கவியின் கருத்து வருமாறு :

'இத்தகைய நல்ல ஒழுக்கத்தைப் பெற்றவர் அந்தக் குலச்சிறை நாயனார். முடிவு இல்லாத சீர்த்தியோடு விளங்கிய செந்தமிழ் நாட்டின் தெற்கில் உள்ள பாண்டி நாட்டை ஆட்சி புரிபவனாகிய நெடுமாறனுக்குச் சீர்த்தி

யோடு விளங்கும் நிலை பெற்ற புகழைக் கொண்ட அமைச்சர்களுக்கு மேலாக உள்ள முதல் அமைச்சர் அந்த நாயனார்; பகைவர்களைப் போரில் அழித்து உறுதியான நிலைமையில் நிலைத்து நின்றிருக்கிறவர் அந்த நாயனார்." பாடல் வருமாறு :

"இன்ன நல்லொழுக் கத்தினார்; ஈறில்சீர்த்
தென்ன வன்நெடு மாறற்குச் சீர்திகழ்
மன்னு மந்திரி கட்குமே லாகியார்;
ஒன்ன வர்ச்செற் றுறுதிக்கண் நின்றுளார்."

இன்ன - இத்தகைய. நல்லொழுக்கத்தினார் - நல்ல ஒழுக்கத்தைப் பெற்றவர் அந்தக் குலச்சிறை நாயனார்; தோன்றா எழுவாய். ஈறு - முடிவு. இல் - இல்லாத; கடைக்குறை. சீர் - சீர்த்தியோடு விளங்கிய. த் : சந்தி. தென்னவன் - செந்தமிழ் நாட்டின் தெற்குத் திசையில் உள்ள பாண்டி நாட்டை ஆட்சி புரிபவனாகிய. நெடு மாறற்கு - நெடுமாற நாயனார் என்னும் பாண்டிய மன்னனுக்கு. ச் : சந்தி. சீர் - சீர்த்தியோடு. திகழ் - விளங்கும். மன்னு - நிலை பெற்ற புகழைக் கொண்ட. மந்திரிகட்கு - பாண்டிய மன்னனுடைய அமைச்சர்களுக்கு. மேலாகியார் - மேலாக உள்ள முதல் அமைச்சர் அந்த நாயனார்; தோன்றா எழுவாய். ஒன்னவர் - பகைவர்களை; ஒருமை பன்மை மயக்கம். ச் : சந்தி. செற்று - போரில் அழித்து. உறுதிக் கண் - உறுதியான நிலைமையில். நின்றுளார் - நிலைத்து நின்றிருக்கிறவர் அந்த நாயனார்; தோன்றா எழுவாய். உளார்: இடைக்குறை.

அடுத்து வரும் 9-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அப்படி இருப்பதாகிய செய்கைகளைச் செய்பவராகியவர் அந்தக் குலச்சிறை நாயனார்; கங்கையாற்றைத் தன்னுடைய தலையின் மேல் அணிந்த நாயனாராகிய சோமசுந்தரக் கடவுளினுடைய திருவடிகளை நினைத்து அந்தக் கடவுளினுடைய புகழைச் சொல்லிக் கொண்டு

இருப்பவர் அந்தக் குலச்சிறை நாயனார். பாண்டி நாடு முழுவதும் பரவிய சீர்த்தியை அணிந்த பாண்டிய மன்னனுடைய பெருமையைப் பெற்ற பட்ட மகிஷியாராகிய மங்கையர்க்கரசியார் விரும்பிய திருத் தொண்டுகளுக்கு உண்மையான திருத்தொண்டர் ஆனவர் அந்தக் குலச்சிறை நாயனார்.' பாடல் வருமாறு :

**" ஆய செய்கைய ராமவர் ஆறணி**
**நாய னார்திருப் பாதம் நவின்றுளார்;**
**பாய சீர்புனை பாண்டிமா தேவியார்**
**மேய தொண்டுக்கு மெய்த்தொண்ட ராயினார்."**

ஆய - அப்படி இருப்பதாகிய. செய்கையராம் - செய்கைகளைச் செய்பவராகும். அவர் - அந்தக் குலச் சிறை நாயனார். ஆறு - கங்கையாற்றை. அணி - பகீரதனுடைய விருப்பத்தின்படி தம்முடைய தலையின் மேல் அணிந்து கொண்ட. நாயனார் - நாயனாராகிய சோமசுந்தரக் கடவுளினுடைய. திருப்பாதம் - திருவடி களை; ஒருமை பன்மை மயக்கம். நவின்றுளார் - நினைத்து அந்தக் கடவுளினுடைய புகழைச் சொல்லிக் கொண்டிருப் பவர். உளார் : இடைக்குறை. பாய - பாண்டிய நாடு முழுவதும் பரவிய. சீர் - சீர்த்தியை. புனை - அணிந்த பாண்டிமா தேவியார் - பாண்டிய மன்னனுடைய பெருமையைப் பெற்ற பட்டமகிஷியாராகிய மங்கையர்க் கரசியார். மேய - விரும்பிய, தொண்டுக்கு - திருத் தொண்டுகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். மெய் - உண்மையான. த் : சந்தி. தொண்டர் - உதவி புரியும் திருத்தொண்டர். ஆயினார் - ஆனவர் அந்தக் குலச்சிறை நாயனார்; தோன்றா எழுவாய்.

பிறகு உள்ள 10-ஆம் கவியின் கருத்து வருமாறு :

'பொலிவைப் பெறாத செயல்களைச் செய்வதில் விருப்பத்தைப் பெற்ற அருகத் பரமேஷ்டியை வணங்கும் சமணர்கள் கூறும் பொய்யாகிய வார்த்தைகளைப்

போக்கியருளவும், பாண்டிய மன்னர் ஆட்சி புரியும் பாண்டி நாட்டில் வாழும் பக்தர்கள் விபூதியை வாழ்த்தி அணியவும், நிலைபெற்று விளங்கும் சீகாழி நகரத்தில் வாழும் பக்தர்களினுடைய தலைவரும், வள்ளலாரு மாகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய தங்கத்தைப் போன்ற திருவடிகளைத் தம்முடைய தலையில் வைத்துக் கும்பிட்டு மகிழ்ச்சியை அடைந்த சிறப்பான பெருமையைப் பெற்றவர் அந்தக் குலச்சிறை நாயனார்.' பாடல் வருமாறு :

**" புன்ன யத்தரு கந்தர்பொய் நீக்கவும்**
**தென்னர் நாடு திருநீறு போற்றவும்**
**மன்னு காழியர் வள்ளலார் பொன்னடி**
**சென்னி சேர்த்தி மகிழ்ந்தசி றப்பினார்.''**

புன் - பொலிவைப் பெறாத. நயத்து - செயல்களைச் செய்வதில் விருப்பத்தைப் பெற்ற. அருகந்தர் - அருகத் பரமேஷ்டியை வணங்கும் சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பொய் - கூறும் பொய்யாகிய வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். நீக்கவும் - போக்கியருளவும். தென்னர் - பாண்டிய மன்னர். நாடு - ஆட்சி புரியும் பாண்டிய நாட்டில் வாழும் பக்தர்கள்; இட ஆகு பெயர். திருநீறு - விபூதியை. போற்றவும் - வாழ்த்தித் தங்களுடைய திருமேனிகள் முழுவதும் பூசிக்கொள்ளவும். மன்னு - நிலைபெற்று விளங்கும். காழியர் - சீகாழி நகரத்தில் வாழும் அந்தணர்களினுடைய தலைவரும். வள்ளலார் - வள்ளலாருமாகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய. பொன் - தங்கத்தைப் போன்ற. அடி - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். சென்னி - தம்முடைய தலையில், சேர்த்தி - வைத்துக் கும்பிட்டு. மகிழ்ந்த - மகிழ்ச்சியை அடைந்த. சிறப்பினார் - சிறப்பினைப் பெற்றவர் அந்தக் குலச்சிறை நாயனார்; தோன்றா எழுவாய்.

பிறகு வருவது இந்தக் குலச்சிறை நாயனார் புராணத்தின் இறுதிப் பாடல். அதன் கருத்து வருமாறு :

'திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் புரிந்தருளிய அனல் வாதம், புனல் வாதம், தருக்க வாதம் என்னும் வாதங்களில் தோல்வியை அடைந்த சமணர்களை வலிமையாகிய கழுக்களில் அவர்களால் உண்டாகிய தீங்குகள் அகலுமாறு ஏறச் செய்தவராகிய குலச்சிறை நாயனாருடைய திருத்தொண்டின் திறத்தை எந்த அளவில் வாழ்த்திப் பாடினேன்? இனிமேல் வேதங்கள் கூறிய நீதி களைத் தெரிந்து கொண்ட பெருமிழலைக் குறும்ப நாயனாருடைய திருவடிகளைத் துதித்து வணங்குவேன்.' பாடல் வருமாறு :

**" வாதில் தோற்ற அமணரை வன்கழுத்**
**தீது நீங்கிட ஏற்றுவித் தார்திறம்**
**யாது போற்றினேன்? மேலினி ஏத்துகேன்**
**வேத நீதி மிழலைக் குறும்பர்தாள்."**

வாதில் - திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் புரிந்தருளிய அனல் வாதம், புனல் வாதம், தருக்க வாதம், என்னும் மூன்று வகை வாதங்களில்; ஒருமை பன்மை மயக்கம். தோற்ற - தோல்வியை அடைந்த. அமணரை- சமணர்களை; ஒருமை பன்மை மயக்கம் வன் - வலிமையைப் பெற்ற. கழு - கழுக்களில்; ஒருமை பன்மை மயக்கம். த் : சந்தி. தீது - அந்தச் சமணர்களால் உண்டாகிய தீங்குகள்; ஒருமை பன்மை மயக்கம். நீங்கிட - அகலுமாறு. ஏற்றுவித்தார் - ஏறச் செய்தவராகிய குலச் சிறை நாயனார். திறம் - புரிந்த தொண்டுகளின் திறத்தை. யாது - எந்த அளவில். போற்றினேன் - வாழ்த்திப் பாடினேன். மேல் இனி - இனி மேல். வேத - வேதங்கள் கூறிய; ஒருமை பன்மை மயக்கம். நீதி - நீதிகளைத் தெரிந்து கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். மிழலைக் குறும்பர் - பெருமிழலைக் குறும்ப நாயனாருடைய. தாள் - திருவடிகளை. ஏத்துகேன் - துதித்து வணங்குவேன். இந்தப் பாடல் சேக்கிழார் அடுத்து வரும் பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணத்துக்குத் தோற்றுவாயாகப் பாடியருளியது.

# பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணம்

**இனிமேல் பெரிய புராணத்தில் 5-ஆவதாக உள்ள** *திருநின்ற சருக்கத்தில் 3-ஆவதாக விளங்கும் பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணத்தின் பாடல்களின் விளக்கத்தை எழுதத் தொடங்குகிறேன். அதில் வரும் முதற் பாட்டின் உள்ளுறை வருமாறு :*

*'மாமரங்களும், நெருங்கியிருக்கும் குலைகளை உடைய தென்ன மரங்களும், பலா மரங்களும், கமுக மரங்களும் சுற்றியுள்ள பக்கங்களைப் பெற்றதாகி ஒவ்வொரு வீதியிலும் விபூதியின் பிரகாசம் விரியுமாறு பூசியுள்ள பக்தர்கள் பொருந்தி விளங்குகின்ற சிவத்தலம், மனு நீதியிலிருந்து தவறாத வழியில் நடப்பவர்களாகி நிலைத்து வாழும் குடிமக்களால் நீளமான இந்த மண்ணுலகத்தின் மேல் திகழும் பழமையாக உள்ள திருப்பதி மிழலை நாட்டில் உள்ள பெருமிழலை என்னும் சிவத்தலம் ஆகும்.'' பாடல் வருமாறு :*

**'' சூதம் நெருங்கு குலைத்தெங்கு**
**பலவு பூகம் சூழ்புடைத்தாய்**
**வீதி தோறும் நீற்றின்ஒளி**
**விரிய மேவி விளங்குபதி**

நீதி வழுவா நெறியினராய்
நிலவும் குடியால் நெடுநிலத்து
மீது விளங்கும் தொன்மையது
மிழலை நாட்டுப் பெருமிழலை.''

சூதம் - மாமரங்களும்; ஒருமை பன்மை மயக்கம். நெருங்கு - நெருக்கமாக விளங்கும். குலை - காய்க்குலைகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். த் : சந்தி. தெங்கு - தென்னை மரங்களும்; ஒருமை பன்மை மயக்கம். பலவு - பலா மரங்களும்; ஒருமை பன்மை மயக்கம். பூகம் - கமுக மரங்களும்; ஒருமை பன்மை மயக்கம். சூழ் - சுற்றி வளர்ந்திருக்கும். புடைத்தாய் - பக்கங்களைப் பெற்றதாகி; ஒருமை பன்மை மயக்கம். வீதிதோறும் - ஒவ்வொரு தெருவிலும், நீற்றின் - விபூதியின். ஒளி - பிரகாசம். விரிய - விரியுமாறு. மேவி - பூசிக் கொண்டுள்ள பக்தர்கள் பொருந்தி; தோன்றா எழுவாய். விளங்கு - திகழும். பதி - சிவத்தலம். நீதி - மனுநீதியிலிருந்து. வழுவா - தவறாத. நெறியினராய் - வழியில் நடப்பவர்களாகி; ஒருமை பன்மை மயக்கம். நிலவும் - நிலைத்து வாழும். குடியால் - குடிமக்களால்; குடும்பங்களால் எனலும் ஆம்; ஒருமை பன்மை மயக்கம். நெடு - நீளமாகிய. நிலத்துமீது - இந்த மண்ணுலகத்தின்மேல். விளங்கும் - திகழும். தொன்மையது - பழமையைப் பெற்றதாகிய திருப்பதி. மிழலை நாட்டு - மிழலை நாட்டில் உள்ள. ப் : சந்தி. பெருமிழலை - பெருமிழலை என்னும் சிவத்தலம் ஆகும்.

அடுத்து வரும் 2 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அத்தகைய பழமையைப் பெற்ற அழகிய சிவத்தலமாகிய பெருமிழலையினுடைய தலைவராக விளங்குபவர் பெருமிழலைக் குறும்ப நாயனார். தம்முடைய தலையின் மேல் பிறைச்சந்திரனைத் தங்க வைத்திருப்பவராகிய சிவபெருமானாருக்கு அடியவர்களுக்கு உரியவையான தாம்

புரியும் பணிவிடைகளை, இத்தகைய முறையில் செய்க என்று அந்த அடியவர்கள் கூறுவதற்கு முன்பே அவர்களை அவர்களுடைய எதிரில் சென்று வரவேற்று அவர்களுடைய திருவுள்ளங்களில் உள்ள குறிப்பைத் தெரிந்து கொண்டு பணிவிடைகளைப் புரிபவராகி முதிர்ச்சியை அடைந்து விளங்கும் தம்முடைய அறிவினால் உண்டாகும் பிரயோசனத்தை அடைபவர் அந்தப் பெருமிழலைக்குறும்ப நாயனார்.' பாடல் வருமாறு :

**"அன்ன தொன்மைத் திருப்பதிக்கண்**
**அதிபர் மிழலைக் குறும்பனார்**
**சென்னி மதியம் வைத்தவர்தம்**
**அடியார்க் கான செய்பணிகள்**
**இன்ன வண்ணம் என்றவர்தாம்**
**உரையா முன்னம் எதிரேற்று**
**முன்னம் உணர்ந்து செய்வாராய்**
**முதிரும் அறிவின் பயன்கொள்வார்."**

அன்ன - அத்தகைய. தொன்மை - பழமையைப் பெற்ற. த் : சந்தி. திரு - அழகிய; 'செல்வத்தைப் படைத்தவர்கள் வாழும்' எனலும் ஆம்; திணை மயக்கம். ப் : சந்தி. பதிக்கண் - சிவத்தலமாகிய பெருமிழலையில். அதிபர் - தலைவராக விளங்குபவர். மிழலைக் குறும்பனார் - பெருமிழலைக் குறும்ப நாயனார். சென்னி - தம்முடைய தலையின் மேல். மதியம் - பிறைச் சந்திரனை. வைத்தவர்தம் - தங்க வைத்திருப்பவராகிய சிவபெருமானாருக்கு. தம்: அசைநிலை. அடியார்க்கு - அடியவர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். ஆன - உரியனவையான. செய் - தாம் புரியும். பணிகள் - பணிவிடைகளை. இன்ன - இத்தகைய. வண்ணம் - முறையில் செய்க. என்று - என. அவர்தாம் - அந்த அடியவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தாம் : அசைநிலை. உரையா முன்னம் - கூறுவதற்கு முன்பே. எதிர் - அவர்களுடைய எதிரில் சென்று. ஏற்று - அவர்களை வரவேற்று. முன்னம் அந்த

அடியவர்களுடைய திருவுள்ளங்களில் உள்ள குறிப்பை. உணர்ந்து - தெரிந்து கொண்டு, செய்வாராய் - அந்தப் பணிவிடைகளைப் புரிபவராகி, முதிரும் - முதிர்ச்சியை அடைந்து விளங்கும், அறிவின் - தம்முடைய அறிவினால் உண்டாகும், பயன் - பிரயோசனத்தை, கொள்வார் - அடைபவர் அந்தப் பெருமிழலைக் குறும்ப நாயனார்; தோன்றா எழுவாய்.

பிறகு உள்ள 3 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'சிவபெருமானுடைய திருத்தொண்டர்கள் பல பேர்களும் தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளி வந்து சேர்ந்து உண்ண உண்ணக் குறையாத திருவமுதை அந்தத் திருத்தொண்டர்கள் உண்ணுமாறு புரிந்து கொண்டு தம்முடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு போகக் குறைபாட்டை அடைந்து தம்முடைய திருமாளிகைக்கு வந்து சேர்பவர்களாகிய அந்தத் திருத்தொண்டர்களுக்குப் பெரிய செல்வத்தை மொண்டு மொண்டு வழங்கி வண்டுகள் வந்து மொய்க்கும் கூந்தலைப் பெற்ற உமாதேவியாருடைய கணவனாகிய சிவபிரானுடைய சிவந்த திருவடிகள் என்று கூறப்பெறும் செந்தாமரை மலர்களைத் தம்முடைய இருதய புண்டரீகத்தில் வைத்து வாழ்த்தி அந்தத் தொண்டர்களை வணங்கும் சிறந்த பண்பைப் பெற்றவர் அந்தப் பெருமிழலைக் குறும்ப நாயனார்.' பாடல் வருமாறு :

**"தொண்டர் பலரும் வந்தீண்டி**
**உண்ணத் தொலையா அமுதூட்டிக்**
**கொண்டு செல்ல இருநிதியம்**
**முகந்து கொடுத்துக் குறைந்தடைவார்**
**வண்டு மருவும் குழலுமையாள்**
**கேள்வன் செய்ய தாளென்னும்**
**புண்ட ரீகம் அகமலரில்**
**வைத்துப் போற்றும் பொற்பினார்."**

தொண்டர் - சிவபெருமானுடைய திருத்தொண்டர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பலரும் - பலபேர்களும். வந்து - தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளி வந்து. ஈண்டி - சேர்ந்து. உண்ண - உண்ண. த் : சந்தி. தொலையா - சிறிதேனும் குறையாத. அமுது - திரு அமுதை; சோற்றை. ஊட்டிக்கொண்டு - அந்தத்திருத்தொண்டர்கள். உண்ணுமாறு புரிந்துகொண்டு. செல்ல - தம்முடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு போக. குறைந்து - செல்வத்தில் குறைபாட்டை அடைந்து. அடைவார் - தம்முடைய திருமாளிகைக்கு வந்து சேர்பவர்களாகிய அந்தத் திருத்தொண்டர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். இரு - பெரிய. நிதியம் - செல்வத்தை. முகந்து - மொண்டு மொண்டு. கொடுத்து - வழங்கி. வண்டு - வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். மருவும் - பறந்து வந்து மொய்க்கும். குழல் - கூந்தலைப் பெற்ற. உமையாள் - உமாதேவியினுடைய. கேள்வன் - கணவனாகிய சிவபெருமானுடைய. செய்ய - சிவந்த. தாள் - திருவடிகள்; ஒருமை பன்மை மயக்கம். என்னும் - என்று கூறப்பெறும். புண்டரீகம் - செந்தாமரை மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். அகமலரில் - தம்முடைய இருதய புண்டரீகத்தில். வைத்துப் போற்றும் - வைத்துக்கொண்டு வாழ்த்தி அந்தத் திருத்தொண்டர்களை வணங்கும். பொற்பினார் - சிறந்த பண்பைப் பெற்றவர் அந்தப் பெருமிழலைக் குறும்ப நாயனார்; தோன்றா எழுவாய்.

பிறகு வரும் 4-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தப் பெருமிழலைக் குறும்ப நாயனார் இந்தப் பான்மையைப் பெற்றவராகி தம்முடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டு செல்லும் காலத்தில் ஒரு வரம்பு இல்லாத திருத்தொண்டுகளினுடைய உண்மையாகிய பான்மையை இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள் தெரிந்துகொள்ளுமாறு விதிமுறையோடு திருத்தொண்டர்களைப் பணிந்து உண்மையான சிவனடியவர்களுடைய திரு

வுள்ளங்களில் நிலைத்து நிற்கும் திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தைப் பாடியருளிய ஆளுடைய நம்பியாகிய சுந்தரமூர்த்தி நாயனாரை வணங்கிவிட்டு என்றும் நிலைத்திருப்பவனாகிய கிருபாபுரீசன் வழங்கிய திருவருளைப் பெற்றவராகிய அந்தச் சுந்தர மூர்த்தி நாயனாருடைய திருவடிகளைத் தியானிக்கும் நியமத்தில் தலை சிறந்து நின்றவர் அந்தப் பெருமிழலைக் குறும்ப நாயனார்.' பாடல் வருமாறு :

"இத்தன் மையராய் நிகழும்நாள்
எல்லை இல்லாத் திருத்தொண்டின்
மெய்த்தன் மையினை உலகறிய
விதியால் வணங்கி மெய்யடியார்
சித்தம் நிலவும் திருத்தொண்டத்
தொகைபா டியநம் பியைப்பணிந்து
நித்தன் அருள்பெற் றவர்பாதம்
நினைக்கும் நியமத் தலைநின்றார்."

இத்தன்மையராய் - அந்தப் பெருமிழலைக் குறும்ப நாயனார் இந்தப் பான்மையைப் பெற்றவராகி. பெரு மிழலைக் குறும்ப நாயனார்: தோன்றா எழுவாய். நிகழும் - தம்முடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டு செல்லும். நாள் - காலத்தில். எல்லை - ஒருவரம்பு. இல்லா - இல்லாத. த்: சந்தி. திருத்தொண்டின் - திருத்தொண்டுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். மெய் - உண்மையாகிய. த்: சந்தி. தன்மையினை - பான்மையை. உலகு - இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள்; இடஆகு பெயர். அறிய - தெரிந்து கொள்ளு மாறு. விதியால் - சாத்திரங்கள் விதித்த விதிமுறையோடு; உருபு மயக்கம். வணங்கி - திருத் தொண்டர்களைப் பணிந்து. மெய் - உண்மையாகிய. அடியார் - சிவனடியார் களுடைய; ஒருமை பன்மை மயக்கம். சித்தம் - திருவுள்ளங் களில்; ஒருமை பன்மை மயக்கம். நிலவும் - நிலைத்து நிற்கும். திருத்தொண்டத் தொகை - சொல்லிக்

கௌவாணப் பண்ணில் அமைந்த திருத்தொண்டத்தொகை என்னும் திருப்பதிகத்தை. பாடிய - பாடியருளிய. நம்பியை - ஆளுடைய நம்பியாகிய சுந்தரமூர்த்தி நாயனாரை. ப் : சந்தி. பணிந்து - பெருமிழலைக்குறும்ப நாயனார் வணங்கிவிட்டு. நித்தன் - என்றும் நிலைத்து நிற்பவனாகிய கிருபாபுரீசன். அருள் - வழங்கிய திருவருளை. பெற்றவர் - பெற்றவராகிய அந்தச் சுந்தர மூர்த்தி நாயனாருடைய. பாதம் - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். நினைக்கும் - தியானம் செய்யும். நியம - நியமத்தில். த் : சந்தி. தலை நின்றார் - தலை சிறந்து நின்றவர்.

பிறகு வரும் 5 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'மையை நிரம்பத் தடவிக்கொண்ட விசாலமாகிய கண்களைப் பெற்ற பரவை நாச்சியாருடைய கணவனாகிய சுந்தரமூர்த்தி நாயனாருடைய செந்தாமரை மலர்களைப் போல இருப்பவையும், வீரக் கழல்களை அணிந்தவை களுமாகிய திருவடிகளைத் தம்முடைய கைகளால் கும்பிட்டு வணங்கித் தம்முடைய திருவாயினால் வாழ்த்துக் களைக் கூறித் தம்முடைய திருவுள்ளத்தினால் தியானம் புரியும் கடமையில் சிவந்த திருமேனியைப் பெற்றவளாகிய திருமகளினுடைய கணவனாகிய திருமாலும் நான்கு முகங்களைப் பெற்றவனாகிய பிரமதேவனும் பன்றி உருவத்தை எடுத்து நிலத்தைத் தோண்டிப் பார்த்தும் அன்னப் பறவையினுடைய வடிவத்தை எடுத்துக் கொண்டு மேலே பறந்து பார்த்தும் திருவடிகளையும், திருமுடியையும் தெரிந்து கொள்ளாத சிவந்த தங்கத்தைப் போன்ற இரண்டு திருவடிகளின் கீழே உஜ்ஜீவனத்தை அடையும் பொருட்டு அந்தத் திருவடிகளைச் சேர்வதற்கு உரியதாக அமைந்த வழி இதுதான் என எண்ணி பக்தியோடு தம்முடைய வாழ்க்கையைச் செலுத்திக் கொண்டு வந்தார் அந்தப் பெருமிழலைக் குறும்ப நாயனார்.' பாடல் வருமாறு :

"மையார் தடங்கட் பரவையார்
மணவா ளன்றன் மலர்க்கழல்கள்
கையால் தொழுது வாய்வாழ்த்தி
மனத்தால் நினைக்கும் கடப்பாட்டில்
செய்யாள் கோனும் நான்முகனும்
அறியாச் செம்பொற் றாளிணைக்கீழ்
உய்வான் சேர உற்றநெறி
இதுவே என்றன் பினில்உய்ந்தார்."

மை - அஞ்சனத்தை. ஆர் - நிரம்பத் தடவிக்கொண்ட. தடம் - விசாலமாகிய. கண் - கண்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். பரவையார் - பரவை நாச்சியாருடைய. மணவாளன் தன் - கணவனாகிய சுந்தரமூர்த்தியினுடைய. தன்: அசைநிலை. மலர் - செந்தாமரை மலர்களைப் போன்றவையும்; ஒருமை பன்மை மயக்கம்; உவம ஆகு பெயர். க்: சந்தி. கழல்கள் - வீரக் கழல்களைப் பூண்டவையுமாகிய திருவடிகளை; ஆகுபெயர். கையால் - தம்முடைய கைகளால்; ஒருமை பன்மை மயக்கம். தொழுது - கும்பிட்டு வணங்கி. வாய் - தம்முடைய திருவாயினால். வாழ்த்தி - வாழ்த்துக்களைக் கூறி. மனத்தால் - தம்முடைய திருவுள்ளத்தினால். நினைக்கும் - தியானம் புரியும். கடப்பாட்டில் - கடமையில். செய்யாள் - சிவந்த திருமேனியைப் பெற்றவளாகிய திருமகளினுடைய. கோனும் - திருமாலும். நான்முகனும் - நான்கு முகங்களைப் பெற்றவனாகிய பிரமதேவனும். முகம்: ஒருமை பன்மை மயக்கம். அறியா - பன்றி உருவத்தை எடுத்துக் கொண்டு நிலத்தைத் தோண்டிப் பார்த்தும் அன்னப் பறவையினுடைய வடிவத்தை எடுத்துக்கொண்டு மேலே பறந்து தேடிப் பார்த்தும் திருவடிகளையும் திருமுடியையும் தெரிந்து கொள்ளாத. ச்: சந்தி. செம் - சிவப்பாக விளங்கும். பொன் - தங்கத்தைப் போன்ற; உவம ஆகு பெயர். தாள் இணைக்கீழ் - இரண்டு திருவடிகளின் கீழே. தாள்: ஒருமை பன்மை மயக்கம். உய்வான் - உஜ்ஜீவனத்தை

அடையும் பொருட்டு. சேர - அந்தத் திருவடிகளைச் சேர்வதற்கு. உற்ற - உரியதாக அமைந்த. நெறி - வழி. இதுவே - இதுதான். என்று - என எண்ணி. அன்பினில் - பக்தியோடு; உருபு மயக்கம். உய்ந்தார் - அந்தப் பெருமிழலைக் குறும்ப நாயனார் தம்முடைய வாழ்க்கையைச் செலுத்திக் கொண்டு வந்தார். பெருமிழலைக் குறும்ப நாயனார்: தோன்றா எழுவாய்.

மையார் தடங்கண்: ''மையினார் மலர் நெடுங்கண் மலைமகள்.'', ''மையார் ஒண்கண்ணார்.'', ''மைம்மா நீலக்கண்ணியர்.'', ''மையணி கண் மடவார்.'', ''மைப் பயந்த ஒண்கண் மடநல்லார்.'', ''மைப்பூசும் ஒண்கண் மடநல்லார்.'', ''மைப்புரை கண் உமைபங்கன்.'', ''மைய கண் மலைகள்.'', ''மையாரொண்கண் நல்லாள் உமையாள்.'', ''மைத்தகு மதர்விழி மலைமகள்.'' என்று திருஞான சம்பந்தமூர்த்தி நாயனாரும், ''மையரில் கண்ணியாளும்.'', ''மையினார் மலர்நெடுங் கண்மங்கை.'', ''மையரில் மதர்த்த ஒண்கண் மாதரார்.'', ''மைஞ்ஞின்ற ஒண்கண் மலைமகள்.'', ''மைம் மலர் நீல நிறங்கருங்கண்ணி.'', ''மைகொள் கண்மை'', ''மையார் மலர்க் கண்ணாள் பாகர்.'', ''மைப்படிந்த கண்ணாளும்.'', ''மை விரவு கண்ணாளைப் பாகம் கொண்டாய்.'', ''மையோடு கண் மடவாள் பாகத்தானே.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''மையார் தடங்கண்ணியர்.'', ''மையார் கண்ணி பங்கா.'', ''மையார் தடங் கண்ணி பங்கா.'', ''மையார் தடங்கண் மடந்தை பங்கா.'' என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், ''மைகலந்த கண்ணி பங்க.'', ''மையிலங்கு நற்கண்ணி பங்கனே.'', ''மையார் தடங் கண் மடந்தை மணவாளா.'', ''மைப் பொலியும் கண்ணி.'' என்று மாணிக்கவாசகரும், ''மைப்புரை கண்ணுக்கு.'', ''மையார் தடங்கண் மடந்தையர்.'', ''காவியங்கண்ணைக் கதம் தணிப்பாள் போலத்தன்றாவிய அஞ்சனத்தை முன் ஊட்டி'', ''அஞ்சனம் ஆடி...பெருகிய

கண்.'' என்று சேரமான் பெருமாள் நாயனாரும், ''அம்மைக் கருங்கண்ணி.'' என்று பட்டினத்துப்பிள்ளை யாரும், ''மை திகழ்கண்ணியை.'' என்று நம்பியாண்டார் நம்பியும், ''மைவிரவு கண்ணார் பால்.'' என்று சேக்கி ழாரும், ''மையார் நெடுங்கண்.'', ''மையார் கண்ணியைப் பொய்யானாகி.'', ''மைதவழ் கண்ணி.'', ''மைநோய் கண்ணி மதியின் மெலிய.'', ''மை வளர் கண்ணி.'', ''மை கொள் கண்ணியர்.'' (பெருங்கதை) என்று கொங்கு வேளிரும், ''மைவிலை பெற்ற கண்ணாள்.'', ''மைவிழி நெடுங்கணாளை.'', ''மை பூத்தலர்ந்த மழைக்கண்.'', ''மை கலந்து கண்கள் வெம்பனி உகுத்த அன்றே.'' (சீவக சிந்தாமணி, 1104, 1758, 2198, 2508) என்று திருத்தக்க தேவரும், ''மையுண் கண்ணி மடந்தை.'' (சிலப்பதிகாரம், 10 அடிக்குறிப்பு), ''மைத்தடங்கண்ணியை கோதை.'', ''மையார் கண்மட ஆய்ச்சியர்.'', ''அம்மைத் தடங்கண்மட ஆய்ச்சியரும்.'' என்று பெரியாழ்வாரும், ''மையரி ஒண் கண்ணியாரும்.'' என்று குலசேகரப் பெருமாளும், ''மை யணைந்த குவளைகள்கண்கள் என்றும்.'' என்று குலசேகரப் பெருமாளும், ''மையார் வரிநீலம் மலர்க்கண்ணார்.'', ''மைந்நம்பு வேற்கண் நல்லாள்.'' என்று திருமங்கையாழ் வாரும், ''மைய கண்ணாள் மலர்மேல் உறைவாள்.'', ''மையார் கருங்கண்ணி கமல மலர் மேற் செய்யாள்.'' என்று நம்மாழ்வாரும், ''மையரிவாட்டங்கண்.'' (காஞ்சிப் புராணம்) என்று சிவஞான முனிவரும், ''மையரி நெடுங் கண் நோக்கம்.'', ''மைதாழ் கருங்கண்கள் சிவப்புற.'', ''மை தவழ்ந்த கருங்கண் ஓர் வாணுதல்.'', ''மைந்நிறை கண்ணியர்.'', ''மை கண்ணி செய்ய பாதம்.'', ''மைந் நின்ற வாட்கண் மயில் நின்றென வைந்து.'', ''பேதையர் அஞ்சனக் கண் என.'' என்று கம்பரும் பாடியவற்றையும், ''மையார் கண் மடவாரோ.'' என்று உத்தர காண்டத்தில் வருவதையும் காண்க.

பிறகு வரும் 6-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தப் பெருமிழலைக்குறும்ப நாயனார் ஒவ்வொரு நாளும் நம்பி ஆரூரராகிய சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருநாமத்தை உச்சரித்த நன்மையினால் தாம் ஆட்சி புரியும் வகையினால் அணிமா, வகிமா, மகிமா, பிராத்தி, கரிமா, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்னும் அட்டமா சித்திகளானவற்றைப் பெற்றதற்குப் பிறகு தம்முடைய திருவுள்ளத்தில் மூண்டு எழும் விருப்பம் அவற்றோடு பெருகி எழ முதல்வராகிய சிவபெருமானாருக்கு உரிய திருநாமமாகிய ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தையும் தம்முடைய நண்பரும், செல்வரும், உணர்ச்சியும் ஆக விளங்கும் இயல்பு வாய்ப்பாக அமைய தம்முடைய திருவவதாரத் தலமாகிய பெருமிழலையில் பொருந்தித் தங்கிக் கொண்டிருந்தார்.' பாடல் வருமாறு :

**"நாளும் நம்பி ஆரூரர்**
**நாமம் நவின்ற நலத்தாலே**
**ஆளும் படியால் அணிமாதி**
**சித்தி ஆன அணைந்ததற்பின்**
**மூளும் காத லுடன்பெருக**
**முதல்வர் நாமத் தஞ்செழுத்தும்**
**கேளும் பொருளும் உணர்வுமாம்**
**பரிசு வாய்ப்பக் கெழுமினார்."**

நாளும் - அந்தப் பெருமிழலைக்குறும்ப நாயனார் ஒவ்வொரு நாளும். பெருமிழலைக் குறும்ப நாயனார்: தோன்றா எழுவாய். நம்பி ஆரூரர் - நம்பி ஆரூரராகிய சுந்தரமூர்த்தி நாயனாருடைய. நாமம் - திருநாமத்தை. நவின்ற - உச்சரித்த; 'ஓதிய' எனவும் ஆம். நலத்தால் - நல்ல செய்கையால். ஏ : அசை நிலை. ஆளும் - தாம் ஆட்சி புரியும். படியால் - வகையினால். அணிமாதி - அணிமா முதலிய. சித்தி-சித்கள்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன: அணிமா, வகிமா, மகிமா, பிராத்தி, கரிமா, பிராகாமியம், ஈசத்துவம், வசித்துவம் என்பவை.

ஆண - ஆணவற்றை. அணைந்ததற்பின் - பெற்றதற்குப் பிறகு. மூளும் - தம்முடைய திருவுள்ளத்தில் மூண்டு எழும். காதல் - விருப்பம். உடன் - அவற்றோடு. பெருக - அவற்றோடு பெருகி எழ. முதல்வர் - எல்லாத் தேவர்களுக்கும் முதல் தேவராகிய மகாதேவருக்கு உரிய. நாமத்து - திருநாமமாகிய. அஞ்சு எழுத்தும் - ந, ம, சி, வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தையும். எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். 'நமசிவாய' என்பதைச் சிவபெருமானுடைய திருநாமமாகக் கூறுவது மரபு: ''நந்தி நாமம் நமசிவாயவே'' என்று வருதலைக் காண்க: கேளும் - நண்பரும்; 'உறவினரும்' எனலும் ஆம். பொருளும் - செல்வமும். உணர்வும் - உணர்ச்சியும். ஆம் - ஆக விளங்கும். பரிசு - இயல்பு; வாய்ப்ப - வாய்ப்பாக அமைய. க் : சந்தி. கெழுமினார் - அந்த நாயனார் தம்முடைய திருவவதாரத் தலமாகிய பெருமிழலையில் பொருந்தித் தங்கிக் கொண்டிருந்தார்.

பிறகு வரும் 7 -ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'இத்தகைய முறையில் இந்தப் பெருமிழலைக் குறும்ப நாயனார் தம்முடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு போக இடபத்தைத் துவசமாக மேலே உயர்த்திப் பிடித்தவராகிய சிவபெருமானார் தம்முடைய தங்கத்தைப் போன்றவையும் அழகியவையும் வெள்ளிக் கழல்களைப் பூண்டவையுமாகிய திருவடிகள் தலையின்மேல் படியுமாறு எழுந்தருளி வந்து வழக்கைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்து நிலைபெற்று விளங்கும் அடிமை ஓலையைத் திருவெண்ணெய் நல்லூரில் உள்ள நியாய சபைக்கு முன்னால் காண்பித்தருளி கிருபாபுரீசர் தமக்கு ஆளாகத் தடுத்து ஆண்டு கொண்ட வன்றொண்டராகிய சுந்தர மூர்த்தி நாயனார் தங்களுடைய உச்சிகளின்மேல் சந்திரன் தவழும் மாடங்கள் நிரம்பி விளங்கும் கொடுங்கோளூரை அடையலானார்.' பாடல் வருமாறு :

"இன்ன வாறே இவர்ஒழுக
ஏறு கொடிமேல் உயர்த்தவர்தம்
பொன்னங் கழல்கள் மண்ணின்மேற்
பொருந்த வந்து வழக்குரைத்து
மன்னும் ஓலை அவைமுன்பு
காட்டி ஆண்ட வன்றொண்டர்
சென்னி மதிதோய் மாடமலி
கொடுங்கோ ளூரைச் சேர்வுற்றார்."

இன்னவாறு - இத்தகைய முறையில். ஏ : அசை நிலை. இவர் - இந்தப் பெருமிழலைக்குறும்ப நாயனார். ஒழுக - தம்முடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு போக. ஏறு - இடபத்தை. கொடி - துவசமாக. மேல் உயர்த்தவர் - உயர்த்திப் பிடித்தவராகிய சிவபெருமானார். தம் - தம்முடைய. பொன் - தங்கத்தைப் போன்ற; உவம ஆகுபெயர். அம் - அழகிய. கழல்கள் - வெற்றிக் கழல் களைப் பூண்ட திருவடிகள்; ஆகுபெயர். மண்ணின்மேல் - தரையின்மேல். பொருந்த - படியுமாறு. வந்து - எழுந்தருளி வந்து. வழக்கு - ஒரு வழக்கை. உரைத்து - திருவாய் மலர்ந்தருளிச் செய்து. மன்னும் - நிலைபெற்று விளங்கும். ஓலை - அடிமை ஓலையை. அவை - திருவெண்ணெய் நல்லூரில் உள்ள நியாய சபைக்கு. முன்பு - முன்னால் காட்டி - காண்பித்தருளி. ஆண்ட - கிருபாபுரீசர் தமக்கு ஆளாகத் தடுத்து ஆண்டுகொண்ட. வன்றொண்டர் - வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனார். சென்னி - தங்களுடைய உச்சிகளின் மேல்; ஒருமை பன்மை மயக்கம். மதி - சந்திரன். தோய் - தவழும். மாடம் - மாடங்கள்; ஒருமை பன்மை மயக்கம். மலி - நிரம்பி விளங்கும். கொடுங்கோளூரை - மலை நாட்டில் உள்ள கொடுங்கோளூர் என்னும் சிவத்தலத்தை. ச் : சந்தி. சேர்வுற்றார் - அந்த நாயனார் அடையலானார்.

பிறகு வரும் 8 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்தச் சுந்தரமூர்த்தி நாயனார் அவ்வாறு கொடுங் கோளூருக்கு எழுந்தருளித் திருவஞ்சைக் களத்தில் திருக் கோயில் கொண்டு எழுந்தருளியிருப்பவரும், பாற்கடலில் எழுந்த ஆலகாலவிடத்தை விழுங்கியருளியவரும், அமு தத்தைப் போன்றவருமாகிய திருவஞ்சைக் களத்தப்பரைப் புகழ்ந்து அடைபவராகிய அந்த நாயனார் செம்மையாகிய இனிய சொற்கள் அமைந்த செந்தமிழ் மொழியில் அமைந்த மாலைகளாகிய பல திருப்பதிகங்களைப் பாடியருள எல்லாத்தேவர்களுக்கும் முதல் தேவராகிய அந்த அஞ்சைக் களத்தப்பர் வழங்கிய திருவருளினால் மேகங்களினிடையே விளங்கும் வடக்குத் திசையில் விளங்கும் கயிலாய மலையை அடைவதற்காக வரும் வாழ்வைத் தம்முடைய திருவுள்ளத்தில் தெளியுமாறு இந்தப் பெருமிழலையில் நெடுங்காலமாகப் புகழோடு விளங்கும் பெருமிழலையில் திருவவதாரம் செய்தருளிய பெருமிழலைக் குறும்ப நாயனார் தெரிந்து கொண்டார்.' பாடல் வருமாறு :

**"அஞ்சைக் களத்து நஞ்சுண்ட**
**அமுதைப் பரவி அணைவுறுவார்**
**செஞ்சொல் தமிழ்மா லைகள்மொழியத்**
**தேவர் பெருமான் அருளாலே**
**மஞ்சில் திகழும் வடகயிலைப்**
**பொருப்பில் எய்த வரும்வாழ்வு**
**நெஞ்சில் தெளிய இங்குணர்ந்தார்**
**நீடு மிழலைக் குறும்பனார்."**

அஞ்சைக் களத்து - அந்தச் சுந்தரமூர்த்தி நாயனார் அவ்வாறு கொடுங்கோளூருக்கு எழுந்தருளி திருவஞ்சைக் களத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும்; ஆகுபெயர். நஞ்சு-பாற்கடலில் எழுந்த ஆலகாலவிடத்தை. உண்ட - விழுங்கிய. அமுதை - அமுதத்தைப் போன்ற அஞ்சைக் களத்தப்பரை; உவம ஆகுபெயர். ப் : சந்தி. பரவி - புகழ்ந்து. அணைவுறுவார் - அடைபவராகிய அந்தச் சுந்தரமூர்த்தி நாயனார். செம்-செம்மையாக உள்ள.

சொல் - இனிய சொற்களைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். தமிழ் - செந்தமிழ் மொழியில் அமைந்த. மாலைகள் - மாலைகளாகிய பல திருப்பதிகங்களை. மொழிய - பாடியருள. த் : சந்தி. தேவர் - எல்லாத் தேவர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். பெருமான் - முதல் தேவராகிய அந்த அஞ்சைக் களத்தப்பர். அருளால் - வழங்கிய திருவருளினால். ஏ : அசைநிலை. மஞ்சில் - மேகங்களுக்கு இடையில்; ஒருமை பன்மை மயக்கம். திகழும் - விளங்கும். வட - வடதிசையில் விளங்கும். கயிலைப் பொருப்பில் - கயிலாய மலையை; உருபு மயக்கம். எய்த வரும் - அடைவதற்காக வரும். வாழ்வு - வாழ்வை. நெஞ்சில் - தம்முடைய திருவுள்ளத்தில். தெளிய - தெளிவை அடையுமாறு. இங்கு - இந்தப் பெருமிழலையில். நீடு - நெடுங்காலமாகப் புகழோடு விளங்கும். மிழலை - பெருமிழலையில் திருவவதாரம் செய்தருளிய; ஆகுபெயர். க் : சந்தி. குறும்பனார் - பெருமிழலைக் குறும்ப நாயனார். உணர்ந்தார் - தெரிந்து கொண்டார்.

திரு அஞ்சைக் களம்: இது மலை நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவர் அஞ்சைக் களத்தீசர்; அஞ்சைக் களத்தப்பர் எனவும் வழங்கப் பெறுவார். அம்பிகை உமையம்மை. தீர்த்தம் சிவகங்கை. இது இருஞாலக்கொடை என்னும் ஊருக்குத் தெற்குத் திசையில் 4 மைல் தூரத்தில் உள்ளது. சுந்தரமூர்த்தி நாயனார் வெள்ளையானையின் மேலும், அவருடைய தோழராகிய சேரமான் பெருமாள் நாயனார் குதிரையின் மேலும் ஏறிக்கொண்டு கயிலாயத்துக்கு எழுந்தருளிய தலம் இது. பரசுராமர் தம்முடைய அன்னையைக் கொன்ற பாவத்தைப் போக்கும் பொருட்டு வழிபட்ட தலம் இது.

இந்தத் தலத்தைப்பற்றிச் சுந்தரமூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

"வெறுத்தேன் மனை வாழ்க்கையை விட்டொழிந்தேன்
விளங்குங்குழைக் காதுடை வேதியனே
இறுத்தா யிலங்கைக் கிறையா யவனைத்
தலைபத்தொடு தோள்பல இற்றுவிழக்
கறுத்தா யகடல் நஞ்சமு துண்டுகண்டம்
கடுகப் பிரமன் தலை ஐந்திலும்ஒன்
றறுத்தாய் கடலங்கரை மேல்ம கோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே."

இந்தத் தலத்தைப்பற்றி அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு பாசுரம் வருமாறு. இந்தப் பாசுரம் இந்தளப் பண் அமைந்தது :

"தலைக்குத் தலைமாலை அணிந்த தென்னே
சடைமேற்கங்கை வெள்ளம் தரித்த தென்னே
அலைக்கும் புலித்தோல் கொண்ட சைத்ததென்னே
அதன்மேற்கத நாகங்கச் சார்த்த தென்னே
மலைக்கு நிகர் ஒப்பன வன்திரைகள்
வலித்தெற்றி முழுங்கி வலம் புரிகொண்
டலைக்குங்கட லங்கரை மேல்ம கோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே."

அந்த நாயனார் பாடியருளிய மற்றொரு பாசுரம் வருமாறு :

"பிடித்தாட்டிஓர் நாகத்தைப் பூண்ட தென்னே
பிறங்கும்சடை மேற்பிறை சூடிற்றென்னே
பொடித்தான் கொண்டு மெய்ம்முற்றும் பூசிற்றென்னே
புகரேறுகந்தேறல் புரிந்த தென்னே
மடித்தோட்டந்து வன்றிரை ஏற்றியிட
வளர்சங்கம் அங்காந்து முத்தம் சொரிய
அடித்தார் கடல்அங்கரை மேல்ம கோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே."

அந்த நாயனார் பாடியருளிய வேறொரு பாசுரம் வருமாறு :

" சிந்தித்தெழு வார்க்கு நெல்லிக் கனியே
சிறியார் பெரியார் மனத்தேறல் உள்ளால்
முந்தித்தொழு வார்இற வார்பிற வார்
முனிகள்முனி யேஅம ரர்க்கமரா
சந்தித்தட மால்வரை போல் திரைகள்
தணியாதிட றுங்கடலங் கரைமேல்
அந்தித்தலைச் செக்கர்வா னேஒத்தியால்
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே."

அந்த நாயனார் பாடியருளிய பிறிதொரு பாசுரம் வருமாறு :

" இழைக்கும் எழுத் துக்குயிர் ஒத்தியால்
இலையேஒத்தி யால் உன்னையே ஒத்தியால்
குழைக்கும் பயிர்க் கோர்புய லேஒத்தியால்
அடியார்தமக் கோர்குடி யேஒத்தியால்
மழைக்குந்நிகர் ஒப்பன வன்திரைகள்
வலித்தெற்றி முழுங்கி வலம்புரிகொண்
டழைக்குங்கட லங்கரை மேல்ம கோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே."

வேறொரு பாசுரம் வருமாறு :

" வீடின் பயனென் பிறப்பின் பயனென்
விடையேறுவதென் மதயானை நிற்கக்
கூடும்மலை மங்கை ஒருத்தியுடன்
சடைமேற் கங்கை யாளைநீ சூடிற்றென்னே
பாடும் புலவர்க் கருளும் பொருளென்
நிதியம்பல செய்த கலச்செலவல்
ஆடும் கடலுங்கரை மேல்மகோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே."

பின்னும் ஒரு பாசுரம் வருமாறு :

" இரவத்திடு காட்டெரி ஆடிற்றென்னே
இறந்தார்தலை யிற்பலி கோடல்என்னே

பரவித்தொழு வார்பெறு பண்டம்என்னே
பரமர்பர மேட்டி பணித்தருளாய்
உரவத்தொடு சங்கமொடு டிப்பிமுத்தம்
கொணர்ந்தெற்றி முழுங்கிவலம் புரிகொண்
டரவக்கட லங்கரை மேல்ம கோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே.''

பிறகும் ஒரு பாசுரம் வருமாறு :

'' ஆக்கும் அழிவும் ஐயநீ என்பன்நான்
சொல்லுவார்சொற் பொருளவை நீ என்பன்நான்
நாக்கும்செவி யும்கண்ணும் நீ என்பன்நான்
நலனேஇனி நான்உனை நன்குணர்ந்தேன்
நோக்கும் நிதி யம்பல எத்தனையும்
கலத்திற்புகப் பெய்துகொண் டேற றுந்தி
ஆர்க்கும்கட லங்கரை மேல்ம கோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே.''

மேலும் ஒரு பாசுரம் வருமாறு :

'' பிடிக்குங்களி றேஒத்தி யால்எம் பிரான்
பிறமற்கும் பிரான் மற்றை மாற்கும்பிரான்
நொடிக்கும் மளவிற்புறம் மூன்றெரியச்
சிலை தொட்டவ னேஉனை நான்மறவேன்
வடிக்கின்றன போற்சில வன்திரைகள்
விரித்தெற்றி முழங்கி வலம்புரிகொண்
டடிக்கும் கடலங்கரை மேல்ம கோதை
அணியார் பொழில் அஞ்சைக் களத்தப்பனே.''

மற்றும் ஒரு பாசுரம் வருமாறு :

'' எந்தம்அடி கள்இமை யோர் பெருமான்
எனக்கென்றும் அளிக்கும் மணிமிடற்றன்
அந்தண் கடலங்கரை மேல்ம கோதை
அணியார்பொழில் அஞ்சைக் களத்தப்பனை

மந்தம்முழ வுங்குழ லும் இயம்பும்
　　வளர்நாவலர் கோன் நம்பி யூரன்சொன்ன
சந்தம்மிகு தண்டமிழ் மாலைகள் கொண்
　　டடிவீழவல் லார்தடு மாற்றிலரே.''

சுந்தரமூர்த்தி நாயனார் திருவஞ்சைக் களத்துக்கு எழுந்தருளி பாசத்தை ஒழிக்கும் விருப்பத்தால் இந்தத் திருப்பதிகத்தைப் பாடியருளக் கைலாசபதி அந்த நாயனாரைக் கயிலைக்கு அழைத்து வருமாறு ஒரு வெள்ளை யானையோடு தேவர்களை விடுத்தருளினார்.

இந்தச் செய்தி பெரிய புராணத்தில் உள்ள வெள்ளானைச் சருக்கத்தில் வரும் பின் உள்ள பாடல்களால் புலப்படும் :

'' இன்ன தன்மையில் உதியர்கள்
　　தலைவர்தாம் இடர்கெட முனைபாடி
மன்னர் தம்முடன் மகிழ்ந்தினி துறையும்நாள்
　　மலைநெடு நாட்டெங்கும்
பன்ன கம்புனை பரமர்தம் திருப்பதி
　　பலவுடன் பணிந் தேத்திப்
பொன்னெடுந் தட முதெயில் மகோதையிற்
　　புகுந்தனர் வன்றொண்டர்.''

'' ஆய செய்கையில் நாள்பல கழிந்தபின்
　　அரசர்கள் முதற் சேரர்
தூய மஞ்சனத் தொழிலினில் தொடங்கிடத்
　　துணைவராம் வன்றொண்டர்
பாய கங்கைசூழ் நெடுஞ்சடைப் பரமரைப்
　　பண்டுதாம் பிரிந்தெய்தும்
சேய நன்னெறி குறுகினார்
　　திருவஞ்சைக் களந்தன்னில்.''

'' கரிய கண்டர்தம் கோயிலை வலங்கொண்டு
　　காதலாற் பெருகன்பு

புரியும் உள்ளத்தர் உள்ளணைந் திறைவர்தம்
பூங்கழ லிணை போற்றி
அரிய செய்கையில் அவனியில் வீழ்ந்தெழுந்
தலைப்புறு மனைவாழ்க்கை
சரிய வேதலைக் குந்தலை மாலைஎன்
றெடுத்தனர் தமிழ் மாலை.''

''எடுத்த அத்திருப் பதிகத்தின் உட்குறிப்
பிவ்வுல கினிற்பாசம்
அடுத்த வாழ்க்கையை அறுத்திட வேண்டுமென்
றன்பரன் பினிற்பாடக்
கடுத்த தும்பிய கண்டர்தம் கயிலையிற்
கணத்தவ ருடன்கூடத்
தடுத்த செய்கைதான் முடிந்திடத் தம்கழற்
சார்புதந் தளிக்கின்றார்.''

''மன்ற லந்தரு மிடைடங்கபூங் கயிலையின்
மலைவல்லி யுடன்கூட
வென்றி வென்விடைப் பாகர்தாம் வீற்றிருந்
தருளிய பொழுதின்கண்
ஒன்று சிந்தைநம் ஊரனை உம்பர்வெள்
ளானையிற் றுடனேற்றிச்
சென்று கொண்டிங்கு வாருமென் றயன்முதல்
தேவர்கட் கருள் செய்தார்.''

''வான நாடர்கள் அரிஅயன் முத லினோர்
வணங்கிமுன் விடைகொண்டு
தூந லம்திகழ் சோதிவெள் ளானையும்
கொண்டுவன் றொண்டர்க்குத்
தேன லம்புதண் சோலைசூழ் மகோதையில்
திருவஞ்சைக் களம்சேரக்
கானிலங் கொள வலங்கொண்டு மேவினார்
கடிமதிற் றிருவாயில்.''

"தேவர் தம்குழாம் நெருங்கிய வாய்தலில்
திருநாவ லூரரார்தம்
காவல் மன்னரும் புறப்பட எதிர்கொண்டு
கயிலைவீற் றிருக்கின்ற
பூவ லம்புதண் புனற்சடை முடியவர்
அருளிப்பா டெனப்போற்றி
ஏவல் என்றபின் செய்வதொன் றிலாதவர்
பணிந்தெழுந் ததிரேற்றார்."

"ஏற்ற தொண்டரை அண்டர்வெள் ளானையின்
எதிர்வலங் கொண்டேற்ற
நாற்ற டங்கடல் முழக்கென ஐவகை
நாதம்மீ தெழுந்தார்ப்பப்
போற்றி வானவர் பூமழை பொழிந்திடப்
போதுவார் உயிரெல்லாம்
சாற்றும் மாற்றங்கள் உணர்பெருந் துணைவரை
மனத்தினிற் கொடுசார்ந்தார்."

"சேரர் தம்பிரான் தம்பிரான் தோழர்தம்
செயலறிந் தப்போதே
சார நின்றதோர் பரியினை மிசைக்கொண்டு
திருவஞ்சைக் களம்சார்வார்
வீர வெண்களி றுகைத்துவிண் மேற்செலும்
மெய்த்தொண்டர் தமைக்கண்டார்
பாரில் நின்றிலர் சென்றதம் மனத்தோடு
பரியும்முன் செலவிட்டார்."

"விட்ட வெம்பரிச் செவியினிற் புவிமுதல்
வேந்தர்தாம் விதியாலே
இட்ட மாம்சிவ மந்திரம் ஓதலின்
இருவிசும் பெழப்பாய்ந்து

மட்ட லர்ந்தபைந் தெரியல்வன் றொண்டர்மேல்
கொண்டமா தங்கத்தை
முட்ட எய்திமுன் வலங்கொண்டு சென்றது
மற்றதன் முன்னாக.''

''உதியர் மன்னவர் தம்பெரும் சேனையி
னுடன்சென்ற படைவீரர்
கதிகொள் வாசியிற் செல்பவர் தம்மைத்தம்
கட்புலப் படும்எல்லை
எதிர்வி சும்புனிற் கண்டுபின் கண்டிலர்
ஆதலின் எல்லாரும்
முதிரும் அன்பினில் உருவிய சுரிகையால்
முறைமுறை உடல்வீழ்ந்தார்.''

''வீர யாக்கையை மேல்கொண்டு சென்றுபோய்
வில்லவர் பெருமானைச்
சார முன்சென்று சேவகம் ஏற்றனர்
தனித்தொண்டர் மேல்கொண்ட
வாரு மும்மதத் தருவிவெள் ளானைக்கு
வயப்பரி முன்வைத்துச்
சேரர் வீரரும் சென்றனர் மன்றவர்
திருமலைத் திசைநோக்கி.''

''யானை மேல்கொண்டு செல்கின்ற பொழுதினில்
இமையவர் குழாம்என்னும்
தானை முன்செலத் தானெனை முன்படைத்
தானெனும் தமிழ்மாலை
மான வன்றொண்டர் பாடிமுன் அணைந்தனர்
மதிநதி பொதிவேணித்
தேன லம்புதன் கொன்றையார் திருமலைத்
தென்றிசைத் திருவாயில்.''

''மாசில் வெண்மைசேர் பேரொளி உலகெலாம்
மலர்ந்திட வளர்மெய்ம்மை

ஆசில் அன்பர்தம் சிந்தைபோல் விளங்கிய
அணிகிளர் மணிவாயில்
தேசு தங்கிய யானையும் புரவியும்
இழிந்து சேணிடைச்செல்வார்
ஈசர் வெள்ளிமா மலைத்தடை பலகடந்
தெய்தினர் மணிவாயில்.''

"அங்கண் எய்திய திருவணுக் கன்திரு
வாயிலின் அடற்சேரர்
தங்கள் காவலர் தடையுண்டு நின்றனர்
தம்பிரான் அருளாலே
பொங்கு மாமதம் பொழிந்தவெள் ளானையின்
உம்பர்போற் றிடப்போந்த
நங்கள் காவலர் நாவலர் காவலர்
நண்ணினார் திருமுன்பு.''

"சென்று கண்ணுதல் திருமுன்பு தாழ்ந்துவீழ்ந்
தெழுந்துசே ணிடைவிட்ட
கன்று கோவினைக் கண்டணைத் ததுவெனக்
காதலின் விரைந்தெய்தி
நின்று போற்றிய தனிப்பெருந் தொண்டரை
நேரிழை வலப்பாகத்
தொன்று வேணியர் ஊரனே வந்தனை
என்றனர் உலகுய்ய.''

"அடிய னேன்பிழை பொறுத்தெனை ஆண்டுகொண்டத்
தொடக்கினை நீக்கி
முடிவி லாநெறி தரும்பெரும் கருணைஎன்
தரத்ததோ எனமுன்னர்ப்
படியும் நெஞ்சொடு பன்முறை பணிந்தெழும்
பரம்பரை யானந்த
வடிவு நின்றது போற்றிசை வெள்ளத்து
மலர்ந்தனர் வன்றொண்டர்.''

"நின்ற வன்றொண்டர் நீரணி வேணிய
நின்மலர்க் கழல்சாரச்
சென்று சேரலன் திருமணி வாயிலின்
புறத்தினன் எனச்செப்பக்
குன்ற வில்லியார் பெரியதே வரைச்சென்று
கொணர்கென அவரெய்தி
வென்றி வானவர்க் கருளிப்பா டெனஅவர்
கழல்தொழு விரைந்தெய்தி."

"மங்கை பாகர்தம் திருமுன்பு சேய்த்தாக
வந்தித்து மகிழ்வெய்திப்
பொங்கும் அன்பினிற் சேரலர் போற்றிடப்
புதுமதி அலைகின்ற
கங்கை வார்சடைக் கயிலைநா யகர்திரு
முறுவலின் கதிர்காட்டி
இங்கு நாம்அழை யாமைநீ எய்திய
தென்னென அருள்செய்தார்."

"அரசர் அஞ்சலி கூப்பிநின் றடியனேன்
ஆரூரர் கழல்போற்றிப்
புரசை யானைமுன் சேவித்து வந்தனன்
பொழியும்நின் கருணைத்தென்
திரைசெய் வெள்ளம்முன் கொடுவந்து
புகுதலின் திருமுன்பு வரப்பெற்றேன்
விரைசெய் கொன்றைசேர் வேணியாய்
இனிஒரு விண்ணப்பம் உளதென்று."

"பெருகு வேதமும் முனிவரும் துதிப்பரும்
பெருமையாய் உனைஅன்பால்
திருவு லாப்புறம் பாடினேன் திருச்செவி
சாத்திடப் பெறவேண்டும்
பாசத்தை அகன்றிட வன்றொண்டர்
கூட்டம்வைத் தாய்என்ன

அருளும் ஈசரும் சொல்லுக என்றனர்
அன்பரும் கேட்பித்தார்.''

"சேரர் காவலர் பரிவுடன் கேட்பித்த
திருவுலாப் புறம்கொண்டு
நாரி பாகரும் நலமிகு திருவருள்
நயப்புடன் அருள்செய்வார்
ஊர னாகிய ஆலால சுந்தரன்
உடனமர்ந்த திருநீறும்
சாரும் நம்கண நாதர்தம் தலைமையில்
தங்கும்என் றருள் செய்தார்.''

"அன்ன தன்மையில் இருவரும் பணிந்தெழுந்
தருள்தலை மேற்கொண்டு
மன்னும் வன்றொண்டர் ஆலால சுந்தரர்
ஆகித்தாம் வழுவாத
முன்னை நல்வினைத் தொழிற்றலை நின்றனர்
முதல்சேரர் பெருமானும்
நன்மை சேர்கண நாதராய் அவர்செயும்
நயம்புறு தொழில்பூண்டார்.''

பிறகு உள்ள 9-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

' "இந்த மண்ணுலகத்தில் விளங்கும் திருநாவலூரில் திருவவதாரம் செய்தருளிய வன்றொண்டராகிய சுந்தர மூர்த்தி நாயனார் யாரும் அடைவதற்கு அருமையாக உள்ள திருக்கயிலை மலையை நாளைக்கு அடைய, அடியேன் அந்த நாயனாரைப் பிரிந்து கண்களில் உள்ள கருமணிகள் போய்விடக் குருடர்களாகி வாழ்பவர்களைப் போல இனிமேல் வாழமாட்டேன்'' என்று நினைந்து அந்தப் பெருமிழலைக் குறும்ப நாயனார், "சிவ பெருமானுடைய திருவடிகளை இன்றைக்கே அடியேன் யோகத்தால் போய்ச் சேருவேன்'' என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்பவரானார்.' பாடல் வருமாறு :

"'மண்ணில் திகழும் திருநாவ
லூரில் வந்த வன்றொண்டர்
நண்ணற் கரிய திருக்கயிலை
நாளை எய்த நான்பிரிந்து
கண்ணிற் கரிய மணிகழிய
வாழ்வார் போல வாழேன்.' என்
றெண்ணிச், 'சிவன்தாள் இன்றேசென்
றடைவன் யோகத் தால்' என்பார்.''

மண்ணில் - இந்த மண்ணுலகத்தில். திகழும் - புகழோடு விளங்கும். திருநாவலூரில் வந்த - திருநாவலூரில் திருவவதாரம் செய்தருளிய. வன்றொண்டர் - வன்றொண்டராகிய சுந்தரமூர்த்தி நாயனார். நண்ணற்கு - அடைவதற்கு. அரிய - அருமையாக உள்ள. திருக்கயிலை - அழகிய கயிலாய மலையை. நாளை - நாளைக்கு. எய்த - அடைய. நான் - அடியேன். பிரிந்து - அந்த நாயனாரைப் பிரிந்து. கண்ணில் - தங்களுடைய கண்களில் உள்ள; ஒருமை பன்மை மயக்கம். கரியமணி - கருமையான மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். கழிய - போய்விட. வாழ்வார்போல - குருடர்களாக வாழும் மக்களைப்போல; ஒருமை பன்மை மயக்கம். வாழேன் - அடியேன் இனிமேல் வாழமாட்டேன். என்று - என, எண்ணி - நினைந்து. ச் : சந்தி. சிவன் - சிவ பெருமானாகிய கயிலாசபதியினுடைய. தாள் - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். இன்றே - இன்றைக்கே. சென்று - போய். யோகத்தால் - அடியேன் புரியும் யோகத்தினால். அடைவன் - போய்ச் சேருவேன். என்பார் - என்று அந்தப் பெருமிழலைக் குறும்பநாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்பவரானார். பெருமிழலைக் குறும்ப நாயனார் : தோன்றா எழுவாய்.

பிறகு உள்ள 10 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அந்தப் பெருமிழலைக் குறும்ப நாயனார் மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு அகக்கரணங் களும் ஒன்றாகச் சேர்ந்து நிற்க நல்ல ஞானத்தைத் தம் மேற்கொண்டு உயிரைப் போகச் செய்யும் பிரம நாடியின் வழியாகத் தம்முடைய திருவுள்ளத்தைப் போக்கக் கபாலத்தின் நடுவில் இயல்பாகவே முன் நாட்களில் பழகு கிற யோகவழியில் எடுத்த வேதமூலமாகிய பிரணவ வாசல் திறக்க எல்லாப் பொருள்களுக்கும் மூலமாகிய முதல் வராகிய கைலாசபதியாருடைய திருவடிகளை அடை வாராகி அந்த நாயனார் கயிலாய மலைக்கு முன் போய்ச் சேர்ந்தார்.' பாடல் வருமாறு :

**" நாலு கரணங்களும் ஒன்றாய்**
**நல்ல அறிவு மேற்கொண்டு**
**காலும் பிரம நாடிவழிக்**
**கருத்துச் செலுத்தக் கபாலநடு**
**ஏல வேமுன் பயின்றநெறி**
**எடுத்த மறைமூ லம்திறப்ப**
**மூல முதல்வர் திருப்பாதம்**
**அணைவார் கயிலை முன்அடைந்தார்."**

அந்தப் பெருமிழலைக் குறும்ப நாயனார் : தோன்றா எழுவாய். நாலு கரணங்களும் - மனம், புத்தி, சித்தம், அகங்காரம் என்னும் நான்கு அகக் கரணங்களும். ஒன்றாய்- ஒன்றாகச் சேர்ந்து. நல்ல அறிவு - நல்ல ஞானத்தை. மேற்கொண்டு - தம்மேற்கொண்டு. கா லு ம் - உயிரைப் போகச் செய்யும். பிரமநாடி - பிரமநாடியாகிய சுழுமுனை நாடியின். வ ழி - வ ழி ய ா க. க் : ச ந் தி. க ரு த் து - தம்முடைய தி ரு வு ள் ள த் தை. ச் : சந்தி. செலுத்த - போக்க. க் : சந்தி. கபால - கபாலத்தினுடைய. நடு - நடுவில். ஏலவே - இயல்பாகவே. முன் பயின்ற - தாம் முன் நாட்களில் பழகிய. நெறி - யோக வழியில். எடுத்த - கிளம்பச் செய்த. ம றை மூலம் - வேதமூலமாகிய

பிரணவ வாசல். திறப்ப - திறக்க. மூல - எல்லாப் பொருள்களுக்கும் மூலமாகிய. முதல்வர் - முதல்வராகிய கைலாசபதியாருடைய. திருப்பாதம் - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். அணைவார் - அடைபவராகி; முற்றெச்சம். கயிலை - கயிலாய மலைக்கு. முன் - முன்னால். அடைந்தார் - அந்த நாயனார் போய்ச் சேர்ந்தார்.

அடுத்து வரும் 11 - ஆம் பாடல் இந்தப் பெருமிழலைக் குறும்ப நாயனார் புராணத்தில் உள்ள இறுதிப் பாடல். அதன் உள்ளுறை வருமாறு :

'தாம் பழகுதலைப் பொருந்திய யோக சக்தியினால் பரவை நாச்சியாருடைய கணவனாகிய சுந்தர மூர்த்தியினுடைய திருவடிகளை அடைய, அவரோடு கயிலை மலையில் எழுந்தருளியிருக்கும் கயிலாச பதியாருடைய திருவடிகளைப் போய்ச் சேர்ந்த பெருமிழலைக் குறும்ப நாயனாருடைய வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளைப் பணிந்துவிட்டு, மயிலென்னும் பறவையை முதுகிடச் செய்யும் மென்மை யான சாயலைப் பெற்ற மாதரசியாரும், தாம் பேசும் வார்த்தைகள் யாழோடும் குயிலையும் ஒத்து விளங்கும் காரைக்கால் அம்மையாருடைய பெருமையை இனிமேல் அடியேம் பாடுவோம்.' பாடல் வருமாறு :

**" பயிலைச் செறிந்த யோகத்தால்**
**பரவை கேள்வன் பாதமுறக்**
**கயிலைப் பொருப்பர் அடிஅடைந்த**
**மிழலைக் குறும்பர் கழல்வணங்கி**
**மயிலைப் புறங்கொள் மென்சாயல்**
**மகளிர் கிளவி யாழினொடும்**
**குயிலைப் பொருவும் காரைக்கால்**
**அம்மை பெருமை கூறுவாம் "**

இது சேக்கிழார் அடுத்து வரும் காரைக்கால் அம்மையார் புராணத்திற்குத் தோற்றுவாயாகப் பாடியருளியது. பயிலை - தாம் பலகாலும் பழகியதை. ச் : சந்தி. செறிந்த - பொருந்திய. யோகத்தால் - அட்டாங்க யோக சக்தியினால். பரவை - பரவை நாச்சியாருடைய. கேள்வன் - கணவனாகிய சுந்தர மூர்த்தியினுடைய. பாதம் - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். உற - அடைவதற்காக. க் : சந்தி. கயிலைப் பொருப்பர் - அவரோடு கயிலை மலையில் எழுந்தருளியிருக்கும் கயிலாச பதியாருடைய. அடி - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். அடைந்த - போய்ச் சேர்ந்த. மிழலைக்குறும்பர் - பெருமிழலைக் குறும்ப நாயனாருடைய. கழல் - வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளை; ஆகுபெயர். வணங்கி - பணிந்துவிட்டு. மயிலை - மயில் என்னும் பறவையை. ப் : சந்தி. புறங்கொள் - முதுகிடச் செய்யும். மென் - மென்மையாகிய. சாயல் - சாயலைப் பெற்ற. மகளிர் - மாதரசியாரும். கிளவி - தாம் பேசும் வார்த்தைகள்; ஒருமை பன்மை மயக்கம். யாழினொடும் - யாழை மீட்டி இசைக்கும் இனிய நாதத்தோடும்; ஆகுபெயர். குயிலை - குயிலின் கூவுதலை; ஆகுபெயர். பொருவும் - ஒத்து விளங்கும். காரைக்கால் அம்மை - காரைக்கால் அம்மையாருடைய. பெருமை - பெருமையை. கூறுவாம் - இனிமேல் அடியேம் பாடுவோம்.

பெண்களின் வார்த்தைகளுக்கு யாழ் உவமை: "யாழின் மொழி உமையாள்.", "யாழின் மொழி மாழை விழி ஏழையின மாதினொடு." என்று திருஞானசம்பந்த மூர்த்தி நாயனாரும், "பாலை யாழ்மொழி யானவன்." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "யாழைப் பழித்தன்ன மொழி மங்கை ஒரு பங்கன்." என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், "நரம் பார்த்தன்ன இன்குரல் தொழுதியொடு" என்று நக்கீரரும், "யாழிலெழும் ஓசையுடன்

இருவர் மிடற்றிசை ஒன்றி.'', ''யாழின் மென் மொழி யார்.'', ''யாழின் மொழி எழில் முறுவல்...வனமுலை யார்.'', ''யாழின் மொழியால் தனிப்பாகரை.'', ''யாழின் மொழியாள் உமை.'' என்று சேக்கிழாரும், ''யாழ் ஒக்கும் சொற்பொன் அனையாள்.'', ''யாழ்க்கும் இன் குழற்கும் இன்பம் அளித்தன இவை ஆம் என்ன கேட்கும் மென்மழலைச்சொல்.'', ''யாழினும் இனிய சொற்கிளேயே.'', ''குயிலும் கரும்பும்......சவைதீர்த்த மொழியைப் பிரிந்தான்.'', ''யாழ் வீணை என்றினைய நாண ஏங்கினள்.'', ''யாழைச் செய்து குயிலோடு கிளியும் கூட்டி......இன்சொற்கள் இயையச் செய்தான்.'', ''குழலும் வீணையும், யாழும் என்றினையன குழைய, மழலை மென்மொழி கிளிக்கிருந் தனிக்கின்ற மகளிர்.'' என்று கம்பரும் பாடியவற்றையும் காண்க.

பெண்களின் வார்த்தைகளுக்குக் குயில் மொழிகள் உவமை: ''குயிலின் நேர்மொழிக் கொடியிரை.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''கொவ்வைச் செவ்வாய்க் குயில் மொழிக் கொடியே.'' என்று சேரமான் பெருமாள் நாயனாரும், ''குயிலெனப் பேசும் மயிலினம் பேடை.'' என்று பட்டினத்துப் பிள்ளையாரும், ''கோகிலம் நவில்வன இளையவர் குதலைப் பாகியல் கிளவிகள்.'', ''தூங்கல்இல் குயில்கெழு சொல்லின் உம்பரும் ஓங்கிய அழகினாள்.'', ''குயிலொடு கிளியும் கூட்டி......இன் சொற்கள் இயையச் செய்தான்.'', ''மயிலியற் குயில் மழலையாள்.'' என்று கம்பரும் பாடியவற்றையும், ''குயில்மொழியவளொடு குளிர் சடையான் உறை கயிலையை.'', ''குயில்பற்றிய சொல் இவை கூறுதலும்.'', ''கூவுகுயில் மென்சொல் அணி கோவை நிகர் வாயார்.'' என்று உத்தரகாண்டத்தில் வருவனவற்றையும் காண்க.

# காரைக்கால் அம்மையார் புராணம்

**பெரிய புராணத்தில் 5 - ஆவதாக உள்ள திருநின்ற** *சருக்கத்தில் 4 - ஆவதாக விளங்குவது காரைக்கால் அம்மையார் புராணம். அதில் உள்ள முதற் கவியின் உள்ளுறை வருமாறு :*

*'பெருமை மிகுதியாக உள்ள அறத்தினுடைய நெறியில் நிலைத்து நின்று உண்மைகளைப் பேசுவதில் சிறிதேனும் குறைவு இல்லாத சீர்த்தியையும் பெருமையையும் பெற்று விளங்கிய வைசியர்களின் குடும்பங்கள் நெருங்கி வாழப் புகழோடு ஓங்கி நிற்கும் சிவத்தலம், வளைவாக உள்ள சங்குகளைக் கடலில் வீசும் அலைகள் சுமந்து கொண்டு கரைமேல் ஏறி நீர் மிகுதியாக உள்ள உப்பங்கழிகளைப் பெற்ற கடற்கரைச் சோலையின் மேல் வீசிவிட்டுக் குலாவு கின்ற நீர் வளம், நில வளம், செல்வ வளம், ஆலய வளம், குடி வளம், நன்மக்கள் வளம் முதலிய வளங்கள் பெருகித் திகழும் செல்வர்கள் வாழும் காரைக்கால் ஆகும்.' பாடல் வருமாறு :*

**" மானம்மிகு தருமத்தின் வழிநின்று வாய்மையினில்**
**ஊனமில்சீர்ப் பெருவணிகர் குடிதுவன்றி ஓங்குபதி**
**கூனல்வளை திரைசுமந்து கொண்டேறி மண்டுகழிக்**
**கானல்மிசை உலவுவளம் பெருகுதிருக் காரைக்கால்."**

*மானம் - பெருமை. மிகு - மிகுதியாக உள்ள. தருமத்தின் - அறத்தினுடைய. வழி - நெறியில். நின்று -*

நிலைத்து நின்று: வாய்மையினில் - உண்மையான வார்த்தைகளைப் பேசுவதில்; ஆகுபெயர். ஊனம் - சிறிதளவும் குறைவு. இல் - இல்லாத; கடைக்குறை. சீர் - சீர்த்தியையும். ப் : சந்தி. பெரு - பெருமையையும் பெற்ற. வணிகர் - வைசியர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். குடி - குடும்பங்கள்; ஒருமை பன்மை மயக்கம். துவன்றி - நெருங்கி வாழ்க்கையை நடத்த. ஓங்கு - புகழோடு ஓங்கி நிற்கும். பதி - சிவத்தலம். கூனல் - வளைவைப் பெற்ற. வளை - சங்குகளை; ஒருமை பன்மை மயக்கம். திரை - கடலில் வீசும் அலைகள்; ஒருமை பன்மை மயக்கம். சுமந்து கொண்டு - சுமந்து கொண்டு வந்து. ஏறி - கரையின் மேல் ஏறி. மண்டு - நீர் மிகுதியாக உள்ள. கழி - உப்பங்கழிகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். க் : சந்தி. கானல் மிசை - கடற்கரைச் சோலையின் மேல் வீசிவிட்டு. உலவு - குலாவிய. வளம் - நீர் வளம், நில வளம், செல்வ வளம், ஆலய வளம், குடி வளம், நன்மக்கள் வளம் முதலிய வளங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பெருகு - பெருகித் திகழும். திரு - செல்வர்கள் வாழும்; திணை மயக்கம். க் : சந்தி. காரைக்கால் - காரைக்கால் ஆகும்.

அடுத்து வரும் 2 - ஆம் கவியின் கருத்து வருமாறு :

'கப்பல்கள் நிறைந்து மிதக்கும் சமுத்திரத்தைப் பெற்ற அந்தக் காரைக்காலில் தங்களுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டு வரும் வைசியர்களினுடைய சாதிக்குத் தலைவர் தனதத்தனார் என்னும் திருநாமத்தை உடையவர்; அவர் முன் பிறவியில் புரிந்த தவத்தின் பயனாக அந்தக் காரைக்காலில் அந்தத் தனதத்தனாரிடத்தில் திருமடந்தையாகிய இலக்குமி தேவியே திருவவதாரம் செய்தருளினாள் என்று கூறுமாறு அந்தக் காரைக்காலில் திருவவதாரம் செய்தருளி வந்து பொங்கி எழும் பெரிய வனப்பு மிகுதியாக அமையப்

புனிதவதியார் என்னும் பெண் குழந்தையார் திருவவதாரம் செய்தருளினார்.' பாடல் வருமாறு :

"வங்கம்மலி கடற்காரைக்
காலின்கண் வாழ்வணிகர்
தங்கள்குலத் தலைவனார்
தனதத்த னார்தவத்தால்
அங்கவர்பால் திருமடந்தை
அவதரித்தாள் எனவந்து
பொங்கியபே ரழகுமிகப்
புனிதவதி யார்பிறந்தார்."

வங்கம் - கப்பல்கள்; ஒருமை பன்மை மயக்கம். மலி - நிறைந்து மிதக்கும். கடல் - சமுத்திரத்தைப் பெற்ற. காரைககாலின் கண் - அந்தக் காரைக்காலில். வாழ் - தங்களுடைய வாழ்க்கைகளை நடத்திக் கொண்டு வரும். வணிகர் தங்கள் - வைசியர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். தம் : அசை நிலை. குல - சாதிக்கு. த் : சந்தி. தலைவனார் - தலைமைப் பதவியை வகிப்பவர். தனதத்தனார் - தனதத்தனார் என்னும் திருநாமத்தை உடையவர். தவத்தால் - முற்பிறவியில் புரிந்த தவத்தின் பயனாக; ஆகுபெயர். அங்கு - அந்தக் காரைக்காலில். அவர்பால் - அந்தத் தனதத்தனாரிடத்தில். திருமடந்தை - திருமடந்தையாகிய இலக்குமி தேவியே. அவதரித்தாள் - திருவவதாரம் செய்தருளினாள். என - என்று கூறுமாறு; இடைக்குறை. வந்து - அந்தக் காரைக்காலுக்கு வந்து. பொங்கிய - பொங்கி எழுந்த. பேரழகு - பெருமையும் வனப்பும். மிக - மிகுதியாக அமைய. ப் : சந்தி. புனிதவதியார் - புனிதவதியார் என்னும் பெண் குழந்தையார். பிறந்தார் - திருவவதாரம் செய்தருளினார்.

அழகு உள்ள பெண்மணிக்குத் திருமகள் உவமை : "பங்கயச்செல்வி பாண்டிமா தேவி." என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், "பெருந்திரு இமவான்

பெற்ற பெண்கொடி.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், "மலையரையன் பொற்பாவை வாள்நுதலாள் பெண் திருவை, உலகறியத்தீ வேட்டான்.'' என்று மாணிக்க வாசகரும், "திருவின் கருக்குழி தேடி.'', "வள்ளல் திருவின் வயிற்றுள்.'', "திருவாம் சிவமங்கை.'', "திரு ஒத்த சிந்தை வைத்து.'', "பூமேல் உறைகின்ற புண்ணியம் வந்தனள்.'', "ஆரே திருவின் திருவடி காண்பார்கள்.'', "செம்மானை செய்து திருமங்கையாய் நிற்கும்.'', "வெருவும் திருமகள் வீட்டில்லை யாகும்.'' (திரு மந்திரம்) என்று திருமூலரும், "திருவொடும் பொலியும் ஒருபால் திருவடி.'' என்று பட்டினத்துப் பிள்ளையாரும், "திருமகள் என நின்ற தேவியார்.'', "திருமகட்கு மேல் விளங்கும் செம்மணியின் தீபமெனும் ஒரு மகளை.'', "திருவனைய திலகவதியார் பிறந்தார்.'', "அம்புய மலராள் போல்வார்.'', "செங்கமலத் திருமடந்தை.'', "அம்புயத் தணங்கின் அன்னார்.'', "அல்லி மலர் புல்லும் நங்கை இவள் ஆம்.'', "திருவே அனையாள் முகமே.'', "அலர்மிசை உறைவாளும்.'', "பூமகளும் பொருளும் மென நீ என், மாமகன் தன்னொடு மன்னுதி.'', "அன்னல் மலர்த்திரு அன்னவர்.'', "பூமட மயிலினைப் பொருவும் பொற் பொடும்.'', "சீதையாம் திருமகள் மணவினை.'', "மலர் மகள் கலைமகள் கலையூர் பெண்ணினும் நல்லள் பெரும்புகழ்ச் சனகியோ நல்லள்.'', "சனகியாம் கடிகமழ் கமலத்தவ்வை.'', "மகளிர் எல்லாம் சீதையை ஒத்தார் அன்னாள் திருவினை ஒத்தாள்.'', "மன் எனும் திருவை.'', "மிதிலைப் பொன்னும்.'', "சீலம் இன்னதென்றருந்ததிக் கருளிய திருவே.'', "தெரிவை மார்க்கொரு கட்டளை எனச் செய்த திருவே.'', "பூ உலாவு பூவையோடு.'', "பொன் இவளொடன்பின் விளையாட.'', "திருநின் வரவு.'', "திருஇங்கு வருவாள் கொல்லோ.'', "மிதிலை வேந்தன் பொன்னொடும்.'', "தாமரை உறையும் நங்கை இவர் என நெருநல் நடந்த

வரோ.'', ''தாமரை தவிரப் போந்தாள் மின்வயின் மருங்குல் கொண்டாள்.'', ''தாமரை இருந்த தையல் சேடி ஆம் தரமும் அல்லள்.'', ''தார் தந்த கமலத்தாளை.'', ''யாழ் பழித்த சொற் பொன்னனார்.'', ''செந்திரு ஒப்பார் எத்தனை பேர் நின்திரு உண்பார்.'', ''சேயிதழ்த் தாமரைச் சேக்கை தீர்ந்திவண் மேயவள்.'', ''சனகி என்னும் காமரு திரு.'', ''அப்பொன்னை நாடா நீங்கிருத்தல் புகழோ.'', ''திருமகள் அனைய அத்தெய்வக் கற்பினாள்.'', ''பூவரு புரிகுழல் பொருவில் கற்புடைத் தேவியை.'', ''இவள் கமலச் செல்வியே.'', ''திருமகள் இருந்த திசை அறிந்திருந்தும்.'', ''புண்டரீகை போலும் இவள் இன்னல் புரிகின்றாள்.'', ''முளரி நீங்கிய தையலை நோக்கிய தலையன்.'', ''செம்மலர்த் திருவின் நாளும் சிறப்புறு திலகம் அன்னார்.'', ''ஆப்பூமேல் சீதை நாயகன்.'', ''உன் தேவியைத் தீண்டி.'', ''சீர் மகளைத் திருமகளைத் தேவர்க்கும் தெரிவரிய தெய்வக்கற்பின். பேர்மகளைத் தழுவுவான் உயிர்கொடுத்துப் பழிகொண்டபித்தா.'', ''பாங்குற நடந்தனள் பதுமப் போதினாள்.'', ''தாமரை ஏய்ந்த தன் கோயிலே எய்துவாள் எனப் பாய்ந்தனள்.'', ''மலர்மேல் விரவு பொன்னினை.'', ''ஞான நாதனைத் திருவொடு தன் மனை கொணர்ந்தான்.'', ''அல்கிய திருவைத் தேற்றி.'', ''திருவினை நிலத்தோடேந்தித் தென்திசை இலங்கை புக்கான்.'', ''பூமலர்த் தவிசை நீத்துப் பொன் மதில் மிதிலை பூத்த, தேமொழித் திருவை.'', ''பங்கயத் துறை பாவையே சோபனம்.'', ''திருவினாள் எங்கே.'' என்று கம்பரும் பாடியருளியவற்றையும், ''புண்டரிக மாதோ புனமயிலோ.'', ''கோகனக மாதனைய கொம்பு.'', ''செந்தாமரை மேல் திருமகளோ.'', ''கஞ்ச மலராளனைய காமினிகள்.'', ''சீதை என்னுமத் திருவை விட்டு.'' என்று உத்தரகாண்டத்தில் வருபவற்றையும் காண்க.

பிறகு வரும் 3 - ஆம் கவியின் கருத்து வருமாறு :

'வைசியர்களினுடைய பெருமையைப் பெற்று விளங்கும் சாதி விளக்கத்தை அடையும் வண்ணம் காரைக் காலுக்கு வந்து அந்தப் புனிதவதியார் திருவவதாரம் செய்தருளியதற்குப் பிறகு அழகு கிளர்ச்சி பெற்று விளங்கும் மென்மையாகிய திருவடிகள் தளர்ச்சியை அடைந்து அசைந்து அசைந்து நடக்கும் நடையைப் பெற்ற பேதைப் பருவத்தில் பாம்புகளை அணிபவராகிய நடராஜப் பெருமானாருடைய வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளுக்கு அடிமையாகப் பயின்று வரும் பக்குவம் உண்டாக குறைதல் இல்லாத தம்முடைய திருவுள்ளத்தில் பெரிய விருப்பம் ததும்புமாறு மழலை மொழிகளை அந்தக் காரைக்கால் அம்மையார் பேசிப் பழகினார்.' பாடல் வருமாறு :

**" வணிகர்பெரும் குலம்விளங்க**
**வந்துபிறந் தருளியபின்**
**அணிகிளர்மெல் அடிதளர்வுற்**
**றசையும்நடைப் பருவத்தே**
**பணிஅணிவார் கழற்கடிமை**
**பழகிவரும் பாங்கு பெறத்**
**துணிவில்பெரு மனக்காதல்**
**ததும்பவரும் மொழிபயின்றார்."**

வணிகர் - வைசியர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பெரும் - பெருமையைப் பெற்று விளங்கும். குலம் - சாதி. விளங்க - விளக்கத்தை அடையும் வண்ணம். வந்து - காரைக்காலுக்கு வந்து. பிறந்தருளிய பின் - அந்தப் புனிதவதியார் திருவவதாரம் செய்தருளிய தற்குப் பிறகு. அணி - அழகு. கிளர் - கிளர்ச்சியைப் பெற்று விளங்கும். மெல் - மென்மையாகிய. அடி - திருவடிகள்; ஒருமை பன்மை மயக்கம். தளர்வுஉற்று - தளர்ச்சியை அடைந்து. அசையும் - அசைந்து அசைந்து

நடக்கும் நடை - நடையைப்பெற்ற. ப்: சந்தி. பருவத்து - பேதைப் பருவத்தில். ஏ: அசைநிலை. பணி - பாம்புகளை; ஒருமை பன்மை மயக்கம். அணிவார் - அணிபவராகிய நடராஜப் பெருமானாருடைய. கழற்கு - வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளுக்கு; ஆகுபெயர். அடிமை - அடிமையாக. பழகிவரும் - பயின்று வரும் பாங்கு - பக்குவம். பெற - உண்டாக. த்: சந்தி. தணிவு - குறைதல். இல் - இல்லாத; கடைக் குறை. பெரு - பெரிய. மன - தம்முடைய திருவுள்ளத்தில். க்: சந்தி. காதல் - விருப்பம். ததும்ப - கேட்டவர் களிடம் ததும்புமாறு. மொழி - மழலை மொழிகளை; ஒருமை பன்மை மயக்கம். பயின்றார் - அந்தக் காரைக் கால் அம்மையார் பேசிப் பழகினார்.

பிறகு உள்ள 4 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பல பெருமையைப் பெற்று விளங்கும் நல்ல உறவினர்கள் உவகையை அடையுமாறு தளர்நடை நடந்து பழகும் பேதைப் பருவத்துக்கு உரிய சிறப்புகள் எல்லா வற்றையும் செல்வத்தை மிகுதியாகப் பெற்ற தம்முடைய தகப்பனார் செல்வச் செழிப்புப் பெருகி வரும் செயல் களைச் செய்ய நிரம்ப உள்ள பெருமையைப் பெற்ற பாராட்டு வார்த்தைகளோடு வளர்ந்து வருகிறவராகிய அந்தப் புனிதவதியார் இடபவாகனத்தை ஓட்டுபவராகிய ஊர்த்துவ தாண்டவமூர்த்தியினிடத்தில் தம்முடைய திருவுள்ளம் தங்கிய பக்தியோடு அழகினுடைய கொழுந்து எழுந்து விளங்குகின்றது என்று கூறுமாறு வளர்ந்து வருபவரானார்.' பாடல் வருமாறு:

"பல்பெருநற் கிளைஉவப்பப்
பயில்பருவச் சிறப்பெல்லாம்
செல்வம்மிகு தந்தையார்
திருப்பெருகும் செயல்புரிய

மல்குபெரும் பாராட்டின்
வளர்கின்றார் விடையவர்பால்
அல்கியஅன் புடன்அழகின்
கொழுந்தெழுவ தெனவளர்வார்.''

பல் - பல. பெரு - பெருமையைப் பெற்று விளங்கும். நல் - நல்ல. கிளை - உறவினர்கள்; திணை மயக்கம்; ஒருமை பன்மை மயக்கம். உவப்ப - மகிழ்ச்சியை அடையுமாறு. ப் : சந்தி. பயில் - தளர்நடை நடந்து பழகும். பருவ - பேதைப் பருவத்துக்கு உரிய. ச் : சந்தி. சிறப்பு-சிறப்புக்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம் - எல்லாவற்றையும். அவையாவன: அன்னப்பிராசனம் செய்தல், கைகளுக்குக் காப்புக்களை அணிதல், மோதிரத்தை அணிதல், கால்களுக்குத் தண்டைகளையும், வெண்டயங்களையும் காப்புக்களையும் அணிதல், இடுப்புக்குத் தங்க அரைநாண் அணிதல், பாவாடை உடுத்தல் முதலியவை. செல்வம் - செல்வத்தில். மிகு - செழிப்புப் பெருகி வரும். தந்தையார் - தம்முடைய தகப்பனார். திருப்பெருகும் - செல்வச் செழிப்புப் பெருகிவரும். செயல் - செயல்களை; ஒருமை பன்மை மயக்கம். புரிய - செய்ய. மல்கு - நிரம்ப உள்ள. பெரும் - பெருமையைப் பெற்றுத் திகழும். பாராட்டின் - தம்முடைய தந்தையாரும் அன்னையாரும், சுற்றத்தாரும் கூறும் பாராட்டு வார்த்தைகளோடு; ஒருமை பன்மை மயக்கம். வளர்கின்றார் - வளர்ந்து வருகிறவராகிய அந்தப் புனிதவதியார். விடையவர் பால் - இடபவாகனத்தை ஓட்டுபவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாரிடத்தில். அல்கிய - தம்முடைய திருவுள்ளம் தங்கிய. அன்புடன் - பக்தியோடு. அழகின் - வனப்பினுடைய. கொழுந்து எழுவதென - கொழுந்து எழுந்து விளங்குகின்றது என்று கூறுமாறு. என : இடைக் குறை. வளர்வார் - வளர்ந்து வருபவரானார்.

விடையவர்பால் அன்பு: ''பிறந்து மொழி பயின்ற பின்பெல்லாம் காதல், சிறந்துநின் சேவடியே சேர்ந்தார்கள்.

நிறம் திகழும், மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே, எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.'' என்று அந்த அம்மையாரே பாடியருளுவதைக் காண்க.

பிறகு வரும் 5 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அந்தப் புனிதவதியார் மகளிருக்கு உரிய விளையாட்டாகிய வண்டலைப் புரிந்து பழகியவை யாவும் தம்முடைய தலையில் தங்கும் பிறைச்சந்திரனை அணிந்திருக்கும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவரும், எல்லாத் தேவர்களுக்குத் தலைவருமாகிய ஊர்த்துவதாண்டவமூர்த்தியைப் புகழும் அழகிய மழலை மொழிகள் தம்மிடம் அடைய வருபவற்றைப் பேசிப் பழகி சிவபெருமானுடைய திருத்தொண்டர்கள் தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளினால், அந்தத் திருத்தொண்டர்களை அவர்களுடைய திருவடிகளில் விழுந்து வணங்கி விட்டு தம்முடைய வேலைக்காரிகள் வாழ்த்திப் பாராட்ட இரண்டு கொங்கைகளைக் கொண்ட இடுப்புத் தளரும் பக்குவத்தைப் பெற்ற மங்கைப் பருவத்தை அடைவதை சமீபித்தார்.' பாடல் வருமாறு :

> '' வண்டல்பயில் வனவெல்லாம்
> வளர்மதியம் புனைந்தசடை
> அண்டர்பிரான் திருவார்த்தை
> அணையவரு வனபயின்று
> தொண்டர்வரில் தொழுதுதா
> தியர்போற்றத் துணைமுலைகள்
> கொண்டநுசுப் பொதுங்குபதக்
> கொள்கையினிற் குறுகினார்.''

வண்டல் - அந்தப் புனிதவதியார் மகளிருக்கு உரிய விளையாட்டாகிய வண்டலை. புனிதவதியார்: தோன்றா எழுவாய். பயில்வன - புரிந்து பழகியவை. எல்லாம் - யாவும். வளர் - தம்முடைய தலையில் தங்கும். மதியம் - பிறைச்சந்திரனை. புனைந்த - அணிந்துள்ள. சடை -

சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவரும்; ஆகுபெயர். அண்டர் - எல்லாத் தேவர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். பிரான் - தலைவரும் ஆகிய; ஒருமை பன்மை மயக்கம். திருவார்த்தை - ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியைப் புகழும் அழகிய மழலை மொழிகள்; ஒருமை பன்மை மயக்கம். அணைய - தம்மிடம் அடைய. வருவன - வருபவற்றை. பயின்று - பேசிப்பழகி. தொண்டர் - சிவபெருமானுடைய திருத்தொண்டர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வரில் - தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளி வந்தால். தொழுது - அந்தத் திருத்தொண்டர்களை அவர்களுடைய திருவடிகளில் விழுந்து வணங்கிவிட்டு. தாதியர் - பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு தம்முடைய வேலைக்காரிகள். போற்ற - வாழ்த்திப் பாராட்ட. த் : சந்தி. துணை - இரண்டு. முலைகள் - கொங்கைகளையும். கொண்டநுசுப்பு - கொண்ட இடுப்பு. ஒதுங்கு - தளர்ச்சியை அடையும். பத - பக்குவத்தைப் பெற்ற. க் : சந்தி. கொள்கையினில் - கொள்ளுவதை; அடைவதை. குறுகினார் - சமீபித்தார்.

பிறகு உள்ள 6 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'நல்லவை என்று அங்கங்களினுடைய இயக்கங்களை எடுத்துக் கூறும் சாத்திரமாகிய சாமுத்திரிகா சாத்திரத்தைப் பாடியவர் கூறும் அழகுகள் நிரம்பப் பெற்று மிகுதியாக அமைந்து பெருமையைப் பெற்ற அழகு மேம்பட்டு விளங்க வரும் மாண்பினால் தம்முடைய திருமாளிகையிலிருந்து கடந்து செல்லாத பெதும்பைப் பருவத்தை அந்தப் புனிதவதியார் அடைந்தபோது இவர்களுடைய வைசியர்களினுடைய பரம்பரைக்கு ஏற்றதாக விளங்கும் பழமையாகிய வணிகர்களின் சாதியில் திருவவதாரம் செய்தருளிய புனிதவதியாரை மணமகளாகக் கொள்ளும் பொருட்டுப் பேசுவதற்கு ஆரம்பிப்பவர்கள் ஆனார்கள்.' பாடல் வருமாறு :

"நல்லவென உறுப்புநூ
 லவர்உரைக்கும் நலம்நிரம்பி
மல்குபெரு வனப்புமீக்
 கூரவரு மாட்சியினால்
இல்லிகவாப் பருவத்தில்
 இவர்கள்மர பினுக்கேற்கும்
தொல்குலத்து வணிகர்மகட்
 பேசுதற்குத் தொடங்குவார்."

நல்ல - நல்லவை. என - என்று; இடைக்குறை. உறுப்பு - அங்கங்களினுடைய இலக்கணங்களை எடுத்துக் கூறும்; ஒருமை பன்மை மயக்கம். நூலவர் - சாத்திரமாகிய சாமுத்திரிகா லட்சணச் சாஸ்திரத்தைப் பாடியவர். உரைக்கும் - எடுத்துக் கூறும். நலம் - இலக்கணங்கள்; ஒருமை பன்மை மயக்கம். நிரம்பி - நிரம்ப அமைந்து. மல்கு - மிகுதியாக அமைந்து. பெரு - பெருமையைப் பெற்ற. வனப்பு - அழகு. மீக்கூர - மேம்பட்டு விளங்க. வரு - வரும். மாட்சியினால் - மாண்பினால். இல் - தம்முடைய திருமாளிகையிலிருந்து: இகவா - படியைத் தாண்டிச் செல்லாத. ப் : சந்தி. பருவத்தில் - பெதும்பைப் பருவத்தை அந்தப் புனிதவதியார் அடைந்தபோது; உருபு மயக்கம். இவர்கள் - இந்த வைசியர்களினுடைய. மரபினுக்கு - பரம்பரைக்கு, ஏற்கும் - ஏற்றதாக விளங்கும். தொல் - பழமையாகிய. குலத்து - வணிகர்களினுடைய சாதியில். வணிகர் - பிறந்த வைசியர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மகள் - புனிதவதியாரை மணமகளாகக் கொள்ளும் பொருட்டு. பேசுதற்கு - பேசுவதற்கு. த் : சந்தி. தொடங்குவார் - ஆரம்பிப்பவர்கள் ஆனார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 7 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'நெடுங்காலமாக விளங்கிய சீர்த்தியைப் பெற்ற சமுத்திரக் கரையில் விளங்கும் நாகப்பட்டினத்தில் வாழும்

நீதிபதி என இந்த மண்ணுலகத்தில் பலகாலும் கூறுதலைப் பெற்ற புகழைக் கொண்ட ஒரு வைசியன் பெற்றெடுத்த உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த ஓர் ஆடவனுக்குத் தேடுவதற்கு அருமையாக இருக்கும் அழகிய வைசியர்களின் பரம்பரையில் திருவவதாரம் செய்தருளிய சிவந்த பொன்னால் ஆகிய ஆபரணங்களைப் பூண்டிருக்கும் அந்தப் புனிதவதியாரை மணமகளாகக் கொள்வதைப் பற்றிப் பேசுவதற்காக மாடங்கள் மிகுதியாக உயர்ந்து நிற்கும் காரைக்காலாகிய வளங்களைப் பெற்ற நகரத்திற்குச் செல்லுமாறு அனுப்பினார்கள்.' பாடல் வருமாறு:

" நீடியசீர்க் கடல்நாகை
நீதிபதிஎன் றுலகின்கண்
பாடுபெறு புகழ்வணிகன்
பயந்தகுல மைந்தனுக்குத்
தேடவரும் திருமரபில்
சேயிழையை மகட்பேச
மாடம்மலி காரைக்கால்
வளநகரில் வரவிட்டார்.''

நீடிய - நெடுங்காலமாக விளங்கிய. சீர் - சீர்த்தியைப் பெற்ற. க் : சந்தி. கடல் - சமுத்திரக்கரையில் விளங்கும். நாகை - நாகப்பட்டினத்தில் வாழும். நீதிபதி என்று - நீதிபதி என. உலகின்கண் - இந்த மண்ணுலகத்தில். பாடு - பலகாலும் கூறுதலை. பெறு - பெற்றுள்ள. புகழ் - புகழைக் கொண்ட. வணிகன் - ஒரு வைசியன். பயந்த - பெற்றெடுத்த. குல - உயர்ந்த குடும்பத்தைச் சேர்ந்த. மைந்தனுக்கு - ஒரு வலிமையைப் பெற்ற ஆடவனுக்கு. -த் : சந்தி. தேடவரும் - தேடுவதற்கு அருமையாக இருக்கும். திருமரபில் - செல்வத்தைப் பெற்ற வைசியர்களின் பரம்பரையில். திரு - 'அழகிய' எனலும் ஆம். சேயிழையை - திருவவதாரம் செய்தருளிய சிவந்த பொன்னால் ஆகிய ஆபரணங்களைப் பூண்டு கொண்டிருக்கும் அந்தப் புனிதவதியாரை; அன்மொழித்

தொகை. இழை : ஒருமை பன்மை மயக்கம். அந்த ஆபரணங்களாவன: உச்சிப்பூ, சுட்டி, அராக்கொடி, காதுக் கம்மல்கள், தோடுகள், ஜிமிக்கிகள், வைரஅட்டிகை, தங்க அட்டிகை, முத்துப் புல்லாக்கு, வங்கி, கைக்கங் கணங்கள், தங்க வளையல்கள், நவரத்தின வளையல்கள், ஒட்டியாணம், மேகலை, தங்க அரைஞாண் கயிறு, கால் காப்புக்கள், மோதிரங்கள், மெட்டிகள், பாதசரம், வெண்டயம், கொலுசு, தண்டைகள் முதலியவை. மகள் - மணமகளாக. பேச - கொள்வதைப்பற்றிப் பேசுவதற்காக. மாடம் - மாடங்கள்; ஒருமை பன்மை மயக்கம். மலி - மிகுதியாக உயர்ந்து நிற்கும். காரைக்கால் - காரைக் காலாகிய. வள - நீர் வளம், நில வளம், செல்வ வளம், ஆலய வளம், நன்மக்கள் வளம் முதலிய வளங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். நகரில் - நகரத்திற்கு; உருபு மயக்கம். வர - செல்லுமாறு. விட்டார் - அனுப்பினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 8 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அவ்வாறு புனிதவதியாரை மணமகளாகப் பேசுவதற்கு அந்தத் தனதத்தனுடைய திருமாளிகைக்கு வந்த முதுமையைப் பெற்ற அறிஞர்கள் திருமணத்தைக் குறிப் பிட்ட திருமாளிகைக்குள் நுழைந்து அந்தப் புனிதவதி யாருடைய தகப்பனாகும் தனதத்தனைச் சந்தித்து, "நீ பெற்றெடுத்த பசுமையாகிய தங்க வளைகளை அணிந்து கொண்டிருக்கும் புனிதவதியை நீதிபதியினுடைய வலிமையைப் பெற்ற புதல்வனாகிய பரமதத்தன் என்பவனுக்குப் பழங்காலம் முதல் வரும் பரம்பரைக்குத் தக்கதாக இருக்கும் முறைப்படி திருமணத்தைப் புரிவாயாக" என்று அந்த முதியவர்கள் கூறினார்கள்.' பாடல் வருமாறு :

"வந்தமு தறிவோர்கள்
மணம்குறித்த மனைபுகுந்து

**தந்தையாம் தனதத்தன்**
**தனைநேர்ந்து, 'நீபயந்த**
**பைந்தொடியை நீதிபதிமைந்**
**தன்பரம தத்தனுக்கு**
**முந்தைமர பினுக்கேற்கும்**
**முறைமைமணம் புரி'கென்றார்.''**

வந்த - அவ்வாறு புனிதவதியாரை மணமகளாகப் பேசுவதற்கு அந்தத் தனதத்தனுடைய திருமாளிகைக்கு வந்த. மூதறிவோர்கள் - முதுமையைப் பெற்ற அறிஞர்கள். மணம் - திருமணத்தை. குறித்த - குறிப்பிட்ட. மனை - திருமாளிகைக்குள். புகுந்து - நுழைந்து. தந்தையாம் - புனிதவதியாருடைய தகப்பனாகும். தனதத்தன்தனை - தனதத்தனை. தனை : இடைக்குறை. தன் : அசைநிலை. நேர்ந்து - சந்தித்து. நீ பயந்த - நீ பெற்றெடுத்த. பைந்தொடியை - பசுமையாகிய தங்க வளைகளை அணிந்து கொண்டிருக்கும் புனிதவதியை; அன்மொழித் தொகை. தொடி : ஒருமை பன்மை மயக்கம். நீதிபதி - நீதிபதியினுடைய. மைந்தன் - வலிமையைப் பெற்றவனாகிய புதல்வனாகிய. பரமதத்தனுக்கு - பரமதத்தன் என்பவனுக்கு. முந்தை - பழங்காலந்தொட்டு வரும். மரபினுக்கு - பரம்பரைக்கு. ஏற்கும் - தக்கதாக இருக்கும். முறைமை - முறைப்படி. மணம் - திருமணத்தை. புரிக - செய்வாயாக. என்றார் - என்று அந்த முதியவர்கள் கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம். புரிகென்றார் - புரிக என்றார்; தொகுத்தல் விகாரம்.

பிறகு உள்ள 9 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்தப் பரமதத்தனும் முறைப்படியால் திருமணத்தைச் செய்து கொள்வதற்குச் சம்மதித்துப் போகுமாறு முதியவர்களை அனுப்ப அவர்கள் தனதத்தனாருடைய திருமாளிகைக்குப் போய் அடைந்த அந்த

முதியவர்கள், அந்தப் புனிதவதியாரைப் பெற்றெடுத்த அன்னையார், தந்தையார் என்னும் இரண்டு பேர்களுடைய சம்மதித்த வார்த்தைகளைக் கேட்ட நீதிபதியும் உயர்ந்த சிறப்பைப் பெற்றவனைப் போல மகிழ்ச்சியை அடைந்து ஒப்பற்ற தன்னுடைய பெருமையைப் பெற்ற புதல்வியாகிய புனிதவதிக்குச் செல்வம் மிகுதியாகப் பெற்றிருக்கும் உறவினர்களோடு மகிழ்ச்சியை மிகுதியாக அடைந்து திருமணமாகிய மங்கல காரியத் தொழிலை மேற் கொண்டான்.' பாடல் வருமாறு :

"மற்றவனும் முறைமையினால்
மணம்இசைந்து செலவிடச்சென்
றுற்றவர்கள் உரைகேட்ட
நீதிபதியும் உயர்சிறப்புப்
பெற்றனன்போல் உவந்துதனிப்
பெருமகட்குத் திருமலியும்
சுற்றமுடன் களிகூர்ந்து
வதுவைவினைத் தொழில்பூண்டான்."

மற்று : அசைநிலை. அவனும் - அந்தப் பரமதத்தனும். முறைமையினால் - முறைமைப் படியினால். மணம் - திருமணத்தை. இசைந்து - செய்வதற்குச் சம்மதித்து. செல - போகுமாறு; இடைக்குறை. விட - முதியவர்களை அனுப்ப. ச் : சந்தி. சென்று - அவர்கள் தனதத்தனாருடைய திருமாளிகைக்குப் போய். உற்றவர்கள் - அடைந்த அந்த முதியவர்கள். உரை - அந்தப் புனிதவதியாரைப் பெற்றெடுத்த அன்னையார், தந்தையார் என்னும் இரண்டு பேர்களும் சம்மதித்துக் கூறிய வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேட்ட நீதிபதியும் - கேட்ட அந்த நீதிபதியும். உயர் - உயர்ச்சியையும். சிறப்பு - சிறப்பையும். ப் : சந்தி. பெற்றனன் - போல் - பெற்றவனைப் போல. உவந்து - மகிழ்ச்சியை அடைந்து. தனி - ஒப்பற்ற. ப் : சந்தி.

பெரு - பெருமையைப் பெற்ற. மகட்கு - தன்னுடைய புதல்வியாகிய புனிதவதிக்கு. த் : சந்தி. திரு - செல்வத்தை. மலியும் - மிகுதியாகப் பெற்று விளங்கும். சுற்றமுடன் - உறவினர்களோடு; திளை மயக்கம். களி - மகிழ்ச்சியை. கூர்ந்து - மிகுதியாக அடைந்து. வதுவை - திருமணமாகிய. வினை - மங்கல காரியம் என்னும். த் : சந்தி. தொழில் - தொழிலை; செயலை. பூண்டான் - மேற்கொண்டான்.

பிறகு உள்ள 10 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'திருமணத்துக்குச் சம்மதித்த முகூர்த்த நாளைக் குறித்த ஓலையை தனதத்தனாருடைய திருமாளிகைக்குப் போடுமாறு அனுப்பி மங்கல காரியமாகிய திருமணத்துக்கு உரிய முகூர்த்த நாளை அடைய திருமணமாகிய மங்கல காரியத்துக்குச் சித்தம் செய்ய வேண்டியவை எல்லாவற்றையும் அமையுமாறு புரிந்து பூங்கொத்துக்களைக் கட்டிய மலர்மாலையை அணிந்து கொண்டிருக்கும் மைந்தனாகிய பரமதத்தனையும் திருமணத்துக்கு உரிய அலங்காரங்களினுடைய அழகை விளங்குமாறு புரிந்து பெரியதாக உள்ள முரசு எழுந்து முழக்கத்தைப் புரியக் காரைக்கால் என்னும் சிவத்தலத்திற்குள் அந்த முதியவர்கள் நுழைந்தார்கள்.' பாடல் வருமாறு :

**" மணம்இசைந்த நாளோலை**
**செலவிட்டு மங்கலநாள்**
**அணையவது வைத்தொழில்கள்**
**ஆனவெலாம் அமைவித்தே**
**இணரலங்கல் மைந்தனையும்**
**மணவணியின் எழில்விளக்கிப்**
**பணைமுரசம் எழுந்தார்ப்பக்**
**காரைக்காற் பதிபுகுந்தார்."**

மணம் - திருமணத்துக்கு. இசைந்த - சம்மதித்த. நாள் - முகூர்த்த நாளைக் குறித்த. ஓலை - திருமண

ஓலையை. செல - தனதத்தனாருடைய திருமாளிகைக்குப் போகுமாறு; இடைக்குறை. விட்டு - அனுப்பி. மங்கல - மங்கல காரியமாகிய. நாள் - திருமணத்துக்கு உரிய முகூர்த்த நாளை. அணைய - அடைய. வதுவை - திருமணமாகிய. த்: சந்தி. தொழில்கள் - மங்கல காரியத்துக்கு; பன்மை ஒருமை மயக்கம். ஆன - சித்தம் செய்ய வேண்டியவையான. எலாம் - எல்லாப் பண்டங்களையும்; இடைக்குறை. அவையாவன: ஆசனப் பலகைகள், மாற்று மாலைகள், மலர் மாலைகள், பலவகை ஆபரணங்கள், விருந்துணவு முதலியவை. அமைவித்து - அமையுமாறு புரிந்து. ஏ: அசை நிலை. இணர் - பூங்கொத்துக்களைக் கட்டிய; ஒருமை பன்மை மயக்கம். அலங்கல் - மலர்மாலையை அணிந்துகொண்டிருக்கும். மைந்தனையும் - வலிமையைப் பெற்ற புதல்வனாகிய பரமதத்தனையும். மண - திருமணத்துக்கு உரிய. அணியின் - அலங்காரங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். எழில் - அழகை. விளக்கி - விளங்குமாறு புரிந்து. ப்: சந்தி. பணை - பெரியதாக உள்ள. முரசம் - முரசு. எழுந்து ஆர்ப்ப - ஒலியை எழுப்பி முழக்க. க்: சந்தி. காரைக்காற்பதி - காரைக்கால் என்னும் சிவத்தலத்திற்குள். புகுந்தார் - அந்த முதியவர்கள் நுழைந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 11 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'வண்டுகள் நெருங்கி மொய்க்கும் மலர்மாலையைப் பூண்டுகொண்டு விளங்கும் தனதத்தனுடைய அழகைப் பெற்ற மாடத்துக்குள் நுழைந்து தெளிவை வழங்கும் சாத்திரம் விதித்த விதியின் வழியில் செய்ய வேண்டிய செயல்களை முறைப்படியே செய்து அமைத்து வைத்துத் தளிர்களைப் போன்ற மென்மையான திருவடிகளையும், சிரிப்பையும் பெற்ற மயிலைப் போன்ற புனிதவதியை மகரந்தப்பொடிகள் மலரும் மலர்மாலையை அணிந்து கொண்டிருக்கும் காளை மாட்டைப் போன்ற பரமதத்

தனுக்கு களிப்பையும் மகிழ்ச்சியையும் பெற்ற உறவினர்கள் வாழ்த்தி பாராட்டத் திருமணத்தைத் தனதத்தனாரும் அவருடைய பத்தினியாரும் புரிந்தார்கள்.' பாடல் வருமாறு :

" அளிமிடைதார்த் தனதத்தன்
அணிமாடத் துள்புகுந்து
தெளிதருநூல் விதிவழியே
செயல்முறைமை செய்தமைத்துத்
தளிரடிமென் நகைமயிலைத்
தாதவிழ்த்தார்க் காளைக்குக்
களிமகிழ்சுற் றம்போற்றக்
கலியாணம் செய்தார்கள்."

அளி - வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். மிடை - நெருங்கிப் பறந்து வந்து மொய்க்கும். தார் - மலர் மாலையைப் பூண்டுகொண்டு விளங்கும். த் : சந்தி. தனதத்தன் - தனதத்தனுடைய. அணி - அழகைப் பெற்ற; 'அலங்காரத்தைப் பெற்ற' எனலும் ஆம். மாடத்துள் - மாடத்துக்குள். புகுந்து - நுழைந்து. தெளி - தெளிவை; முதல்நிலைத் தொழிற்பெயர். தரு - வழங்கும். நூல் - சாத்திரம் விதித்த. விதிவழி - விதியின் வழியில். ஏ : அசைநிலை. செயல் - செய்ய வேண்டிய செயல்களை; ஒருமை பன்மை மயக்கம். முறைமை - முறைப்படியே. செய்து - புரிந்து. அமைத்து - அமைத்து வைத்து. த் : சந்தி. தளிர் - தளிர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம்; உவம ஆகுபெயர். தளிர் - முற்றாத இலை. அடி - திருவடிகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மென் - மென்மையாகிய. நகை - சிரிப்பைப் பெற்ற. மயிலை - மயிலைபோன்ற புனித வதியை; உவம ஆகுபெயர். த் : சந்தி. தாது - மகரந்தப் பொடிகள்; ஒருமை பன்மை மயக்கம். அவிழ் - மலரும். தார் - மலர்மாலையை அணிந்து கொண்டிருக்கும். க் : சந்தி. காளைக்கு - காளை மாட்டைப் போன்ற

பரமதத்தனுக்கு; உவம ஆகுபெயர். க்: சந்தி. களி - களிப்பையும். மகிழ் - மகிழ்ச்சியையும் பெற்று விளங்கும். சுற்றம் - உறவினர்கள்; திணை மயக்கம். போற்ற - வாழ்த்திப் பாராட்ட. க்: சந்தி. கலியாணம் - திருமணத்தை. செய்தார்கள் - தனதத்தனாரும் அவருடைய பத்தினியாரும் புரிந்து வைத்தார்கள்.

பிறகு வரும் 12 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'மங்கல காரியமாகும் திருமணத்துக்கு உரிய காரியங்களை நிறைவேற்றிவிட்டு இயல்போடு காரைக்காலில் தங்கிக் கொண்டிருக்கும் காலத்தில் தங்களுடைய குடும்பத்திற்கு அருமையாக விளங்கும் புதல்வி புனிதவதி ஆகையினால் தனதத்தன் பொங்கி எழும் முழக்கத்தை எழுப்பும் சமுத்திரத்தில் நிரம்பிய நீரைப் பெற்ற நாகப்பட்டினத்திற்குச் செல்லாமல் தம்முடைய கணவனாகிய பரமதத்தனோடு அந்தக் காரைக்காலில் தங்கிக்கொண்டிருந்து, இனிமையோடு வாழ்ந்திருப்பதற்காக அழகைப் பெற்ற ஒரு மாடத்தைத் தன்னுடைய திருமாளிகைக்குப் பக்கத்தில் கட்டுவித்து அமைத்தான்.' பாடல் வருமாறு:

"மங்கலமா மணவினைகள்
முடித்தியல்பின் வைகும்நாள்
தங்கள்குடிக் கரும்புதல்வி
ஆதலினால் தனதத்தன்
பொங்கொலிநீர் நாகையினிற்
போகாமே கணவனுடன்
அங்கண்அமர்ந் தினிதிருக்க
அணிமாடம் மருங்கமைத்தான்."

மங்கலம் - மங்கல காரியம். ஆம் - ஆகும். மண - திருமணத்துக்கு உரிய. வினைகள் - காரியங்களை. முடித்து - செய்து நிறைவேற்றிவிட்டு. இயல்பின் - தனக்கு உரிய இயல்போடு. வைகும் - காரைக்காலில் தங்கிக் கொண்டிருக்கும். நாள் - காலத்தில். தங்கள் - தங்களுடைய. குடிக்கு - குடும்பத்திற்கு. அரும் - அருமை

யாக விளங்கும். புதல்வி - மகள் புனிதவதி. ஆதலினால் - ஆகையினால். தனதத்தன் - புனிதவதியாருடைய தந்தையாகிய தனதத்தன். பொங்கு - பொங்கி எழும். ஒலி - முழக்கத்தை எழுப்பும். நீர் - சமுத்திரத்தில் நிரம்பிய புனலைப் பெற்ற. நாகையினில் - நாகப்பட்டினத் திற்கு; உருபு மயக்கம். போகாமே - செல்லாமல். கணவனுடன் - தம்முடைய கணவனாகிய பரமதத்தனோடு. அங்கண் - அந்தக் காரைக்காலில். அமர்ந்து - தங்கிக் கொண்டிருந்து. இனிது - இனிமையோடு. இருக்க - வாழ்ந்து கொண்டிருக்க. அணி - அலங்காரத்தைப் பெற்ற; 'அழகைப்பெற்ற' எனலும் ஆம். மாடம் - ஒரு மாடத்தை. மருங்கு - தன்னுடைய திருமாளிகைக்குப் பக்கத்தில். அமைத்தான் - தனதத்தன் கட்டுவித்து அமைத்தான்.

பிறகு உள்ள 13 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அந்தத் தனதத்தன் தன்னுடைய புதல்வியாகிய புனிதவதியைப் பரமதத்தனுக்குத் திருமணம் செய்து கொடுத்த கொடையினால் மகிழ்ச்சியில் சிறந்து விளங்கும் எல்லை இல்லாத செல்வத்தை அந்தப் புனிதவதியாருக்கு வழங்கியதற்குப் பிறகு சமானம் சொல்லுதற்கு அருமை யாக உள்ள பெருமையைப் பெற்று விளங்கும் சிறப்பைப் பெற்ற செல்வத்துக்கு அதிபதியாகியவனுடைய விருப்பத் தினால் அந்தப் புனிதவதியார் தங்கி வாழும் திருமாளிகையில் செல்வ வளத்தைப் பெருக உண்டாக்கி வைத்து மிகுதியாகச் செய்யும் கோட்பாட்டில் மேம் பாட்டைப் பெற்று விளங்குதலை அந்தத் தனதத்தன் அடைந்தான்.' பாடல் வருமாறு :

13 மகட்கொடையின் மகிழ்சிறக்கும்
வரம்பில்தனம் கொடுத்ததற்பின்
நிகர்ப்பரிய பெருஞ்சிறப்பில்
நிதிபதிதன் குலமகனும்
தகைப்பில்பெருங் காதலினால்
தங்குமனை வளம்பெருக்கி

**மிகப்புரியும் கொள்கையினில்**
**மேம்படுதல் மேவினான்.''**

மகள் - அந்தத் தனதத்தன் தன்னுடைய புதல்வி யாகிய புனிதவதியை. கொடையின் - பரமதத்தனுக்குத் திருமணம் செய்து கொடுத்த கொடையினால். மகிழ் - மகிழ்ச்சியில். சிறக்கும் - சிறந்து விளங்கும். வரம்பு - எல்லை. இல் - இல்லாத; கடைக்குறை. தனம் - செல்வத்தை. கொடுத்ததற்பின் - அந்தப் புனிதவதி யாருக்கு வழங்கியதற்குப் பிறகு. நிகர்ப்பு - சமானமாகச் சொல்வதற்கு. அரிய - அருமையாக உள்ள. பெரும் - பெருமையைப் பெற்று விளங்கும். சிறப்பில் - சிறப்பைப் பெற்ற. நிதிபதிதன் - செல்வத்துக்கு அதிபதியாகிய வனுடைய. தன் : அசைநிலை. குல - நல்ல குலத்திற் பிறந்த. மகனும் - புதல்வனும். தகைப்பு - தடுத்தல். இல் - இல்லாத; கடைக்குறை. பெரும் - பெருமையைப் பெற்று விளங்கும். காதலினால் - விருப்பத்தோடு; உருபு மயக்கம். தங்கும் - தன்னுடைய புதல்வியாகிய புனிதவதி தங்கி வாழும். மனை - திருமாளிகையில். வளம் - செல்வ வளத்தை. பெருக்கி - பெருகச் செய்து. மிக - மிகுதியாக. ப்: சந்தி. புரியும் - செய்யும். கொள்கையினில் - கோட் பாட்டில். மேம்படுதல் - மேம்பாட்டைப் பெற்று விளங்கு தலை. மேவினான் - அந்தத் தனதத்தன் அடைந்தான்.

பிறகு வரும் 14 -ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்த நாகப்பட்டினத்தில் அந்தப் பரமதத்தனுடைய இல்லற வாழ்க்கைக்கு அருமையாக விளங்கும் வாழ்க்கைத் துணையாகிய மனைவியாகி விரும்பி வாழ்கின்ற மலர்களை அணிந்துகொண்டிருக்கும் கூந்தலை உடைய அந்த மாதரசியாரும் போர் புரியும் இடபவாகனத்தை ஓட்டுபவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியினுடைய திருவடிகளின் கீழே ஓங்கி எழுந்த பக்தி உண்டாகிய விருப்பம் ஒழிவே இல்லாமல் மிகுதியாகப் பெருகி உண்டாகப் பக்குவத்தோடு அமைந்துவரும் இல்லற

வாழ்க்கைக்குரிய தருமங்களினுடைய பண்பு தவறாமல் இருக்குமாறு அந்தப் புனிதவதியார் பழகுபவரானார்." பாடல் வருமாறு :

**" ஆங்கவன்தன் இல்வாழ்க்கை**
**அருந்துணையாய் அமர்கின்ற**
**பூங்குழலார் அவர்தாமும்**
**பொருவிடையார் திருவடிக்கீழ்**
**ஓங்கியஅன் புறுகாதல்**
**ஒழிவின்றி மிகப்பெருகப்**
**பாங்கில்வரும் மனைஅறத்தின்**
**பண்புவழா மையில்பயில்வார்."**

ஆங்கு - அந்த நாகப்பட்டினத்தில். அவன்தன் - அந்தப் பரமதத்தனுடைய. தன் : அசைநிலை. இல் - இல்லற. வாழ்க்கை - வாழ்க்கைக்கு. அரும் - அருமையாக விளங்கும். துணையாய் - வாழ்க்கைத் துணையாகிய மனைவியாகி. அமர்கின்ற - விரும்பி வாழ்கின்ற. பூம் - மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். குழலார் - அணிந்து கொண்டிருக்கும் கூந்தலைப் பெற்றவர் ஆகிய. அவர் தாமும் - அந்த மாதரசியாரும். தாம் : அசை நிலை. அந்த மலர்களாவன : வெள்ளைச் செவ்வந்தி மலர், மஞ்சட்செவ்வந்தி மலர், குண்டுமல்லிகை மலர், மல்லிகை மலர், ஊசிமல்லிகை மலர், முல்லை மலர், இருவாட்சி மலர், செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், ஆம்பல் மலர், அல்லி மலர், நீலோற்பல மலர், செங்கழுநீர் மலர், குமுத மலர், மகிழ மலர் முதலியவை. பொரு - போரைப் புரியும். விடையார் - இடப வாகனத்தை ஓட்டுபவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியினுடைய. திருவடிக்கீழ் - திருவடிகளின் கீழே; ஒருமை பன்மை மயக்கம். ஓங்கிய - ஓங்கி எழுந்த; அன்பு - பக்தி. உறு - பெற்ற; 'உண்டாகிய' எனலும் ஆம். காதல் - விருப்பம். ஒழிவு - ஓர் ஒழிவே இன்றி - இல்லாமல். மிக - மிகுதியாக. ப் : சந்தி. பெருக - பெருகி உண்டாக; 'பெருகி எழ' எனலும் ஆம். ப் : சந்தி

பாங்கில் - பக்குவத்தோடு; உருபுமயக்கம். வரும் - அமைந்து வரும். மனை அறத்தின் - இல்லற வாழ்க்கைக்கு உரிய. பண்பு - நல்ல குணம். வழாமையில் - தவறாமல் இருக்குமாறு பயில்வார் - அந்தப் புனிதவதியார் பழகுப வரானார்.

பிறகு உள்ள 15 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தம்முடைய அடியவர்களுக்குப் பலவிதமான நம்பிக்கைகளை உண்டாக்குபவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியினுடைய அடியவர்கள் தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளினால் அந்த அடியவர்க்கு நல்ல திரு அமுதை வழங்கியும், சிவந்த நிறத்தைப் பெற்ற தங்கக் காசுகளையும், முத்து, பவளம், பதுமராகம், புட்பராகம், கோமேதகம், மரகதக்கல், நீலமணி, வைரம், வைடூரியம் என்னும் ஒன்பது இரத்தினங்களையும் செழுமையாகிய மெல்லிய ஆடையையும் முதலாக உள்ளவற்றைத் தம்முடைய பக்தியினால் அந்த அடியவர்களுக்கு தகுதியோடு வேண்டும் பண்டங்களை வழங்கியும் எல்லாத் தேவர்களுக்கும் தலைவனாகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியினுடைய திருவடிகளின் கீழே உணர்ச்சி மிகுதியாக உண்டாகுமாறு அந்தப் புனிதவதியார் நடந்து வரும் காலத்தில்.' பாடல் வருமாறு:

"நம்பர்அடி யார்அணைந்தால்
நல்லதிரு அமுதளித்தும்
செம்பொன்னும் நவமணியும்
செழுந்துகிலும் முதலான
தம்பரிவி னால்அவர்க்குத்
தகுதியின்வேண் டுவகொடுத்தும்
உம்பர்பிரான் திருவடிக்கீழ்
உணர்வுமிக ஒழுகும்நாள்."

இந்தப் பாடல் குளகம். நம்பர் - தம்முடைய அடியவர் களுக்குப் பலவகையான நம்பிக்கைகளை உண்டாக்கு

பெற்றிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியினுடைய. அந்த நம்பிக்கைகள் இன்ன என்பதை வேறு ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. அடியார் - அடியவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அணைந்தால் - தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளி வந்தால். நல்ல - நல்லதாகிய. திருஅமுது - திருஅமுதை; சோற்றை. அளித்தும் - வழங்கியும்; படைத்தும். செம் - சிவப்பாக இருக்கும். பொன்னும் - தங்கக் காசுகளையும்; ஆகுபெயர்; ஒருமை பன்மை மயக்கம். நவமணியும் - முத்து, பவளம், பதும ராகம், புட்பராகம், கோமேதகம், மரகதக்கல், நீலமணி, வைரம், வைடூரியம் என்னும் ஒன்பது இரத்தினங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். செழும் - செழுமையாகிய. துகிலும் - மெல்லிய ஆடையையும். முதலான - முதலாக உள்ளவற்றை. தம் - தம்முடைய. பரிவினால்-பக்தியினால். அவர்க்கு - அந்த அடியவர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். த்: சந்தி. தகுதியின் - தகுதியோடு. வேண்டுவ - விரும்பும் பண்டங்களை. அவையாவன: செல்வம், திருநீறு, உருத்திராக்க மாலை, திருவமுது, ஆசனப்பலகை, புதிய ஆடைகள், பாத்திரங்கள், கையலம்ப நீர்வைக்கும் செம்பு, கால் அலம்ப நீர் வைக்கும் செம்பு, வாயைத் துடைத்துக்கொள்ள ஆடை, காலைத் துடைத்துக்கொள்ள ஆடை, உடுத்துக் கொள்ளச் சரிகை வேட்டி, அங்க வஸ்திரம், பலவகை ஆபரணங்கள் முதலியவை. கொடுத்தும் - வழங்கியும். உம்பர் - எல்லாத் தேவர் களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பிரான் - தலைவனாகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியினுடைய. திருவடிக் கீழ் - திருவடிகளின் கீழே; ஒருமை பன்மை மயக்கம். உணர்வு - உணர்ச்சி. மிக - மிகுதியாக உண்டாகுமாறு.. ஒழுகும் - நடந்துவரும். நாள் - காலத்தில்.

பிறகு வரும் 16 - ஆம் பாட்டின் கருத்து வருமாறு:

'பக்குவத்தைப் பெற்ற வழியில் பயின்று பழகும் புனிதவதியாருடைய கணவனாகிய பரமதத்தனுக்கு மாம்பழங்கள் ஓரிரண்டு பழங்கள் அந்தப் பரமதத்தனிடம் வந்து சேர்ந்த மக்கள் சில பேர்கள் வழங்க அவ்வாறு அவற்றைத் தான் முன்னால் வாங்கிக்கொண்டு அந்த மாம்பழங்களைக் கொடுத்த மக்கள் விரும்பும் விலையைக் கொடுத்துவிட்டு "இந்த மாம்பழங்களை என்னுடைய திருமாளிகைக்கு எடுத்துச் சென்று கொடுப்பாயாக", என்று அந்தப் பரமதத்தன் கூறினான்.' பாடல் வருமாறு :

**" பாங்குடைய நெறியின்கட்**
**பயில்பரம தத்தனுக்கு**
**மாங்கனிகள் ஓரிரண்டு**
**வந்தணைந்தார் சிலர்கொடுப்ப**
**ஆங்கவைதான் முன்வாங்கி**
**அவர்வேண்டும் குறையளித்தே**
**'ஈங்கிவற்றை இல்லத்துக்**
**கொடுக்க' என இயம்பினான். "**

பாங்கு - பக்குவத்தை. உடைய - பெற்ற. நெறியின் கண் - வழியில். பயில் - பயின்று பழகும். பரமதத்தனுக்கு - புனிதவதியாருடைய கணவனாகிய பரமதத்தனுக்கு. மாங் கனிகள் - மாம்பழங்கள். ஓரிரண்டு - ஓரிரண்டு மாம்பழங்கள். வந்து - அந்தப் பரமதத்தனிடம் வந்து. அணைந்தார் - சேர்ந்த மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். சிலர் - சில பேர்கள்; ஒருமை பன்மை மயக்கம். கொடுப்ப - வழங்க. ஆங்கு - அவ்வாறு. அவை - அவற்றை. 'தான்' என்பது பரமதத்தனை. முன் - முன்னால். வாங்கி - வாங்கிக் கொண்டு. அவர் - அந்த மாம்பழங்களைக் கொடுத்த மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். வேண்டும் - பெற விரும்பும். குறை - விலையை. அளித்து - வழங்கி விட்டு. ஏ : அசைநிலை. ஈங்கு - இந்த இடத்தில் யான் பெற்ற. இவற்றை - இந்த மாம்பழங்களை. இல்லத்து - என்னுடைய திருமாளிகைக்கு எடுத்துச்சென்று. கொடுக்க-

கொடுப்பாயாக. என - என்று; இடைக்குறை. இயம்பினான் - அந்தப் பரமதத்தன் கூறினான்.

பிறகு வரும் 17 - ஆம் கவியின் கருத்து வருமாறு:

'பரமதத்தன் தம்முடைய திருமாளிகைக்கு வருமாறு அனுப்பிய இரண்டு மாம்பழங்களையும் அந்தப் பரமதத்தன் தன்னுடைய கைகளில் வாங்கிக் கொண்டு நறுமணம் மிக்குக் கமழும் மலர்களை அணிந்துகொண்டிருக்கும் கூந்தலைப் பெற்ற மாதரசியாராகிய புனிதவதியார் தம்முடைய திருமாளிகையில் பாதுகாப்பாக உள்ள ஓரிடத்தில் வைத்ததற்குப் பிறகுபடங்களைப் பெற்ற பாம்புகளை அணிந்துகொண்டருளும் பரமனாராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியினுடைய திருத்தொண்டராகிய பரமதத்தர் தாம் உண்ணும் உணவில் மிக்க விருப்பத்தினால் ஒருவருடைய திருமாளிகைக்குள் நுழைந்தார்.' பாடல் வருமாறு:

"கணவன்தான் வரவிடுத்த
கனிஇரண்டும் கைக்கொண்டு
மணம்மலியும் மலர்க்கூந்தல்
மாதரார் வைத்ததற்பின்
பணஅரவம் புனைந்தருளும்
பரமனார் திருத்தொண்டர்
உணவின்மிகு வேட்கையினால்
ஒருவர்மனை யுட்புகுந்தார்."

கணவன் - புனிதவதியார் தம்முடைய கணவனாகிய பரமதத்தன். 'தான்' என்றது பரமதத்தனை. வர - தம்முடைய திருமாளிகைக்கு வருமாறு. விடுத்த - அனுப்பிய. கனி இரண்டும் - இரண்டு மாம்பழங்களையும். கனி: ஒருமை பன்மை மயக்கம். கை - தம்முடைய கைகளில் அந்தப் பரமதத்தன்; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. கொண்டு - வாங்கிக்கொண்டு. மணம் - நறுமணம்,

மலியும் - மிகுதியாகக் கமழும். மலர் - மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. கூந்தல் - கூந்தலைப் பெற்ற. மாதரார் - மாதரசியாராகிய புனிதவதியார். வைத்ததற்பின் - தம்முடைய திரு மாளிகையில் பாதுகாப்பாக உள்ள ஓரிடத்தில் வைத்த தற்குப் பிறகு. பண - படங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். அரவம் - பாம்புகளை; ஒருமை பன்மை மயக்கம். புனைந்தருளும் - அணிந்து கொண்டருளும். பரமனார் - பரமனாராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியினுடைய. திருத்தொண்டர் - திருத்தொண்டராகிய பரமதத்தர். உணவில் - தாம் உண்ணுவதற்குரிய உணவில்: மிகு - மிக்க. வேட்கையினால் - விருப்பத்தால். ஒருவர் - காரைக் காலில் வாழும் ஒரு பக்தருடைய. மனையுள் - திருமாளிகைக்கு உள்ளே. புகுந்தார் - நுழைந்தார்.

பிறகு வரும் 18 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'பல வேதங்களைத் திருவாய் மலர்ந்தருளிய தலைவ னாகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியினுடைய உண்மை யாகிய திருத்தொண்டராகிய பரமதத்தருடைய நிலையைப் பார்த்து, "நாதனாகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி தன்னுடைய அடியாராகிய பரமதத்தருடைய வயிற்றுப் பசியைப் போக்குவேன்" என்று அடைந்து தம்முடைய திருவடிகளைக் கழுவுவதற்காக புனலை முன்னால் வழங்கிவிட்டு உண்ணுவதற்குரிய பாத்திரமாகிய நுனி வாழையிலையைத் துடைத்துவிட்டு வைத்து, குற்றம் தீர்ந்த நல்ல ஆறு சுவைகளைப் பெற்ற விருந்துணவாகும் இனிய சுவையைப் பெற்ற உணவை உண்ணச் செய்ய வரானார்.' பாடல் வருமாறு:

" வேதங்கள் மொழிந்தபிரான்
மெய்த்தொண்டர் நிலைக்கண்டு
'நாதன்தன் அடியாரைப்
பசிதீர்ப்பேன்' எனநண்ணிப்

பாதங்கள் விளக்கநீர்
முன்னளித்துப் பரிகலம்வைத்
தேதம்தீர் நல்விருந்தா
இன்அடிசில் ஊட்டுவார்.''

வேதங்கள் - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களை அல்லாமல் பல வேதங்களை. மொழிந்த - திருவாய் மலர்ந்தருளிச் செய்த. பிரான் - தலைவனாகிய ஊர்த்துவ தாண்டவமூர்த்தியினுடைய. மெய்-உண்மையான. த்:சந்தி. தொண்டர்-திருத்தொண்டராகிய பரமதத்தருடைய. நிலை - நிலையை. கண்டு - பார்த்துவிட்டு. நாதன் - தலைவனாகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி. தன் - தன்னுடைய. அடியாரை - அடியவராகிய பரமதத்தருடைய; உருபு மயக்கம். ப் : சந்தி. பசி - வயிற்றுப் பசியை. தீர்ப்பேன் - போக்குவேன். என - என்று; இடைக்குறை. நண்ணி-அடைந்து. ப் : சந்தி. பாதங்கள் - தம்முடைய திருவடிகளை. விளக்க - கழுவும் பொருட்டு. நீர் - தூய புனலை. முன் - முன்னால். அளித்து - வழங்கி விட்டு. ப் : சந்தி. பரிகலம் - உண்ணுவதற்கு உரிய பாத்திரமாகிய துனிவாழையிலையை. வைத்து - துடைத்து விட்டு வைத்து. ஏதம் - குற்றம். தீர் - தீர்த்த. நல் - நல்ல. விருந்தா - ஆறுசுவைகளைப் பெற்ற விருந்துணவாக. ஆறு சுவைகளாவன: கைப்பு, துவர்ப்பு, புளிப்பு, உப்பு, தித்திப்பு, பருப்புச்சுவை என்பன. இன் - இனிய சுவையைப் பெற்ற: அடிசில் - உணவை. ஊட்டுவார் - உண்ணச் செய்பவரானார்.

பிறகு வரும் 19-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'கறியமுது அந்த இடத்தில் உதவாமற் போகத் திருஅமுது மாத்திரம் கைகூட நறுமணம் கமழும் செந்தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் திருமகளைப் போன்றவராகிய புனிதவதியார், "இடப வாகனத்தை

ஓட்டுபவனாகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியினுடைய அடியவராகிய பரமதத்தரே பெறுவதற்கு அருமையாக உள்ள விருந்தாளி ஆகுமானால் அடியேன் பெறும் பாக்கியம் இதற்கு மேல் வேறு ஒன்றும் இல்லை'' என்னும் அறிவைப் பெற்றவராகி அந்த அடியவர் திருஅமுது செய்வதற்காக பேராவலை உடையவரானார்.' பாடல் வருமாறு :

> '' கறியமுதங் குதவாதே
> திருஅமுது கைகூட
> வெறிமலர்மேல் திருவனையார்,
> 'விடையவன் தன்அடியாரே
> பெறலரிய விருந்தானால்
> பேறிதன்மேல் இல்லை'எனும்
> அறிவினராய் அவர்அமுது
> செய்வதனுக் காதரிப்பார்.''

கறியமுது அங்கு - கறியமுது அந்த இடத்தில். உதவாது - உதவாமற் போக. ஏ : அசைநிலை. திருஅமுது - திருவமுது மாத்திரம். கைகூட - கைகூடி வர. வெறி - நறுமணம் கமழும். மலர்மேல் - செந்தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும். திரு - திருமகளை. அனையார் - போன்றவராகிய புனிதவதியார். விடையவன் - இடபவா கனத்தை ஓட்டுபவனாகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி யினுடைய. தன் : அசைநிலை. அடியாரே - அடியவராகிய பரமதத்தரே. பெறல் அரிய - பெறுவதற்கு அருமையாக உள்ள. விருந்து - விருந்தாளி; திணை மயக்கம். ஆனால் - ஆனாரானால். பேறு - அடியேன் பெறும் பாக்கியம். இதன் மேல் இல்லை - இதற்குமேல் வேறு ஒன்றும் இல்லை. எனும் - என்னும்; இடைக்குறை. அறிவினராய் - அறிவைப் பெற்றவராகி. அவர் - அந்த அடியவர். அமுது செய்வ தனுக்கு - திருவமுது செய்வதற்காக. ஆதரிப்பார் - பேராவல் உடையவரானார்.

அடுத்து வரும் 20 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அந்தத் திருமாளிகைக்கு உரியவனான தனதத்தன் ''வைப்பாயாக'' என்று கூறத் தம்மிடம் முன்னால் இருந்த நல்ல நறுமணம் கமழும் இரண்டு மாம்பழங்களில் ஒரு மாம்பழத்தை எடுத்துக்கொண்டு மிக வேகமாகச் சென்று தன்னுடைய திருமாளிகைக்கு வந்து சேர்ந்து அந்த அடியவருக்கு அந்த மாம்பழத்தை இலையில் படைத்து விட்டுத் தம்முடைய திருவுள்ளத்தில் எழுந்த களிப்பினால் துன்பங்களைத் தீர்ப்பவராகிய ஊர்த்துவதாண்டவ மூர்த்தியினுடைய அடியவரைத் திருஅமுது செய்யுமாறு செய்தார்.' பாடல் வருமாறு :

**'' இல்லாளன் 'வைக்க' எனத்**
**தம்பக்கல் முன்இருந்த**
**நல்லநறு மாங்கனிகள்**
**இரண்டினில்ஒன் றைக்கொண்டு**
**வல்விரைந்து வந்தணைந்து**
**படைத்துமனம் மகிழ்ச்சினால்**
**அல்லல்தீர்ப் பவர்அடியார்**
**தமைஅமுது செய்வித்தார்.''**

இல்லாளன் - அந்தத் திருமாளிகையை ஆட்சி புரிபவனாகிய தனதத்தன். வைக்க என - 'இந்த மாம்பழத்தை என்னுடைய திருமாளிகையில் ஒரு பாதுகாப்பாக உள்ள இடத்தில் வைப்பாயாக' என்று கூற. என: இடைக்குறை. த் : சந்தி. தம் - தம்முடைய; ஒருமை பன்மை மயக்கம். பக்கல் - இடத்தில். முன் இருந்த - முன்னால் வைத்திருந்த. நல்லநறு - நல்ல நறுமணம் கமழும். மாங்கனிகள் - மாம்பழங்கள். இரண்டினில் - இரண்டில். ஒன்றை - ஒரு மாம்பழத்தை. க் : சந்தி. கொண்டு - எடுத்துக் கொண்டு. வல்விரைந்து-மிக வேகமாகச் சென்று. வந்து - தன்னுடைய திருமாளிகைக்கு வந்து. அணைந்து - சேர்ந்து. படைத்து - அந்த அடியவருக்கு அந்த மாம்பழத்தை இலையில் படைத்துவிட்டு. மனம் - தம்முடைய திருவுள்ளத்தில் எழுந்த. மகிழ்ச்சியினால் - ஆனந்தத்தால். அல்லல் -

துன்பங்களை; ஒருமை பன்மை மயக்கம். தீர்ப்பவர் - போக்கியருளுபவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியினுடைய. அடியார் தமை - அடியவரை. தமை: இடைக்குறை. தாம்: அசைநிலை. அமுது செய்வித்தார் - திருஅமுது செய்யுமாறு செய்தார்; உண்ணுமாறு செய்தார்.

பிறகு வரும் 21 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'முதுமையை அடைந்திருக்கும் அந்தத் தளர்ச்சியினாலும், முதிர்ச்சியை அடைந்து தம்மைச் செலுத்திய உணவை விரும்பும் விருப்பமாகிய நெருப்பைப் போன்ற வயிற்றுப் பசியினுடைய நிலைமையினாலும், சோர்வை அடைந்து தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளிய திருத்தொண்டர் ஆகிய அந்த முதியவர் வாய்ப்பாக அமைந்த மென்மையான ஆறுவகையாகிய சுவைகளைப் பெற்ற உணவை அந்த ஒரு மாம்பழத்தினோடு இனிமையாக உண்டு மலர்களை அணிந்து பழகிய மென்மையான கூந்தலைப் பெற்ற மடப்பத்தைப் பெற்றவராகிய புனிதவதியாருடைய செயலுக்குத் தம்முடைய திருவுள்ளத்தில் மகிழ்ச்சியை அடைந்து அந்தத் திருமாளிகையைவிட்டு அந்த முதிய அடியவர் சென்றார்.' பாடல் வருமாறு:

> " **மூப்புறும்அத் தளர்வாலும்**
> **முதிர்ந்துமுடு கியவேட்கைத்**
> **தீப்பசியின் நிலையாலும்**
> **அயர்ந்தணைந்த திருத்தொண்டர்**
> **வாய்ப்புறுமென் சுவைஅடிசில்**
> **மாங்கனியோ டினிதருந்திப்**
> **பூப்பயில்மென் குழல்மடவார்**
> **செயல்உவந்து போயினார்."**

மூப்பு - முதுமையை. உறும் - அடைந்திருக்கும். அத்தளர்வாலும் - அந்தத் தளர்ச்சியினாலும். முதிர்ந்து - முதிர்ச்சியை அடைந்து. முடுகிய - தம்மைச் செலுத்திய.

வேட்கை-உணவை விரும்பும் விருப்பமாகிய. த் : சந்தி. தீ - நெருப்பைப் போன்ற; உவம ஆகுபெயர். ப் : சந்தி. பசியின் - வயிற்றுப் பசியினுடைய. நிலையாலும் - நிலைமையினாலும். அயர்ந்து - சோர்வை அடைந்து. அணைந்த - தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளிய. திருத்தொண்டர் - திருத்தொண்டராகிய அந்த முதியவர். வாய்ப்புறு - வாய்ப்பாக அமைந்த. மென் - மென்மையான. சுவை - கைப்பு, புளிப்பு, இனிப்பு, உப்பு, உவர்ப்பு, துவர்ப்பு என்னும் ஆறு சுவைகளைக் கொண்ட; ஒருமை பன்மை மயக்கம். அடிசில் - உணவை. மாங்கனியோடு - அந்த ஒரு மாம்பழத்தோடு. இனிது - இனிமையாக. அருந்தி - உண்டு. ப் : சந்தி. பூ - மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். ப் : சந்தி. பயில் - அணிந்துகொண்டு பழகிய. மென் - மென்மையாகிய. குழல் - கூந்தலைப் பெற்ற. மடவார் - மடப்பத்தைக் கொண்ட புனிதவதியாருடைய. செயல் - செயலுக்கு. உவந்து - மகிழ்ச்சியை அடைந்து. போயினார் - அந்தத் திருமாளிகையைவிட்டு அந்த முதிய அடியவர் சென்றார்.

பிறகு வரும் 22 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்த முதிய அடியவர் அவ்வாறு அந்தத் திருமாளிகையைவிட்டுச் சென்ற பிறகு அந்தத் திருமாளிகைக்குத் தலைவனாகிய வைசியனாகும் தனதத்தன் அன்று வந்த பெரியதாக இருக்கும் முற்பகலில் ஓங்கி உயர்ந்து நின்ற பெருமையைப் பெற்று விளங்கும் தன்னுடைய திருமாளிகையை அடைந்து பொலிவு பெறுமாறு முன்னால் நறும்புனலில் முழுகிவிட்டுத் தன்னுடைய திருமாளிகைக்குள் நுழைந்து உணவை விரும்பி உண்ண கற்பையும் மடப்பத்தையும் பெற்றவராகிய புனிதவதியாரும் தம்முடைய கடமையினால் தம்முடைய கணவராகிய பரமதத்தரை உண்ணுமாறு புரிவாரானார்.'

பாடல் வருமாறு :

"மற்றவர்தாம் போயினபின்
மனைப்பதியா கியவணிகன்
உற்றபெரும் பகலின்கண்
ஓங்கியபே ரில்லெய்திப்
பொற்புறமுன் நீராடிப்
புகுந்தடிசில் புரிந்தயிலக்
கற்புடைய மடவாரும்
கடப்பாட்டில் ஊட்டுவார்."

மற்று : அசைநிலை. அவர்தாம் - அந்த முதிய அடியவர். தாம் : அசைநிலை. போயினபின் - அந்தத் திருமாளிகையை விட்டுச் சென்ற பிறகு. மனை - அந்தத் திருமாளிகைக்கு. ப் : சந்தி. பதியாகிய - தலைவனாகிய. வணிகன் - வைசியனாகும் தனதத்தன். உற்ற - அன்று வந்த. பெரும் - பெரியதாக இருக்கும். பகலின்கண் - முற்பகலில். ஓங்கிய - ஓங்கி உயர்ந்து நின்ற. பேரில் - பெருமையைப் பெற்று விளங்கும் தன்னுடைய திருமாளிகையை. எய்தி - அடைந்து. ப் : சந்தி. பொற்பு - தோற்றப் பொலிவை. உற - பெறுமாறு. முன் - முன்னால். நீராடி - நறும்புனலில் முழுகிவிட்டு. ப் : சந்தி. புகுந்து - தன்னுடைய திருமாளிகைக்குள் நுழைந்து. அவன் முழுகியது புறத்தில் உள்ள ஒரு நீர் நிலையில். அடிசில் - உணவை. புரிந்து - விரும்பி. அயில் - உண்ண. க் : சந்தி. கற்பு - கற்பை. உடைய - பெற்ற. மடவாரும் - மடப்பத்தைப் பெற்றவராகிய புனிதவதியாரும். கடப்பாட்டில் - தம்முடைய இல்லற வாழ்வுக்கு உரிய கடமையினால்; உருபு மயக்கம். ஊட்டுவார் - தம்முடைய கணவராகிய பரமதத்தனை உண்ணுமாறு புரிவாராயினார்.

பிறகு வரும் 23 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'இனிய ஆறு சுவைகளைப் பெற்ற உணவை பலவகை யாகிய கறியமுதுகளோடு அடையும் முறைப்படி வாழை

இலையில் வைத்ததற்குப்பிறகு நிலைபெற்ற புகழையும் சீர்த்தியையும் பெற்ற தம்முடைய கணவனாகிய பரமதத்தன் தன்னுடைய திருமாளிகையில் பாதுகாப்பான ஓரிடத்தில் வைக்குமாறு செய்த நல்ல இனிய சுவையைப் பெற்ற இரண்டு மாம்பழங்களில் எஞ்சியிருந்த ஒரு மாம்பழத்தை நறுமணம் கமழும் கூந்தலைப் பெற்றவரும், அன்னப் பறவையைப் போன்றவரும் ஆகிய புனிதவதியாரும் அந்த மாம்பழத்தை எடுத்துக்கொண்டு வந்து உண்கலமாகிய நுனிவாழை இலையில் படைத்தார்." பாடல் வருமாறு :

**" இன்னடிசில் கறிகளுடன்**
**எய்துமுறை இட்டதற்பின்**
**மன்னியசீர்க் கணவன்தான்**
**மனையிடைமுன் வைப்பித்த**
**நன்மதுர மாங்கனியில்**
**இருந்ததனை நறுங்கூந்தல்**
**அன்னமனை யார்தாமும்**
**கொடுவந்து கலத்தளித்தார்.''**

இன் - இனிய ஆறு சுவைகளைப் பெற்ற. அந்தச் சுவைகள் இன்ன என்பதை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. அடிசில்-சோற்றை. கறிகளுடன்-பல வகையாகிய கறியமுதுகளோடு. எய்தும்-அடையும். முறை-முறைப்படி. இட்டதற்பின் - அந்த நுனிவாழையிலையில் படைத்ததற்குப்பிறகு. மன்னிய - நிலைபெற்ற புகழையும்; பெயரெச்ச வினையாலணையும் பெயர். சீர்-சீர்த்தியையும் பெற்ற. க் : சந்தி. கணவன் தான் - தம்முடைய கணவனாகிய பரமதத்தன். தான் : அசைநிலை. மனையிடை - தன்னுடைய திருமாளிகையில். முன் - முன்னால். வைப்பித்த - பாதுகாப்பான ஓரிடத்தில் வைக்குமாறு செய்த. நன் - நல்ல. மதுர - இனிய சுவையைப் பெற்ற. மாங்கனியில் - இரண்டு மாம்பழங்களில்; ஒருமை பன்மை மயக்கம். இருந்ததனை - அந்த முதிய அடியவருக்குப்

படைத்து எஞ்சியிருந்த ஒரு மாம்பழத்தை. தனை : இடைக்குறை. தன் : அசை நிலை. நறும் - நறுமணம் இயற்கையாகவே கமழும். கூந்தல் - தலைமயிரைப் பெற்ற. அன்னம் - அன்னப்பறவையை. அனையார் தாமும் - போன்றவராகிய புனிதவதியாரும். தாம் : அசைநிலை. பெண்களுக்கு அன்னத்தை உவமையாகக் கூறும் இடங்களை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. கொடுவந்து - அந்த ஒரு மாம்பழத்தை எடுத்துக்கொண்டு வந்து. கலத்து - உண் கலமாகிய நுனிவாழை இலையில். அளித்தார் - படைத்தார்.

பிறகு வரும் 24 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'தன்னுடைய பத்தினியாராகிய புனிதவதியார் நுனி வாழை இலையில் படைத்திருந்த இனிய சுவை மிகுதியாக வாய்க்கப்பெற்ற அந்த ஒரு மாம்பழத்தை உண்ட இனிய சுவையினால் திருப்தி அடையாமையினால் மலர்மாலைப் பூண்டு கொண்டு விளங்கும் வைசியனாகிய பரமதத்தன், "இத்தகையதாகிய ஒரு மாம்பழம் இன்னும் எஞ்சி இருப்பதை என் வாழை இலையில் வைப்பாயாக." என்று அந்தப் பரமதத்தன் கூற, அத்தகையதாகிய மாம்பழத்தை எடுத்துக்கொண்டு வருவதற்குத் தம்முடைய திருமாளி கைக்குள் நுழைபவரைப் போல அந்த இடத்தைவிட்டு அகன்று சென்றார்.' பாடல் வருமாறு :

"மனைவியார் தாம்படைத்த
மதுரம்மிக வாய்த்தகனி
தனைநுகர்ந்த இனியசுவை
ஆராமைத் தார்வணிகன்
'இனையதொரு பழம்இன்னும்
உளததனை இடுக'என
அனையதுதாம் கொண்டுவர
அணைவார்போல் அங்ககன்றார்.'"

மனைவியார் தாம் - தன்னுடைய பத்தினியாராகிய புனிதவதியார். தாம் : அசைநிலை. படைத்த - உண் கலமாகிய நுனிவாழை இலையில் படைத்திருந்த. மதுரம் - இனிய சுவை. மிக - மிகுதியாக. வாய்த்த - வாய்க்கப் பெற்ற. கனிதனை - அந்த எஞ்சியிருந்த ஒரு மாம்பழத்தை. தனை : இடைக்குறை. தன் : அசைநிலை. நுகர்ந்த - உண்ட இனிய சுவையினால். ஆராமை - திருப்தி அடையாமையினால். த் : சந்தி. தார் - மலர் மாலையைப் பூண்டு கொண்டு விளங்கும். வணிகன் - வைசியனாகிய பரமதத்தன். இனையது ஒரு - இத்தகைய தாகிய ஒரு. பழம் - மாம்பழம். இன்னும் - இனியும் உளது - எஞ்சி இருக்கிறது; இடைக்குறை. அதனை - அந்த மாம்பழத்தை. இடுக - என் இலையில் வைப்பாயாக. என - என்று அந்தப் பரமதத்தன் கூற; இடைக்குறை. அனையதுதாம் - அத்தகைய தாகிய ஒரு மாம்பழத்தை. தாம் : அசைநிலை. கொண்டுவர - எடுத்துக்கொண்டு வருவதற்காக. அணை வார்போல் - தம்முடைய திருமாளிகைக்குள் நுழைபவரைப் போல. அங்கு - அந்த இடத்தைவிட்டு. அகன்றார் - அகன்று சென்றார்.

அடுத்து உள்ள 25 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அந்தப் பக்கத்திலிருந்து சென்று சோர்வை அடைவார்; கிடைப்பதற்கு அருமையாக விளங்கும் மாம்பழத்திற்கு அந்தத் திருமாளிகையில் இந்தப் புனிதவதியார் என்ன புரிவார்? தம்முடைய திருமேனியை மறந்து எண்ணி ஒரு துன்பம் வந்த சமயத்தில் அந்தத் துன்பம் நீங்குமாறு உதவியைப் புரிந்தருளுபவரும், இடபவாகனத்தை ஓட்டுபவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாருடைய திருவடிகளைத் தம்முடைய திருவுள்ளத்தில் தியானித்துக்கொண்டு உணர்ந்தவுடனே அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியார் வழங்கிய திருவருளினால் தொங்கும் கூந்தலைப் பெற்றவராகிய

புனிதவதியாருடைய வலக்கையின் பக்கத்தில் வந்து ஓர் மிகுதியாகிய இனிய சுவையைப் பெற்ற ஒரு மாம்பழம் இருந்தது.' பாடல் வருமாறு :

> '' அம்மருங்கு நின்றயர்வார்;
> அருங்கனிக்கங் கென்செய்வார்?
> மெய்ம்மறந்து நினைந்துற்ற
> இடத்துதவும் விடையவர்தாள்
> தம்மனம்கொண் டுணர்தலுமே
> அவர்அருளால் தாழ்குழலார்
> கைம்மருங்கு வந்திருந்த
> ததிமதுரக் கனிஒன்று. ''

அம்மருங்கு நின்று - அந்தப் பக்கத்திலிருந்து சென்று. அயர்வார் - அந்தப் புனிதவதியார் சோர்வை அடைவார். அரும் - கிடைப்பதற்கு அருமையாக விளங்கும். கனிக்கு - மாம்பழத்திற்கு. அங்கு - அந்தத் திருமாளிகையில். என் - என்ன. செய்வார் - செயலைப் புரிவார். மெய் - தம் முடைய திருமேனியை. ம் : சந்தி. மறந்து - மறந்து விட்டு. நினைந்து - எண்ணி. உற்றஇடத்து - ஒரு துன்பம் வந்த சமயத்தில். உதவும் - அந்தத் துன்பம் நீங்குமாறு உதவியைப் புரிந்தருளும். விடையவர் - இடபவாகனத்தை ஓட்டுபவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாருடைய. தாள் - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். தம் - தம்முடைய. மனம் - திருவுள்ளத்தில். கொண்டு - தியானித்துக்கொண்டு. உணர்தலும் - உணர்ந்தவுடன். ஏ : அசைநிலை. அவர் - அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியார். அருளால் - வழங்கிய திருவருளினால். தாழ் - தொங்கும். குழலார் - கூந்தலைப் பெற்றவராகிய புனிதவதியாருடைய. கைம்மருங்கு - வலக்கையின் பக்கத்தில். அதிமதுர - மிக்க இனிய சுவையைப் பெற்ற. க் : சந்தி. கனிஒன்று - ஒரு மாம்பழம். வந்து இருந்தது - வந்து தங்கியிருந்தது.

பிறகு வரும் 26 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்த மாம்பழத்தைப் புனிதவதியார் தம்முடைய திருமாளிகைக்கு உள்ளேயிருந்து எடுத்துக் கொண்டு வந்து மகிழ்ச்சியை அடைந்து தம்முடைய கணவனாகிய பரமதத்தன் உண்ணும் கலமாகிய நுனிவாழையிலையில் வைத்த வுடன் அந்த மாம்பழத்தை உண்டு அந்தப் பழத்தில் இருந்த இனிய சுவை அமிர்தத்தைக் காட்டிலும் மேலாக இருப்பதாகியிருக்க, "இந்த மாம்பழம் முன்னால் யான் தந்த மாம்பழம் அன்று; இது அந்தர்மத்திய பாதலம் என்னும் மூன்று உலகங்களிலும் பெறுவதற்கு அருமையானது; இந்த மாம்பழத்தை வேறு எந்த இடத்தில் நீ வாங்கியது?" எனத் தம்முடைய கைகளில் அணிந்துகொண்ட வளையல்களைக் கொண்டவராகிய புனிதவதியாரை அந்தப் பரமதத்தன் வினவினான்.' பாடல் வருமாறு :

"மற்றதனைக் கொடுவந்து
மகிழ்ந்திடலும் அயின்றதனில்
உற்றசுவை அமுதினுமேற்பட
உளதாயிட, 'இதுதான்
முற்றருமாங் கனியன்று;
மூவுலகில் பெறற்கரிதால்;
பெற்றதுவே றெங்'கென்று
பெய்வளையார் தமைக்கேட்டான்."

மற்று : அசை நிலை. அதனை - அந்த மாம்பழத்தை. க் : சந்தி. கொடுவந்து - புனிதவதியார் தம்முடைய திருமாளிகைக்கு உள்ளேயிருந்து எடுத்துக்கொண்டு வந்து. மகிழ்ந்து - மகிழ்ச்சியை அடைந்து. இட்லும் - தம்முடைய கணவனாகிய பரமதத்தன் உண்ணும் கலமாகிய நுனி வாழை இலையில் வைத்தவுடன். அயின்று - அந்த மாம்பழத்தை உண்டு. அதனில் - அந்தப் பழத்தில். உற்ற - இருந்த. சுவை - இனிய சுவை. அமுதினும் - அமிர்தத்தைக் காட்டிலும். மேற்படி உளதாய - மேலாக

இருப்பதாகி. உளது: இடைக்குறை. இட - இருக்க. இதுதான் - இந்த மாம்பழம். தான் : அசைநிலை. முன் - யான் முன்னால். தரு - தந்த; கால மயக்கம். கனி - மாம்பழம். அன்று - அல்ல. மூவுலகில் - இது அந்தர் மத்திய பாதலம் என்னும் மூன்று உலகங்களிலும். உலகில்: ஒருமை பன்மை மயக்கம். பெறற்கு - பெறுவதற்கு. அரிது - அருமையாக இருப்பது. ஆல் : அசைநிலை. பெற்றது - இந்த மாம்பழத்தை நீ வாங்கியது. வேறு - பிறிதாகிய. எங்கு - எந்த இடத்தில். என்று - என. பெய் - தம்முடைய கைகளில் அணிந்துகொண்ட. வளை யார்தமை - வளையல்களைக் கொண்டவராகிய புனித வதியாரை. வளை : ஒருமை பன்மை மயக்கம். தமை : இடைக்குறை. தம் : அசைநிலை. க் : சந்தி. கேட்டான் - அந்தப் பரமதத்தன் வினவினான்.

பிறகு வரும் 27 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அவ்வாறு பரமதத்தன் வினவியவுடன் அந்த மடப்பத்தைப் பெற்றவராகிய புனிதவதியார், "திரு வருளை உடையவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி யார் வழங்கியருளும் செவ்வையாகிய பெருமையைப் பெற்ற திருவருள் கூறும் திறத்தை உடையது அல்ல" என்று எண்ணி அதனைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்யாதவராகி 'தமக்குக் கைவந்த கற்பை உடைய வழியினால் தம்முடைய கணவனாகிய பரமதத்தன் கூறிய வார்த்தைகளைப் பாதுகாவாமல் இருத்தல் உண்மை யாகிய நெறி அல்ல' என்று தம்முடைய திருவுள்ளத்தில் எண்ணி கூறுதலை விட முடியாதவராகி நடுக்கத்தை அந்தப் புனிதவதியார் அடைவார்.' பாடல் வருமாறு :

" அவ்வுரைகேட் டலும்மடவார்,
'அருளுடையார் அளித்தருளும்
செவ்வியபேர் அருள்விளம்பும்
திறமன்'றென் றுரைசெய்யார்

'கைவருகற் புடைநெறியால்
கணவன்உரை காவாமை
மெய்வழியன்' றெனவிளம்பல்
விடமாட்டார் விதிர்ப்புறுவார்.''

அவ்வுரை - அவ்வாறு பரமதத்தன் வினவியவுடன் அந்தப் புனிதவதியார் கூறிய அந்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேட்டலும் - கேட்டவுடன். மடவார் - மடப்பத்தைப் பெற்றவராகிய புனிதவதியார். அருள் - திருவருளை. உடையார் - உடைய வராகிய ஊர்த்துவ தாண்டவமூர்த்தியார். அளித்தருளும் - வழங்கியருளும். செவ்விய - செவ்வையாகிய. பேர் - பெருமையைப் பெற்ற. அருள் - திருஅருளால்; வினையாலணையும் பெயர். விளம்பும் - எடுத்துக் கூறும். திறம் - தன்மையை உடையது; ஆகுபெயர். அன்று - அல்ல. என்று - என எண்ணிக்கொண்டு. உரைசெய்யார் - அதனைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்யாதவராகி; முற்றெச்சம். கைவரு - கைவந்த; காலமயக்கம். கற்புடை - கற்பை உடைய. நெறியால் - வழியால். கணவன் - தம்முடைய கணவனாகிய பரமதத்தன் கூறிய. உரை - வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். காவாமை - பாதுகாவாமல் இருக்கும் தன்மை. மெய் - உண்மையான. வழி - நெறி. அன்று - அல்ல. என - என்று எண்ணிக்கொண்டு; இடைக்குறை. விளம்பல் - கூறுதலை. விடமாட்டார் - விடமுடியாதவராகி; முற்றெச்சம். விதிர்ப்பு - நடுக்கத்தை. உறுவார் - அந்தப் புனிதவதியார் அடைவார்.

அடுத்து உள்ள 28 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

' ''அடியேன் புரிந்தவாறு கூறுவதே அடியேனுடைய கடமை'' என்று எண்ணும் சீலத்தைப் பெற்றவராகிய அந்தப் புனிதவதியார் மையைப் போன்ற கரிய நிறம் தழைத்து விளங்கும் திருக்கழுத்தைப் பெற்றவராகிய

ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாருடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளைத் தம்முடைய திருவுள்ளத்தில் அமையுமாறு வைத்துப் பணிந்து "கிடைப்பதற்கு அருமையாக இருக்கும் இந்த மாம்பழத்தை வழங்கியவர் ஆர்" என்று கேட்கும் தம்முடைய கணவனாகிய பரமதத்தனிடம் வண்டுகள் மொய்க்கும் மலர்களை அணிந்திருக்கும் கூந்தலைப் பெற்ற மடப்பத்தைக் கொண்டவராகிய அந்தப் புனிதவதியார் நடந்ததை நடந்த வண்ணம் தம்முடைய கணவனாகிய பரமதத்தனிடம் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்." பாடல் வருமாறு :

"'செய்தபடி சொல்லுவதே
    கடன்' என்னும் சீலத்தார்
மைதழையும் கண்டர்சே
    வடிகள்மனத் துறவணங்கி
'எய்தவரும் கனிஅளித்தார்
    யார்?' என்னும் கணவனுக்கு
மொய்தருபூங் குழல்மடவார்
    புகுந்தபடி தனைமொழிந்தார்."

செய்தபடி - அடியேன் புரிந்தவாற்றை. சொல்லுவதே - தம்முடைய கணவனாகிய பரமதத்தருக்கு எடுத்துக் கூறுவதே. கடன் - அடியேனுடைய கடமை. என்னும் - என்று எண்ணும். சீலத்தார் - நல்ல பண்பைப் பெற்றவராகிய அந்தப் புனிதவதியார். மை - மையைப் போலக் கரிய நிறம்; உவம ஆகுபெயர். கரிய நிறம் என்றாலும் இங்கே நீலநிறத்தையே கொள்க. கருமையையும் நீல நிறம் என்றல் வழக்கு; "நீல நிறக்காக்கை" என வருவதைக் காண்க. தழையும் - தழைத்து விளங்கும். கண்டர் - திருக்கழுத்தைப் பெற்றவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாருடைய. சேவடிகள் - செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த திருவடிகளை. மனத்து - தம்முடைய

திருவுள்ளத்தில். உற - அமையுமாறு வைத்து. வணங்கி - பணிந்து. எய்த அரும் - அடைவதற்கு அருமையாக இருக்கும். கனி - இந்த மாம்பழத்தை. அளித்தார் - வழங்கியவர். யார் - ஆர். என்னும் - என்று கேட்கும், கணவனுக்கு - தம்முடைய கணவனாகிய பரமதத்தனிடம்; உருபு மயக்கம். மொய்தரு - வண்டுகள் மொய்க்கும். பூங் - மலர்களை அணிந்து கொண்டிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். அந்த மலர்கள் இன்ன என்பதை வேறு ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. குழல் - கூந்தலைப் பெற்ற. மடவார் - மடப்பத்தைப் பெற்றவராகிய அந்தப் புனிதவதியார். புகுந்தபடி - நடந்ததை நடந்த வண்ணம். தனை : இடைக்குறை. தன்: அசைநிலை. மொழிந்தார் - தம்முடைய கணவனாராகிய பரமதத்தனிடம் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

பிறகு வரும் 29 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

' "இது பரமேசுவரனாகிய ஊர்த்துவ தாண்டவமூர்த்தி வழங்கிய திருவருளால் கிடைத்தது" என்று தன்னுடைய பத்தினியாராகிய புனிதவதியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த வார்த்தைகளைக் கேட்ட அந்தத் திருமாளிகைக்குத் தலைவனாகிய பரமதத்தன் தன்னுடைய மனைவியாராகிய புனிதவதியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த அந்த வார்த்தைகளைத் தெளிவாக அறிந்து கொள்ளாதவனாகி நறுமணம் கமழும் செந்தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும் திருமகளைப் போன்றவராகிய அந்தப் புனிதவதியாரைப் பார்த்து, "இந்தப் பழம் ஒளியைப் பெற்ற சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியார் வழங்கிய திருவருளாகுமானால், இனியும் ஓர் குற்றம் இல்லாத ஒரு மாம்பழத்தை அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி வழங்கும் திருவருளால் வருவித்து என்னிடம் கொடுப்பாயாக" என்று அந்தப் பரமதத்தன் தன்னுடைய பத்தினியாராகிய புனிதவதியாரிடம் கூறினான்.' பாடல் வருமாறு :

"'ஈசன்அருள்' எனக்கேட்ட
இல்இறைவன் அதுதெளியான்
வாசமலர்த் திருஅனையார்
தமைநோக்கி, 'மற்றிதுதான்
தேசுடைய சடைப்பெருமான்
திருவருளேல் இன்னும்ஓர்
ஆசில்கனி அவனருளால்
அழைத்தளிப்பாய்' எனமொழிந்தான்.''

ஈசன் - இந்த மாம்பழம் பரமேசுவரனாகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி. அருள் - வழங்கிய திருவருளால் அடியேனுக்குக் கிடைத்தது; ஆகுபெயர். என - என்று தன்னுடைய பத்தினியாராகிய புனிதவதியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த; இடைக்குறை. கேட்ட - அந்த வார்த்தைகளைக் கேட்ட. இல் - அந்தத் திருமாளிகைக்கு. இறைவன் - உரியவனாகிய பரமதத்தன். அது - தன்னுடைய பத்தினியாராகிய புனிதவதியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த அந்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். தெளியான் - தெளிவாக அறிந்து கொள்ளாதவனாகி; முற்றெச்சம். வாச - நறுமணம் கமழும். மலர் - செந்தாமரை மலரின் மேல் வீற்றிருக்கும். த் : சந்தி. திரு - திருமகளை. அனையார்தமை - போன்றவராகிய புனிதவதியாரை. தமை : இடைக்குறை. தம் : அசைநிலை. நோக்கி - பார்த்து. மற்று : அசைநிலை. இது தான்-இந்த மாம்பழம். தான்: அசைநிலை. தேசு - ஒளியை. உடைய-பெற்ற. சடை-சடாபாரத்தைத் தம்முடைய தலை மேற்பெற்ற. ப் : சந்தி. பெருமான் - தலைவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியார்; ஒருமை பன்மை மயக்கம். திருவருளேல் - திருவருள் ஆகுமானால். இன்னும் - இனிமேலும். ஓர் - ஒரு. ஆசு - குற்றமும். இல் - இல்லாத; கடைக்குறை. கனி - ஒரு மாம்பழத்தை. அவன் - அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி. அருளால் - வழங்கும் திருவருளினால். அழைத்து - இங்கே வருவித்து.

அளிப்பாய் - நீ என்னிடம் கொடுப்பாயாக. என - என்று; இடைக்குறை. மொழிந்தான் - அந்தப் பரமதத்தன் தன்னுடைய பத்தினியாராகிய புனிதவதியாரிடம் கூறினான்.

பிறகு வரும் 30 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'தம்முடைய திருமாளிகையின் ஒரு பக்கத்திற்கு அகன்று சென்று பரமதத்தனுடைய பத்தினியாராகிய புனிதவதியார் பாம்புகளை அணிபவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாரைப் புகழ்ந்து வணங்கிவிட்டு, "இந்த இடத்தில் இந்த மாம்பழத்தைத் தேவரீர் வழங்கியருளாவிட்டால் அடியேன் கூறிய வார்த்தைகள் பொய் வார்த்தைகள் ஆகிவிடும்" என்று அந்தப் புனிதவதியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய ஒரு மாம்பழம் அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியார் வழங்கிய திருவருளால் வந்து சேர்ந்தவுடன் அந்த மாம்பழத்தை அந்த இடத்தில் அந்தப் பரமதத்தனுடைய கையில் அந்தப் புனிதவதியார் வழங்கியவுடன் அந்த மாம்பழத்தை வியப்பை அடைந்து அந்தப் பரமதத்தன் தன்னுடைய வலக்கையில் வாங்கிக் கொண்டான்.' பாடல் வருமாறு :

"பாங்ககன்று மனைவியார்
பணியணிவார் தமைப்பரவி
'ஈங்கிதளித் தருளீரேல்
என்னுரைபொய் யாம்' என்ன
மாங்கனிஒன் றருளால்வந்
தெய்துதலும் மற்றதனை
ஆங்கவன்கைக் கொடுத்தலுமே
அதிசயித்து வாங்கினான்."

பாங்கு - தம்முடைய திருமாளிகையின் ஒரு பக்கத்திற்கு. அகன்று - அகன்று சென்று. மனைவியார் - பரமதத்தனுடைய பத்தினியாராகிய புனிதவதியார். பணி -

பாம்புகளை; ஒருமை பன்மை மயக்கம். அணிவார் தமை - அணிபவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாரை. தமை : இடைக்குறை. தம் : அசை நிலை. ப் : சந்தி. பரவி - புகழ்ந்து வணங்கிவிட்டு. ஈங்கு - இந்த இடத்தில்; இது-இந்தமாம்பழத்தை. அளித்தருளீரேல்-தேவரீர் வழங்கி யருளாவிட்டால். என் - அடியேனுடைய. உரை - வார்த்தைகள்; ஒருமை பன்மை மயக்கம். பொய் - பொய் வார்த்தைகள்; ஒருமை பன்மை மயக்கம். ஆம் - ஆகிவிடும். என்ன - என்று அந்தப் புனிதவதியார் திருவாய் மலர்ந் தருளிச் செய்ய. மாங்கனி ஒன்று - ஒரு மாம்பழம். அருளால் - அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியார் வழங்கிய திருவருளால். வந்து எய்துதலும் - வந்து சேர்ந்தவுடன். மற்று : அசைநிலை. அதனை - அந்த மாம்பழத்தை. ஆங்கு - அந்த இடத்தில். அவன் - அந்தப் பரமதத்தனுடைய. கை - வலக்கையில். க் : சந்தி. கொடுத்தலும் - அந்தப் புனிதவதியார் வழங்கியவுடன். ஏ : அசைநிலை. அதிசயித்து - வியப்பை அடைந்து. வாங்கினான் - அந்தப் பரமதத்தன் தன்னுடைய வலக்கையில் வாங்கிக் கொண்டான்.

அடுத்து உள்ள 31 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த வைசியனாகிய பரமதத்தனும் தன்னுடைய வலக்கையில் புகுந்த மாம்பழத்தைப் பிறகு பார்க்க முடியாதவனாகி தணிதல் அருமையாக இருக்கும் அச்சம் தன்மேற் கொள்ள தன்னுடைய திருவுள்ளமும் தடுமாற்றத்தை அடைந்து மலர்களை அணிந்து கொண்டிருக்கும் கூந்தலைப் பெற்றவராகிய அந்தப் புனிதவதியாரை வேறாக உள்ள ஒரு தெய்வப் பெண்மணி என்று எண்ணி தன்னுடைய பத்தினியாராகிய அந்தப் புனிதவதியாரை அந்தக் காரைக்காலில் விட்டு விட்டு அகன்று செல்லும் தீர்மானத்தைத் தன்னுடைய உள்ளத்தில் மேற்கொண்டு வேறு யாருக்கும் கூறானாகி

தன்னுடைய பத்தினியாராகிய அந்தப் புனிதவதியாரோடு உடல் தொடர்பு இல்லாமல் வாழ்ந்துவரும் காலத்தில்." பாடல் வருமாறு :

" வணிகனும் தன்கைப்புக்க
மாங்கனி பின்னைக்காணான்
தணிவரும்பயம் மேற்கொள்ள
உள்ளமுந்தடு மாறெய்தி
அணிகுழல் வரைவேறோர்
அணங்கெனக் கருதிநீங்கும்
துணிவுகொண் டெவர்க்குஞ்சொல்லான்
தொடர்பின்றி ஒழுகும்நாளில்."

இந்தப் பாடல் குளகம். வணிகனும் - அந்த வைசியராகிய பரமதத்தனும். தன் - தன்னுடைய. கை - வலக் கையில். ப் : சந்தி. புக்க - வந்து சேர்ந்த. மாங்கனி - மாம்பழத்தை. பின்னை - பிறகு. க்: சந்தி. காணான் - பார்க்க முடியாதவனாகி; முற்றெச்சம். தணிவு - குறைதல். அரும் - அருமையாக இருக்கும். பயம் - அச்சம். மேற்கொள்ள - தன்மேற் கொள்ள. உள்ளமும் - தன்னுடைய மனமும். தடுமாறு - தடுமாற்றத்தை; முதல்நிலைத் தொழிற்பெயர். எய்தி - அடைந்து. அணி - மலர்களை அணிந்த. குழல்வரை - கூந்தலைப் பெற்றவராகிய அந்தப் புனிதவதியாரை. வேறுஓர் - வேறாக உள்ள ஒரு. அணங்கு - தெய்வப்பெண்மணி. என - என்று; இடைக்குறை. க் ; சந்தி. கருதி - எண்ணி. நீங்கும் - தன்னுடைய பத்தினியாராகிய அந்தப் புனிதவதியாரை அந்தக் காரைக்காலில் விட்டுவிட்டு அகன்று செல்லும். துணிவு - தீர்மானத்தை. கொண்டு - தன்னுடைய உள்ளத்தில் மேற்கொண்டு. எவர்க்கும் - வேறு யாருக்கும். சொல்லான் - கூறானாகி; முற்றெச்சம். தொடர்பு - தன்னுடைய பத்தினியாராகிய அந்தப் புனித வதியாரோடு. தொடர்பு - புணர்ச்சி. இன்றி - இல்லாமல். ஒழுகும் - வாழ்ந்து வரும். நாளில் - காலத்தில்.

பிறகு உள்ள 32 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்தப் பரமதத்தன் தன்னுடைய பத்தினியாராகிய புனிதவதியாரைக் காரைக்காலிலேயே விட்டுவிட்டுப் போவதே தன்னுடைய உள்ளத்தில் கொண்ட எண்ணமாக இருக்க அந்த எண்ணத்தின்படி அந்தக் காரைக்காலை விட்டுவிட்டு வேறிடத்திற்குச் செல்லுவதற்காக அமைந்த இடைவிடாத முயற்சியை அந்தப் பரமதத்தன் புரிவானாகி, "உண்டாகிய அலைகள் வீசும் சமுத்திரத்தின்மேல் ஓடும் மரக்கலத்தை எடுத்துக்கொண்டு, அதன்மேல் ஏறிச்சென்று நெடுங்காலமாக இருப்பதற்கு உரிய செல்வத்தை யான் ஈட்டிக்கொண்டு வருவேன்'' என்று கூறிவிட்டு வரிசையாக உள்ள பல உறவினர்களாகி விளங்கும் ஒரு குற்றமும் இல்லாத சீர்த்தியைப் பெற்ற வைசிய மக்கள் ஒரு மரக் கலத்தைக் கட்டச் செய்தார்கள்.' பாடல் வருமாறு :

**" விடுவதே எண்ண மாக**
**மேவிய முயற்சி செய்வான்**
**'படுதிரைப் பரவை மீது**
**படர்கலம் கொண்டு போகி**
**நெடுநிதி கொணர்வேன்' என்ன**
**நிரந்தபல் கிளைஞ ராகும்**
**வடுவில்சீர் வணிக மாக்கள்**
**மரக்கலம் சமைப்பித் தார்கள்."**

விடுவதே - அந்தப் பரமதத்தன் தன்னுடைய பத்தினி யாராகிய புனிதவதியாரைக் காரைக்காலிலேயே விட்டு விட்டுப் போவதே. எண்ணம் ஆக - தன்னுடைய உள்ளத்தில் கொண்ட நினைப்பாக இருக்க. மேவிய - அந்த எண்ணத்தின்படி அந்தக் காரைக்காலை விட்டுவிட்டு வேறு ஊருக்குச் செல்லுவதற்காக அமைந்த. முயற்சி - இடைவிடாத முயற்சியை. செய்வான் - அந்தப் பரமதத்தன் புரிவானாகி; முற்றெச்சம். படு - உண்டாகிய. திரை - அலைகள் வீசும்; ஒருமை பன்மை மயக்கம். ப் : சந்தி.

பரவைமீது - கடலின் மேல். படர் - ஓடும். கலம் - மரக்கலத்தை. கொண்டு - எடுத்துக்கொண்டு. போகி - அதன்மேல் ஏறிக்கொண்டு சென்று. நெடு - நெடுங்காலமாக இருப்பதற்கு உரிய. நிதி - செல்வத்தை. கொணர்வேன் - யான் ஈட்டிக்கொண்டு வருவேன். என்ன - என்று கூறிவிட்டு. நிரந்த - வரிசையாக உள்ள. பல் - பல. கிளைஞர் - உறவினர்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஆகும் - ஆக விளங்கும். வடு - ஒரு குற்றமும். இல் - இல்லாத; கடைக்குறை. சீர் - சீர்த்தியைப் பெற்ற. வணிக மாக்கள் - வைசிய மக்கள். மரக்கலம் - ஒரு மரக்கலத்தை; மரத்தால் செய்த ஓடத்தை. சமைப்பித்தார்கள் - கட்டுமாறு செய்தார்கள்.

பிறகு வரும் 33 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'ஒரு மரக்கலத்தைக் கட்டுவதற்கு வேண்டும் வேலைகளைப் புரியும் தச்சு வேலையைப் புரியும் தச்சர்களோடு போகும் நாடுகளில் தாம் விரும்புகின்ற பண்டங்கள் பொருத்தமாக உள்ளவற்றை மிகுதியாக அந்த மரக்கலத்தில் ஏற்றிக் கொண்டு நீரை வழங்கியருளும் தெய்வமாகிய வருண பகவானை வாழ்த்தி வணங்கிவிட்டு தலைமைப் பதவியை வகிப்பவனாகும் அந்த வைசியனும் நன்மையை வழங்கும் ஒரு நல்ல தினத்தில் அந்தப் பரமதத்தன் அந்த மரக்கலத்தின்மேல் ஏறிக்கொண்டு குளிர்ச்சியைப் பெற்ற அலைகள் வீசும் சமுத்திரத்தின்மேல் அந்தப் பரமதத்தன் சென்றான்.' பாடல் வருமாறு :

**"கலம் சமைத் தற்குவேண்டும்**
**கம்மிய ருடனே செல்லும்**
**புலங்களில் விரும்பு பண்டம்**
**பொருந்துவ நிரம்ப ஏற்றிச்**
**சலம்தரு கடவுள் போற்றித்**
**தலைமையாம் நாயகன் தானும்**

**நலம்தரு நாளில் ஏறி**
**நளிர்திரைக் கடல்மேற் போனான்.''**

கலம் - ஒரு மரக்கலத்தை; சமைத்தற்கு - கட்டுவதற்கு. வேண்டும் - வேண்டியிருக்கும் வேலைகளைப் புரியும். கம்மியருடன் - தச்சுவேலையைப் புரியும் தச்சர்களோடு; ஒருமை பன்மை மயக்கம். ஏ : அசைநிலை. செல்லும் - போகும். புலங்களில் - அயல்நாடுகளில். விரும்பு - தாம் விரும்புகின்ற. பண்டம் - பண்டங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பொருந்துவ - பொருத்தமாக உள்ளவற்றை. நிரம்ப - மிகுதியாக. ஏற்றி - அந்த மரக்கலத்தில் ஏற்றிக்கொண்டு. ச் : சந்தி. சலம் - நீரை. தரு - வழங்கியருளும். கடவுள் - தெய்வமாகிய வருண பகவானை. போற்றி - வாழ்த்தி வணங்கிவிட்டு. த் : சந்தி. தலைமை ஆம் - தலைமைப் பதவியை வகிப்பவனாக விளங்கும். நாயகன்தானும் - அந்த வைசியனும். தான் : அசைநிலை. நலம் - நன்மையை. தரு - வழங்கும். நாளில் - ஒரு நல்ல தினத்தில். ஏறி - அந்த மரக்கலத்தின் மேல் ஏறிக்கொண்டு. நளிர் - குளிர்ச்சியைப் பெற்ற. திரை - அலைகள் வீசும்; ஒருமை பன்மை மயக்கம். க் : சந்தி. கடல்மேல் - சமுத்திரத்தின் மேல். போனான் - அந்தப் பரமதத்தன் சென்றான்.

பிறகு வரும் 34 - ஆம் கவியின் கருத்து வருமாறு :

'அந்தப் பரமதத்தன் சமுத்திரத்தின்மேல் கப்பலை ஓடச்செய்து தான் போக வேண்டும் என்று எண்ணிய நாட்டில் அடையுமாறு போய் அந்த அயல்நாட்டை அடைந்து அந்த நாட்டில் அளவு இல்லாத பல செல்வங்களை முழுவதும் ஈட்டி இடையில் சில தினங்கள் அகன்று போக மறுபடியும் அந்த மரக்கலத்தின்மேல் அந்தப் பரமதத்தன் ஏறிக்கொண்டு பிரிந்து செல்லும் நீர் வளத்தைப் பெற்ற கன்னி நாடாகிய பாண்டிய நாட்டில் ஒரு கடற்கரைப் பட்டினத்தினுடைய பக்கத்தை அடைந்தான்.' பாடல் வருமாறு :

"கடல்மிசை வங்கம் ஓட்டிக்
கருதிய தேயந் தன்னில்
அடைவுறச் சென்று சேர்ந்தங்
களவில்பல் வளங்கள் முற்றி
இடைசில நாட்கள் நீங்க
மீண்டும்அக் கலத்தில் ஏறிப்
படர்புனற் கன்னி நாட்டோர்
பட்டினம் மருங்கு சேர்ந்தான்."

கடல்மிசை - அந்தப் பரமதத்தன் சமுத்திரத்தின்மேல். வங்கம் - ஒரு கப்பலை. ஓட்டி - ஓடச் செய்து. க் : சந்தி. கருதிய - தான் போக வேண்டும் என்று எண்ணிய. தேயந்தன்னில் - நாட்டில். தன் : அசைநிலை. அடைவு உற - அடையுமாறு. ச் : சந்தி. சென்று - போய். சேர்ந்து - அந்த அயல் நாட்டை அடைந்து. அங்கு - அந்த அயல்நாட்டில். அளவு - ஓர் அளவு. இல் - இல்லாத; கடைக்குறை. பல் - பல. வளங்கள் - செல்வங் களை. முற்றி - முழுவதும் ஈட்டி. இடை - நடுவில். சில நாட்கள் - சில தினங்கள். நீங்க - அகன்றுபோக. மீண்டும் - மறுபடியும். அக்கலத்தில் - அந்த மரக்கலத்தின்மேல். ஏறி - அந்தப் பரமதத்தன் ஏறிக்கொண்டு. ப் : சந்தி. படர் - விரிந்து செல்லும். புனல் - நீர்வளத்தைப் பெற்ற. கன்னிநாட்டு - கன்னி நாடாகிய பாண்டிநாட்டில் உள்ள. ஓர் - ஒரு. பட்டினம் - கடற்கரைப் பட்டினமாகிய நாகப் பட்டினத்தினுடைய. மருங்கு - பக்கத்தை. சேர்ந்தான் - அந்தப் பரமதத்தன் சென்று அடைந்தான்.

பிறகு வரும் 35 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்தச் சிவத்தலமாகிய நாகப்பட்டினத்தில் தான் சென்ற கப்பலிலிருந்து கரையில் அந்தப் பரமதத்தன் ஏறிக்கொண்டு கணக்கு இல்லாத பல செல்வங்களை உண்டாக்கும் ஒப்பு இல்லாத பெரிய நிதியங்கள் எல்லா வற்றையும் ஒரு வழியாகப் பெருகி வருமாறு அந்தக்

கப்பலைச் செலுத்தி உண்மையாகிய புகழ் திகழும் அந்த நாகப்பட்டினமாகிய ஊரில் வாழும் மக்கள் விழைய ஒரு வைசியன் ஈன்றெடுத்த சொல்லுவதற்கு அருமையாக விளங்கும் ஒரு கன்னிகையைச் செல்வம் மிகுதியாகச் செலவு செய்யும் திருமணத்தைப் புரிந்து கொண்டான்." பாடல் வருமாறு :

"அப்பதி தன்னில் ஏறி
அலகில்பல் பொருள்கள் ஆக்கும்
ஒப்பில்மா நிதியம் எல்லாம்
ஒருவழிப் பெருக உய்த்து
மெய்ப்புகழ் விளங்கும் அவ்வூர்
விரும்பஓர் வணிகன் பெற்ற
செப்பருங் கன்னி தன்னைத்
திருமலி வதுவை செய்தான்.''

அப்பதிதன்னில் - அந்தச் சிவத்தலமாகிய நாகப்பட்டினத்தில். தன் : அசைநிலை. ஏறி - தான் ஏறிச் சென்ற கப்பலிலிருந்து கரையில் அந்தப் பரமதத்தன் ஏறிக் கொண்டு. அலகு - கணக்கு. இல் - இல்லாத; கடைக் குறை. பல் - பல. பொருள்கள் - செல்வங்களை. ஆக்கும் - உண்டாக்கும். ஒப்பு - சமானம். இல் - இல்லாத; கடைக்குறை. மா - பெரிய. நிதியம் - நிதியங்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம் - எல்லாவற்றையும். ஒரு வழி - ஒரு வழியில். ப் : சந்தி. பெருக - பெருகி வருமாறு. உய்த்து - அந்தக் கப்பலைச் செலுத்தி. மெய் - உண்மை யாகிய. ப் ; சந்தி. புகழ் விளங்கும் - புகழ் திகழும். அவ்வூர் - அந்த நாகப்பட்டினமாகிய ஊரில் வாழும். மக்கள் : இட ஆகு பெயர். விரும்ப - விழையுமாறு. ஓர் - ஒரு. வணிகன் - வைசியன். பெற்ற - ஈன்றெடுத்த. செப்பரும் - சொல்வதற்கு அருமையாக விளங்கும். செப்பு - சொல்லுதல். கன்னி தன்னை - ஒரு கன்னிகையை. தன் : அசைநிலை. கன்னி - மணமாகாத பெண்மணி.

த் : சந்தி. திரு - செல்வத்தை. மலி - மிகுதியாகச் செலவு செய்யும். வதுவை - திருமணத்தை. செய்தான் - அந்தப் பரமதத்தன் புரிந்து கொண்டான்.

பிறகு வரும் 36 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'பெறுவதற்கு அருமையாக விளங்கும் செல்வத்தைப் பெற்றவளாகிய புனிதவதியைப் பெருமையைப் பெற்ற திருமணத்தைப் புரிந்து கொண்டு முன் காலத்தில் உள்ள கருமணலின் இயல்பைப் பெற்ற நறுமணம் இயற்கையாகக் கமழும் கூந்தலைப் பெற்ற தெய்வப் பெண்ணைப் போன்ற பெண்மணிகளுடைய பக்கத்தில் இரகசியம் வெளியில் ஒரு வகையிலும் வெளிப்படாமல் பொருந்திய எண்ணத்தோடு முறையிலிருந்து தவறாமல் தன்னுடைய வாழ்க்கையை நடத்திக்கொண்டு அந்த நாகப்பட்டினத்தில் தங்கிக் கொண்டு தன்னுடைய திருமுகம் அந்தப் பரமதத்தன் மலர்ச்சியை அடைந்து நடந்துவரும் காலத்தில்.' பாடல் வருமாறு :

"பெறலரும் திருவி னாளைப்
　　பெருமணம் புணர்ந்து முன்னை
அறவியல் நறுமென் கூந்தல்
　　அணங்கனார் திறத்தில் அற்றம்
புறமொரு வெளியு றாமற்
　　பொதிந்தசிந் தையினோடு
முறைமையின் வழாமை வைகி
　　முகம்மலர்ந் தொழுகும் நாளில்.'

இந்தப் பாடல் குளகம் பெறல் அரும் - பெறுவதற்கு அருமையாக விளங்கும். திருவினாளை - செல்வத்தைப் பெற்றவளாகிய ஒரு கன்னிகையை. ப் : சந்தி. பெரு - பெருமையைப் பெற்ற. மணம் - திருமணத்தை. புணர்ந்து - புரிந்து கொண்டு. முன்னை - முன்காலத்தில். அறவி - கருமணலினுடைய.

இயல் - தன்மையைப் பெற்ற. நறு - இயற்கையாக நறுமணம் கமழும். மென் - மென்மையைப் பெற்ற. கூந்தல் - கூந்தலைக் கொண்ட. அணங்கனார் - தெய்வப் பெண்களைப் போன்றவர்களாகிய பெண்மணிகளின். அனார் : இடைக்குறை; ஒருமை பன்மை மயக்கம். திறத்தில் - பக்கத்தில். அற்றம் - இரகசியம். புறம் - வெளியில். ஒரு வெளியுறாமல் - ஒருவகையிலும் வெளிப் படாமல். பொதிந்த - தன்னுடைய உள்ளத்தில் மறைத்து வைத்திருந்த. சிந்தனையினோடு - எண்ணத்தோடு. முறைமையின் - முறையிலிருந்து. வழாமை - தவறாமல். வைகி - அந்த நாகப்பட்டினத்தில் தங்கியிருந்து கொண்டு. முகம் - தன்னுடைய திருமுகம். மலர்ந்து - அந்தப் பரமதத்தன் மலர்ச்சியை அடைந்து. ஒழுகும் - நடந்து வரும். நாளில் - காலத்தில்.

கூந்தலுக்குக் கருமணல் உவமை: "கூந்தல் அறல் பவளம் செய்ய வாய்." என்று சேரமான் பெருமாள் நாயனாரும், "நெறி தரு குழலை அறல் என்பர்கள்." என்று பட்டினத்துப் பிள்ளையாரும், "தேப்பாய கூந்தல்.", "நுண்மணல் அறல் வார்ந்தன்ன நன்னெறியவ்வே." (குறுந்தொகை, 1 - 4) என்று நக்கீரரும், "ஆரம்சாறும் அளல் போற் கூந்தல்." (குறுந்தொகை, 286 :3) என்று எயிற்றியனாரும், "தாமரைச் செவ்வாய்த் தண்ணாற்கூந்தல்." (சிலப்பதிகாரம், 4 : 74), "விரைமலர் நீங்கா அவிரளற் கூந்தல்." (சிலப்பதிகாரம், 13 : 147) என்று இளங்கோவடிகளும், "அறவியற் கூந்தற் கண்வான்." (எழுச்சிப் படலம், 677) என்று கம்பரும் பாடியவற்றையும் காண்க.

பிறகு வரும் 37 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'நறுமணம் மலரும் மலர்கள் மலர்ந்திருக்கும் பலவகையான மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழில் சுற்றியிருக்கும் பழைய ஊராகிய நாகப்பட்டினத்தில் வாழும் தலைமைப் பதவியை வகிக்கும் வைசியரோடும் பெரிய

நிதியத்துக்கு உரியவனாகிய குபேரன் என்று கூறுமாறு வந்து அடைந்த செல்வத்தை மிகுதியாகப் பெற்று விளங்கி கரையை மோதும் அலைகளைப் பெற்ற சமுத்திரத்தில் மரக்கலங்களை ஓடச் செய்யும் புகழைப் பெற்ற அந்த வைசியனுடைய பத்தினியிடம் பெருகிய ஒளியை வீசும் திருவிளக்கைப் போல ஒரு பூங்கொடியைப் போன்ற பெண்மணியை அருமையாக ஈன்றெடுத்தான்." பாடல் வருமாறு :

**" முருகலர் சோலை மூதூ**
**ரதன்முதல் வணிக ரோடும்**
**இருநிதிக் கிழவன் என்ன**
**எய்திய திருவின் மிக்குப்**
**பொருகடற் கலங்கள் போக்கும்**
**புகழினான் மனைவி தன்பால்**
**பெருகொளி விளக்குப் போலோர்**
**பெண்கொடி அரிதிற் பெற்றான்."**

முருகு - நறுமணம். அலர் - மலரும். சோலை - மலர்கள் மலர்ந்திருக்கும் பலவகையான மரங்கள் வளர்ந்து நிற்கும் பூம்பொழில் சுற்றி விளங்கும். அந்த மரங்களாவன: தேக்கு மரம், வாகை மரம், வேங்கை மரம், மா மரம், துணா மரம், மகிழ மரம், நெல்லி மரம், விளா மரம், அரிநெல்லி மரம், பவள மல்லிகை மரம், பூவரச மரம், வேப்ப மரம் முதலியவை. மூதூர் - பழைய ஊராகிய நாகப்பட்டினத்தில் வாழும். முதல் - தலைமைப் பதவியை வகிக்கும். வணிகரோடும் - வைசியரோடும். இருநிதி-சங்க நிதி, பதுமநிதி என்னும் நிதிகளுக்கு. நிதி : ஒருமை பன்மை மயக்கம். க் : சந்தி. கிழவன் - உரியவனாகிய குபேரன். என்ன - என்று கூறுமாறு. எய்திய - வந்து சேர்ந்த. திருவின் - செல்வத்தை. மிக்கு - மிகுதியாகப் பெற்று விளங்கும், ப் : சந்தி. பொரு - கரையை மோதும் அலைகளைப் பெற்ற. கடல் - சமுத்திரத்தில். கலங்கள் - மரக் கலங்களை. போக்கும் - ஓடச் செய்யும். புகழினான் -

புகழைப் பெற்றவனாகிய அந்த வைசியனுடைய. மனைவி தன்பால் - பத்தினியிடம். பெருகு - பெருகிய. ஒளி - ஒளியை வீசும். விளக்குப் போல் - ஒரு திருவிளக்கைப் போல. ஓர் - ஒரு. பெண்கொடி - பூங்கொடியைப் போன்ற ஒரு பெண்மணியை. கொடி : உவம ஆகு பெயர். அரிதில் - அருமையாக. பெற்றான் - அந்த வைசியன் ஈன்றெடுத்தான்.

பெண்மணிக்கு விளக்கு உவமை : "கொம்பனார்க் கெல்லாம் கொழுந்தே குலவிளக்கே." என்று ஆண்டாளும், "மங்கையர்க்கு விளக் கன்ன மானையும்." (கங்கைப்படலம், 67), "வில்லி வாங்கிய சிலையெனப் பொலிநுதல் விளக்கே." (சித்திர கூடப்படலம், 13, 7), "பெண்ணியல் தீபம் அன்ன பேரெழிலாட்டி." (அயோமுகிப்படலம், 5), "செந் தாமரைப் பொகுட்டிற் செம்மாந்து வீற்றிருக்கும் நந்தா விளக்கை." (இரணியன் வதைப்படலம், 147), "விளக் கொரு விளக்கம் தாங்கி...இயங்குமென்னா, முளைப்பிறை நெற்றியான மடந்தையர் முன்னும் பின்னும், வளைத்தனர்." (மாயா சனகப்படலம், 7) என்று கம்பரும் பாடியவற்றையும் காண்க.

பிறகு வரும் 38 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்தப் பரமதத்தன் மடப்பத்தைப் பெற்ற ஒரு பெண்குழந்தையை ஈன்றெடுத்து அந்த மங்கல காரியத்தை விரும்பித் தான் முன்னால் உடன் உறைவதற்குப் பயப்பட்டு விட்டுவிட்டு வந்த ஒரு பெருமையைப் பெற்ற பத்தினியா ராகிய புனிதவதியாரை அவரோடு தொடர்பு அற வேண்டும் என்று எண்ணி அந்தப் புனிதவதியாரைத் தொழுவதற்குரிய தெய்வச் சாதியைச் சேர்ந்தவர் என்றே தன்னுடைய உள்ளத்தில் எண்ணிக்கொண்டு கடமையை அமைத்தவராகிய அந்தப் புனிதவதியாருடைய திருநாம மாகிய புனிதவதி என்பதைத் தான் விரும்புதலைச் செய்யும் பெண்குழந்தைக்கு வைத்தான்.' பாடல் வருமாறு :

"மடமகள் தன்னைப் பெற்று
மங்கலம் பேணித் தான்முன்
புடனுறை வஞ்சி நீத்த
ஒருபெரு மனைவி யாரைத்
தொடர்பற நினைந்து தெய்வத்
தொழுகுலம் என்றே கொண்டு
கடனமைத் தவர்தம் நாமம்
காதல்செய் மகவை இட்டான்."

மடமகள் தன்னை - அந்தப் பரமதத்தன் ஒரு மடப்பத்தைப் பெற்ற ஒரு பெண் குழந்தையை. தன் : அசை நிலை. ப் : சந்தி. பெற்று - ஈன்றெடுத்து. மங்கலம் - அவ்வாறு பெற்ற புதல்விக்கு உரிய மங்கல காரியங்களை; ஒருமை பன்மை மயக்கம். என்றது புண்யாஹவசனம் செய்தல், தொட்டில் போடுதல், காப்பு அணிதல், பெயர் வைத்தல் முதலியவற்றை. பேணி - விரும்பிச் செய்து. த் : சந்தி. 'தான்' என்றது பரமதத்தனை. முன்பு - தான் காரைக்காலில் இருந்த அந்த முன்காலத்தில். உடனுறைவு - அந்தப் புனிதவதியாரோடு உடன் உறைவதாகிய புணர்ச்சியைப் புரிவதற்கு, அஞ்சி - பயப்பட்டு. நீத்த - அந்தக் காரைக்காலில் விட்டுவிட்டு வந்த. ஒரு - ஒப்பற்ற. பெரு - பெருமையைப் பெற்ற. மனைவியாரை - தன்னுடைய பத்தினியாராகிய புனிதவதியாரை. த் : சந்தி. தொடர்பு - மனைவி என்ற சம்பந்தம். அற - இல்லாமல். நினைந்து - எண்ணி. தெய்வத்தொழு குலம் - தொழுவதற்குரிய தெய்வத் தன்மையைப் பெற்ற சாதியைச் சேர்ந்தவள். என்றே கொண்டு - என்றே தன்னுடைய உள்ளத்தில் எண்ணிக்கொண்டு. கடன் அமைத்து - தன்னுடைய கடமையை அமைப்பவராகி. அவர்தம் - அந்தப் புனிதவதியாருடைய. தம் : அசை நிலை. நாமம் - புனிதவதி என்ற திருநாமத்தை. காதல் செய் - தான் விரும்புவதைப் புரியும். மகவை - பெண் குழந்தைக்கு; உருபு மயக்கம். இட்டான் - வைத்தான்.

அடுத்து உள்ள 39 - ஆம் கவியின் கருத்து வருமாறு:

'இல்லற நிலையில் இந்தப் பரமதத்தன் இந்த நாகப்பட்டினத்தை அடைந்து அந்தச் சிவத்தலத்தில் வாழ்ந்து கொண்டிருந்தான்; இதன்பிறகு நெடுங்காலமாக விளங்கும் யாராலும் ஏறுவதைப் பெறாத கன்னித் தன்மையைப் பெற்ற பெரிய திருமதில் சுற்றியிருக்கும் மாடங்களைப் பெற்ற காரைக்காலில் வாழும் வைசியனான தனக்கு ஒப்புக் கூறுவதைக் கடந்த செல்வத்தைப் பெற்ற தனதத்தன் என்பவனுடைய புதல்வியாரும் நிலைபெற்ற கற்போடு இல்லறத்தைச் செய்து வாழ்ந்து கொண்டிருக்க.' பாடல் வருமாறு:

**"இன்னிலை இவன்இங் கெய்தி**
**இருந்தனன்; இப்பால் நீடும்**
**கன்னிமா மதில்சூழ் மாடக்**
**காரைக்கால் வணிக னான**
**தன்னிகர் கடந்த செல்வத்**
**தனதத்தன் மகளார் தாமும்**
**மன்னிய கற்பி னோடு**
**மனையறம் புரிந்து வைக."**

இந்தப் பாடல் குளகம். இல் - இல்லற வாழ்க்கையாகிய. நிலை - நிலையை. இவன் - இந்தப் பரமதத்தன். இங்கு - இந்த நாகப்பட்டினத்தில். எய்தி - அடைந்து. இருந்தனன் - வாழ்ந்து கொண்டிருந்தான். இப்பால் - இதன் பிறகு. நீடும் - நெடுங்காலமாக விளங்கும். கன்னி - யாராலும் ஏறுவதைப் பெறாத கன்னித் தன்மையைப் பெற்ற. மதில் - திருமதில். சூழ் - சுற்றியிருக்கும். மாட - மாடங்கள் ஓங்கி நிற்கும்; ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. காரைக்கால் - காரைக்காலில் வாழும். வணிகனான - வைசியன் ஆன. தன் - தனக்கு. நிகர் - சமானமாக வேறு ஒருவரைக் கூறுவதை; ஆகுபெயர். கடந்த - அகன்ற. செல்வ - செல்வத்தைப் பெற்ற. த்: சந்தி.

தனதத்தன் - தனதத்தனுடைய. மகளார் தாமும் - புதல்வியாராகிய புனிதவதியாரும். தாம் : அசைநிலை. மன்னிய - நிலைபெற்ற. கற்பினோடு - கற்போடு. மனையறம் - இல்லற வாழ்க்கையை. புரிந்து - விரும்பி நடத்திக்கொண்டு. வைக - வாழ்ந்து வர.

பிறகு உள்ள 40 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

' " உண்டாகும் செல்வத்தைப் பெருகச் செய்வதற்காகக் கப்பலில் ஏறிக்கொண்டு சமுத்திரத்தில் பயணம் செய்யும் புனிதவதியாருடைய கணவனாகிய பரமதத்தன் புகழ் வளர்ந்து ஓங்கும் பாண்டி நாட்டில் ஒரு பெரிய நகரத்திற்குச் சென்று அங்கே நிலைபெற்று வாழ்ந்து அளவு இல்லாத பெரிய நிதியத்தை உண்டாக்கி அந் நகரத்தில் தங்கிக்கொண்டு இனிமையோடு வாழ்ந்திருந்தான்" என ஒளி கிளர்ந்து எழும் அழகிய பூங்கொம்பைப் போன்றவராகிய புனிதவதியாருடைய உறவினர்கள் கேள்விப்பட்டார்கள்.' பாடல் வருமாறு :

" 'விளைவளம் பெருக்க வங்கம்
மீதுபோம் பரம தத்தன்
வளர்புகழ்ப் பாண்டி நாட்டோர்
மாநகர் தன்னில் மன்னி
அளவில்மா நிதியம் ஆக்கி
அமர்ந்தினி திருந்தான்.' என்று
கிளரொளி மணிக்கொம் பன்னார்
கிளைஞர்தாம் கேட்டா ரன்றே."

விளைவளம் - உண்டாகும் செல்வ வளத்தை. பெருக்க - பெருகச் செய்வதற்காக. வங்கம்மீது - கப்பலில் ஏறிக்கொண்டு சமுத்திரத்தில். போம் - பயணம் செய்யும். பரமதத்தன் - புனிதவதியாருடைய கணவனாகிய பரமதத்தன் என்னும் வைசியன். வளர்புகழ் - புகழ் வளரும், ப் : சந்தி. பாண்டி நாட்டு - பாண்டி நாட்டில் உள்ள. ஓர் - ஒரு. மா - பெரிய. நகர் தன்னில் -

நகரத்திற்கு; உருபு மயக்கம். தன் : அசைநிலை. மன்னி - சென்று அங்கே நிலைபெற்று வாழ்ந்து. அளவு இல் - அளவு இல்லாத. இல் : கடைக்குறை. மா - பெரிய. நிதியம் - நிதியத்தை. ஆக்கி - உண்டாக்கி; ஈட்டி. அமர்ந்து - அந்த நகரத்தில் தங்கிக் கொண்டு. இனிது - இனிமையோடு. இருந்தான் - வாழ்ந்துகொண்டு இருந்தான். என்று - என. கிளர்ஒளி - பிரகாசம் கிளர்ந்து எழும். மணி - அழகிய. க் : சந்தி. கொம்பு - பூங் கொம்பை. அன்னார் - போன்றவராகிய புனிதவதியாரி னுடைய. கிளைஞர்தாம் - உறவினர்கள்; ஒருமை பன்மை மயக்கம். தாம் : அசைநிலை. கேட்டார் - கேள்விப் பட்டார்கள்; ஒருமை பன்மை மயக்கம். அன்று, ஏ : இரண்டும் ஈற்றசை நிலைகள்.

பிறகு வரும் 41 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்த வார்த்தைகளைக் கேள்விப்பட்ட சமயத் திலேயே தெய்வப் பெண்ணைப் போன்றவராகிய புனித வதியாருடைய உறவினர்களும் தங்களுக்கு உள்ள உறவினர் களை அந்தப் பாண்டி நாட்டில் உள்ள பெரிய நகரத்திற்குப் போகச் செய்து அந்தப் பரமதத் தனுடைய நிலையைத் தாங்களும் கேள்விப் பட்டு மயக்கத்தைக் கொண்ட உள்ளங்களை உடையவர் களாகி, "அந்தப் பரமதத்தன் வாழ்ந்திருக்கும் பக்கத்தில் பருத்தலைப் பெற்ற விரும்பத்தகும் கொங்கைகளைப் பெற்றவளாகிய புனிதவதியை அழைத்துக் கொண்டு சென்று அந்தப் பரமதத்தனிடம் விடுவீர்களாக" என்று அந்த உறவினர்கள் கூறினார்கள்.' பாடல் வருமாறு :

"அம்மொழி கேட்ட போதே
அணங்கனார் சுற்றத் தாரும்
தம்முறு கிளைஞர்ப் போக்கி
அவன்நிலை தாமும் கேட்டு

மம்மர்கொள் மனத்த ராகி,
'மற்றவன் இருந்த பாங்கர்க்
கொம்மைவெம் முலையி னாளைக்
கொண்டுபோய் விடுவ' தென்றார்.''

அம்மொழி - அந்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேட்ட - கேள்விப்பட்ட. போதே - சமயத்திலேயே. அணங்கு - தெய்வப் பெண்ணை. அனார் - போன்றவராகிய புனிதவதியாருடைய; இடைக்குறை. சுற்றத்தாரும் - உறவினர்களும்; ஒருமை பன்மை மயக்கம். தம் - தங்களுக்கு. உறு - உள்ள. கிளைஞர் - உறவினர்களை; ஒருமை பன்மை மயக்கம். ப்: சந்தி. போக்கி - அந்தப் பாண்டி நாட்டில் உள்ள பெரிய நகரத்திற்குப் போகச் செய்து. அவன் - அந்தப் பரமதத்தனுடைய. நிலை - நிலையை. தாமும் - என்றது உறவினர்களை. கேட்டு - கேள்விப்பட்டு. மம்மர் - மயக்கத்தை. கொள் - கொண்ட. மனத்தர் ஆகி - உள்ளங்களை உடையவர்களாகி; ஒருமை பன்மை மயக்கம். மற்று: அசைநிலை. அவன்-அந்தப் பரமதத்தன். இருந்த - வாழ்ந்திருந்த பெரிய நகரத்தினுடைய; ஆகு பெயர். பாங்கர் - பக்கத்தில். க்: சந்தி. கொம்மை - பருத்தலைப் பெற்ற. வெம் - விரும்பத் தகும். முலையினாளை - கொங்கைகளைப் பெற்றவளாகிய புனிதவதியை. முலை: ஒருமை பன்மை மயக்கம். க்: சந்தி. கொண்டு போய் - அழைத்துக்கொண்டு சென்று. விடுவது - விடுவீர்களாக; வியங்கோள். என்றார் - என்று அந்த உறவினர்கள் கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து உள்ள 42 - ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'பெரிய மாணிக்கங்களைப் பதித்த ஒரு பல்லக்கில் தம்முடைய மடப்பம் பொருந்திய நடையில் மயிலினுடைய நடையைப் போல் விளங்குபவராகிய புனிதவதியாரைச் செந்தாமரை மலராகிய பீடத்தில் தங்கியிருக்கும்

ஒப்பற்ற திருமகள் என்று கூறுமாறு ஏறச் செய்து அழகு மருவிய திரைச் சீலையைக் கட்டித் தொங்கச் செய்து விருப்பத்தைப் புரியும் புனிதவதியாருடைய உறவினர்களும் தேனைப் போன்ற வார்த்தைகளைப் பேசும் பெண்மணிகளும் ஆகிய எல்லோரும் சுற்றி வர நெடுந்தூரத்தை நடுவில் கடந்து போனார்கள்.' பாடல் வருமாறு :

**'' மாமணிச் சிவிகை தன்னில்**
**மடநடை மயில்அன் னாரைத்**
**தாமரைத் தவிசில் வைகும்**
**தனித்திரு என்ன ஏற்றிக்**
**காமரு கழனி வீழ்த்துக்**
**காதல்செய் சுற்றத் தாரும்**
**தேமொழி யாவரும் சூழச்**
**சேணிடைக் கழிந்து சென்றார்.''**

மா - பெரிய. மணி - மாணிக்கங்களைப் பதித்த; ஒருமை பன்மை மயக்கம். ச் : சந்தி. சிவிகைதன்னில் - ஒரு பல்லக்கில். தன் : அசை நிலை. மடநடை - தம்முடைய மடப்பம் பொருந்திய நடையில். மயில் - மயிலினுடைய நடையை; ஆகுபெயர். அன்னாரை - போல விளங்குபவராகிய புனிதவதியாரை. த் : சந்தி. தாமரை - செந்தாமரை மலராகிய. த் : சந்தி. தவிசில் - பீடத்தில்; ஆசனத்தில். வைகும் - எழுந்தருளி யிருக்கும். தனி - ஒப்பற்ற. த் : சந்தி. திரு - திருமகள். என்ன - என்று கூறுமாறு. ஏற்றி - ஏறச் செய்து. க் : சந்தி. காமரு - அழகு மருவிய. கழனி - திரைச் சீலையை. வீழ்த்து - கட்டித் தொங்கவிட்டு. க் : சந்தி. காதல் - விருப்பத்தை. செய் - புரியும். சுற்றத்தாரும் - புனிதவதி யாருடைய உறவினர்களும்; ஒருமை பன்மை மயக்கம். தே - தேனைப் போன்ற. மொழி - வார்த்தைகளைப் பேசும் பெண்மணிகளும்; ஆகுபெயர். மொழி: ஒருமை பன்மை மயக்கம். யாவரும் - ஆகிய எல்லோரும். சூழ - சுற்றி வர. ச் : சந்தி. சேண் - நெடுந்தூரத்தை. இடை -

போகும் வழியில் நடுவில். க் : சந்தி. கழிந்து - கடந்து. சென்றார் - போனார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 43 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அவ்வாறு சென்றவர்கள் சில தினங்கள் வழியைக் கடந்து போய் அழகிய செந்தமிழ் நாடாகிய பாண்டி நாட்டை அடைந்து மலர்ந்த புகழைப் பெற்ற அந்தப் பரமதத்தன் வாழும் பெரிய நகரத்திற்குப் பக்கத்தில் வந்து சேர்ந்து தங்களுடைய குடும்பத்தில் பிறந்த முதற் பத்தினி யாராகிய புனிதவதியாரைத் தாங்கள் அழைத்துக் கொண்டு வந்து சேர்ந்த பான்மையைத் தொலைதல் இல்லாத சீர்த்தியைப் பெற்ற புனிதவதியாருடைய கணவராகிய பரமதத்தருக்குக் கூறி ஓர் ஆளை முன்னால் போகுமாறு அனுப்பினார்கள்.' பாடல் வருமாறு :

"சிலபகல் கடந்து சென்று
செந்தமிழ்த் திருநா டெய்தி
மலர்புகழ்ப் பரம தத்தன்
மாநகர் மருங்கு வந்து
குலமுதல் மனைவி யாரைக்
கொண்டுவந் தணைந்த தன்மை
தொலைவில்சீர்க் கணவ னார்க்குச்
சொல்லிமுன் செல்ல விட்டார்."

சிலபகல் - அவ்வாறு சென்றவர்கள் சில தினங்கள். பகல் : ஒருமை பன்மை மயக்கம். கடந்து - வழியைக் கடந்து. சென்று - போய். செந்தமிழ்த் திருநாடு - அழகிய செந்தமிழ் நாடாகிய பாண்டி நாட்டை. எய்தி - அடைந்து. மலர் - எங்கும் பரந்த. புகழ் - புகழைப் பெற்ற. ப் : சந்தி. பரமதத்தன் - அந்தப் பரமதத்தன் வாழ்ந்து கொண்டிருக்கும். மா - பெரிய. நகர் - நகரத் திற்கு. மருங்கு வந்து - பக்கத்தில் வந்து சேர்ந்து. குல - தங்களுடைய குடும்பத்தில் பிறந்த. முதல் மனைவியாரை - பரமதத்தனுடைய முதல் பத்தினியாராகிய புனிதவதி

யாரை. க் : சந்தி. கொண்டு வந்து - தாங்கள் அழைத்துக் கொண்டு வந்து. அணைந்த - சேர்ந்த. தன்மை - பான்மையை. தொலைவு - அகலுதல். இல் - இல்லாத; கடைக்குறை. சீர் - சீர்த்தியைப் பெற்ற. க் : சந்தி. கணவனார்க்கு - புனிதவதியாருடைய கணவராகிய பரமதத்தனாருக்கு. ச் : சந்தி. சொல்லி - கூறி. முன் - ஓர் ஆளை முன்னால். செல்ல - போகுமாறு. விட்டார் - உறவினர்கள் அனுப்பினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 44 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அவ்வாறு வந்த ஆட்கள் தான் இருந்த மாநகரத்தை அடைந்த வார்த்தைகளைக் கேட்டவுடன் அந்த வைசியனாகிய பரமதத்தனும் தன்னுடைய உள்ளத்தில் பயத்தை அடைந்து, "செழிப்பான திருமணத்தை அந்தப் புனிதவதியாருக்குப் பின்னால் புரிந்துகொண்ட பசுமையான பொன்னால் ஆகிய வளைகளை அணிந்திருக்கும் பெண்மணியாகிய மனைவியையும் அழைத்துக்கொண்டு வந்து தாங்கள் பெற்றெடுத்த பெண் குழந்தையோடு முன்னால் அடையுமாறு போவேன்" என்று எண்ணி வண்டுகள் மொய்க்கும் கூந்தலைப் பெற்றவராகிய புனிதவதியாரிடம் அந்த வைசியன் வந்தான்.' பாடல் வருமாறு :

> "வந்தவர் அணைந்த மாற்றம்
> கேட்டலும் வணிகன் தானும்
> சிந்தையில் அச்சம் எய்திச்,
> 'செழுமணம் பின்பு செய்த
> பைந்தொடி தனையும் கொண்டு
> பயந்தபெண் மகவி னோடு
> முந்துறச் செல்வேன்' என்று
> மொய்குழ லவர்பால் வந்தான்."

வந்தவர் - அவ்வாறு வந்த ஆட்கள்; ஒருமை பன்மை மயக்கம். அணைந்த - தான் இருந்த மாநகரத்தை

அடைந்த. மாற்றம் - வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேட்டலும் - கேட்டவுடன். வணிகன்தானும் - அந்த வைசியனாகிய பரமதத்தனும். தான் : அசைநிலை. சிந்தையில் - தன்னுடைய உள்ளத்தில். அச்சம் - பயத்தை. எய்தி - அடைந்து. ச் : சந்தி. செழு - செழிப்பாகிய. மணம் - திருமணத்தை. பின்பு - அந்தப் புனிதவதியாருக்குப் பின்னால். செய்த - புரிந்து கொண்ட. பைந்தொடி தனையும் - பசுமையான பொன்னால் ஆகிய வளைகளை அணிந்திருக்கும் பெண்மணியாகிய மனைவியையும். பைந்தொடி : அன்மொழித் தொகை. தொடி : ஒருமை பன்மை மயக்கம். தனையும் : இடைக்குறை. தன் : அசைநிலை. கொண்டு - அழைத்துக் கொண்டு வந்து. பயந்த - தாங்கள் பெற்றெடுத்த. பெண்மகவினோடு - பெண்குழந்தையோடு. முந்து உற - முன்னால் அடையுமாறு. ச் : சந்தி. செல்வேன் - யான் போவேன். என்று - என எண்ணி. மொய் - வண்டுகள் மொய்க்கும். குழலவர்பால் - இயற்கையான மணத்தைப் பெற்ற கூந்தலை உடையவராகிய புனிதவதியாரிடம். வந்தான் - அந்தப் பரமதத்தனாகிய வைசியன் வந்தான்.

பிறகு வரும் 45 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அந்தப் பரமதத்தன் தானும் அந்த இரண்டாம் பத்தினியோடும் தளர்நடை நடக்கும் தங்களுடைய பெண் குழந்தையோடும் இளைய பெண் மானைப்போல நின்று கொண்டிருந்த தன்னுடைய முதல் பத்தினியாராகிய புனிதவதியாருடைய திருவடிகளில் தரையில் விழுந்து வணங்கிவிட்டுப் பின்பு எழுந்து நின்றுகொண்டு, ''அடியேன் தேவரீருடைய திருவருளால் இங்கே வாழ்வேன் ஆனேன்; இந்த இளைய பெண் குழந்தையும் தன்மையினால் தேவரீருடைய திருநாமத்தைப் பெற்றவள்.'' என்று அந்தப் பரமதத்தன் கூறிவிட்டு அந்தப் புனிதவதியாருக்கு முன்னால் தரையில் விழுந்து வணங்கினான்.' பாடல் வருமாறு :

"தானும்அம் மனைவி யோடும்
தளர்நடை மகவி னோடும்
மானிளம் பிணைபோல் நின்ற
மனைவியார் அடியில் தாழ்ந்தே
'யான்உம தருளால் வாழ்வேன்;
இவ்விளங் குழவி தானும்
பான்மையால் உமது நாமம்.'
என்றுமுன் பணிந்து வீழ்ந்தான்."

தானும் - அந்தப் பரமதத்தன் தானும். அம்மனைவி யோடும் - அந்த இரண்டாம் பத்தினியோடும். தளர்நடை - தளர்நடை நடக்கும். மகவினோடும் - தங்களுடைய பெண் குழந்தையோடும். மான்இளம்பிணைபோல் - இளைய பெண் மானைப்போல். நின்ற - அங்கே நின்றுகொண்டிருந்த. மனைவியார் - தன்னுடைய முதற்பத்தினியாராகிய புனிதவதியாருடைய. அடியில் - திருவடிகளில்; ஒருமை பன்மை மயக்கம். தாழ்ந்து - தரையில் விழுந்து வணங்கி விட்டுப் பின்பு எழுந்து நின்று கொண்டு. ஏ : அசைநிலை. யான் - அடியேன். உமது - தேவரீருடைய. அருளால் - திருவருளால். வாழ்வேன் - வாழ்ந்து கொண்டிருக்கிறேன்; கால மயக்கம். இவ்விளம் - இந்த இளைய. குழவிதானும் - பெண் குழந்தையும். தான் : அசைநிலை. பான்மையால் - தன்மையினால். உமது - தேவரீருடைய. நாமம் - திருநாமத்தைப் பெற்றவள்; ஆகுபெயர். என்று - என அந்தப் பரமதத்தன் கூறிவிட்டு. முன் - அந்தப் புனிதவதியாருக்கு முன்னால். பணிந்து வீழ்ந்தான் - தரையில் விழுந்து வணங்கினான்.

பிறகு உள்ள 46-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'தம்முடைய கணவனாகிய பரமதத்தன் தம்மைத் தரையில் விழுந்து பணிய, அதைப் பார்த்த அழகு மருவிய பூங்கொடியைப் போன்றவராகிய புனிதவதியாரும் அங்கே அடைந்து நிற்கும் தம்முடைய உறவினர்களிடத்தில்

பயத்தோடு ஒருபுறமாக ஒதுங்கி நின்று கொண்டிருக்க அதனைத் தெரிந்துகொண்ட அந்தப் புனிதவதியாருடைய உறவினர்கள் வெட்கத்தை அடைந்து, "உன்னுடைய அழகிய பத்தினியாகிய இந்தப் புனிதவதியை நறுமணம் நிரம்பிய மலர்மாலையை அணிந்து கொண்டிருக்கும் பரமதத்தனே, நீ பணிவது ஏனோ?" என்று அந்த உறவினர்கள் கேட்டார்கள்.' பாடல் வருமாறு :

"கணவன்தான் வணங்கக் கண்ட
காமர்பூங் கொடிய னாரும்
அணைவுறும் சுற்றத் தார்பால்
அச்சமோ டொதுங்கி நிற்ப
உணர்வுறு கிளைஞர் வெள்கி,
'உன்திரு மனைவி தன்னை
மணம்மலி தாரி னாய்நீ
வணங்குவ தென்கொல்?' என்றார்."

'கணவன்தான் - தம்முடைய கணவனாகிய பரமதத்தன். தான் : அசைநிலை. வணங்க - தம்மைத் தரையில் விழுந்து பணிய. க் : சந்தி. கண்ட - அதைப் பார்த்த. காமர் - அழகு மருவிய. பூங்கொடி - பூங் கொடியை. அனாரும் - போன்றவராகிய புனிதவதியாரும்; இடைக்குறை. அணைவுறும் - அங்கே வந்து நின்று கொண்டிருக்கும். சுற்றத்தார் பால் - உறவினர்களிடத்தில்; ஒருமை பன்மை மயக்கம். அச்சமோடு - பயத்தோடு. ஒதுங்கி - ஒரு புறமாக ஒதுங்கி. நிற்ப - நின்றுகொண்டிருக்க. உணர்வுறு - அதனைத் தெரிந்து கொண்ட. கிளைஞர் - உறவினர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வெள்கி - நாணத்தை அடைந்து. உன் - உன்னுடைய. திரு - அழகிய. மனைவி தன்னை - பத்தினியாகிய இந்தப் புனிதவதியை. தன் : அசைநிலை. மணம் - நறுமணம், மலி - நிரம்பிய. தாரினாய் - மலர் மாலையை அணிந்து கொண்டிருக்கும் பரமதத்தனே. நீ வணங்குவது - நீ பணிவது. என்கொல் - ஏனோ? கொல்;

அசைநிலை. ஏனோ - என்ன காரணமோ? என்றார் - என்று அந்த உறவினர்கள் கேட்டார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து உள்ள 47 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த உறவினர்களைப் பார்த்து, "இந்தப் புனிதவதியார் மானிடப் பிறவியை உடையவர் அல்லாத நல்ல பெருமையைப் பெற்று விளங்கும் பெண்தெய்வம் ஆதலை அடியேன் தெரிந்துகொண்டு இவரைவிட்டு இந்த மாநகரத்திற்கு வந்த பிறகு அடியேன் பெற்றெடுத்த இந்தப் பெண் குழந்தைக்கு இவருடைய திருநாமமாகிய புனிதவதி என்பதை வைத்திருக்கிறேன்; ஆகையால் இந்தப் புனிதவதியாருடைய தங்கத்தைப் போன்ற திருவடிகளைத் தரையில் விழுந்து வணங்குங்கள்" என்று அந்தப் பரமதத்தன் கூறினான்.' பாடல் வருமாறு :

"மற்றவர் தம்மை நோக்கி,
'மானுடம் இவர்தாம் அல்லர்;
நற்பெருந் தெய்வம் ஆதல்
நானறிந் தகன்ற பின்பு
பெற்றஇம் மகவு தன்னைப்
பேரிட்டேன் ஆத லாலே
பொற்பதம் பணிந்தேன்; நீரும்
போற்றுதல் செய்மின்' என்றான்."

மற்று : அசைநிலை. அவர்தம்மை - அந்த உறவினர்களை; ஒருமை பன்மை மயக்கம். தம்:அசைநிலை. நோக்கி-பார்த்து. இவர்தாம் - இந்தப் புனிதவதியார். தாம் : அசைநிலை. மானுடம் அல்லர்-மானிடப் பிறவியை உடையவர் அல்லர். நல் - நல்ல. பெரும் - பெருமையைப் பெற்று விளங்கும். தெய்வம் - பெண்தெய்வம். ஆதல் - ஆக இருப்பதை. நான் - அடியேன்; என்றவன் பரமதத்தன். அறிந்து-அறிந்துகொண்டு. அகன்ற-இவரைவிட்டுக் காரைக்காலை நீங்கி அகன்று வந்த. பின்பு-பிறகு. பெற்ற -

அடியேன் ஈன்றெடுத்த. இம்மகவு தன்னை - இந்தப்பெண் குழந்தைக்கு; உருபு மயக்கம். தன் : அசைநிலை. ப் : சந்தி. பேர் - இவருடைய திருநாமமாகிய புனிதவதி என்பதை. இட்டேன் - வைத்திருக்கிறேன்; காலமயக்கம். ஆதலால் - ஆகையால். ஏ :அசைநிலை. பொன் - தங்கத்தைப் போன்ற பதம் - இவருடைய திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். பணிந்தேன் - அடியேன் தரையில் விழுந்து வணங்கினேன். நீரும் - நீங்களும். போற்றுதல் - வாழ்த்துதலை. செய்யின் - செய்து வணங்குங்கள். என்றான் - என்று அந்தப் பரமதத்தன் தன்னுடைய உறவினர்களிடம் கூறினான்.

பிறகு வரும் 48 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'என்று அந்தப் பரமதத்தன் கூறியவுடன் அவனுடைய உறவினர்களும், "இது ஏனோ?" என்று கூறி நின்று கொண்டிருந்தார்கள்; நறுமணம் வீசும் அழகிய கூந்தலைப் பெற்றவராகிய புனிதவதியாரும் அந்த வைசியனாகிய பரமதத்தன் தன்னுடைய வாயினால் கூறிய வார்த்தைகளைக் கேட்டு கொன்றை மலர் மாலையை அணிந்த நீளமான சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாருடைய ஒலிக்கும் வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளை வாழ்த்தி வணங்கிவிட்டுத் தம்முடைய திருவுள்ளத்தில் பொருந்திய எண்ணத்தில் மிகுதியாக உள்ள உணர்ச்சியை மேற்கொண்டு திருவாய் மலர்ந்தருளிச் செய்கிறவரானார்.' பாடல் வருமாறு :

**"என்றலும் சுற்றத் தாரும்,**
**'இதுஎன்கொல்?' என்று நின்றார்;**
**மன்றலங் குழலி னாரும்**
**வணிகன்வாய் மாற்றம் கேளாக்**
**கொன்றைவார் சடையி னார்தம்**
**குறைகழல் போற்றிச் சிந்தை**

ஒன்றிய நோக்கில் மிக்க
உணர்வுகொண் டுரைசெய் கின்றார்.''

என்றலும் - என்று அந்தப் பரமதத்தன் கூறியவுடன். சுற்றத்தாரும் - அவனுடைய உறவினர்களும்; ஒருமை பன்மை மயக்கம். இது - இவ்வாறு இவன் தன்னுடைய மனைவியாகிய புனிதவதியைப் பணிவது. என்கொல் - என்ன காரணம். கொல் : அசைநிலை. என்று - என்று கூறி. நின்றார் - நின்றுகொண்டிருந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம். மன்றல் - நறுமணம் கமழும். அம் - அழகிய. குழலினாரும் - கூந்தலைப் பெற்றவராகிய புனிதவதியாரும். வணிகன் - அந்த வைசியனாகிய பரமதத்தன். வாய் - தன்னுடைய வாயினால் கூறிய. மாற்றம்-வார்த்தைகளை; ஒருமைபன்மை மயக்கம். கேளா -கேட்டு. க்: சந்தி. கொன்றை-கொன்றை மலர் மாலையை அணிந்து கொண்டிருக்கும்; ஆகுபெயர். வார் - நீளமான. சடையினார்தம் - சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற்பெற்றவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி யாருடைய. தம் : அசைநிலை. குறை - ஒலிக்கும். கழல் - வெற்றிக்கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளை; ஆகு பெயர். போற்றி - வாழ்த்தி வணங்கிவிட்டு. ச் : சந்தி. சிந்தை - தம்முடைய திருவுள்ளத்தில். ஒன்றிய - பொருந்திய; சேர்ந்த. நோக்கில் - எண்ணத்தில். மிக்க - மிகுதியாக உள்ள. உணர்வு - உணர்ச்சியை. கொண்டு - மேற்கொண்டு. உரைசெய்கின்றார் - திருவாய் மலர்ந்தருளிச் செய்கிறவரானார்.

அடுத்து வரும் 49 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'இந்த இடத்தில் இந்தப் பரமதத்தன் எண்ணிய கொள்கை இது; இனிமேல் இந்தப் பரமதத்தனுக்காக அடியேன் தாங்கிக் கொண்டிருந்த அழகு நிலைபெற்று நின்ற தசைகளின் சுமையாகிய இந்த உடலை நீக்கிவிட்டு தேவரீரிடம் அந்தத் திருவாலங்காட்டில் தேவரீருடைய திருவடிகளை வாழ்த்தி வணங்கும் பேயினுடைய

வடிவத்தை அடியேனுக்குப் பக்குவம் உறுமாறு வழங்கி யருளுதல் வேண்டும்.'' என்று பரமேசுவரராகிய அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாரைத் துதித்த அந்தப் புனிதவதியார் நின்று கொண்டிருந்தார்.' பாடல் வருமாறு :

'' ஈங்கிவன் குறித்த கொள்கை
இது;இனி இவனுக் காகத்
தாங்கிய வனப்பு நின்ற
தசைப்பொதி கழித்திங் குன்பால்
ஆங்குநின் தாள்கள் போற்றும்
பேய்வடி வடியே னுக்குப்
பாங்குற வேண்டும்.' என்று
பரமர்தாள் பரவி நின்றார்.''

ஈங்கு - இந்த இடத்தில். இவன் - இந்தப் பரமதத்தன். குறித்த - எண்ணிய. கொள்கை இது - மேற்கொண்ட எண்ணம் இது. இனி - இனிமேல். இவனுக்காக - இந்தப் பரமதத்தனுக்காக. த் : சந்தி. தாங்கிய - அடியேன் தாங்கிக் கொண்டிருந்த. வனப்பு - அழகு. நின்ற - நிலைபெற்று நின்ற. தசைப்பொதி - தசைகளின் சுமையாகிய இந்த உடலை; அன்மொழித்தொகை. தசை : ஒருமை பன்மை மயக்கம். கழித்து - நீக்கிவிட்டு; உதறிப் போட்டுவிட்டு. இங்கு - இந்தத் திருவாலங்காட்டில். உன்பால் - தேவரீரிடம். ஆங்கு- அந்தத் திருவாலங் காட்டில். நின் - தேவரீருடைய. தாள்கள் - திருவடிகளை. போற்றும் - வாழ்த்தி வணங்கும். பேய் - பேயினுடைய. வடிவு - வடிவம். அடியேனுக்கு - தேவரீருடைய அடிய வளாகிய அடியேனுக்கு. ப் : சந்தி. பாங்கு - பக்குவம். உற - உறுமாறு. வேண்டும் - வழங்கியருளுதல் வேண்டும். என்று - என. பரமர் - பரமேசுவரராகிய அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாருடைய. தாள் - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். பரவி - துதித்துவிட்டு. நின்றார் - அந்தப் புனிதவதியார் நின்று கொண்டிருந்தார்.

பிறகு வரும் 50 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அவ்வாறு புனிதவதியார் நின்று கொண்டிருந்ததான அந்தச் சமயத்தில் திருச்சிற்றம்பலத்தில் திருநடனம் செய்தருளும் ஊர்த்துவ தாண்டவமூர்த்தியார் வழங்கிய திருவருளினால் மேலாகிய வழியின் உணர்ச்சி மிகுதியாக உண்டாக தாம் வேண்டியதையே பெறுபவராகிய அந்தப் புனிதவதியாருடைய திருமேனியில் உள்ள மாமிசங்கள் அடைந்த அழகு எல்லாவற்றையும் உதறிவிட்டு எலும்பாலாகிய உடலே ஆக மாறி தேவலோகத்தில் வாழும் தேவர்களும் இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்களும் ஆகிய எல்லாரும் வணங்கத்தக்க பேயின் வடிவமாக ஆனார்.' பாடல் வருமாறு :

**' ஆனஅப் பொழுது மன்றுள்**
**ஆடுவார் அருளி னாலே**
**மேனெறி உணர்வு கூர**
**வேண்டிற்றே பெறுவார் மெய்யில்**
**ஊனடை வனப்பை எல்லாம்**
**உதறிஎற் புடம்பே ஆக**
**வானமும் மண்ணும் எல்லாம்**
**வணங்குபேய் வடிவம் ஆனார்.''**

ஆன - அவ்வாறு புனிதவதியார் நின்று கொண்டிருந்த தான. அப்பொழுது - அந்தச் சமயத்தில். மன்றுள் - இரத்தின சபையில். ஆடுவார் - திருநடனம் புரிந்தருளு பவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியார். அருளினால்- வழங்கிய திருவருளால். ஏ : அசைநிலை. மேல்-மேன்மை யான. நெறி - வழியினுடைய. உணர்வு - உணர்ச்சி. கூர - மிகுதியாக உண்டாக. வேண்டிற்றே - தாம் வேண்டிய பேய் வடித்தையே. பெறுவார் - பெறுபவராகிய புனித வதியாருடைய. மெய்யில் - திருமேனியில் உள்ள. ஊன் - மாமிசங்கள்; ஒருமை பன்மை மயக்கம். அடை - அடைந்

திருக்கும். வனப்பை-அழகை. எல்லாம்-எல்லாவற்றையும். உதறி - உதறிவிட்டு. எற்பு - எலும்பாலாகிய. உடம்பே ஆக - உடலே ஆக மாற. வானமும் - தேவலோகத்தில் வாழும் தேவர்களும்; இடஆகுபெயர். மண்ணும் - இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்களும்; இடஆகுபெயர். எல்லாம்-ஆகிய எல்லோரும். வணங்கு- பணிவதற்குரிய. பேய் - பேயினுடைய. வடிவம் ஆனார் - வடிவமாக அந்தப் புனிதவதியார் ஆகிவிட்டார்.

பிறகு உள்ள 51 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு ;

'அப்போது எல்லா இடங்களிலும் மலர் மாரியைத் தேவர்கள் சொரிந்தார்கள்; ஆகாய துந்துபிகளின் இனிய நாதம் இந்த மண்ணுலகம் முழுவதும் நிரம்பி முழங்க தேவர்களும் முனிவர்களும் மகிழ்ச்சியினால் ஒருவரோடு ஒருவர் குலாவினார்கள்; பூதகணங்கள் யாவும் கூத்தாடின; அங்கே முன்னால் நின்று கொண்டிருந்த குறைதல் இல்லாத புனிதவதியாருடைய உறவினர்களும், அந்தப் புனிதவதியாரை வணங்கிவிட்டு அச்சத்தை அடைந்து அந்த இடத்திலிருந்து நீங்கிச் சென்றுவிட்டார்கள்." பாடல் வருமாறு :

"மலர்மழை பொழிந்த தெங்கும்;
வானதுந் துபியின் நாதம்
உலகெலாம் நிறைந்து விம்ம
உம்பரும் முனிவர் தாமும்
குலவினர்; கணங்கள் எல்லாம்
குணலையிட் டன;முன் நின்ற
தொலைவில்பல் சுற்றத் தாரும்
தொழுதஞ்சி அகன்று போனார்.''

எங்கும் - அப்போது எல்லா இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். மலர்மழை - கற்பகமரத்தில் மலர்ந்திருக் கும் மலர்களை மழையைப்போல. மலர் : ஒருமை பன்மை மயக்கம். பொழிந்தது-தேவர்கள் சொரிந்தார்கள்; திணை

மயக்கம். வான - ஆகாய. துந்துபியின் - துந்துபிகளினு டைய; ஒருமை பன்மை மயக்கம். நாதம் - இனிய ஒலி. உலகு-இந்த மண்ணுலகம். எல்லாம்-முழுவதும்; இடைக் குறை நிறைந்து-நிரம்பி. விம்ம-முழங்க. உம்பரும்-தேவர் களும்; ஒருமை பன்மை மயக்கம். முனிவர்தாமும் - முனிவர்களும். தாம் : அசைநிலை. குலவினார் - ஒருவரோடு ஒருவர் கைகளைக் கோத்துக்கொண்டு குலாவினார்கள்; ஒருமை பன்மை மயக்கம். கணங்கள் - சிவகணங்கள். எல்லாம் - யாவும். குணலைஇட்டன - கொக்கரித்து ஆடின. முன் - முன்னால். நின்ற - நின்று கொண்டிருந்த. தொலைவு - குறைதல். இல் - இல்லாத; கடைக்குறை. பல் - பல. சுற்றத்தாரும் - புனிதவதி யாருடைய உறவினர்களும்; ஒருமை பன்மை மயக்கம். தொழுது - அந்தப் புனிதவதியாரை வணங்கிவிட்டு. அஞ்சி- அச்சத்தை அடைந்து. அகன்று - அந்த இடத்தை விட்டு நீங்கி. போனார் - சென்று விட்டார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 52 - ஆம் கவியின் கருத்து வருமாறு :

'அந்தப் புனிதவதியார் தம்மிடம் தோன்றி எழுந்த சிவஞானத்தினுடைய ஒருமைப்பாட்டினால் உமாதேவி யினுடைய கணவனாகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியை 'அற்புதத் திருவந்தாதி' என்னும் நூலை அந்தச் சமயத்தில் பாடியருளிச் செய்பவராகி, ''தோற்றப் பொலிவைப்பெற்ற சிவந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாருடைய திருவடி களாகிய செந்தாமரை மலர்களை வாழ்த்தி வணங்கும் நல்ல சிவகணங்களில் ஒரு சிவகணமாக அடியேன் ஆகி விட்டேன்'' என விரும்பிப் பாடியருளி.' பாடல் வருமாறு :

**'' உற்பவித் தெழுந்த ஞானத்**
**தொருமையின் உமைகோன் தன்னை**
**அற்புதத் திருவந் தாதி**
**அப்பொழு தருளிச் செய்வார்**

'பொற்புடைச் செய்ய பாத
புண்டரீ கங்கள் போற்றும்
நற்கணத் தினில்ஒன் றானேன்
நான்'என்று நயந்து பாடி.''

இந்தப் பாடல் குளகம். உற்பவித்து - அந்தப் புனிதவதியார் தம்மிடம் தோன்றி. எழுந்த - எழுந்திருந்த. ஞானத்து - சிவஞானத்தினுடைய. ஒருமையின் - ஒருமைப் பாட்டினால். உமை - உமாதேவியினுடைய. கோன் தன்னை - கணவாகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியை. தன் ; அசைநிலை. அற்புதத் திருவந்தாதி - 'அற்புதத் திரு அந்தாதி' என்னும் பிரபந்தத்தை. அப்பொழுது - அந்தச் சமயத்தில். அருளிச் செய்வார் - பாடியருளிச் செய்பவராகி; முற்றெச்சம். பொற்பு - தோற்றப் பொலிவை. உடை - பெற்ற. ச் : சந்தி. செய்ய - சிவந்த. பாத - ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாருடைய திருவடிகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். புண்டரீகங்கள் - செந்தாமரை மலர்களை. போற்றும் - வாழ்த்தி வணங்கும். நல் - நல்ல. கணத்தினில் - சிவகணங்களுக்குள்; ஒருமை பன்மை மயக்கம். ஒன்று - ஒரு சிவகணம். நான் ஆனேன் - அடியேன் ஆகிவிட்டேன். என்று - என. நயந்து - விரும்பி. பாடி - பாடியருளி.

காரைக்கால் அம்மையார் அவ்வாறு பாடியருளிய அற்புதத் திருவந்தாதியின் முதல் வெண்பா வருமாறு :

"பிறந்து மொழிபயின்ற பின்னெல்லாம் காதல்
சிறந்துநின் சேவடியே சேர்ந்தேன் - நிறம்திகழும்
மைஞ்ஞான்ற கண்டத்து வானோர் பெருமானே
எஞ்ஞான்று தீர்ப்ப திடர்.''

அந்தக் காரைக்காலம்மையார் தாம் நற்கணத்தில் ஒன்றாகிவிட்டதைக் கூறும் அற்புதத் திரு அந்தாதியில் வரும் 86 - ஆம் வெண்பா வருமாறு :

" பெறினும் பிறியாதும் வேண்டேம் நமக்கீ
துறினும் உறா தொழியுமேனும் - சிறிதுணர்த்தி
மற்றொருகண் நெற்றிமேல் வைத்தான்றன் பேயாய
நற்கணத்தில் ஒன்றாய நாம்."

இந்த அந்தாதியில் இறுதியில் உள்ள 101 - ஆம் வெண்பா வருமாறு :

" உரையினால் இம்மாலை அந்தாதி வெண்பாக்
கரைவினால் காரைக்காற் பேய்சொற் - பரவுவார்
ஆராத அன்பினோ டண்ணலைச் சென்றேத்துவார்
பேராத காதல் பிறந்து."

பிறகு 53 - ஆம் வரும் கவியின் கருத்து வருமாறு :

'அந்தப் புனிதவதியார் ஆராய்ந்து அமைத்த சீர்களைப் பெற்ற திருவிரட்டை மணிமாலை, அற்புதத் திரு அந்தாதி என்னும் பிரபந்தங்களைத் தொடங்கிப்பாடி நிறைவேற்றியருளி தம்மிடம் அமைந்த பெருமையைப் பெற்று விளங்கும் உணர்ச்சி பொங்கி எழ வித்யுன்மாலி, தாரகாட்சன், வாணன் என்னும் மூன்று அசுரர்களுக்குரிய பறக்கும் கோட்டைகளாகிய மதில்கள் ஆகிய மூன்று புரங்களையும் முன்காலத்தில் சினம் மூண்டு எரித்தவராகிய கைலாசபதியார் எழுந்தருளியிருந்த் பெருமையைப் பெற்று விளங்கும் வெள்ளிமலையாகிய கைலை மலையை அடைவதற்காக வாய்ப்பாக அமைந்த கைலாசபதியார் வழங்கிய பெரிய திருவருள் முன்னால் மிகுதியாக உண்டாக யாவரும் வழிபாடு புரியும் வழியில் உள்ள படிகளில் ஏறி அந்தப் புனிதவதியார் கைலாச மலையின் உச்சிக்கு வந்து சேர்ந்தார்.' பாடல் வருமாறு :

" ஆய்ந்தசீர் இரட்டை மாலை,
அந்தாதி எடுத்துப் பாடி
ஏய்ந்தபே ருணர்வு பொங்க
எயிலொரு மூன்றும் முன்னாள்

காய்ந்தவர் இருந்த வெள்ளிக்
கைலைமால் வரையை நண்ண
வாய்ந்தபே ரருள்முன் கூர
வழிபடும் வழியால் வந்தார்.''

ஆய்ந்த - அந்தப் புனிதவதியார் ஆராய்ந்து அமைத்த. சீர் - சீர்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். சீர் - செய்யுட்கு உரிய சீர். அவையாவன: இரண்டு சீர்கள்; மூன்று சீர்கள்; நான்கு சீர்கள்; ஐந்து சீர்கள்; ஆறு சீர்கள்; ஏழு சீர்கள்; எட்டுச் சீர்கள்; ஒன்பது சீர்கள் முதலியவை. இரட்டை மாலை - திருஇரட்டை மணிமாலை. அந்தாதி - அற்புதத் திரு அந்தாதி. எடுத்து - ஆகியவற்றைப் பாடத் தொடங்கி. ப் : சந்தி. பாடி - பாடி நிறைவேற்றியருளி. ஏய்ந்த - தம்மிடம் அமைந்த. பேர் - பெருமையைப் பெற்று விளங்கும். உணர்வு - உணர்ச்சி. பொங்க - பொங்கி எழ. எயில்ஒரு மூன்றும் - வித்யுன்மாலி, தாரகாட்சன், வாணன் என்னும் மூன்று அசுரர்களுக்கு உரிய பறக்கும் கோட்டைகளாகிய மதில்கள் ஆகும் மூன்று புரங்களையும். எயில் : ஒருமை பன்மை மயக்கம். முன் நாள் - முன்பு ஒரு காலத்தில். காய்ந்தவர் - சினம் மூண்டு எரித்தவராகிய கைலாசபதியார். இருந்த - எழுந்தருளியுள்ள. வெள்ளிக்கைலை மால்வரையை - பெருமையைப் பெற்று விளங்கும் வெள்ளிமலையாகிய கைலை மலையை. நண்ண - அடைவதற்காக. வாய்ந்த-வாய்ப்பாக அமைந்த. பேரருள் - அந்தக் கைலாசபதியார் வழங்கிய பெரிய திருவருள். முன் - முன்னால். கூர - மிகுதியாக உண்டாக, வழிபடும் - யாவரும் வழிபாட்டைப் புரியும். வழியால் - வழியில் உள்ள படிகளில் ஏறி அந்தப் புனிதவதியார் கைலாச மலையின் உச்சிக்கு. வழியால் : உருபு மயக்கம். வந்தார் - வந்து சேர்ந்தார்.

அவ்வாறு காரைக்கால் அம்மையார் பாடியருளிய திருவிரட்டை மணிமாலையில் வரும் முதற் கட்டளைக் கலித்துறை வருமாறு :

" கிளர்ந்து வெந்துயர் வந்தடும்
போதஞ்சி நெஞ்சம் என்பாய்
தளர்ந்திங் இருத்தல் தவிர்த்திகண்
டாய்தள ராது வந்தி
வளர்ந்துந்து கங்கையும் வானத்
திடைவளர் கோட்டு வெள்ளை
இளந்திங் கரும்எருக் கும்மிருக்
கும்சென்னி ஈச னுக்கே."

இந்தத் திருவிரட்டை மணிமாலையில் இறுதியில் உள்ள 20 - ஆம் வெண்பா வருமாறு :

" உத்தமராய் வாழ்வார் உவந்தக்கால் உற்றார்கள்
செத்தமரம் அடுக்கித் தீயாமுன் - உத்தமனாம்
நீளாழி நஞ்சுண்ட நெய்யாடி தன்திறமே
கேளாழி நெஞ்சே கிளர்ந்து."

பிறகு வரும் 54 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்தப் பேயுருவத்தை அடைந்த புனிதவதியாரைப் பார்த்த மக்கள் அதிசயத்தையும் அச்சத்தையும் அடைந்து அந்த இடத்தைவிட்டு நீங்கி ஓடிப்போவார்கள்; புனிதவதியார் எடுத்துக்கொண்ட பேயின் வேடத்தினுடைய இயல்பை உள்ளவாறு கண்டவர்கள் சொல்லக்கேட்டு, "தேவர்களுக்குத் தலைவராகிய கைலாசபதியார் அடியேனைத் தெரிந்து கொண்டருள்வாரானால் தெரிந்து கொள்ளாத உண்மையைக் கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்னும் எட்டுத் திசைகளிலும் உள்ள ஊர்களில் வாழும் மக்களுக்கு அடியேன் எந்த வடிவம் ஆனால் என்ன?" என்று அந்தப் புனிதவதியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்பவரானார்.' பாடல் வருமாறு :

" கண்டவர் வியப்புற் றஞ்சிக்
கையகன் றோடு வார்கள்;
கொண்டதோர் வேடத் தன்மை
உள்ளவா கூறக் கேட்ட,

'அண்டர்நா யகனார் என்னை
அறிவரேல் அறியா வாய்மை
எண்டிசை மாக்களுக் கியான்
எவ்வுரு வாயென்?'' என்பார்.''

கண்டவர் - பேயுருவத்தை அடைந்த அந்தப் புனித வதியாரைப் பார்த்த மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். வியப்பு - அதிசயத்தை. உற்று - அடைந்து. அஞ்சி - பயத்தைப் பெற்று. க்:சந்தி. கை அகன்று-அந்த இடத்தை விட்டு நீங்கி. ஓடுவார்கள் - ஓடிப்போவார்கள். கொண்டது ஓர் - அந்தப் புனிதவதியார் எடுத்துக்கொண்டதாகிய ஒரு. வேட - பேய் வேடத்திடைய. த் : சந்தி. தன்மை - இயல்பை. உள்ளவா - உள்ளவாறு. கூற - கண்டவர்கள் சொல்ல. க் : சந்தி. கேட்டு - அதனைக் கேட்டு. ஏ : அசை நிலை; அண்டர் - தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நாயகனார் - தலைவராகிய கைலாச பதியார். என்னை - அடியேனை. அறிவரேல் - தெரிந்து கொண்டருள்வாரானால். அறியா - தெரிந்துகொள்ளாத. வாய்மை - உண்மையை. எண்திசை - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்னும் எட்டுத் திசைகளிலும் ஊர்களில் வாழும். திசை : ஒருமை பன்மை மயக்கம். மாக்களுக்கு - மக்களுக்கு ; 'அறிவுஇல்லாத மக்களுக்கு' எனலும் ஆம். இ : குற்றியலிகரம். யான் - அடியேன்; இது புனிதவதியார் தம்மைக் குறித்து. எவ்வுருவாய் - எந்த வடிவமானால். என் - என்ன . என்பார் -என்று அந்தப் புனிதவதியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்பவரானார்.

அடுத்து உள்ள 55 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அந்தப் புனிதவதியார் செந்தமிழ் நாட்டுக்கு வடக்குத் திசையில் உள்ள நாடுகள் எல்லாவற்றையும் உள்ளத்தைக் காட்டிலும் வேகமாகப் போய் தொடுத்தலைப் பெற்று மலரும் கொன்றை மலர் மாலையை அணிந்த

திரிசூலத்தைத் தம்முடைய திருக்கரத்தில் ஏந்தியவராகிய கைலாச பதியார் விரும்பி எழுந்தருளியிருக்கும் பிரகாசம் விரிந்து வீசும் கைலை மலையினுடைய பக்கத்தை அடைந்து அந்த இடத்தில் தம்முடைய திருவடிகளால் நடக்கும் நடையை விட்டுவிட்டுத் தரையின் மேல் தம்முடைய தலையினால் நடந்து கைலாச மலையின் உச்சிக்கு எழுந்தருளினார்.' பாடல் வருமாறு:

**"வடதிசைத் தேசம் எல்லாம்**
**மனத்தினும் கடிது சென்று**
**தொடையவிழ் இதழி மாலைச்**
**சூலபா ணியனார் மேவும்**
**படரொளிக் கைலை வெற்பின்**
**பாங்கணைந் தாங்குக் காலின்**
**நடையினைத் தவிர்த்துப் பார்மேல்**
**தலையினால் நடந்து சென்றார்."**

வடதிசை - அந்தப் புனிதவதியார் செந்தமிழ் நாட்டுக்கு வடக்குத் திசையில் உள்ள. த் : சந்தி. தேசம் - நாடுகள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம் - எல்லாவற்றையும். மனத்தினும் - தம்முடைய திருவுள்ளத்தைக் காட்டிலும். கடிது - வேகமாக. சென்று - போய். தொடை-தொடுத்தலைப் பெற்று. அவிழ்-மலரும். இதழி - கொன்றை மலர். மாலை - மாலையை அணிந்த. ச் : சந்தி. சூல - திரிசூலத்தை. பாணியனார் - தம்முடைய திருக்கரத்தில் ஏந்தியவராகிய கைலாசபதியார். மேவும் - விரும்பி எழுந்தருளியிருக்கும். படர் ஒளி - பிரகாசம் விரிந்து வீசும். க் : சந்தி. கைலைவெற்பின் - கைலை மலையினுடைய. பாங்கு - பக்கத்தை. அணைந்து - அந்தப் புனிதவதியார் அடைந்து. ஆங்கு - அந்த இடத்தில். க் : சந்தி. காலின் - தம்முடைய திருவடிகளால் நடக்கும். கால் : ஒருமை பன்மை மயக்கம். நடையினை - நடையை. த் : சந்தி. தவிர்த்து - விட்டுவிட்டு. ப் : சந்தி. பார்மேல் - தரையின்மேல். தலையினால் - தம்முடைய தலையினால்.

நடந்து சென்றார் - நடந்து அந்தக் கயிலாயமலை யினுடைய உச்சிக்கு எழுந்தருளினார்.

அடுத்து வரும் 56 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அவ்வாறு அந்தப் புனிதவதியார் கைலாச மலையி னுடைய உச்சிக்குத் தம்முடைய தலையினால் நடந்து போய் சங்கரனாகிய கைலாசபதி வீற்றிருந்த வெள்ளி மலையாகிய கயிலாய மலையின்மேல் ஏறும் சமயத்தில் மகிழ்ச்சியோடு பக்தியும் தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழ கிரணங்களைப் பெற்ற இளமையைக் கொண்ட பிறைச்சந்திரனாகிய கண்ணியைச் சூடும் நெற்றியில் ஒன்றைக் கண்ணைப் பெற்றவராகிய கயிலாச பதியாருடைய ஒப்பற்ற வாமபாகத்தில் எழுந் தருளியிருக்கும் வில்லைப் போன்ற நெற்றியைப் பெற்ற இமாசல அரசனுடைய புதல்வியும் பூங்கொடியைப்போன்ற வரும் ஆகிய பார்வதி தேவியினுடைய அழகிய விழியி னுடைய பார்வை அந்தப் புனிதவதியாரை அடைந்தது.' பாடல் வருமாறு :

"தலையினால் நடந்து சென்று
சங்கரன் இருந்த வெள்ளி
மலையின்மேல் ஏறும் போது
மகிழ்ச்சியால் அன்பு பொங்கக்
கலையிளந் திங்கட் கண்ணிக்
கண்ணுதல் ஒருபா கத்துச்
சிலைநுதல் இமய வல்லி
திருக்கண்நோக் குற்ற தன்றே."

தலையினால் - அவ்வாறு அந்தப் புனிதவதியார் கைலாச மலையினுடைய உச்சிக்குத் தம்முடைய தலை யினால். நடந்து சென்று - நடந்து போய். சங்கரன் - சுகத்தைச் செய்பவனாகிய கைலாசபதி. இருந்த - வீற்றிருந்த. வெள்ளி மலையின்மேல்-வெள்ளி மலையாகிய கயிலாய மலையின் மேல். ஏறும்போது - அந்தப் புனித

வதியார் ஏறும் சமயத்தில். மகிழ்ச்சியால் - மகிழ்ச்சியோடு; உருபு மயக்கம். அன்பு - பக்தியும். பொங்க - தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழ, க் : சந்தி. கலை - கிரணங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். இளம்திங்கள் - இளமையைக் கொண்ட பிறைச் சந்திரனாகிய. கண்ணி - கண்ணியைச் சூடும். க் : சந்தி. கண்ணுதல் - நெற்றியில் ஒன்றைக் கண்ணைப் பெற்றவராகிய கயிலாசபதியாருடைய. ஒரு - ஒப்பற்ற. பாகத்து - வாமபாகத்தில் எழுந்தருளியிருக்கும். ச் : சந்தி. சிலை - வில்லைப் போன்ற. நுதல் - நெற்றியைப் பெற்ற. இமயவல்லி - இமாசல அரசனுடைய புதல்வியும் பூங்கொடியைப் போன்றவரும் ஆகிய பார்வதி தேவியினுடைய. இமய : திணை மயக்கம். திருக்கண் - அழகிய விழியுடைய. நோக்கு - பார்வை. உற்றது - அந்தப் புனிதவதியாரை அடைந்தது. அன்று, ஏ : இரண்டும் ஈற்றசை நிலைகள்.

பின் வரும் 57 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'பார்வதி தேவியார் தம்முடைய திருவுள்ளத்தில் வியப்பை அடைந்தருளித் தரையில் விழுந்து பணிந்து விட்டுத் தம்முடைய கணவனாகிய கைலாச பதியாரைப் பார்த்து, "தலையினால் நடந்து இந்தக் கைலாச மலையின்மேல் ஏறிவரும், எம்பெருமானே, ஓர் என்பே மயமான உடம்பு பெற்றவளுடைய பக்தி என்ன ஆச்சரியமானது" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்ய, அடியேங்களுடைய பெருமாட்டியாகிய பார்வதி தேவிக்கு அவளுடைய கணவனாகிய கைலாசபதி பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்பவன் ஆனான்.' பாடல் வருமாறு :

**" அம்பிகை திருவுள் ளத்தின்**
**அதிசயித் தருளித் தாழ்ந்து**
**தம்பெரு மானை நோக்கித்,**
**'தலையினால் நடந்திங் கேறும்**

எம்பெரு மானோர் எற்பின்
யாக்கைஅன் பென்னே' என்ன
நம்பெரு மாட்டிக் கங்கு
நாயகன் அருளிச் செய்வான்.''

அம்பிகை - பார்வதி தேவியார். திருவுள்ளத்தின் - தம்முடைய திருவுள்ளத்தில். அதிசயித்தருளி - வியப்பை அடைந்தருளி. த் : சந்தி. தாழ்ந்து - தரையில் விழுந்து பணிந்து விட்டு. தம் - தம்முடைய. பெருமானை - கணவராகிய கைலாசபதியாரை; ஒருமை பன்மை மயக்கம். நோக்கி - பார்த்தருளி. த் : சந்தி. தலையினால் - தன்னுடைய தலையால். நடந்து - நடந்து வந்து. இங்கு - இந்தக் கைலாச மலையின்மேல். ஏறும் - ஏறிவரும். எம்பெருமான் - எம் பெருமானே; விளி. ஓர் எற்பின - ஓர் எலும்பு மயமான. யாக்கை - உடம்பைப் பெற்றவளுடைய; ஆகுபெயர். அன்பு - பக்தி. என்னே - எத்தகைய ஆச்சரியமானது! என்ன - என்று பார்வதிதேவி திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. நம் - அடியேங்களுடைய. இது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. பெருமாட்டிக்கு - தலைவியாகிய பார்வதிதேவிக்கு. அங்கு - அந்தக் கைலாசத்தில். நாயகன் - அந்தப் பார்வதி தேவியினுடைய கணவனாகிய கைலாசபதி. அருளிச் செய்வான் - பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்பவனானான்.

பிறகு வரும் 58 - ஆம் கவியின் கருத்து வருமாறு :

'இந்தக் கைலாச மலையின்மேல் ஏறிவரும் இந்தப் பெண்மணி நம்மை விரும்பிப் பாதுகாக்கும் அன்னை; இதை நீ பார்ப்பாயாக, உமாதேவியே, இந்தப் பெருமையைச் சேர்ந்து விளங்கும் பேயின் வடிவத்தைத்தான் எம்மை வேண்டிக் கொண்டு பெற்றாள்'' எனத் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டுப் பிறகு அந்தப் பேய் வடிவத்தைக்கொண்ட புனிதவதி தம்முடைய சமீபத்திற்கு வந்து

சேர அதனைப் பார்த்து, "என்னுடைய அம்மையே" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்யும் செம்மையாகிய ஒப்பற்ற வார்த்தை இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள் எல்லோரும் உஜ்ஜீவனத்தை அடையுமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு :

**"'வரும்இவள் நம்மைப் பேணும்**
**அம்மைகாண்; உமையே, மற்றிப்**
**பெருமைசேர் வடிவம் வேண்டிப்**
**பெற்றனள்' என்று பின்றை**
**அருகுவந் தணைய நோக்கி,**
**"அம்மையே!" என்னும் செம்மை**
**ஒருமொழி உலகம் எல்லாம்**
**உய்யவே அருளிச் செய்தார்."**

வரும் - இந்தக் கைலாச மலையின் மேல் ஏறிவரும். இவள் - இந்தப் பெண்மணி. நம்மை - எம்மை. ப் : சந்தி. பேணும் - விரும்பிப் பாதுகாக்கும். அம்மை - அன்னை. காண் - இதை நீ தெரிந்து கொள்வாயாக. உமையே - உமாதேவியே. மற்று : அசைநிலை. இப்பெருமை - இந்தப் பெருமையை. சேர் - சேர்ந்து விளங்கும். வடிவம் - பேயின் வடிவத்தை. வேண்டி - எம்மிடம் வேண்டிக் கொண்டு. ப் : சந்தி. பெற்றனள் - பெற்றாள். என்று - எனக் கைலாச பதியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. பின்றை - பிறகு. அருகு - தமக்குச் சமீபத்தில். வந்து - அந்தப் பேய் வடிவத்தைக் கொண்ட புனிதவதி வந்து. அணைய - சேர. நோக்கி - அவ்வாறு வருவதைப் பார்த்து. அம்மையே. - என் அம்மையே. என்னும் - என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்யும். செம்மை - சிறப்பைப் பெற்ற. ஒரு-ஒப்பற்ற. மொழி-வார்த்தையை. உலகம்- இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். எல்லாம் - எல்லோரும். உய்ய - உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம். ஏ : அசைநிலை. அருளிச் செய்தார் - அந்தக் கைலாசபதியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

பிறகு உள்ள 59 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அழகிய கண்களைப் பெற்றவனாகிய கைலாசபதி, "'அம்மையே'' என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்ய, அந்தப் பேய் வடிவத்தைக் கொண்ட புனிதவதியார், "அப்பா!'' எனச் செந்தாமரை மலர்களைப் போலச் சிவப்பாக இருக்கும் தங்கத்தைப் போன்ற கைலாசபதியாருடைய திருவடிகளைத் தரையில் விழுந்து வணங்கிப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டிருந்த அந்தப் புனிதவதியாரை சங்குகளாகிய வெண்மை நிறத்தைக் கொண்ட குழைகளைத் தம்முடைய திருச்செவிகளில் அணிந்துகொண்டிருக்கும் கைலாசபதியாரும் அந்தப் புனிதவதியாருக்கு எதிரில் அவரைப் பார்த்து, "எம்மிடம் இந்தக் கைலாச மலையில் நீ அடைய விரும்புவது என்ன?'' என்று அந்தக் கைலாசபதியார் வினவியருள, அவரைப் புனிதவதியார் தரையில் விழுந்து வணங்கிவிட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்றுகொண்டு பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்கிறவரானார்.' பாடல் வருமாறு :

"அங்கணன், 'அம்மையே' என்று
அருள்செய 'அப்பா' என்று
பங்கயச் செம்பொற் பாதம்
பணிந்துவீழ்ந் தெழுந்தார் தம்மைச்
சங்கவெண் குழையி னாரும்
தாமெதிர் நோக்கி, 'நம்பால்
இங்குவேண் டுவதென்?' என்ன
இறைஞ்சிநின் றியம்பு கின்றார்.''

அம் - அழகிய. கணன் - கண்களைப் பெற்றவனாகிய கைலாசபதி. கணன் : இடைக்குறை. கண் : ஒருமை பன்மை மயக்கம். 'அம்மையே' என்று - 'அம்மையே' என. அருள்செய - திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. செய : இடைக்குறை. 'அப்பா' என்று-'அப்பா' என. பங்கய-செந்

தாமரை மலர்களைப்போல; ஒருமை பன்மை மயக்கம். ச்: சந்தி. செம் - சிவப்பாக விளங்கும். பொன் - தங்கத்தைப் போன்ற; உவம ஆகுபெயர். பாதம் - கைலாசபதியாருடைய திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். பணிந்து வீழ்ந்து - தரையில் விழுந்து வணங்கி. எழுந்தார் தம்மை - பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டிருந்த அந்தப் புனிதவதியாரை. தம்: அசைநிலை. ச்: சந்தி. சங்க - சங்குகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். வெண் - வெண்மை நிறத்தைக் கொண்ட. குழையினாரும் தாம் - குழைகளைத் தம்முடைய திருச்செவிகளில் அணிந்து கொண்டிருக்கும் கைலாசபதியாரும். குழை: ஒருமை பன்மை மயக்கம். தாம்: அசைநிலை. எதிர் - அந்தப் புனிதவதியாருக்கு எதிரில். நோக்கி - அவரைப் பார்த்தருளி. நம்பால் - எம்மிடம். இங்கு - இந்தக் கைலாச மலையில். வேண்டுவது - நீ அடைய விரும்புவது. என் - என்ன. என்ன - என்று அந்தக் கைலாசபதியார் வினவியருள. இறைஞ்சி நின்று - அந்தக் கைலாசபதியாரைப் புனிதவதியார் தரையில் விழுந்து வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு. இயம்புகின்றார் - பின்வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்கிறவரானார்.

பிறகு வரும் 60 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'என்றும் போகாத இன்பத்தை வழங்கும் பக்தியை விரும்பி அந்தப் புனிதவதியார் பிறகு அந்தக் கைலாசபதியாரை வேண்டிக்கொள்கிறவராகி, "அடியேன் இனிமேல் இந்த மண்ணுலகத்தில் பிறவாத தன்மை அடியேனுக்குத் தேவரீர் வழங்கியருள வேண்டும்; ஒரு கால் திரும்பவும் மனிதப்பிறவி உண்டாகுமானால் தேவரீரை எந்தக் காலத்திலும் மறவாமல் இருக்கும் பான்மையைத் தேவரீர் அடியேனுக்கு வழங்கியருள வேண்டும்; இவற்றிற்கு மேலும் அடியேன் தேவரீரை மகிழ்ச்சியை அடைந்து பாசுரங்களைப் பாடி வாழ வேண்டும்; தரும சொரூபமாக

விளங்கும் கைலாசபதியே, தேவரீர் திருநடனம் புரிந்தருளும் காலத்தில் தேவரீருடைய திருவடிகளின் கீழே அடியேன் இருக்கவேண்டும்.'' என்று கைலாசபதியாரை அந்தப் புனிதவதியார் வேண்டிக்கொண்டார்.' பாடல் வருமாறு:

''இறவாத இன்ப அன்பு
வேண்டிப்பின் வேண்டு கின்றார்
பிறவாமை வேண்டும் மீண்டும்
பிறப்புண்டேல் உன்னை என்றும்
மறவாமை வேண்டும்; இன்னும்
வேண்டும்நான் மகிழ்ந்து பாடி
அறவா,நீ ஆடும்போதுன்
அடியின்கீழ் இருக்க.' என்றார்.'

இறவாத - அந்தப் புனிதவதியார் என்றும் போகாத. இன்ப - ஆனந்தத்தை வழங்கும். அன்பு - பக்தியை. வேண்டி - கைலாசபதியாரிடம் வேண்டிக்கொண்டு. ப்: சந்தி. பின் - பிறகும். வேண்டுகின்றார் - அந்தக் கைலாசபதியாரிடம் பின் வருமாறு வேண்டிக்கொள்கிறவராகி; முற்றெச்சம். பிறவாமை - அடியேன் இனிமேல் இந்த மண்ணுலகத்தில் மானிடப் பிறவியை எடுக்காமை. வேண்டும் - தேவரீர் அடியேனுக்கு வழங்கியருள வேண்டும். மீண்டும் - மறுபடியும். பிறப்பு - இந்த மண்ணுலகத்தில் மானிடப் பெண்ணாய்ப் பிறக்கும் பிறப்பு. உண்டேல் - இருக்குமானால். உன்னை - தேவரீரை. என்றும் - எந்தக் காலத்திலும். மறவாமை - மறக்காமல் இருக்கும் தன்மையை. வேண்டும் - தேவரீர் அடியேனுக்கு வழங்கியருள வேண்டும். இன்னும் - இவற்றிற்கு மேலும். நான் - அடியேன். மகிழ்ந்து - மகிழ்ச்சியை அடைந்து. பாடி - தேவரீரைப் பல பாசுரங்களைப் பாடி. அறவா - தரும ஸ்வரூபமாக விளங்கும் கைலாசபதியே. நீ - தேவரீர். ஆடும் - திருவாலங்காட்டில் ஊர்த்துவ தாண்டவம் புரிந்தருளும். போது - காலத்தில். உன் - தேவரீருடைய. அடியின்கீழ் - திருவடிகளுக்குக் கீழே; ஒருமை பன்மை

மயக்கம். இருக்க - அடியேன் இருக்குமாறு தேவரீர் அடியேனுக்குத் தேவரீருடைய திருவருளை வழங்கியருள வேண்டும். என்றார் - என்று அந்தப் புனிதவதியார் அந்தக் கைலாசபதியாரை வேண்டிக்கொண்டார்.

பிறகு வரும் 61 - கவியின் உள்ளுறை வருமாறு :

'தன்னைப் புகழ்ந்து பாடும் அடியவர்களினுடைய பற்றுக்கோடாகிநின்றவனாகிய அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி அந்தப் புனிதவதியாருக்குத் தன்னை வந்து சேருமாறு தன்னுடைய திருவருளை வழங்கிவிட்டு, "பக்தர்கள் குலாவுகின்ற செந்தமிழ் நாட்டின் தெற்குத் திசையில் எல்லாக்காலத்திலும் நெடுங்காலமாகப் பக்தர்கள் வாழும் வயல்களைப் பெற்ற பழைய ஊராக நிலைத்து விளங்கிய திருவாலங்காட்டில் யாம் திருநடனம் புரியும் பெருமையைப் பெற்ற ஊர்த்துவ தாண்டவத்தையும் நீ தரிசித்து பேரானந்தத்தை அடைந்து எல்லாக் காலத்திலும் எம்மை நீ பாசுரங்களைப் பாடுவாயாக" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்தான்.' பாடல் வருமாறு:

"கூடுமா றருள்கொ டுத்துக்
'குலவுதென் திசையில் என்றும்
நீடுவாழ் பழன மூதூர்
நிலவிய ஆலங் காட்டில்
ஆடுமா நடமும் நீகண்
டானந்தம் சேர்ந்தெப் போதும்
பாடுவாய் நம்மை' என்றான்
பரவுவார் பற்றாய் நின்றான்."

இந்தப் பாடலில் விற்பூட்டுப் பொருள்கோள் அமைந்துள்ளது. பரவுவார் - தன்னைப் புகழ்ந்து பாடும் அடியவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பற்றாய் - பற்றுக் கோடாகி. நின்றான் - நின்றவனாகிய அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி. கூடுமாறு-அந்தப் புனிதவதியாருக்குத் தன்னை வந்து சேருமாறு. அருள் - தன்னுடைய

திருவருளை. கொடுத்து - வழங்கிவிட்டு. க்: சந்தி. குலவு - பக்தர்கள் ஒருவரோடு ஒருவர் குலாவுகின்ற. தென் திசையில் - செந்தமிழ் நாட்டின் தெற்குத் திசையில். என்றும் - எல்லாக் காலத்திலும். நீடு - நெடுங்காலமாக. வாழ் - பக்தர்கள் வாழும். பக்தர்கள்: தோன்றா எழுவாய். பழன - பலவகையான வயல்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். அந்த வயல்களாவன: சம்பாநெற்பயிர் வளர்ந்து நிற்கும் வயல், குறுவை நெற்பயிர் வளர்ந்து நிற்கும் வயல், மணக்கத்தை நெற்பயிர் வளைந்து நிற்கும் வயல், கரும்புத் தோட்டம் முதலியவை. மூதூர் - பழைய ஊராக. நிலவிய - நிலைத்து விளங்கிய. ஆலங்காட்டில் - திருவாலங்காட்டில். ஆடும் - யாம் திருநடனம் புரியும். மா - பெருமையைப் பெற்ற. நடமும் - ஊர்த்துவ தாண்டவத்தையும். நீ கண்டு - நீ தரிசித்து. ஆனந்தம் - பேரானந்தத்தை. சேர்ந்து - அடைந்து. எப்போதும் - எந்தக் காலத்திலும். பாடுவாய் நம்மை - எம்மை நீ பாசுரங்களால் பாடுவாயாக. என்றான் - என்று அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி திருவாய் மலர்ந்தருளிச் செய்தான்.

ஒரு செட்டிப்பிள்ளைக்குத் தாங்கள் கொடுத்த வாக்கைக் காப்பாற்றும்பொருட்டு தங்கள் உயிர்களைக் கொடுத்த எழுபது வேளாளர்கள் வாழ்ந்து வந்த பழையனூர் இந்தத் திருவாலங்காட்டிற்குக் கிழக்குத் திசையில் ஒரு மைல் தூரத்தில் உள்ளது. இந்த ஊரிலும் ஒரு சிவாலயம் இருக்கிறது. இவ்வாறு, 'பழையனூர் இயல்பு மொழி காத்த கதை' யைத் திருஞானசம்பந்த மூர்த்தி நாயனார்,

" துஞ்ச வருவாரும் தொழுவிப்
பாரும் வழுவிப் போய்
நெஞ்சம் புகுந் தென்னை
நினைவிப் பாரும் முனைநட்பாய்

வஞ்சப் படுத்தொருத்தி வாணாள்
கொள்ளும் வகை கேட்டு
அஞ்சும் பழையனூர் ஆலங்
காட்டெம் அடிகளே.''

என்று பாடியருளிய பாசுரத்தால் விளங்கும்.

திருவாலங்காடு: இது தொண்டை நாட்டில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்பவருடைய திருநாமங்கள் தேவர்சிங்கப் பெருமான், ஊர்த்துவ தாண்டவேசுவரர், ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியார் என்பவை. அம்பிகை வண்டார் குழலியம்மை. தீர்த்தம் முத்தி தீர்த்தம். தலவிருட்சம் பலாமரம். இது பழையனூரைச் சார்ந்த திருவாலங்காடு என்னும் சிவத்தலம் ஆகும். திருவாலங்காட்டுக்கு வடக்கில் 3 மைல் தூரத்தில் பழையனூர் இருக்கிறது. இது பஞ்சசபைகளில் ஒன்றாகிய இரத்தின சபையை உடைய தலம். ஊர்த்துவ தாண்டவேசுவரர் காளியுடன் திருநடனம் புரிந்தருளிய தலம் இது. ''ஆடினார் காண காண ஆலங்காட்டடிகளாரே.'' என்று தேவாரத்தில் வருவதைக் காண்க. காரைக்காலம்மையார் கைலாச மலையிலிருந்து தலையாலே நடந்து வந்து ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியைத் திருவாலங்காட்டில் தரிசித்து அவருடைய குஞ்சித பாதத்தின் கீழ்ச் சிவானந்தத்தை நுகர்ந்துகொண்டு விளங்கும் தலம் இது.

பிறகு வரும் 62 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'தம்மைத் திருவாலங்காட்டில் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாருடைய திருவடிகளின்கீழ் என்றைக்கும் இருக்க வேண்டும் என்று வேண்டிக்கொண்ட அந்த ஊர்த்துவ தாண்டவமூர்த்தியார் தனக்கு வழங்கியருள அந்தத் திருவருளைப் பெற்ற காரைக்கால் அம்மையும் சிறப்பான தன்மையைப் பெற்ற இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களினுடைய உண்மையான அர்த்தமாக விளங்குபவராகிய

அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாரிடம் விடையைப் பெற்றுக்கொண்டு அவரைப் பணிந்துவிட்டு மேலே எழுந்தருளி சொல்வதற்கு அருமையாக இருக்கும் பெருமையைப் பெற்ற பக்தியோடு, புகழோடு விளங்குகின்ற திருவாலங்காடு ஆகும் நல்ல சிவத்தலத்திற்கு அந்தக் காரைக்கால் அம்மையார் தம்முடைய தலையினால் நடந்து சென்று ஊருக்குள் நுழைந்து சேர்ந்தார்.' பாடல் வருமாறு :

"அப்பரி சருளப் பெற்ற
அம்மையும் செம்மை வேத
மெய்ப்பொருள் ஆனார் தம்மை
விடைகொண்டு வணங்கிப் போந்து
செப்பரும் பெருமை அன்பால்
திகழ்திரு வாலங் காடாம்
நற்பதி தலையி னாலே
நடந்துபுக் கடைந்தார் அன்றே."

அப்பரிசு - தம்மைத் திருவாலங்காட்டில் ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாருடைய திருவடிகளின் கீழ் என்றைக்கும் இருக்கவேண்டும் என்று வேண்டிக்கொண்ட அந்த வேண்டுகோளினுடைய தன்மையை. அருள - அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியார் தனக்கு வழங்கியருள. ப் : சந்தி. பெற்ற - அந்தத் திருவருளைப் பெற்றுக் கொண்ட. அம்மையும் - காரைக்கால் அம்மையும். செம்மை - சிறப்பான தன்மையைப் பெற்ற. வேத - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். மெய் - உண்மையான. ப் : சந்தி. பொருள் ஆனார் தம்மை - அர்த்தமாக விளங்குபவராகிய அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாரிடம்; உருபு மயக்கம். தம் : அசைநிலை. விடைகொண்டு - அந்தக் காரைக்கால் அம்மையார் விடையைப் பெற்றுக்

கொண்டு, வணங்கி - அந்த மூர்த்தியாரைப் பணிந்துவிட்டு. ப் : சந்தி. போந்து - மேலே எழுந்தருளி. செப்பரும் - சொல்லுவதற்கு அருமையாக இருக்கும். செப்பரும் - செப்ப அரும்; தொகுத்தல் விகாரம். பெருமை - பெருமையைப் பெற்ற. அன்பால்-பக்தியோடு; உருபு மயக்கம். திகழ் - புகழோடு விளங்கும். திருவாலங் காடாம் - திருவாலங்காடு ஆகும். நல் - நல்ல. பதி - சிவத் தலத்திற்கு. தலையினால்-அந்தக் காரைக்கால் அம்மையார் தம்முடைய தலையினால். ஏ : அசைநிலை. நடந்து-நடந்து சென்று. புக்கு - அந்த ஊருக்குள் நுழைந்து. அடைந்தார் - திருவாலங்காட்டைக் காரைக்கால் அம்மையார் சேர்ந்தார். அன்று, ஏ : இரண்டும் ஈற்றசை நிலைகள்.

அடுத்து உள்ள 63 - ஆம் கவியின் கருத்து வருமாறு :

'திருவாலங்காட்டில் வானத்தை உறுமாறு நிமிர்ந்து ஊர்த்துவ தாண்டவத்தைப் புரிந்தருளுகின்ற அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாரினுடைய திருக்கோலத் தைக் காரைக்கால் அம்மையார் தரிசித்த சமயத்தில், ''கொங்கைதிரங்கி'' எனத் தொடங்கி தாம் தங்கியிருக்கும் மூலத்தை யாராலும் பார்ப்பதற்கு அரியவராகிய அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாரை, மூத்த நல்ல திருப் பதிகத்தை அந்த அம்மையார் பாடியருளி இந்த மண்ணுல கத்தில் வாழும் மக்கள் விரும்பி வாழ்த்தி வணங்கும் அந்த ஊர்த்துவ தாண்டவத்தைக் காரைக்கால் அம்மையார் வாழ்த்தி வணங்கி அந்தத் திருவாலங்காட்டில் தங்கியிருக்கும் காலத்தில்.' பாடல் வருமாறு :

'' ஆலங்கா டதனில் அண்டம்
வறநிமிர்ந் தாடு கின்ற
கோலம்காண் பொழுது, 'கொங்கை
திரங்கி'என் றெடுத்துத் தங்கு
மூலம்காண் பரியார் தம்மை
மூத்தநற் பதிகம் பாடி

ஞாலம்கா தலித்துப் போற்றும்
நடம்போற்றி நண்ணும் நாளில்.''

இந்தப் பாடல் குளகம். ஆலங்காடதனில் - திருவாலங் காட்டில். அது : பகுதிப் பொருள் விகுதி. அண்டம் - வானத்தை. உற - அடையுமாறு. நிமிர்ந்து - தலையை நிமிர்த்திக்கொண்டு. ஆடுகின்ற - ஊர்த்துவ தாண்டவத்தை ஆடியருளுகின்ற. கோலம் - திருக்கோலத்தை. காண் - காரைக்கால் அம்மையார் தரிசிக்கும். பொழுது - சமயத்தில். 'கொங்கை திரங்கி' என்று எடுத்து - 'கொங்கை திரங்கி' எனத் தொடங்கி. த் : சந்தி. தங்கு - தாம் தங்கியிருக்கும். மூலம் - மூலமான இடத்தை. காண்பு அரியார் - தம்மை யாராலும் பார்ப்பதற்கு அரிய வராகிய அந்த ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியாரை. தம் : அசைநிலை. மூத்தநற்பதிகம் - நல்ல மூத்த திருப் பதிகத்தை. பாடி - இந்தளப்பண் அமையுமாறு பாடியருள. ஞாலம் - இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள்; இட ஆகுபெயர். காதலித்து - விரும்பி. ப் : சந்தி. போற்றும் - வாழ்த்தி வணங்கும். நடம் - ஊர்த்துவ தாண்டவத்தை. போற்றி - அந்தக் காரைக் காலம்மையார் வாழ்த்தி வணங்கி. நண்ணும் - அந்தத் திருவாலங்காட்டில் தங்கி யிருக்கும். நாளில் - காலத்தில்.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட, 'கொங்கைதிரங்கி' என்று தொடங்கும் பாசுரம் அமைந்த திருப்பதிகம் திருவாலங் காட்டு மூத்த திருப்பதிகம். அது நட்டபாடைப் பண்ணில் அமைந்தது. அதில் வரும் முதற்பாசுரத்தில் மேலே சொன்ன 'கொங்கைதிரங்கி' என்னும் சொற்றொடர் வருகின்றது. அந்தப் பாசுரம் வருமாறு :

'' கொங்கை திரங்கி நரம்பெ ழுந்து
குண்டுகண் வெண்பற் குழிவ யிற்றுப்
பங்கிசி வந்திரு பற்கள் நீண்டு
பரடுயர் நீள்கணைக் காலோர் பெண்பேய்

தங்கி அலறி உலறு காட்டில்
தாழ்சடை எட்டுத் திசையும் வீசி
அங்கம் குளிர்ந்தனல் ஆடும் எங்கள்
அப்பன் இடம்திரு வாலங் காடே.''

இந்தத் திருப்பதிகத்தில் இறுதியாக வரும் 11-ஆம் பாடல் வருமாறு :

'' ஒப்பினை இல்லவன் பேய்கள் கூடி
ஒன்றினை ஒன்றடித் தொக்க லித்துப்
பப்பினை இட்டுப் பகண்டை பாடப்
பாடிருந் தந்நரி யாழ்அ மைப்ப
அப்பனை அணிதிரு வாலங் காட்டுள்
அடிகளைச் செடிதலைக் காரைக் காற்பேய்
செப்பிய செந்தமிழ் பத்தும் வல்லார்
சிவகதி சேர்ந்தின்பம் எய்துவாரே.''

பிறகு வரும் 64 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'தேன் மலரும் கொன்றை மலர் மாலையை அணிந்த வராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியார் புரிந்தருளும் அழகிய ஊர்த்துவ தாண்டவத்தைத் தரிசித்து முன்னால் அந்த மூர்த்தியாரைப் பணியும் இட்டம் மிகுதியாகக் கொண்ட பெரியதாக இருக்கும் விருப்பம் அந்தக் காரைக் கால் அம்மையாருடைய திருவுள்ளத்தில் எழுந்து ஓங்கி நிற்க ஆச்சரியத்தை அந்த அம்மையார் அடைந்து, ''எட்டி இலவம் ஈகை'' என்று தொடங்கி மூத்த திருப் பதிகத்தை, ''கொட்ட முழவம் குழகன் ஆடும்'' என்று முடித்து ஒரு திருப்பதிகத்தை அந்த அம்மையார் பாடியருளினார்.' பாடல் வருமாறு :

'' மட்டவிழ் கொன்றை யினார்தம்
திருக்கூத்து முன் வணங்கும்
இட்டமிகு பெருங் காதல்
எழுந் தோங்க வியப்பெய்தி

'எட்டி இலவம் ஈகை' என
எடுத்துத் திருப்ப திகம்
'கொட்டமுழ வம்குழகன் ஆடும்'
எனப் பாடி னார்.''

மட்டு - தேன். அவிழ் - மலரும். கொன்றையினார் தம் - கொன்றை மலர் மாலையை அணிந்தவராகிய ஊர்த்துவ தாண்டவமூர்த்தியார் புரிந்தருளும். கொன்றை: ஆகுபெயர். தம் : அசை நிலை. திருக்கூத்து - அழகிய ஊர்த்துவ தாண்டவத்தை. முன் - தரிசித்து முன்னால். வணங்கும் - அந்த மூர்த்தியாரைப் பணியும். இட்டம் - இஷ்டத்தை. மிகு - மிகுதியாகக் கொண்ட. பெரும் - பெரிதாக இருக்கும். காதல்-விருப்பம். எழுந்து - அந்தக் காரைக்கால் அம்மையாருடைய திருவுள்ளத்தில் எழுந்து. ஓங்க - ஓங்கி நிற்க. வியப்பு - ஆச்சரியத்தை. எய்தி - அந்த அம்மையார் அடைந்து. 'எட்டி இலவம் ஈகை' என எடுத்து - 'எட்டி இலவம் ஈகை' என்று தொடங்கி. என : இடைக்குறை. த் : சந்தி. திருப்பதிகம் - மூத்த திருப்பதிகத்தை. 'கொட்ட முழவம் குழகன் ஆடும்' என - 'கொட்ட முழவம் குழகன் ஆடும்' என்று முடித்து. என : இடைக்குறை. ப் : சந்தி. பாடினார் - அந்த அம்மையார் பாடியருளினார்.

இந்தப் பாடலில் குறிப்பிட்ட, 'எட்டி இலவம்' என்று தொடங்கும் பாசுரம் வருமாறு. இது இந்தளப்பண் அமைந்தது;

'' எட்டி இலவம் ஈகை சூரை
சாரை படர்ந்தெங்கும்
சுட்ட சுடலை சூழ்ந்த கள்ளி
சோர்ந்த குடர்கௌவப்
பட்ட பிணங்கள் பரந்த காட்டிற்
பறைபோல் விழிகட் பேய்

கொட்ட முழவம் கூளி பாடக்
குழகன் ஆடுமே.''

இந்தத் திருப்பதிகத்தில் இறுதியில் உள்ள 11 - ஆம் பாடல் வருமாறு :

''சூடு மதியம் சடைமேல் உடையார்
சுழல்வார் திருநட்டம்
ஆடும் அரவம் அரையில் ஆர்த்த
அடிகள் அருளாலே
காடு மலிந்த கனல்வாய் எயிற்றுக்
காரைக் காற்பேய்தன்
பாடல் பத்தும் பாடி ஆடப்
பாவம் நாசமே.''

பிறகு வரும் 65 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'தாங்கிய கங்கையாற்றின் நீரைத் தம்முடைய தலையில் உள்ள சடாபாரத்தில் தங்க வைத்தவராகிய ஊர்த்துவ தாண்டவமூர்த்தியார், ''அம்மை'' என்று இனிய சுவையைப் பெற்ற வார்த்தை வழங்கியருளப் பெற்றவராகிய காரைக்கால் அம்மையாரை குலாவிய ஊர்த்துவ தாண்டவத்தில் அந்த மூர்த்தியார் தூக்கியருளும் குஞ்சித கரணமாகிய சிவந்த திருவடிகளின் கீழ் எந்தக் காலத்திலும் தங்கியிருக்கிறவராகிய அந்தக் காரைக்கால் அம்மையாரை அவருக்குச் சேர்ந்துள்ள பெருமையைப் பெற்று விளங்கும் சீர்த்தியைப் புகழ்ந்து பாடுதல் யாருடைய அறிவின் அளவிற்குள் அடங்குவது அம்மா!' பாடல் வருவாறு :

**'' மடுத்தபுனல் வேணியினார்
'அம்மை' என மதுரமொழி
கொடுத்தருளப் பெற்றாரைக்
குலவியதாண் டவத்தில்அவர்
எடுத்தருளும் சேவடிக்கீழ்
என்றும்இருக் கின்றாரை
அடுத்தபெரும் சீர்பரவல்
ஆரளவா யினதம்மா?''**

மடுத்த - தாங்கிய. புனல் - கங்கையாற்றின் நீரை. வேணியினார் - தம்முடைய தலையில் உள்ள சடா பாரத்தில் தங்க வைத்தவராகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தியார். 'அம்மை' என - 'அம்மை' என்று. என : இடைக்குறை. மதுர - இனிய சுவையைப் பெற்ற. மொழி - வார்த்தையை. கொடுத்தருள - வழங்கியருள. ப் : சந்தி. பெற்றாரை - பெற்றவராகிய காரைக்கால் அம்மையாரை. க் : சந்தி. குலவிய - குலாவிய. தாண்டவத்தில் - ஊர்த்துவ தாண்டவத்தில். அவர் - அந்த மூர்த்தியார். எடுத்தருளும் - தூக்கியருளும். சேவடிக்கீழ் - குஞ்சித பாதமாகிய சிவந்த திருவடிகளின் கீழ். அடி : ஒருமை பன்மை மயக்கம். என்றும் - எந்தக் காலத்திலும். இருக்கின்றாரை - தங்கிக் கொண்டிருக்கிறவராகிய அந்தக் காரைக்கால் அம்மையாரை. அடுத்த - சேர்ந்துள்ள. பெரும் - பெருமையைப் பெற்று விளங்கும். சீர் - சீர்த்தியை. பரவல் - புகழ்ந்து பாடுதல். ஆர் - யாருடைய. அளவு - அறிவின் அளவிற்குள். ஆயினது - அடக்குவது. அம்மா : ஆச்சரியக் குறிப்பு.

இந்தக் காரைக்கால் அம்மையார் புராணத்தில் இறுதியில் உள்ள 66-ஆம் கவி அடுத்து வரும் அப்பூதியடிகள் நாயனார் புராணத்திற்குத் தோற்றுவாயாகச் சேக்கிழார் பாடியருளியது. அந்தப் பாடலில் உள்ள கருத்து வருமாறு :

'முதலோடு முடிவும் இல்லாதவனாகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி தன்னுடைய திருவருளால் ஊர்த்துவ தாண்டவமாகிய திருநடனத்தை ஆடியருளும் சமயத்தில் பாசுரங்களை அவருக்கு முன்னால் பாடியருளும் அம்மையாகிய காரைக்கால் அம்மையினுடைய பிரகாசம் கிளர்ச்சியைப் பெற்று வீசும் செந்தாமரை மலர்களைப் போன்ற திருவடிகளை வாழ்த்தி வணங்கிவிட்டு, இனிமேல் குளிர்ச்சியைப் பெற்ற நீர் பாயும் வயல்கள் சுற்றியிருக்கும் திங்களூரில் வாழும் அப்பூதியடிகள் நாயனாராகும் மெய்ஞ்ஞானத்தை உடைய பெருமையைக் கொண்ட

அந்தணர் புரிந்த திருத்தொண்டுகளைப் பாடத் தொடங்கினேன்.' பாடல் வருமாறு:

"ஆதியோ டந்தம் இல்லான்
அருள்நடம் ஆடும் போது
கீதம்முன் பாடும் அம்மை
கிளரொளி மலர்த்தாள் போற்றிச்
சீதநீர் வயல்சூழ் திங்க
ளூரில்அப் பூதி யாராம்
போதமா முனிவர் செய்த
திருத்தொண்டு புகல லுற்றேன்."

ஆதியோடு - முதலோடு. அந்தம் - முடிவும். இல்லான்-இல்லாதவனாகிய ஊர்த்துவ தாண்டவ மூர்த்தி. அருள் - தன்னுடைய திருவருளால். நடம் - ஊர்த்துவ தாண்டவமாகிய திருநடனத்தை. ஆடும் - ஆடியருளும். போது - சமயத்தில். கீதம் - பாசுரங்களை; ஒருமை பன்மை மயக்கம். முன் - அந்த மூர்த்தியாருக்கு முன்னால்; அவருடைய சந்நிதியில். பாடும் - பாடியருளும். அம்மை - காரைக்கால் அம்மையினுடைய. கிளர்ஒளி - பிரகாசம் கிளர்ச்சியைப் பெற்று வீசும். மலர் - செந்தாமரை மலர் களைப் போன்ற: ஒருமை பன்மை மயக்கம். த் : சந்தி. தாள் - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். போற்றி - வாழ்த்தி வணங்கிவிட்டு. ச் : சந்தி. சீத நீர் - குளிர்ச்சியைப் பெற்ற நீர் பாயும். வயல் - பலவகையான வயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். அந்த வயல்கள் இன்ன என்பதை வேறு ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. சூழ்-சுற்றி விளங்கும். திங்களூரில் - திங்களூரில் வாழும் அப்பூதியாராம் - அப்பூதியடிகள் நாயனாராகும். போத - மெய்ஞ்ஞானத்தைப் பெற்ற. மா - பெருமையைக் கொண்ட. முனிவர் - அந்தணர். செய்த - புரிந்த. திருத்தொண்டு - திருத்தொண்டுகளை; ஒருமை பன்மை மயக்கம். புகலலுற்றேன் - இனிமேல் அடியேன் பாடத் தொடங்கினேன்.

# அப்பூதியடிகள் நாயனார் புராணம்

**பெரிய புராணத்தில் 5 - ஆவதாக உள்ள திருநின்ற** *சருக்கத்தில் 5 - ஆவதாக விளங்குவது அப்பூதியடிகள் நாயனார் புராணம். அதில் வரும் முதற் பாட்டின் உள்ளுறை வருமாறு :*

*'ஆனந்தத் தாண்டவத்தைப் புரிந்தருள வல்ல தம்பிரானாராகிய நடராஜப் பெருமானாருக்குப் பக்தர்; கூடிய புகழினுடைய பக்கங்களைப் பெற்றவர்; வரம்பு இல்லாத தவத்தில் மிகச் சிறந்து நிற்பவர்; திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட சீர்த்தியைப் பெற்ற திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடிகளைத் தியானித்து அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தம்மைத் தெரிந்து கொள்ளாததற்கு முன்பே எண்ணத்தக்க விருப்பம் அவர் பால் மிகுதியாக உண்டாகச் சேர்ந்த பக்தியை உடையவராகி இருப்பவர் அந்த அப்பூதியடிகள் நாயனார்."*
*பாடல் வருமாறு ;*

**" தாண்டவம் புரிய வல்ல**
**தம்பிரா னாருக் கன்பர்**
**ஈண்டிய புகழின் பாலார்;**
**எல்லையில் தவத்தின் மிக்கார்;**
**ஆண்டசீர் அரசின் பாதம்**
**அடைந்தவர் அறியா முன்னே**
**காண்டகு காதல் கூரக்**
**கலந்தஅன் பினராய் உள்ளார்.'**

தாண்டவம் - ஆனந்தத் தாண்டவத்தை. புரிய - செய்தருள. வல்ல - வல்லமையைப் பெற்ற. தம்பிரானாருக்கு - தலைவராகிய நடராஜப் பெருமானாருக்கு. அன்பர் - பக்தர் அப்பூதியடிகள் நாயனார். அப்பூதியடிகள் நாயனார்: தோன்றா எழுவாய். ஈண்டிய - கூடிய. புகழின் - புகழினுடைய. பாலார் - பகுதிகளைப் பெற்றவர். பால் : ஒருமை பன்மை மயக்கம். எல்லை - ஒரு வரம்பு. இல் - இல்லாத; கடைக்குறை. தவத்தின் - தவத்தினால். மிக்கார் - மிக்க சிறப்பை அடைந்தவர். ஆண்ட - திருவதிகை வீரட்டானே சுவரர் தடுத்து ஆட்கொண்ட. அரசின் - திருநாவுக்கரசு நாயனாருடைய; திணை மயக்கம். பாதம் - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். அடைந்து - தியானித்து. அவர் - அந்தத் திருநாவுக்கரசு நாயனார். அறியா - தம்மைத் தெரிந்து கொள்ளாததற்கு. முன் - முன்பே. ஏ : அசைநிலை. காண்தகு-எண்ணத்தக்க. காதல் - அந்தத் திருநாவுக்கரசு நாயனாரிடம் விருப்பம். கூர - மிகுதியாக உண்டாக. க் : சந்தி. கலந்த - தம்முடைய திருவுள்ளத்தில் சேர்ந்துள்ள. அன்பினராய் - பக்தியை உடையவராய். உள்ளார் - இருப்பவர் அந்த அப்பூதி அடிகள் நாயனார். அப்பூதிஅடிகள் நாயனார் : தோன்றா எழுவாய்.

அடுத்து வரும் 2 - ஆம் கவியின் கருத்து வருமாறு :

'அந்த அப்பூதியடிகள் நாயனார், திருடுதல், பொய் வார்த்தைகளைப் பேசுதல், மகளிரிடம் முறையற்ற காம மயக்கத்தை உடையவராக இருத்தல், வெகுளியை அடைதல் முதலிய குற்றங்களை வெறுத்தவர். செல்வ வளம் மிகுதியாக உள்ள இல்லற வாழ்க்கையாகிய நிலையைப் பெற்றவர்; தம்முடைய திருமாளிகையினிடம் இருக்கிற அளக்கும் படிகள், நிறுத்துப் பார்க்கும் துலாக் கோல், புதல்வர்கள், பசுமாட்டோடு எருமைமாடு, வேறாகவும் இருக்கிற எல்லாப் பண்டங்களுக்கும் திருநாவுக்

கரசு நாயனாருடைய திருநாமத்தை வைத்துக்கூறும் அந்த ஒழுக்கமாகிய வழியில் நிற்பவர்.' பாடல் வருமாறு :

"களவுபொய் காமம் கோபம்
முதலிய குற்றம் காய்ந்தார்;
வளம்மிகு மனையின் வாழ்க்கை
நிலையினார்; மனைப்பால் உள்ள
அளவைகள் நிறைகோல் மக்கள்
ஆவொடு மேதி மற்றும்
உளவெலாம் அரசின் நாமம்
சாற்றும்அவ் வொழுக்க லாற்றார்."

களவு - அந்த அப்பூதியடிகள் நாயனார் பிறருடைய பொருள்களைத் திருடுதல். அப்பூதியடிகள் நாயனார்: தோன்றா எழுவாய். பொய் - பொய் வார்த்தைகளைப் பேசுதல்; ஆகுபெயர்; ஒருமை பன்மை மயக்கம். காமம் - பிற மகளிரிடம் முறையற்ற காமமயக்கத்தை உடையவராக இருத்தல்; ஆகுபெயர். கோபம் - சினத்தை அடைதல்; ஆகுபெயர். முதலிய - முதலாக உள்ள. குற்றம் - குற்றங்களை; ஒருமை பன்மை மயக்கம். காய்ந்தார் - வெறுத்தவர். வளம் - செல்வ வளம். மிகு - மிகுதியாக உள்ள. மனையின் வாழ்க்கை - இல்லற வாழ்க்கையாகிய. நிலையினார் - நிலையைப் பெற்றவர். மனைப்பால் - தம்முடைய திருமாளிகையினிடம். உள்ள - இருக்கிற. அளவைகள் - அளக்கும் படிகள். நிறைகோல் - நிறுத்துப் பார்க்கும் துலாக்கோல்; தராசு. மக்கள் - புதல்வர்கள். ஆவொடு - பசுமாட்டோடு. மேதி - எருமைமாடு. மற்றும் - வேறாகவும். உள - இருக்கிற; இடைக்குறை. எலாம் - எல்லாப் பண்டங்களுக்கும்; இடைக்குறை. அரசின் - திருநாவுக்கரசு நாயனாருடைய; திணை மயக்கம். நாமம் - திருநாமத்தை. சாற்றும் - வைத்து அழைக்கும். அவ்வொழுக்கலாற்றார் - அந்த ஒழுக்கமாகிய வழியில் நிலைத்து நிற்பவர்.

பிறகு வரும் 3-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'திருவுருவத்தைத் தாம் பாராதவராக இருந்தாலும் நிலைபெற்ற சீர்த்தியை உடைய திருவாக்கின் அரசராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய அடிமைத் திறத்தையும் தம்பிரானாராகிய திருவதிகை வீரட்டானேசுவரர் அந்த நாயனாருக்கு வழங்கிய திருவருளையும் கேள்விப்பட்டு அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருநாமத்தோடு அளக்கும் படிகள், தாம் வாழும் திருமடங்கள், தண்ணீர்ப் பந்தல்கள், முதலாக இருக்கிற முடிவு இல்லாத தருமங் களைப் புரிந்து முறைப்படி தம்முடைய வாழ்க்கையை நடத்தி வரும் காலத்தில்.' பாடல் வருமாறு :

"வடிவுதாம் காணா ராயும்
மன்னுசீர் வாக்கின் வேந்தர்
அடிமையும் தம்பி ரானார்
அருளும்கேட் டவர்நா மத்தால்
படிநிகழ் மடங்கள் தண்ணீர்ப்
பந்தர்கள் முதலா யுள்ள
முடிவிலா அறங்கள் செய்து
முறைமையால் வாழும் நாளில்."

இந்தப் பாடல் குளகம். வடிவு - திருமேனியின் வடிவத்தை. 'தாம்' என்றது அப்பூதியடிகள் நாயனாரை. காணாராயும் - பாராதவராக இருந்தாலும். மன்னு - நிலைபெற்று விளங்கும். சீர் - சீர்த்தியைப் பெற்ற. வாக்கின் வேந்தர் - திருவாக்குக்கு அரசராகிய திருநாவுக் கரசு நாயனாருடைய. அடிமையும் - அடிமைத் திறத்தை யும். தம்பிரானார் - அவருடைய தலைவராகிய திருவதிகை வீரட்டானேசுவரர். அருளும் - அந்த நாயனாருக்கு வழங்கிய திருவருளையும். கேட்டு - கேள்விப்பட்டு. அவர் - அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய. நாமத்தால் - திருநாமத்தோடு; உருபு மயக்கம். படி - அளக்கும் படிகள்; ஒருமை பன்மை மயக்கம். நிகழ் - தாம் தங்கும். மடங்கள் - திருமடங்கள். தண்ணீர்ப் பந்தர்கள் - வழிப்

போக்கர்களுக்குத் தண்ணீரை வழங்கும் பந்தல்கள். முதலாய்உள்ள - முதலாக இருக்கிற. முடிவு இலா - முடிவு இல்லாத. இலா : இடைக்குறை. அறங்கள் - தருமங்களை. செய்து-புரிந்து கொண்டு. முறைமையால் - முறையோடு; உருபு மயக்கம். வாழும் - தம்முடைய வாழ்க்கையை நடத்தி வரும். நாளில் - காலத்தில்.

பிறகு உள்ள 4 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'இமயமலையரசனுடைய மடப்பத்தைப் பெற்ற பெண் யானையாகிய பார்வதி தேவியாரோடு கூடும் சிவபெருமானாகிய ஆண் யானையினுடைய திருத்தலமாகிய திருப்பழனத்துக்கு அந்த அப்பூதியடிகள் நாயனார் எழுந்தருளி அந்தத் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஆபத்சகாயேசுவரரை வணங்கி விட்டுத் தமக்குரிய உழவாரத் திருப்பணியையும் வேறு பல திருப்பணிகளையும் புரிந்து கொண்டிருக்கும் திருநாவுக்கரசு நாயனாரிடத்தில் ஒருமைப் பாட்டோடு அமைந்த விருப்பத்தால் வேறாக இருக்கும் தம்மை ஆளாக உடையவராகிய சிவபெருமானாருடைய தலங்களை அடைந்து அங்கே திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களைப் பணியும் விருப்பத்தோடும் திங்களூரின் பக்கத்தில் உள்ள வழியில் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளுவாரானார்.' பாடல் வருமாறு :

"பொருப்பரையன் மடப்பிடியி
 னுடன்புணரும் சிவக்களிற்றின்
திருப்பழனம் பணிந்துபணி
 செய்திருநா வுக்கரசர்
ஒருப்படுகா தலிற்பிறவும்
 உடையவர்தம் பதிவணங்கும்
விருப்பினொடும் திங்களூர்
 மருங்குவழி மேவுவார்."

பொருப்பு அரையன்-இமயமலை அரசனுடைய. மட-மடப்பத்தைப்பெற்ற. ப்:சந்தி. பிடியினுடன்-பெண்யானையாகிய பார்வதி தேவியாரோடு. புணரும் - கூடி மகிழும். சிவக்களிற்றின் - சிவபெருமானாகிய ஆண் யானையினுடைய திருப்பழனம்-திருத்தலமாகிய திருப்பழனத்துக்கு. பணிந்து - அந்த அப்பூதியடிகள் நாயனார் எழுந்தருளி அந்தத் தலத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஆபத்சகாயேசுவரரை வணங்கிவிட்டு. பணி - தமக்குரிய உழவாரத் திருப்பணியையும் வேறு பல திருப்பணிகளையும். செய் - புரிந்துகொண்டு. திருநாவுக்கரசர் - திருநாவுக்கரசு நாயனாரிடத்தில். ஒருப்படு - ஒருமைப்பாட்டோடு அமைந்த. காதலில் - விருப்பத்தால்; உருபு மயக்கம். பிறவும்-வேறாக இருக்கும். உடையவர்தம் - தம்மை ஆளாக உடையவராகிய சிவபெருமானாருடைய. தம் : அசைநிலை. பதி - தலங்களை ; ஒருமை பன்மை மயக்கம். வணங்கும் - அடைந்து அந்தத் தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் சிவபெருமான்களைப் பணியும். விருப்பினோடும்- விருப்பத்தோடும். திங்களூர் - திங்களூருக்கு. மருங்கு - பக்கத்தில் உள்ள. வழி - வழியில். மேவுவார் - அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளுவாரானார்.

பிறகு வரும் 5 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அளவு இல்லாத மக்கள் நடந்துபோவதை ஒழியாத வழியில் உள்ள கரையில்லாத இறைவனுடைய திருவருளை உடைய அடியவர்களினுடைய திருவுள்ளங்களைப்போன்ற குளிர்ச்சியையும் அன்பையும் உடையதாகி அடையும் கோடைக்காலத்தில் உண்டாகும் துன்பமாகிய தாகத்தைப் போக்கி குளத்தில் நிரம்பியுள்ள நீரும், தடாகத்தைப் போலக் குளிர்ச்சியும் கொண்டிருக்கும் பரப்பைப் பெற்றதாகி வளப்பம் பொருந்தியிருக்கும் நிழலைத் தருகின்ற தண்ணீர்ப்பந்தருக்குத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி வந்து சேர்ந்தார்.' பாடல் வருமாறு :

"அளவில்சனம் செலவொழியா
வழிக்கரையில் அருளுடையார்
உளமனைய தண்ணளித்தாய்
உறுவேனிற் பரிவகற்றிக்
குளம்நிறைந்த நீர்த்தடம்போல்
குளிர்தூங்கும் பரப்பினதாய்
வளம்மருவும் நிழல்தருதண்
ணீர்ப்பந்தர் வந்தணைந்தார்."

அளவு - ஓர் அளவும். இல் - இல்லாத; கடைக்குறை. சனம் - மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். 'ஜனம்' என்ற வட சொல்லின் திரிபு. செலவு-நடந்து போதலை. ஒழியா - நீங்காத. வழி - வழியில். க் : சந்தி. கரை - வரம்பு. இல் - இல்லாத; கடைக்குறை. அருள் - இறைவன் வழங்கும் திருவருளை. உடையார் - பெற்ற பக்தர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். உளம் - திருவுள்ளங்களை; ஒருமை பன்மை மயக்கம்; இடைக்குறை. அனைய - போன்ற. தண் - குளிர்ச்சியையும். அளித்தாய் - அன்பையும் உடையதாகி. அன்பு - தண்ணீர்ப்பந்தரில் உள்ளவர்கள் காட்டும் அன்பு. உறு - அடையும். வேனில் - முது வேனிலாகிய கோடைக்காலத்தில் உண்டாகிய. பரிவு - துன்பமாகிய தாகத்தை. அகற்றி-போக்கி. க்:சந்தி. குளம் - குளத்தில். நிறைந்த-நிரம்பியுள்ள. நீர்-புனலும். த் : சந்தி. தடம்போல் - ஒரு தடாகத்தைப் போல. குளிர் - குளிர்ச்சியும்; முதல்நிலைத் தொழிற்பெயர். தூங்கும் - கொண்டிருக்கும். பரப்பினதாய் - பரப்பைப் பெற்றதாகி. வளம் - வளப்பம். மருவும் - பொருந்தியிருக்கும். நிழல் தரு - வருபவர்களுக்கு நிழலை வழங்கும். தண்ணீர்ப்பந்தர் - தண்ணீர்ப் பந்தலுக்கு. வந்து அணைந்தார் திருநாவுக்கரசு நாயனார் எழுந்தருளி வந்து சேர்ந்தார்.

பிறகு உள்ள 6 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அவ்வாறு தண்ணீர்ப்பந்தலுக்கு எழுந்தருளி வந்து சேர்ந்த வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார் தென்றற்

காற்று வீசும் குளிர்ச்சியைப் பெற்ற பந்தலோடு அமுதத்தைப் போன்றதாகும் குளிர்ந்த புனலையும் கண்டருளித் தம்முடைய திருவுள்ளத்தில் ஆச்சரியத்தை அடையுமாறு வருபவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அந்தத் தண்ணீர்ப் பந்தலில் திருநாவுக்கரசு என்னும் திருநாமத்தை அழகு பெறும் வண்ணம் எழுதியிருந்ததை எந்த இடங்களிலும் அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பார்த்தார்." பாடல் வருமாறு :

"வந்தணைந்த வாகீசர்
மந்தமா ருதசீதப்
பந்தருடன் அமுதமாம்
தண்ணீரும் பார்த்தருளிச்
சிந்தைவியப் புறவருவார்
திருநாவுக் கரசெனும்பேர்
சந்தமுற வரைந்ததனை
எம்மருங்கும் தாம்கண்டார்."

வந்து - அவ்வாறு தண்ணீர்ப் பந்தலுக்கு எழுந்தருளி வந்து. அணைந்த - சேர்ந்த. வாகீசர் - வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார். மந்த மாருத - தென்றற் காற்று வீசும். சீத - குளிர்ச்சியைப் பெற்ற. ப் : சந்தி. பந்தருடன் - பந்தலோடு. அமுதமாம் - அமுதத்தைப் போன்றது ஆகும். தண்ணீரும் - குளிர்ந்த புனலையும். பார்த்தருளி - கண்டருளி. ச் : சந்தி. சிந்தை - தம்முடைய திருவுள்ளத்தில். வியப்பு - ஆச்சரியத்தை. உற - அடையுமாறு. வருவார் - எழுந்தருளி வருபவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். திருநாவுக்கரசு எனும் - திருநாவுக்கரசு என்னும். எனும் : இடைக்குறை. பேர் - திருநாமத்தை. சந்தம் - அழகு. உற - பெறும் வண்ணம். வரைந்ததனை - எழுதியிருந்ததை. எம் மருங்கும் - அந்தத் தண்ணீர்ப் பந்தலில் எந்த இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். 'தாம்' என்றது திருநாவுக்கரசு நாயனாரை. கண்டார் - பார்த்தார்.

அடுத்து உள்ள 7 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'"இந்தத்தண்ணீர்ப் பந்தலுக்கு இந்தத் திருநாமத்தை வைத்து இந்த இடத்தில் தண்ணீர்ப் பந்தலை வைத்திருப்பவர் யார்?" என்று கேட்ட திருநாவுக்கரசு நாயனாரிடம் அந்தத் தண்ணீர்ப் பந்தலை வைத்த அப்பூதியடிகள் நாயனாரைத் தெரிந்து கொண்டிருக்கும் மக்கள், "திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனார் என்னும் திருநாமத்தோடு சொல்லுவதற்கு அருமையாக இருக்கும் சீர்த்தியைப் பெற்ற அப்பூதியடிகள் நாயனார் கட்டி அமைத்துள்ளார், ஒரு தவறும் இல்லாமல் எந்த இடங்களிலும் இருக்கிற சாலைகள், குளம், பூஞ்சோலை ஆகியவற்றை அமைத்திருக்கிறார்" என்று அந்த மக்கள் கூறினார்கள்.' பாடல் வருமாறு:

"'இப்பந்தர் இப்பெயரிட்
டிங்கமைத்தார் யார்?' என்றார்க்
கப்பந்தர் அறிந்தார்கள்,
'ஆண்டஅர செனும்பெயரால்
செப்பரும்சீர் அப்பூதி
அடிகளார் செய்தமைத்தார்
தப்பின்றி எங்குமுள
சாலைகுளம் கா' என்றார்."

இப்பந்தர் - இந்தத் தண்ணீர்ப் பந்தலுக்கு. இப்பெயர் - இந்தத் திருநாவுக்கரசு என்னும் திருநாமத்தை. இட்டு - வைத்து. இங்கு - இந்த வழியில். அமைத்தார் - கட்டி வைத்திருக்கிறவர். யார் - ஆர். என்றார்க்கு - என்று கேட்டதிருநாவுக்கரசு நாயனாரிடம்; உருபுமயக்கம். அப்பந்தர் - அந்தத் தண்ணீர்ப் பந்தல் வைத்த அப்பூதியடிகள் நாயனாரை; ஆகுபெயர். அறிந்தார்கள் - தெரிந்து கொண்டிருக்கும் மக்கள். ஆண்ட - திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட. அரசு - திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். எனும் -

என்னும்; இடைக்குறை. பெயரால் - திருநாமத்தோடு: உருபு மயக்கம். செப்பரும் - சொல்லுவதற்கு அருமையாக இருக்கும். செப்பரும் - செப்ப அரும்; தொகுத்தல் விகாரம். சீர் - சீர்த்தியைப் பெற்ற. அப்பூதி அடிகளார் - அப்பூதி அடிகள் நாயனார். தப்பு - ஒரு தவறும். இன்றி- இல்லாமல். எங்கும் - எந்த இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். உள - இருக்கிற; இடைக்குறை. சாலை - நடக்கும் சாலையையும். குளம் - குளத்தையும். கா - பூஞ்சோலையையும். செய்து - உண்டு பண்ணி. அமைத்தார் - அமைத்து வைத்திருக்கிறார். என்றார் - என்று அந்த மக்கள் கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 8 - ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு :

'அந்த மக்கள் என அவ்வாறு கூறத் திருநாவுக்கரசு நாயனார் அதனைக் கேட்டருளி, "இவ்வாறு செய்ததற்கு என்ன கருத்து?" என அந்த இடத்தில் நின்று கொண்டிருந்த மக்களைப் பார்த்து, "இந்தத் தண்ணீர்ப் பந்தலை வைத்திருக்கும் அந்த மனிதர் எந்த ஊரில் இருக்கிறார்?" என்று அந்த நாயனார் கேட்டருள, "அமைந்த பூணூலை அணிந்த மார்பைப் பெற்ற அப்பூதியடிகள் நாயனாரும் இந்தப் பழைய சிவத்தலமாகிய திங்களூரில் வாழ்கிறவர்; அவர் தம்முடைய திருமாளிகைக்கு இப்போதுதான் போனார்; அந்தத் திருமாளிகையும் நெடுந்தூரத்தில் இருப்பது அன்று; சமீபத்தில்தான் உள்ளது." என்று அந்த மக்கள் திருநாவுக்கரசு நாயனாரிடம் கூறினார்கள்.' பாடல் வருமாறு :

**" என்றுரைக்க அரசுகேட்**
**'டிதற்கென்னோ கருத்'தென்று**
**நின்றவரை நோக்கி,' அவர்**
**எவ்விடத்தார்?' எனவினவத்**

'துன்றியநூல் மார்பரும்இத்
தொல்பதியார்; மனையின்கண்
சென்றனர்இப் பொழுததுவும்
சேய்த்தன்று; நணித்'தென்றார்.''

என்று - அந்த மக்கள் என. உரைக்க - இவ்வாறு கூற. அரசு - திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். கேட்டு - அதனைக் கேட்டருளி. இதற்கு - இவ்வாறு செய்ததற்கு. என்னோ - என. ஓ: அசை நிலை. கருத்து - எண்ணம். என்று - என. நின்றவரை - அந்த இடத்தில் நின்று கொண்டிருந்த மக்களை; ஒருமை பன்மை மயக்கம். நோக்கி - பார்த்து. அவர் - அந்த மனிதர். எவ்விடத்தார் - எந்த ஊரில் இருக்கிறார். என - என்று; இடைக்குறை. வினவ - அந்தத் திருநாவுக்கரசு நாயனார் கேட்டருள. த்: சந்தி. துன்றிய - அமைந்த. நூல் - பூணூலை அணிந்திருக்கும். மார்பரும் - மார்பைப் பெற்றவர் ஆகிய அப்பூதியடிகள் நாயனாரும். இத்தொல் - இந்தப் பழைமையான. பதியார் - சிவத்தலமாகிய திங்களூரில் வாழ்கிறவர். மனையின் கண் - அவர் தம்முடைய திருமாளிகைக்கு; உருபு மயக்கம். இப்பொழுது சென்றனர் - இப்போதுதான் போனார். அதுவும் - அந்தத் திருமாளிகையும். சேய்த்து - தூரத்தில் உள்ளது. அன்று - அல்ல. நணித்து - சமீபத்தில் தான் உள்ளது. என்றார் - என்று அந்த மக்கள் திருநாவுக்கரசு நாயனாரிடம் கூறினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 9 - ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த இடத்திலிருந்து நீங்கி முனிவராகிய திருநாவுக்கரசு நாயனாரும் சென்று அப்பூதியடிகள் நாயனார் தங்கி வாழும் திருமாளிகையின் வாசலாகிய இடத்திற்கு முன்னால் சார்ந்து வீற்றிருப்பவராக இருக்க அந்தத் திருமாளிகைக்கு உள்ளே இருந்த திங்களூரில் வாழும் வேதியர்களுக்குத் தலைவராகிய அப்பூதியடிகள் நாயனார்

செழிப்பைப் பெற்றிருக்கும் இந்தத் திருமாளிகையி னுடைய வாசலுக்கு வந்து சேர்ந்த மனிதர் அடியேங் களுடைய தலைவனாகிய திருவதிகை வீரட்டானேசுவரனு டைய உறவினராகிய ஒருவர்'' என்று அந்த மக்கள் கூற அதைக் கேட்டருளி அந்த அப்பூதியடிகள் நாயனார் அங்கே வந்து சேர்ந்தார்.' பாடல் வருமாறு :

'' அங்ககன்று முனிவரும்போய்
அப்பூதி அடிகளார்
தங்குமனைக் கடைத்தலைமுன்
சார்வாக, உள்ளிருந்த
திங்களூர் மறைத்தலைவர்
'செழுங்கடையில் வந்தடைந்தார்
நங்கள்பிரான் தமர்ஒருவர்'
எனக்கேட்டு நண்ணினார்.''

அங்கு - அந்த இடத்திலிருந்து. அகன்று - நீங்கி. முனிவரும் - முனிவராகிய திருநாவுக்கரசு நாயனாரும். போய் - சென்று. அப்பூதி அடிகளார் - அப்பூதியடிகள் நாயனார். தங்கும் - தங்கி வாழும். மனை - திருமாளிகை யினுடைய. க்:சந்தி. கடைத்தலை-வாசலாகிய இடத்திற்கு. முன் - முன்னால். சார்வு ஆக - சார்ந்து வீற்றிருப்பவராக இருக்க; ஆகு பெயர். உள் - அந்தத் திருமாளிகைக்கு உள்ளே. இருந்த திங்களூர் - இருந்த திங்களூரில் வாழும். மறை - வேதியர்களுக்கு; திணை மயக்கம். த் : சந்தி. தலைவர் - தலைவராகிய அப்பூதியடிகள் நாயனார். செழும் - செழிப்பைப் பெற்று விளங்கும். கடையில் - இந்தத் திருமாளிகையினுடைய வாசலுக்கு; உருபு மயக்கம். வந்து அடைந்தார் - எழுந்தருளி வந்து சேர்ந்த மனிதர். நங்கள் - அடியேங்களுடைய; இது சேக்கிழார் தம்மையும் வேறு தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. பிரான் - தலைவனாகிய திருவதிகை வீரட்டானேசுவரனுடைய. தமர் - உறவினராகிய பக்தர். ஒருவர் என - ஒருவர் என்று அந்த மக்கள் கூற, என : இடைக்குறை. க் : சந்தி. கேட்டு -

அதைக் கேட்டருளி. நண்ணினார் - அந்த அப்பூதியடிகள் நாயனார் அந்த இடத்திற்கு வந்து சேர்ந்தார்.

பிறகு உள்ள 10 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்த அப்பூதியடிகள் நாயனார் அவ்வாறு வேகமாக வந்து சேர்ந்து வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளை வணங்க, அந்த அப்பூதியடிகள் நாயனார் தம்முடைய திருவடிகளை வணங்குவதற்கு முன்பே அவரை வணங்கும் திருநாவுக்கரசு நாயனாருக்கு எதிரில் அந்தணராகிய அப்பூதியடிகள் நாயனார், "அடியேன் ஒரு முடிவே இல்லாத தவத்தை முன் பிறவியிற் புரிந்தேனோ? முன்னால் மழையைப் போலச் சொரியும் கருணையைச் செய்தருளும் திருவடிவத்தை உடையவரே, அடியேனுடைய திருமாளிகைக்குத் தேவரீர் எழுந்தருளி வந்து அருளியது என்ன ஆச்சரியம்!'' என்று அந்த அப்பூதியடிகள் நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்." பாடல் வருமாறு :

"கடிதணைந்து வாகீசர்
கழல்பணிய மற்றவர்தம்
அடிபணியா முன்பணியும்
அரசின்எதிர் அந்தணனார்
'முடிவில்தவம் செய்தேன்கொல்?
முன்பொழியும் கருணைபுரி
வடிவுடையீர், என்மனையில்
வந்தருளிற் றென்?' என்றார்.''

கடிது - அந்த அப்பூதியடிகள் நாயனார் அவ்வாறு வேகமாக. அணைந்து - வந்து சேர்ந்து. வாகீசர் - வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய. கழல் - வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளை; ஆகுபெயர். பணிய - அந்த அப்பூதியடிகள் நாயனார் வணங்க. மற்று : அசைநிலை. அவர் - அந்த அப்பூதியடிகள் நாயனார்.

தம் - தம்முடைய. அடி - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். பணியாமுன் - வணங்குவதற்கு முன்பே. பணியும் - அவரை வணங்கும். அரசின் - திருநாவுக்கரசு நாயனாருக்கு; திணை மயக்கம். எதிர்-எதிரில். அந்தணனார் - வேதியராகிய அப்பூதியடிகள் நாயனார். முடிவு - அடியேன் ஒரு முடிவே. இல் - இல்லாத; கடைக்குறை. தவம் - தவத்தை. செய்தேன்கொல் - முன் பிறவியில் புரிந்தேனோ?. முன் - முன்னால். பொழியும் - மழையைப் போலச் சொரியும். கருணைபுரி - கருணையைச் செய்தருளும். வடிவு - திருவடிவத்தை. உடையீர் - உடையவரே. என் - அடியேனுடைய. மனையில் - திருமாளிகைக்கு; உருபு மயக்கம். வந்து அருளிற்று - எழுந்தருளி வந்து அருளியது. என் - என்ன ஆச்சரியம்! என்றார் - என்று அந்த அப்பூதியடிகள் நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

அடுத்து உள்ள 11 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

' "ஒப்பற்ற மேரு மலையாகிய வில்லை ஏந்தியவராகிய ஆபத்சகாயேசுவரர் திருக்கோயில் விளங்கும் திருப்பழனத்துக்கு உள்ளே சென்று அந்த ஆபத்சகாயேசுவரரை வணங்கிவிட்டு யாம் வருகிறோம்; மக்கள் நடந்து செல்லும் வழியாகிய இடத்தில் நீர் கட்டி வைத்துள்ள வாய்ப்பாக அமைந்த வளத்தை வழங்குகின்ற நிழலைப் பெற்ற தண்ணீர்ப் பந்தலையும் யாம் பார்த்து விட்டு அந்தப் பான்மையோடு நீர் செய்கின்ற வேறு தர்மங்களைப் பற்றியும் யாம் கேள்விப்பட்டு இந்தத் திங்களூருக்கு வந்து சேர்ந்தோம்" என்று அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்பவரானார்."

பாடல் வருமாறு :

" ' ஒருகுன்ற வில்லாரைத்
திருப்பழனத் துள்ளிறைஞ்சி
வருகின்றோம்; வழிக்கரையில்
நீர்வைத்த வாய்த்தவளம்

தருகின்ற நிழல்தண்ணீர்ப்
பந்தரும்கண் டத்தகைமை
புரிகின்ற அறம்பிறவும்
கேட்டணைந்தோம் " எனப்புகல்வார்."

ஒரு - ஒப்பற்ற. குன்ற - மேரு மலையாகிய. வில்லாரை - வில்லை ஏந்தியவராகிய ஆபத்சகாயேசுவரரை. த் : சந்தி. திருப்பழனத்துள் - அவர் திருக்கோயில் விளங்கும் திருப்பழனத்துக்கு உள்ளே சென்று இறைஞ்சி - அந்த ஆபத்சகாயேசுவரரை வணங்கி விட்டு. வருகின்றோம் - யாம் வருகிறோம். வழி - மக்கள் நடந்து செல்லும் வழியாகிய. க் : சந்தி. கரையில் - இந்த இடத்தில். நீர் - நீங்கள். வைத்த - கட்டி வைத்துள்ள. வாய்ந்த - வாய்ப்பாக அமைந்த. வளம் - வளத்தை. தருகின்ற - வழங்குகின்ற. நிழல் - நிழலைப் பெற்ற. தண்ணீர்ப் பந்தரும்-தண்ணீர்ப் பந்தலையும். கண்டு-யாம் பார்த்து விட்டு. அத்தகைமை - அந்தப் பான்மையோடு. புரிகின்ற - நீர் செய்கின்ற. அறம்: பிறவும் - வேறாக உள்ள தருமங்களைப் பற்றியும். அறம்: ஒருமை பன்மை மயக்கம். கேட்டு - யாம் கேள்விப்பட்டு. அணைந்தோம் - இந்தத் திங்களூருக்கு வந்து சேர்ந்தோம். என - என்று: இடைக்குறை. ப் : சந்தி. புகல்வார் - அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்து அருளிச் செய்பவரானார்.

பிறகு வரும் 12 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

' "கங்கையாற்றைப் புனையும் சடாபாரத்தைத் தம்முடைய தலையிற் பெற்றவராகிய சிவபெருமானாருடைய அடியவர்களுக்காக நீர் கட்டி வைத்துள்ள முடிவு இல்லாத பெருமையைப் பெற்று விளங்கும் தண்ணீர்ப் பந்தலில் உம்முடைய திருநாமத்தை எழுதி வைக்காமல் வேறு ஒருவருடைய பெயரை முன்னால் எழுதி வைக்க வேண்டிய காரணம் என்ன? அதைச் சொல்வீராக." என்று அந்த

அப்பூதியடிகள் நாயனாருக்கு எதிரில் ஒரு குற்றமும் இல்லாத வார்த்தைகளுக்கு அரசராகிய திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு :

" 'ஆறணியும் சடைமுடியார்
அடியார்க்கு நீர்வைத்த
ஈறில்பெரும் தண்ணீர்ப்பந்
தரில்நும்பேர் எழுதாதே
வேறொருபேர் எழுதவேண்
டியகார ணம்என்கொல்?'
கூறும்என எதிர்மொழிந்தார்
கோதில்மொழிக் கொற்றவனார்."

ஆறு - கங்கையாற்றை. அணியும் - புனைந்து கொண்டிருக்கும். சடை - சடாபாரத்தை. முடியார் - தம்முடைய தலையிற் பெற்றவராகிய சிவபெருமானாருடைய. அடியார்க்கு - அடியவர்களுக்காக; ஒருமை பன்மை மயக்கம். நீர் - நீங்கள். வைத்த - கட்டி வைத்துள்ள. ஈறு - ஒரு முடிவே. இல் - இல்லாத; கடைக்குறை. பெரும் - பெருமையைப் பெற்று விளங்கும். தண்ணீர்ப் பந்தரில் - தண்ணீர்ப் பந்தலில். நும் - உம்முடைய. பேர் - திருநாமத்தை. எழுதாது - எழுதி வைக்காமல். ஏ : அசைநிலை. வேறு ஒரு - வேறு ஒருவருடைய; திணை மயக்கம். பேர் - திருநாமத்தை. எழுத வேண்டிய - வரைந்து வைக்க வேண்டிய. காரணம் என் கொல் - காரணம் என்ன? கொல் : அசை நிலை. கூறும் - அதைச் சொல்வீராக. என - என்று; இடைக்குறை. எதிர் - அந்த அப்பூதியடிகள் நாயனாருக்கு எதிரில். கோது - ஒரு குற்றமும். இல் - இல்லாத; கடைக்குறை. மொழி - வார்த்தைகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். க் : சந்தி. கொற்றவனார் - அரசராகிய திருநாவுக்கரசு நாயனார். மொழிந்தார் - திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

பிறகு வரும் 13 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அந்த இடத்தில் நின்று கொண்டிருந்த வேதியராகிய அப்பூதியடிகள் நாயனார், திருநாவுக்கரசு நாயனார் கேட்டருளிய வினாவைக் கேட்டுத் தம்முடைய நிலை அழிந்து போன திருவுள்ளத்தைப் பெற்றவராகி, ''நீர் நல்ல வார்த்தைகளைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய வில்லை; சிறிதும் வெட்கம் இல்லாத சமணர்களாகிய பாதகர்களோடு சேர்ந்து கொண்டிருந்த பல்லவ அரசனு டைய சூழ்ச்சியைத் தம்முடையதிருத்தொண்டுகளினுடைய மிகுதியினால் வெற்றி பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய திருநாமமோ வேறு ஒரு திருநாமம்?'' என்று அந்த அப்பூதியடிகள் நாயனார் கோபம் பூண்டவராயினார்.' பாடல் வருமாறு :

**'' நின்றமறை யோர்கேளா**
**நிலைஅழிந்த சிந்தையராய்**
**' நன்றருளிச் செய்திலீர்!**
**நாணமில் அமண்பதகருடன்**
**ஒன்றியமன் னவன்சூட்சி**
**திருத்தொண்டின் உறைப்பாலே**
**வென்றவர்தம் திருப்பேரோ**
**வேறொருபேர்?' எனவெகுள்வார்.''**

நின்ற - அந்த இடத்தில் நின்று கொண்டிருந்த. மறை யோர் - வேதியராகிய அப்பூதியடிகள் நாயனார். கேளா - திருநாவுக்கரசு நாயனார் கேட்டருளிய வினாவைக் கேட்டு. நிலை - தம்முடைய இயல்பான நிலை. அழிந்த - அழிந்து போன. சிந்தையராய் - திருவுள்ளத்தைப் பெற்ற வராகி. நன்று - நல்ல வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். அருளிச் செய்திலீர் - நீர் திருவாய் மலர்ந்தருளிச் செய்யவில்லை. நாணம் - சிறிதேனும் வெட்கம். இல் - இல்லாத; கடைக்குறை. அமண் - சமணர்களாகிய; ஒருமை பன்மை மயக்கம்; திணை மயக்கம். பதகருடன் -

பாதகர்களோடு; ஒருமை பன்மை மயக்கம். ஒன்றிய - சேர்ந்து கொண்டிருந்த. மன்னவன் - பல்லவ அரசனுடைய. சூட்சி - சூழ்ச்சியை. திருத்தொண்டின் - தாம் புரியும் திருத்தொண்டுகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். உறைப்பால் - மிகுதியினால். ஏ : அசை நிலை. வென்றவர்தம் - வெற்றியைப் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய. தம் : அசை நிலை. திருப்பேரோ - திருநாமமோ. வேறு ஒரு பேர் - வேறாகிய ஒரு திருநாமம். என - என்று; இடைக்குறை. வெகுள்வார் - அந்த அப்பூதியடிகள் நாயனார் கோபம் மூண்டவர் ஆயினார்.

பிறகு உள்ள 14 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அவ்வாறு சினம் மூண்டவராகிய அப்பூதியடிகள் நாயனார், "அடியேங்களை அடிமைகளாகப் பெற்றவராகிய திருவதிகை வீரட்டானேசுவரருடைய வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளின் கீழே தாம் விரும்பிய உழவாரத் திருத்தொண்டினாலும் வேறு பல திருத்தொண்டுகளாலும் இந்தப் பிறப்பிலும் நன்றாகப் பிழைத்து வாழ்வது என்று அடியேனைப் போல உள்ள மக்களும் தெளிவாக அறியும் வண்ணம் சிறப்பான திருத்தொண்டுகளைப் புரிந்தருளும் திருநாவுக்கரசு நாயனாருடைய திருநாமத்தை அடியேம் வரைந்திருக்க, அதனை அறிந்து கொள்ளாமல் கொடுமையான வார்த்தைகளை அடியேன் கேட்குமாறு நீர் கூறினீர்." என்று அந்த அப்பூதியடிகள் நாயனார் சொல்லி.' பாடல் வருமாறு :

" 'நம்மைஉடை யவர்கழற்கீழ்
நயந்ததிருத் தொண்டாலே
இம்மையிலும் பிழைப்பதென
என்போல்வா ரும்தெளியச்
செம்மைபுரி திருநாவுக்
கரசர்திருப் பெயர்எழுத

வெம்மைமொழி யான்கேட்க
விளம்பினீர்' எனவிளம்பி.''

இந்தப் பாடல் குளகம். நம்மை - அவ்வாறு சினம் மூண்டவராகிய அப்பூதியடிகள் நாயனார். அடியேங்களை: என்றது அப்பூதியடிகள் நாயனார் தம்மையும் தம்முடைய புதல்வர்களையும் சேர்த்துக் கூறியது. உடையவர் - அடிமைகளாகப் பெற்றவராகிய திருவதிகை வீரட்டா னேசுவரருடைய. கழற்கீழ் - வெற்றிக் கழலைப் பூண்டு விளங்கும் திருவடிகளின் கீழே. கழல்: ஆகுபெயர். நயந்த - தாம் விரும்பி புரிந்து வருகின்ற. திருத்தொண்டால் - உழவாரத் திருத்தொண்டினாலும் வேறுபல திருத் தொண்டுகளாலும்; ஒருமை பன்மை மயக்கம். ஆ : அசை நிலை. இம்மையிலும் - இந்தப் பிறப்பிலும். பிழைப்பது - பிழைத்து வாழ்வது. என - என்று; இடைக்குறை. என் - அடியேனை. போல்வாரும் - போல உள்ள அறியா மையைப் பெற்றவர்களும்; ஒருமை பன்மை மயக்கம். தெளிய - தெளிவாகத் தெரிந்து கொள்ளும் வண்ணம். ச் : சந்தி. செம்மை - சிறப்பான தொண்டுகளை; ஒருமை பன்மை மயக்கம். புரி - செய்தருளும். திருநாவுக்கரசர் - திருநாவுக்கரசு நாயனாருடைய. திருப்பெயர் - திரு நாமத்தை. எழுத - அடியேன் இந்தத் தண்ணீர்ப் பந்தரில் வரைந்திருக்க. வெம்மை-கொடுமையான. மொழி - வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். யான் - அடியேன்; என்றவர் அப்பூதியடிகள் நாயனார். கேட்க - கேட்குமாறு. விளம்பினீர் - நீர் கூறினீர். என - என்று; இடைக்குறை. விளம்பி - அந்த அப்பூதியடிகள் நாயனார் கூறிவிட்டு.

பின்பு உள்ள 15 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'"நீர் பொங்கி எழும் சமுத்திரத்தில் தம்மைச் சமணர்கள் கட்டி விட்ட கருங்கல்லாகிய தெப்பத்தில் ஏறி வந்து கரையில் ஏறும் அந்தத் திருநாவுக்கரசு

நாயனாருடைய பெருமையை' அழகிய கண்களை உடையவராகிய சிவபெருமானார் ஆட்சி புரிந்தருளும் உலகங்களில் தெரிந்து கொள்ளாதவர் யார் இருக்கிறார்? மங்கலமாக உள்ள சைவத் திருவேடத்தோடு நின்று கொண்டு நீர் இன்றைக்கு இவ்வண்ணம் வார்த்தைகளைக் கூறினீர்; நீர் எந்த ஊரில் தங்கி வாழ்கிறவர்? நீர்தாம் ஆர்? சொல்வீராக.'' என்று அந்த அப்பூதியடிகள் நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார். பாடல் வருமாறு :

''' பொங்குகடற் கல்மிதப்பில்
போந்தேறும் அவர்பெருமை
அங்கணர்தம் புவனத்தில்
அறியாதார் யார்உளரே?
மங்கலமாம் திருவேடத்
துடனின்றிவ் வகைமொழிந்தீர் ;
எங்குறைவீர்? நீர்தாம்யார்?
இயம்பும்'என இயம்பினார்.''

பொங்கு - நீர் பொங்கி எழும். கடல் - சமுத்திரத்தில். கல் - தம்மைச் சமணர்கள் கட்டி விட்ட கருங்கல்லாகிய. மிதப்பில் - தெப்பத்தில் ஏறி. போந்து - வந்து. ஏறும் - கரையில் ஏறும். அவர் - அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய. பெருமை - பெருமையை. அம் - அழகிய. கணர் தம் - கண்களை உடையவராகிய சிவபெருமானார். கண் : ஒருமை பன்மை மயக்கம். கணர் : இடைக்குறை. தம் : அசைநிலை. புவனத்தில் - ஆட்சி புரிந்தருளும் உலகங்களில்; ஒருமை பன்மை மயக்கம். அறியாதார் - தெரிந்து கொள்ளாதவர். யார் - ஆர்; உளர் - இருக்கிறார். ஏ : அசைநிலை. மங்கலமாம் - மங்கலமாக இருக்கும். திரு - அழகிய. வேடத்துடன் - சைவ வேடத்தோடு. நின்று - இவ்விடத்தில் நின்று கொண்டு. இவ்வகை - இவ்வாறு. மொழிந்தீர் - நீர் வார்த்தைகளைக் கூறினீர். எங்கு - நீர் எந்த ஊரில். உறைவீர் - தங்கி வாழ்கிறவர்.

நீர் தாம் - நீங்கள். தாம் : அசை நிலை. யார் - ஆர். இயம்பும் - அதனைச் சொல்வீராக. என - என்று; இடைக்குறை. இயம்பினார் - அந்த அப்பூதியடிகள் நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

பிறகு உள்ள 16 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு ;

'அழகிய வேதியராகிய அப்பூதியடிகள் நாயனார் அந்த வார்த்தைகளைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்யத் திருநாவுக்கரசு நாயனார் அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய பெருமையைத் தெரிந்து கொண்டு பின் வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்வார்; ''வேறு துறையாகிய சமண சமயமாகிய சமுத்திரத்தின் துறையிலிருந்து கரையேறுமாறு திருவதிகை வீரட்டானேசுவரர் அருள் புரிந்த பெரியதாக இருக்கும் சூலை நோயினால் தம்முடைய ஆளாகக் கொள்ள அந்தப் பாக்கியத்தைப் பெற்று உஜ்ஜீவனத்தை அடைந்த தெளிவை அடையும் உணர்ச்சி சிறிதும் இல்லாத சிறுமையைப் பெற்ற அடியேன்'' என்று திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு :

'' திருமறையோர் அதுமொழியத்
திருநாவுக் கரசர்அவர்
பெருமைஅறிந் துரைசெய்வார்
'பிறதுறையி னின்றேற
அருள்பெரும் சூலையினால்
ஆட்கொள்ள அடைந்துய்ந்த
தெருளும்உணர் வில்லாத
சிறுமையேன் யான்.' என்றார்.''

திரு - அழகிய. 'செல்வத்தைப் பெற்ற' எனலும் ஆம். மறையோர்-வேதியராகிய அப்பூதியடிகள் நாயனார். அது - அந்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். மொழிய - திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. த் : சந்தி. திருநாவுக்கரசர் - திருநாவுக்கரசு நாயனார். அவர் -

அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய. பெருமை - பெருமையை. அறிந்து - தெரிந்து கொண்டு. உரை செய்வார் - பின் வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்வார். பிற - வேறு. துறையில் நின்று - துறையாகிய சமண சமயம் என்னும் சமுத்திரத்தினுடைய துறையிலிருந்து. ஏற - கரை ஏறுமாறு. அருளு - திருவதிகை வீராட்டனேசுவரர் அருள் புரிந்த. பெரும் - பெரியதாக இருக்கும். சூலையினால் - சூலை நோயால்; கடுமையான வயிற்று வலியினால். ஆட்கொள்ள - தம்முடைய ஆளாக ஏற்றுக் கொள்ள. அடைந்து - அந்த பாக்கியத்தைப் பெற்று. உய்ந்த - உஜ்ஜீவனத்தை அடைந்த. தெருளும் - தெளிவை அடையும், உணர்வு - உணர்ச்சி. இல்லாத - சிறிதேனும் இல்லாத. சிறுமையேன் - சிறுமையைப் பெற்றவன். யான் - அடியேன். என்றார் - என்று திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

அடுத்து உள்ள 17 - ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அவ்வாறு திருநாவுக்கரசு நாயனார் தெரிந்து கொள்ளும் வண்ணம் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய அந்த அப்பூதி அடிகள் நாயனார் தம்முடைய திருக்கைகள் ஆகிய செந்தாமரை மலர்கள் தம்முடைய தலையின் மேற் குவித்துக் கும்பிட தம்முடைய கண்கள் மலையிலிருந்து குதிக்கும் அருவியைப் போல நீரைச் சொரிந்து அந்த நீர் தரையில் இறங்கி ஓடத் தம்முடைய வார்த்தைகள் குழறிப் போய் தம்முடைய திருமேனி முழுவதும் ரோமங்கள் புள காங்கிதத்தை அடைந்து விளங்கத் தரையின் மேற் விழுந்த அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடிகளாகிய செந்தாமரை மலர்களைத் தம்முடைய தலையின் மேல் அணிந்து கொண்டு வணங்கினார்.' பாடல் வருமாறு:

'' அரசறிய உரைசெய்ய
அப்பூதி அடிகள்தாம்

கரகமலம் மிசைகுவியக்
கண்ணருவி பொழிந்திழிய
உரைகுழறி உடம்பெல்லாம்
உரோமபுள கம்பொலியத்
தரையின்மிசை வீழ்ந்தவர்தம்
சரணகம லம்பூண்டார்.''

அரசு - அவ்வாறு திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். அறிய - அந்த அப்பூதியடிகள் நாயனார் தெரிந்து கொள்ளும் வண்ணம். உரை செய்ய-திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. அப்பூதியடிகள்தாம் - அப்பூதி யடிகள் நாயனார். தாம் : அசை நிலை. கர - தம்முடைய திருக்கைகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். கமலம் - செந்தாமரை மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மிசை - தம்முடைய தலையின் மேல். குவிய - கூப்பிக் கும்பிட. க் : சந்தி. கண் - தம்முடைய கண்கள்; ஒருமை பன்மை மயக்கம். அருவி - மலையிலிருந்து குதிக்கும் அருவியைப் போல; உவம ஆகுபெயர். பொழிந்து - நீரைச் சொரிந்து. இழிய - அந்த நீர் தரையில் இறங்கி ஓட. உரை - தம் முடைய வார்த்தைகள்; ஒருமை பன்மை மயக்கம். குழறி - தடுமாற்றத்தை அடைந்து. உடம்பு எல்லாம் - தம்முடைய திருமேனி முழுவதும். உரோம - உரோமங்கள். புளகம் - புளகாங்கிதத்தை அடைந்து; மயிர்க் கூச்சைப்பெற்று. பொலிய - விளங்க. த் : சந்தி. தரையின் மிசை - தரையின் மேல். வீழ்ந்தவர் தம் - விழுந்த அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய. தம் : அசை நிலை. சரண - திருவடிகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். கமலம் - செந்தாமரை மலர்களை; ஒருமை பன்மை மயக்கம். பூண்டார் - அணிந்து கொண்டு வணங்கினார்.

பிறகு வரும் 18 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்த அப்பூதியடிகள் நாயனாரை அவருக்கு எதிரில் பணிந்து விட்டு வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார்

அந்த அப்பூதியடிகள் நாயனாரைத் தரையிலிருந்து தூக்கி விட்டருள செல்வம் இல்லாதவர்களாகிய வறியவர்கள் பெறுவதற்கு அருமையாக உள்ள நிதியத்தைப் பெற்றதைப் போல அருமையாகிய வேதியராகிய அப்பூதியடிகள் நாயனார் முழுவதும் தம்முடைய திருவுள்ளத்தில் ஆனந்தம் மிகுதியாக எழ அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்கு முன்னால் நின்று கொண்டு கூத்தாடி தமக்கு உண்டான விருப்பத்தோடு அந்தத் திருநாவுக்கரசு நாயனாரை வலமாக வந்து ஓட்டமாக ஓடினார்; பாடல்களைப் பாடினார்.' பாடல் வருமாறு :

" மற்றவரை எதிர்வணங்கி
  வாகீசர் எடுத்தருள
அற்றவர்கள் அருநிதியம்
  பெற்றார்போல் அருமறையோர்
முற்றஉளம் களிகூர
  முன்னின்று கூத்தாடி
உற்றவிருப் புடன்சூழ
  ஓடினார், பாடினார்."

மற்று : அசைநிலை. அவரை - அந்த அப்பூதியடிகள் நாயனாரை. எதிர் - அவருக்கு எதிரில். வணங்கி - தரையில் விழுந்து பணிந்து விட்டு. வாகீசர்-வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனார். எடுத்தருள - அந்த அப்பூதி யடிகள் நாயனாரைத் தரையிலிருந்து தூக்கியருள. அற்றவர்கள் - செல்வம் இல்லாதவர்களாகிய வறியவர்கள். அரு - பெறுவதற்கு அருமையாக உள்ள நிதியம் - செல்வத்தை. பெற்றார் - பெற்றவர்களை; ஒருமை பன்மை மயக்கம். போல் - போல. அரு - அருமையைக் கொண்ட. மறையோர் - வேதியராகிய அப்பூதியடிகள் நாயனார். முற்ற - முழுவதும். உளம் - தம்முடைய திருவுள்ளத்தில்; இடைக்குறை. களி - ஆனந்தம். கூர - மிகுதியாக உண்டாக. முன் - அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்கு முன்னால். நின்று -

நின்று கொண்டு. கூத்து ஆடி - கூத்தை ஆடி. உற்ற - தம்மிடம் உண்டான. விருப்புடன் - விருப்பத்தோடு. சூழ - அந்தத் திருநாவுக்கரசு நாயனாரை வலமாக வந்து பிரதட்சிணம் செய்து. ஓடினார் - ஓட்டமாக ஓடினார். பாடினார் - பாடல்களைப் பாடினார்.

பின்பு வரும் 19 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்த அப்பூதியடிகள் நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் மூண்டு எழுந்த பெரிய ஆனந்தத்தினால் முன்னால் புரிவதைத் தெரிந்து கொள்ளாமலே விரைவாகத் தம்முடைய திருமாளிகைக்கு உள்ளே சென்று அடைந்து தம்முடைய திருமாளிகையில் உள்ள தம்முடைய பத்தினியாருக்கும் புதல்வர்களுக்கும் திருவதிகை வீராட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட நாயனார் தங்களுடைய திருமாளிகைக்கு எழுந்தருளும் உவகையைத் தரும் செய்தியை அந்த அப்பூதியடிகள் நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டுப் பேராவல் உண்டாகத் தம்மிடம் அன்பு பூண்டுள்ள பெருமையைப் பெற்று விளங்கும் உறவினர்கள் எல்லாரையும் அழைத்துக் கொண்டு திரும்பவும் வெளியில் புறப்பட்டுச் சென்றார்.' பாடல் வருமாறு :

"மூண்டபெரு மகிழ்ச்சியினால்
முன்செய்வ தறியாதே
ஈண்டமனை அகத்தெய்தி
இல்லவர்க்கும் மக்களுக்கும்
ஆண்டஅர செழுந்தருளும்
ஓகைஉரைத் தார்வமுறப்
பூண்டபெரும் சுற்றமெலாம்
கொடுமீளப் புறப்பட்டார்."

மூண்ட - அந்த அப்பூதியடிகள் நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் மூண்டு எழுந்த. பெரு - பெரிய. மகிழ்ச்சியினால் - ஆனந்தத்தினால். முன் - முன்னால். செய்வது - செய்யும் செயல். அறியாது - இன்னது என்று

தெரிந்து கொள்ளாமல். ஏ: அசை நிலை. ஈண்ட - விரைவாக. மனை - தம்முடைய திருமாளிகைக்கு. அகத்து - உட்புறத்திற்கு. எய்தி - சென்று அடைந்து. இல்லவர்க்கும் - தம்முடைய திருமாளிகையில் உள்ள தம்முடைய பத்தினியாருக்கும். மக்களுக்கும் - தம்முடைய புதல்வர்களுக்கும். ஆண்ட - திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட. அரசு - திருநாவுக்கரசு நாயனார்; திணை மயக்கம். எழுந்தருளும் - தங்களுடைய திருமாளிகைக்கு எழுந்தருளும். ஒகை-உவகையைத் தரும் செய்தியை; ஆகுபெயர். உரைத்து - அதை அப்பூதியடிகள் நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. ஆர்வம் - பேராவல். உற - உண்டாக. ப்: சந்தி. பூண்ட - தம்மிடம் அன்பைப் பூண்டுள்ள. பெரும் - பெருமையைப் பெற்று விளங்கும். சுற்றம் - உறவினர்கள்; திணை மயக்கம். எலாம் - எல்லாவற்றையும்; இடைக் குறை. கொடு - அழைத்துக் கொண்டு. மீள - மறுபடியும். ப்: சந்தி. புறப்பட்டார் - வெளியில் புறப்பட்டுச் சென்றார்.

பிறகு வரும் 20 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த அப்பூதியடிகள் நாயனார் தம்முடைய பத்தினி யாரோடும், புதல்வர்களோடும், வேறாகவும் இருக்கிற உறவினர்கள் எல்லாரோடும் அவர்களை அழைத்துக் கொண்டு சென்று திருநாவுக்கரசு நாயனாரினுடைய திருவடிகளில் விழுந்து அவரை வணங்கி குறையாத விருப்பத்தோடு முதல்வராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனாரைத் தம்முடைய திருமாளிகைக்கு உட்புறத்திற்கு எழுந்தருளுமாறு செய்து அந்த நாயனாருடைய திருவடி களை முன்னால் கழுவும் அழகிய மலர்களோடு உள்ள தூய நீரைத் தங்களுடைய தலைகளின் மேல் தெளித்துக் கொண்டு உள்ளேயும் குடித்து மகிழ்ச்சியினால் தங்களு டைய திருமேனிகளில் பூரிப்பை அடைந்தார்கள்.' பாடல் வருமாறு:

"மனைவியா ருடன்மக்கள்
மற்றுமுள்ள சுற்றத்தார்
அனைவரையும் கொண்டிறைஞ்சி
ஆராத காதலுடன்
முனைவரைஉள் எழுந்தருளு
வித்தவர்தாள் முன்விளக்கும்
புனைமலர்நீர் தங்கள்மேல்
தெளித்துள்ளும் பூரித்தார்."

மனைவியாருடன் - அந்த அப்பூதியடிகள் நாயனார் தம்முடைய பத்தினியாரோடும். மக்கள் - புதல்வர்கள். மற்றும் - அவர்களையல்லாமல் வேறாகவும். உள்ள - இருக்கிற. சுற்றத்தார் - உறவினர்கள். அனைவரையும் - எல்லோரையும். கொண்டு-அழைத்துக் கொண்டு சென்று. இறைஞ்சி - அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடிகளில் விழுந்து அவரை வணங்கி. ஆராத - குறையாத. 'திருப்தியை அடையாத' எனலும் ஆம். காதலுடன் - விருப்பத்தோடு. முனைவரை - முதல்வராகிய திருநாவுக்கரசு நாயனாரை. உள் - தம்முடைய திருமாளிகையின் உட்புறத்திற்கு. எழுந்தருளுவித்து - எழுந்தருளுமாறு செய்து. அவர் - அந்தத் திருநாவுக்கரசு நாயனாருடைய. தாள் - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். முன் - உண்பதற்கு முன்னால். விளக்கும் - கழுவும். புனை - அழகிய. மலர்நீர் - மலர்களோடு உள்ள தூய நீரை. மலர்: ஒருமை பன்மை மயக்கம். தங்கள் - தங்களுடைய. மேல் - தலைகளின் மேல். தெளித்து - தெளிவித்துக் கொண்டு. உள்ளும் - தங்களுக்கு உள்ளேயும். பூரித்தார் - குடித்து மகிழ்ச்சியினால் தங்களுடைய திருமேனிகளில் பூரிப்பை அடைந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 21 - ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்த அப்பூதி அடிகள் நாயனார் திருநாவுக்கரசு நாயனாரை ஆசனப் பலகையில் அமரச் செய்து விட்டு, பிறகு பூக்களை விருப்பத்தோடு புரிந்து நறுமணம் கமழும் விபூதியாகிய காப்பைத் தம்முடைய கையில் ஏந்திக் கொண்டு தம்முடைய திருவுள்ளம் மகிழ்ச்சியினால் தழைத்து ஓங்க இந்தத் தமிழ் நாட்டில் வாழும் மக்கள் உஜ்ஜீவனம் அடையும் வண்ணம் திருவாமூரில் திருவவதாரம் செய்தருளிய திருநாவுக்கரசு நாயனாரைத் திருவமுது புரிந்தருளச் செய்யும் விருப்பம் உண்டாக அந்த நாயனாரிடம் அப்பூதியடிகள் நாயனார் விண்ணப்பத்தைப் புரிய அந்தத் திருநாவுக்கரசு நாயனாரும் அவ்வாறு அங்கே திருவமுது செய்தருள்வதற்கு இணங்கியருளினார்.' பாடல் வருமாறு :

**" ஆசனத்தில் பூசனைகள்**
**அமர்வித்து விருப்பினுடன்**
**வாசநிறை திருநீற்றுக்**
**காப்பேந்தி மனம்தழைப்பத்**
**தேசம்உய்ய வந்தவரைத்**
**திருவமுது செய்விக்கும்**
**நேசம்உற விண்ணப்பம்**
**செயஅவரும் அதுநேர்ந்தார்."**

ஆசனத்தில் - அந்த அப்பூதி அடிகள் நாயனார் திருநாவுக்கரசு நாயனாரை ஓர் ஆசனப்பலகையில். அமர்வித்து - அமருமாறு செய்துவிட்டு. பூசனைகள் - பிறகு பூசனைகளை. விருப்பினுடன் - விருப்பத்தோடு புரிந்து. 'புரிந்து' என்ற சொல்லை இங்கே வருவிக்க. வாசம் - நறுமணம். நிறை - நிறைந்து கமழும். திருநீற்று - விபூதியாகிய. க்: சந்தி. காப்பு - காப்பை. ஏந்தி - தம்முடைய கையில் ஏந்திக் கொண்டு. மனம் - தம்முடைய திருவுள்ளம். தழைப்ப - மகிழ்ச்சியினால் தழைத்து ஓங்க. த்: சந்தி. தேசம் - இந்தச் செந்தமிழ் நாட்டில் வாழும் மக்கள்; இடஆகு

பெயர். உய்ய - உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம். வந்தவரை - திருவாரூரில் திருவவதாரம் செய்தருளி வந்த திருநாவுக்கரசு நாயனாரை. த் : சந்தி. திருவமுது செய்விக்கும் - திருவமுது புரிந்தருளச் செய்யும்; உண்ணுமாறு செய்யும். நேசம் - விருப்பம். உற-தம்மிடம் உண்டாக. விண்ணப்பம் செய - அந்தத் திருநாவுக்கரசு நாயனாரிடம் அப்பூதியடிகள் நாயனார் விண்ணப்பத்தைப் புரிய. செய: இடைக்குறை. அவரும் - அந்தத் திருநாவுக்கரசு நாயனாரும். அது - அவ்வாறு அப்பூதி யடிகள் நாயனாருடைய திருமாளிகையில் திருவமுது செய் தருளும் அதற்கு. நேர்ந்தார் - இணங்கி அருளினார்.

பின்பு வரும் 22 - ஆம் செய்யுளின் கருத்து வருமாறு :

'தவத்தைப் புரிந்தவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய திருமாளிகையில் திருவமுது புரிந்தருளுவதற்கு இணங்கிய சமயத்தில் அப்பூதியடிகள் நாயனார் தம்முடைய அழகிய பத்தினியாரைப் பார்த்து, ''இன்று நம்மிடம் அடைந்த பாக்கியம் இருந்த வண்ணம் என்ன வியப்பு?'' என, ''மையைப் போலக் கரிய நிறம் விளங்கும் திருக்கழுத்தைப் பெற்றவராகிய சிவபெருமான் வழங்கிய திருவருளினால் இந்தப் பாக்கியம் நமக்கு வந்தது என்று எண்ணியே உஜ்ஜீவனத்தை அடைவோம்'' என்று அந்த அப்பூதி யடிகள் நாயனார் மகிழ்ச்சியை அடைந்து கொண்டு திருவமுதைச் சமைக்குமாறு தம்முடைய பத்தினியாரிடம் கூறிச் சமைக்கத் தொடங்கினார்.' பாட்டு வருமாறு :

**'' செய்தவர் இசைந்த போது**
**திருமனை யாரை நோக்கி**
**'எய்திய பேறு நம்பால்**
**இருந்தவா றென்னே!' என்று**
**'மைதிகழ் மிடற்றி னான்றன்**
**அருளினால் வந்த தென்றே**

**உய்தும்' என் றுவந்து கொண்டு**
**திருவமு தாக்கல் உற்றார்.''**

செய்தவர் - தவத்தைப் புரிந்தவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். இசைந்த - அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய திருமாளிகையில் திருவமுது புரிந்தருளு வதற்கு இணங்கிய. போது - சமயத்தில். திரு - அழகிய. மனையாரை - தம்முடைய பத்தினியாரை. நோக்கி - பார்த்து. நம்பால் எய்திய - இன்று நம்மிடம் அடைந்த. பேறு - பாக்கியம். இருந்தவாறு - இருந்த வண்ணம். என் - என்ன வியப்பு. ஏ : அசைநிலை. என்று - என. மை - மையைப் போலக் கரிய நிறம். திகழ் - விளங்கும். மிடற்றினான் தன் - திருக்கழுத்தைப் பெற்றவராகிய சிவபெருமான். தன் : அசைநிலை. கரியநிறம் என்றாலும் இங்கே நீல நிறத்தையே கொள்க. நீலநிறத்தையும் கரிய நிறம் என்பது மரபு; ''நீல நிறக் காக்கை'' என்று வருவதைக் காண்க. அருளினால் - வழங்கிய திருவருளால். வந்தது - இந்தப் பாக்கியம் நமக்கு வந்தது. என்றது திருநாவுக்கரசு நாயனார் தங்களுடைய திருமாளிகையில் திருவமுது புரிந்தருள இணங்கியதை. என்றே - என்று எண்ணியே. உய்தும் - யாம் உஜ்ஜீவனத்தை அடைவோம். என்று - என. உவந்து கொண்டு - அந்த அப்பூதியடிகள் நாயனார் மகிழ்ச்சியை அடைந்து கொண்டு. திருவமுது - பிறகு அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்காகத் திருவமுதை; சோற்றை. ஆக்கல் - சமைக்கச் செய்தலை. தம்முடைய பத்தினியாரைக் கொண்டு சமைக்கச் செய்தார் என்றபடி. உற்றார் - தொடங்கினார்.

பிறகு வரும் 23 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'பரிசுத்தமாக உள்ள நல்ல கறியமுதுகளான கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு, புளிப்பு, இனிப்பு, உப்பு என்னும் ஆறு வகையாகிய சுவைகளோடு சமைக்கச் செய்து அமைந்த இனிய சுவையைப் பெற்ற திருவமுதையும் சமைக்கச் செய்து திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்தருளு

வதற்காகத் தங்களுடைய புதல்வர்கள் தங்களுக்குள் மூத்த புதல்வனாகிய திருநாவுக்கரசு என்பவனை "வாழைமரத்தில் உள்ள பொலிவைப் பெற்ற குருத்தை அறுத்து எடுத்துக் கொண்டு இங்கே நீ வருவாயாக" என்று அந்தப் புதல்வனை வேகமாக அனுப்பினார்கள்.' பாடல் வருமாறு:

**"தூயநற் கறிக ளான**
**அறுவகைச் சுவையால் ஆக்கி**
**ஆயஇன் னமுதம் ஆக்கி**
**அமுதுசெய் தருளத் தங்கள்**
**சேயவர் தம்மில் மூத்த**
**திருநாவுக் கரசை, 'வாழை**
**மேயபொற் குருத்துக் கொண்டு**
**வா' என விரைந்து விட்டார்."**

தூய - பரிசுத்தமாக உள்ள. நல் - நல்ல. கறிகள் ஆன - கறியமுதுகள் ஆன. அவையாவன: வெந்த வாழைக்காய், வெந்த கத்தரிக்காய், வெந்த அவரைக்காய், வேக வைத்த கொத்தவரங்காய், வெந்த வெண்டைக்காய், வேக வைத்த புடலங்காய், வெந்த பாகற்காய், வேக வைத்த பூசணிக்காய், வேக வைத்த பரங்கிக்காய், வெந்த வள்ளிக் கிழங்கு, வேக வைத்த சர்க்கரை வள்ளிக்கிழங்கு, வெந்த சேனைக் கிழங்கு, வேக வைத்த நேந்திரங்காய் முதலியவை. அறுவகைச் சுவையால் - கைப்பு, கார்ப்பு, துவர்ப்பு, புளிப்பு, இனிப்பு, உப்பு என்னும் ஆறு வகையாகிய சுவைகளோடு: உருபு மயக்கம். சுவை : ஒருமை பன்மை மயக்கம். ஆக்கி - சமைக்கச் செய்து. ஆய - அமைந்த. இன்னமுதம் - இனிய சுவையைப் பெற்ற திருவமுதையும். ஆக்கி - சமைக்கச் செய்து. சமைத்தவர் அப்பூதியடிகள் நாயனாருடைய தர்ம பத்தினியார். அமுது செய்தருள - திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்யும் பொருட்டு. த்: சந்தி. தங்கள் - தங்களுடைய; என்றது அப்பூதியடிகள் நாயனாரையும் அவருடைய பத்தினியாரையும் சேர்த்து. சேயவர் தம்மில் - புதல்வர்கள் தங்களுக்குள். அவர்:

பகுதிப் பொருள் விகுதி. மூத்த - யாவருக்கும் மூத்த. திருநாவுக்கரசை - திருநாவுக்கரசு என்னும் புதல்வனை. வாழை - தங்களுடைய திருமாளிகைக்குப் பின் புறத்தில் வளர்ந்து நிற்கும் வாழை மரத்தில். மேய - மேவிய. பொன் - தோற்றப் பொலிவைப் பெற்ற. குருத்து - குருத்தை. க்:சந்தி. கொண்டு-அறுத்து எடுத்துக் கொண்டு. வா - நீ வருவாயாக. என - என்று கூறி; இடைக்குறை. விரைந்து - வேகமாக. விட்டார் - அந்தத் திருநாவுக்கரசை அனுப்பினார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து உள்ள 24 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

' "அடியேனுடைய நல்ல அன்னையும் தந்தையும் கட்டளையிட இந்தக் காரியத்தை அடியேன் புரியும் பாக்கியத்தை அடைந்தேன்" என்று எண்ணிக்கொண்டு மிகவும் வேகமாகச் சென்று தங்களுடைய திருமாளிகைக்குப் பின்புறத்தில் உள்ள தோட்டத்துக்கு உள்ளே இழைந்து பெரியதாக இருக்கும் வளப்பத்தைப் பெற்ற அழகிய வாழைக் குருத்திலையை ஓர் அரிவாளால் அறுக்கும் சமயத்தில் கொல்லுதலை உடைய ஒரு பாம்பு துன்பத்தை அடைந்து வருந்திச் சோர்வை அடையும் வண்ணம் அந்தத் திருநாவுக்கரசினுடைய அழகிய கையில் தீண்டி விட்டது.' பாடல் வருமாறு:

**" நல்லதாய் தந்தை ஏவ**
**நான்இது செய்ப்பெற் றேன்'என்**
**றொல்லையில் விரைந்து தோட்டத்**
**துள்புக்குப் பெரிய வாழை**
**மல்லல் குருத்தை ஈரும்**
**பொழுதினில் வாள ராவொன்**
**றல்லல்உற் றழுங்கிச் சோர**
**அங்கையில் தீண்டிற் றன்றே."**

நல்ல - அடியேனுடைய நல்ல. தாய் - அன்னையும். தந்தை - தகப்பனும். ஏவ - கட்டளையிட. நான் - அடியேன். இது - இந்த நல்ல செயலை. செயப்-

பெற்றேன் - புரியும் பாக்கியத்தை அடைந்தேன். என்று - என எண்ணிக் கொண்டு. ஒல்லையில் விரைந்து - மிக வேகமாகச் சென்று. தோட்டத்து - தங்களுடைய திரு மாளிகைக்குப் பின்புறத்தில் உள்ள தோட்டத்துக்கு. உள் - உள்ளே. புக்கு - நுழைந்து. ப் : சந்தி. பெரிய - பெரியதாக இருக்கும். வாழை மல்லல் - வளப்பத்தைப் பெற்ற வாழை மரத்தில் உள்ள. அம் - அழகிய. குருத்தை - குருத்திலையை. ஈரும் - ஓர் அரிவாளால் அறுக்கும். பொழுதினில் - சமயத்தில். வாள் - கொலையைப் புரியும். அரா ஒன்று - ஒரு நல்ல பாம்பு. அல்லல் - துன்பத்தை. உற்று - அடைந்து. அழுங்கி - வருந்தி. ச் : சந்தி. சோர - சோர்வை அடையுமாறு. அம் - அழகிய. கையில் - அந்தத் திருநாவுக்கரசினுடைய கையில். தீண்டிற்று - கடித்து விட்டது. அன்று, ஏ : இரண்டும் ஈற்றசை நிலைகள்.

பிறகு உள்ள 25 - ஆம் செய்யுளின் கருத்து வருமாறு :

'அந்தத் திருநாவுக்கரசு தன்னுடைய கையில் கவர்ந்து கொண்டு சுற்றித் தன்னுடைய கண்களில் நெருப்புக் காய் கின்ற படத்தைக் கொண்ட பாம்பைத் தன்னுடைய கையை உதறி தரையில் விழச்செய்து பதைபதைப்போடு, "இந்தப் பாம்பு கடித்த விடத்தினுடைய கொடிய வேகத்தினால் அடியேன் தரையில் விழுவதற்கு முன்பே விரைவோடு இந்தத் திருமாளிகைக்குள் அடைந்து அடியேன் அறுத்துக் கொண்டு எடுத்து வந்த இந்தக் குருத்திலையைப் போய் அடியேனுடைய தந்தையிடம் அளிப்பேன்" என்று எண்ணி ஓட்டமாக ஓடி வந்தான்.' பாடல் வருமாறு :

" கையினிற் கவர்ந்து சுற்றிக்
கண்ணெரி காந்து கின்ற
பையரா உதறி வீழ்த்துப்
பதைப்புடன், 'பாந்தள் பற்றும்
வெய்யவே கத்தால் வீழா
முன்னம்வே கத்தால் எய்திக்

கொய்தஇக் குருத்தைச் சென்று
கொடுப்பன்'என் றோடி வந்தான்.''

கையினில் - அந்தத் திருநாவுக்கரசு தன்னுடைய கையில். கவர்ந்து - கவர்ந்து கொண்டு. சுற்றிக்கண் - சுற்றித் தன்னுடைய கண்களில்; ஒருமை பன்மை மயக்கம். எரி - நெருப்பு. காந்துகின்ற - காய்கின்ற. பை - படத்தைக் கொண்ட. அரா - பாம்பை. உதறி - தன்னுடைய கையை உதறி. வீழ்த்து - அந்தப் பாம்பைத் தரையில் விழச் செய்து. ப் : சந்தி. பதைப்புடன் - பதைபதைப்போடு. பாந்தள் - இந்தப் பாம்பு. பற்றும் - கடித்த விடத்தினுடைய; ஆகுபெயர். வெய்ய - கொடிய. வேகத்தால் - வேகத்தினால். வீழா முன்னம் - அடியேன் தரையில் விழுவதற்கு முன்பே. வேகத்தால் - விரைவோடு; உருபு மயக்கம். எய்தி - இந்தத் திருமாளிகைக்குள் சென்று. க் : சந்தி. கொய்த - அடியேன் அறுத்துக் கொண்டு எடுத்து வந்த. இக் குருத்தை - இந்தக் குருத்திலையை. ச் : சந்தி. சென்று - போய். கொடுப்பன் - அடியேனுடைய தந்தையிடம் அளிப்பேன். என்று - என எண்ணி. ஓடி வந்தான் - ஓட்டமாக ஓடி வந்தான்.

பின்பு வரும் 26 - ஆம் கவியின் கருத்து வருமாறு :

'அந்தத் திருநாவுக்கரசு அந்தப் பாம்பு கடித்து அமைந்த நஞ்சினுடைய வேகத்தினால் வருபவன் அந்த நஞ்சினுடைய வேகம் முந்திக் கொண்டு வர துன்பத்தை அடைந்து தன்னுடைய திருமாளிகைக்குள் சென்று அடையும் சமயத்தில், ''அந்தப் பெரிய பாம்பு கடித்தது யாருக்கும் அருமையாகிய தவசியாராகிய திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்யத் தாமதிக்குமாறு அடியேன் சொல்ல மாட்டேன்.'' என்று எண்ணி திருத்தமாக அமைந்த எண்ணத்தினோடும் செல்வச் செழிப்பைப் பெற்ற தன்னுடைய திருமாளிகைக்கு உள்ளே போய் நுழைந்தான்.' பாடல் வருமாறு :

"பொருந்திய விடவே கத்தில்
போதுவான் வேகம் முந்த
வருந்தியே அணையும் போழ்து,
'மாசுணம் கவர்ந்த தியார்க்கும்
அருந்தவர் அமுது செய்யத்
தாழ்க்க யான் அறையேன்' என்று
திருந்திய கருத்தி னோடும்
செழுமனை சென்று புக்கான்."

பொருந்திய - அந்தத் திருநாவுக்கரசு அந்தப் பாம்பு கடித்து அமைந்த. விட - நஞ்சினுடைய. வேகத்தில் - வேகத்தினால்; உருபு மயக்கம். போதுவான் - வருபவன். வேகம் - அந்த நஞ்சினுடைய வேகம். முந்த - முந்திக் கொண்டு வர. வருந்தி - துன்பத்தை அடைந்து. ஏ: அசைநிலை. அணையும் - தன்னுடைய திருமாளிகைக்குள் சென்று அடையும். போழ்து - சமயத்தில். மாசுணம் - அந்தப் பெரிய பாம்பு. கவர்ந்தது - தன்னைக் கடித்தது. இ: குற்றியலிகரம். யார்க்கும் - எந்த மனிதருக்கும். அரும் - அருமையாக வந்த. தவர் - தவசியாராகிய திருநாவுக்கரசு நாயனார். அமுது செய்ய - திருவமுது செய்வதற்கு. த்: சந்தி. தாழ்க்க - தாமதிக்குமாறு. யான் - அடியேன். அறையேன் - பாம்பு என்னைக் கடித்ததைச் சொல்ல மாட்டேன். என்று - என எண்ணி. திருந்திய - திருத்தமாக அமைந்த. கருத்தினோடும் - எண்ணத்தோடும். செழு - செல்வச் செழிப்பைப் பெற்ற. மனை - தன்னுடைய திருமாளிகைக்கு உள்ளே. சென்று - போய். புக்கான் - நுழைந்தான்.

அடுத்து உள்ள 27 - ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அந்தப் பாம்பு கடித்ததனால் தலைக்கு ஏறிய நெருப்பைப் போல எரியும் நஞ்சு முறைப்படியே ஏறித் தலையில் கொண்ட ஏழாம் வேகம் தெரியும் படியாக பற்களும் கண்களும் திருமேனியும் கருகிப் போய் தீய்ந்து விரிக்கின்ற வார்த்தைகள் தடுமாற்றத்தை அடைந்து

உயிர் அந்த நஞ்சைக் கொண்டு மயக்கத்தை அடைந்து தரையில் விழுபவனாகிய அந்தத் திருநாவுக்கரசு உண்ணும் பரிகலமாகி வாழை மரத்தில் தான் அறுத்துக் கொண்டு வந்த குருத்திலையைத் தன்னுடைய அன்னையாரிடம் கொடுத்து வைத்து விட்டுத் தரையின் மேல் விழுந்து விட்டான்.' பாடல் வருமாறு :

"எரிவிடம் முறையே ஏறித்
தலைக்கொண்ட ஏழாம் வேகம்
தெரிவுற எயிறும் கண்ணும்
மேனியும் கருகித் தீந்து
விரியுரை குழறி ஆவி
விடக்கொண்டு மயங்கி வீழ்வான்
பரிகலக் குருத்தைத் தாயார்
பால்வைத்துப் படிமேல் வீழ்ந்தான்."

எரி - அந்தப் பாம்பு தன்னைக் கடித்ததனால் தலைக்கு ஏறிய நெருப்பைப் போல எரியும். விடம் - பாம்பு கடித்த நஞ்சு. முறையே - முறைப்படியே. ஏறி - மேலே ஏறி. த் : சந்தி. தலைக்கொண்ட - தலையில் கொண்ட. ஏழாம் வேகம் தெரிவுற - ஏழாவது வேகம் தெரியும் படியாக. எயிறும் - அந்தத் திருநாவுக்கரசினுடைய பற்களும்; ஒருமை பன்மை மயக்கம். கண்ணும் - கண்களும்; ஒருமை பன்மை மயக்கம். மேனியும் - அவனுடைய திருமேனியும். கருகி - கருகிப் போய். த் : சந்தி. தீந்து - தீய்ந்து. விரி - விரித்து உரைக்கின்ற. உரை - வார்த்தைகள்; ஒருமை பன்மை மயக்கம். குழறி - தடுமாற்றத்தை அடைந்து. ஆவி - உயிரை. விட - விடுமாறு. க் : சந்தி. கொண்டு - அந்த நஞ்சைத் தலையில் ஏற அதைக் கொண்டு. மயங்கி - மயக்கத்தை அடைந்து. வீழ்வான் - தரையில் விழுபவனாகிய அந்தத் திருநாவுக்கரசு. பரிகல - பரிகலமாகி வாழை மரத்தில் தான் அறுத்துக் கொண்டு வந்த. குருத்தை-குருத்திலையை. த் : சந்தி. தாயார் பால் - தன்னுடைய அன்னையாரிடம்,

வைத்து - கொடுத்து வைத்து விட்டு. ப் : சந்தி. படிமேல் - தரையின் மேல். வீழ்ந்தான் - விழுந்தான்.

அடுத்து உள்ள 28 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அவ்வாறு தளர்ச்சியை அடைந்து தரையில் விழும் தங்களுடைய புதல்வனாகிய திருநாவுக்கரசைப் பார்த்து விட்டு அவனுடைய அன்னையாரும், தகப்பனாரும், தங்களுடைய உள்ளங்கள் பதைபதைத்து அவனை உற்றுப் பார்த்து இரத்தம் சோர்ந்து வழியும் வடிவத்தையும், திருமேனியில் திகழ்ந்த பாம்பினுடைய பற்களின் அடையாளத்தையும் பார்த்து, "இவன் பாம்பு கடித்த நஞ்சினால் இறந்து போனான்." என எண்ணி, சிறிதும் நடுக்கத்தை அடைதல் இல்லாமல் திருவதிகை வீரட்டானேசுவரருடைய திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்வதற்காக ஆலோசனை செய்பவர்கள் ஆனார்கள்.' பாடல் வருமாறு :

" தளர்ந்துவீழ் மகனைக் கண்டு
  தாயாரும் தந்தை யாரும்
உளம்பதைத் துற்று நோக்கி
  உதிரம்சோர் வடிவும் மேனி
விளங்கிய குறியும் கண்டு,
  'விடத்தினால் வீழ்ந்தான்.' என்று
துளங்குதல் இன்றித் தொண்டர்
  அமுதுசெய் வதற்குச் சூழ்வார்."

தளர்ந்து - அவ்வாறு தளர்ச்சியை அடைந்து. வீழ் - தரையில் விழும். மகனை - தங்களுடைய புதல்வனாகிய திருநாவுக்கரசை. க் : சந்தி. கண்டு - பார்த்து தாயாரும் - அவனுடைய அன்னையாரும். தந்தையாரும் - தகப்பனாரும். உளம் - தங்களுடைய திருவுள்ளங்கள்; ஒருமை பன்மை மயக்கம்; இடைக்குறை. பதைத்து - பதைபதைத்து. உற்று நோக்கி - அந்தத் திருநாவுக்கரசைக் கூர்ந்து பார்த்து. உதிரம் - இரத்தம். சோர் - சோர்ந்து வழியும். வடிவும் - வடிவத்தையும். மேனி -

அவனுடைய திருமேனியில். விளங்கிய - விளக்கமாகத் தெரிந்த. குறியும் - பாம்பினுடைய பற்களின் அடையாளத்தையும். கண்டு - பார்த்து விட்டு. விடத்தினால் - இவன் பாம்பு கடித்த நஞ்சினால். வீழ்ந்தான் - இறந்து போனான். என்று - என எண்ணி. துளங்குதல் - சிறிதேனும் நடுக்கத்தை அடைதல். இன்றி - இல்லாமல். த் : சந்தி. தொண்டர் - திருவதிகை வீரட்டானேசுவரருடைய திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு நாயனார். அமுது செய்வதற்கு - திருவமுது செய்வதற்காக. ச் : சந்தி. சூழ்வார் - திருநாவுக்கரசினுடைய அன்னையாரும் தகப்பனாரும் ஆலோசனை செய்பவர்கள் ஆனார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு வரும் 29 - கவியின் உள்ளுறை வருமாறு :

'பெறுவதற்கு அருமையான தங்களுடைய குமாரனாகிய திருநாவுக்கரசை ஒரு பாய்க்குள் வைத்து ஒரு போர்வையால் மூடி விட்டு, தங்களுடைய திருமாளிகையினுடைய வெளியில் உள்ள முற்றத்தினுடைய பக்கத்தில் ஒரு பக்கத்தில் மறைத்து வைத்துவிட்டு, "இது முற்றும் தெரிந்து கொள்ளாதவாறு அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்குத் திருவமுது செய்விப்போம்" என்று எண்ணி வீரத்தைப் பெற்ற திருவதிகை வீரட்டானேசுவரருடைய திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு நாயனாரிடத்திற்கு விருப்பத்தோடு அந்த இருவரும் வேகமாக வந்தார்கள்.' பாடல் வருமாறு :

"பெறலரும் புதல்வன் தன்னைப்
பாயினுட் பெய்து மூடிப்
புறமனை முன்றிற் பாங்கோர்
புடையினில் மறைத்து வைத்தே
'அறஇது தெரியா வண்ணம்
அமுதுசெய் விப்போம்.' என்று
விறலுடைத் தொண்ட னார்பால்
விருப்பொடு விரைந்து வந்தார்."

பெறல் அரும் - பெறுவதற்கு அருமையாக இருக்கும். புதல்வன் தன்னை-தங்களுடைய புதல்வனாகிய திருநாவுக்கரசை. தன்:அசை நிலை. ப்:சந்தி.பாயினுள்-ஒருபாய்க்குள். பெய்து - வைத்து. மூடி - ஒரு போர்வையால் மூடிவிட்டு. ப்: சந்தி. புறமனை முன்றில் - தங்களுடைய திருமாளிகையின் வெளியில் உள்ள முற்றத்தினுடைய. முன்றில் - இல் முன்; முன் பின்னாகத் தொக்க தொகை. பாங்கு - பக்கத்தில். ஓர் புடையினில் - ஓர் இடத்தில். மறைத்து வைத்து - திருநாவுக்கரசினுடைய பிணத்தை மறைத்து வைத்துவிட்டு விட்டு. ஏ: அசை நிலை. அற இது - இது முற்றும். தெரியா வண்ணம் - தெரிந்து கொள்ளாதவாறு. அமுது செய்விப்போம் - அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்குத் திருவமுது செய்யச் செய்வோம். என்று - என எண்ணி. விறல் உடை - வீரத்தைப் பெற்ற. த்: சந்தி. தொண்டனார் பால் - திருவதிகை வீரட்டானேசுவரருடைய திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு நாயனாரிடத்திற்கு. விருப்பொடு - விருப்பத்தோடு. விரைந்து - அந்த இருவரும் வேகமாக. வந்தார் - வந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பின்பு வரும் 30 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்தத் திருநாவுக்கரசினுடைய அன்னையாரும் தகப்பனாரும் வேகமாக வந்து திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்வதற்கு நேரம் தாமதம் ஆகின்றது என எண்ணி திருஅமுதும், கறியமுதுகளுமாகிய எல்லாவற்றையும் அழகு பெறுமாறு அடைய வைத்து தமக்கு ஒப்பு இல்லாத சீர்த்தியைப் பெற்ற திருவதிகை வீரட்டானேசுவரருடைய திருத்தொண்டராகிய திருநாவுக்கரசு நாயனாருக்கு முன்னால் தரையில் விழுந்து வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு, ''எம்பெருமானே, தேவரீர் திருவமுது செய்து அடியேங்களுடைய குடும்பம் முழுவதும் உஜ்ஜீவனத்தை அடையும்

வண்ணம் இந்தத் திருவமுது முதலியவற்றை ஏற்றுக் கொண்டருள்வீராக'' என அந்த அப்பூதியடிகள் நாயனாரும் அவருடைய தர்மபத்தினியாரும் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய, அந்த வார்த்தைகளைத் திரு நாவுக்கரசு நாயனார் கேட்டருளி.' பாடல் வருமாறு :

'' கடிதுவந் தமுது செய்யக்
காலந்தாழ்க் கின்ற தென்றே
அடிசிலும் கறியும் எல்லாம்
அழகுற அணைய வைத்துப்
படியில்சீர்த் தொண்ட னார்முன்
பணிந்தெழுந், 'தமுது செய்தெம்
குடிமுழு துய்யக் கொள்வீர்'
என்றவர் கூறக் கேட்டு.''

இந்தப் பாடல் குளகம். கடிது - அந்தத் திருநாவுக் கரசினுடைய அன்னையாரும் தகப்பனாரும் வேகமாக. வந்து அமுது செய்ய - வந்து திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்வதற்கு. க் : சந்தி. காலம் - நேரம். தாழ்க்கின்றது - தாமதம் ஆகின்றது. என்று - என எண்ணி. ஏ : அசைநிலை. அடிசிலும் - திரு அமுதும்; சோறும். கறியும் - பல வகையான கறியமுதுகளும்; ஒருமை பன்மை மயக்கம். அவை இன்ன என்பதை முன்பே ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. எல்லாம் - ஆகிய எல்லாவற்றையும். அழகு உற : வனப்புப் பெறுமாறு. அணைய - அடைய. வைத்து - நுனி வாழை யிலையில் வைத்து. ப் : சந்தி. படிஇல் - தமக்கு ஒப்பு இல்லாத. இல் : கடைக்குறை. சீர் - சீர்த்தியைப் பெற்ற. த் : சந்தி. தொண்டனார் - திருவதிகை வீரட்டானேசுவரருடைய திருத்தொண்டராகிய திருநாவுக் கரசு நாயானாருக்கு. முன் - முன்னால். பணிந்து - தரையில் விழுந்து அவரை வணங்கிவிட்டு. எழுந்து - பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு. அமுது செய்து - தேவரீர் திருவமுது செய்து. எம் - அடியேங்

களுடைய; இது அப்பூதியடிகள் நாயனார் தம்மையும் தம்முடைய தர்மபத்தினியாரையும், திருநாவுக்கரசு அல்லாத மற்ற புதல்வர்களையும் சேர்த்துச் சொன்னது. குடி-குடும்பம். முழுதும்-முழுவதும். உய்ய - உஜ்ஜீவனம் அடையும் வண்ணம். க் : சந்தி. கொள்வீர் - இந்தத் திருவமுது முதலியவற்றை ஏற்றுக் கொண்டருள்வீராக. என்று - என. அவர் - அந்த அப்பூதியடிகள் நாயனாரும் அவருடைய தர்மபத்தினியாரும்; ஒருமை பன்மை மயக்கம். கூற - திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. க் : சந்தி. கேட்டு - அந்த வார்த்தைகளைத் திருநாவுக்கரசு நாயனார் கேட்டருளி.

பின்பு வரும் 31 - கவியின் உள்ளுறை வருமாறு :

'செய்வதற்கு அருமையாகிய தவத்தைப் புரிந்த தவசியாராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் எழுந்து சென்று தம்முடைய செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்துள்ள இரண்டு திருவடிகளையும் தூய நீரால் கழுவிக் கொண்டு வேறாக உள்ள ஒரு திருத்தமாக விளங்கும் ஆசனப் பலகையின் மேல் ஏறிப் பரிகலமாகிய நுனி வாழையிலையைத் துடைத்துச் சுத்தமாக்குவதற்கு முன்னால் அமர்ந்து வெண்மையான விபூதியைத் தம்முடைய நெற்றியிலும், திருமேனியில் உள்ள வேறிடங்களிலும் அணிந்து கொண்டு இயல்பைப் பெற்ற திருநாவுக்கரசினுடைய அன்னையார், தகப்பனார் ஆகிய இரண்டு பேர்களுக்கும் பொருத்தமாக உள்ள விபூதியை வழங்கியருளி மற்றக் குமாரர்களுக்கும் வழங்கியருளும் சமயத்தில்.' பாடல் வருமாறு :

**" அருந்தவர் எழுந்து செய்ய**
**அடியிணை விளக்கி வேறோர்**
**திருந்தும் ஆசனத்தில் ஏறிப்**
**பரிகலம் திருத்து முன்னர்**

**இருந்து வெண்ணீறு சாத்தி**
**இயல்புடை இருவ ருக்கும்**
**பொருந்திய நீறு நல்கிப்**
**புதல்வர்க்கும் அளிக்கும் போழ்தில்.''**

இந்தப் பாடல் குளகம். அரும் - செய்வதற்கு அருமையாக இருக்கும். தவர் - தவத்தைப் புரிந்த தவசியாராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். எழுந்து - தாம் அமர்ந்திருந்த ஆசனப் பலகையிலிருந்து எழுந்து சென்று. செய்ய - செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்துள்ள. அடியிணை - இரண்டு திருவடிகளையும். அடி : ஒருமை பன்மை மயக்கம். விளங்கி - தூய நீரால் கழுவிக்கொண்டு. வேறு - வேறாக உள்ள. ஓர் - ஒரு. திருந்தும் - திருத்தமுடையதாக விளங்கும். ஆசனத்தில் - ஆசனப் பலகையின் மேல். ஏறிப் பரிகலம் - ஏறிப் பரிகலமாகிய நுனி வாழை இலையை. திருத்து-நீரால் துடைத்துச் சுத்தமாக்குவதற்கு. முன்னர் - முன்னால். இருந்து - அமர்ந்து. வெண்ணீறு - வெண்மையான விபூதியை. சாத்தி - தம்முடைய நெற்றியிலும் திருமேனியில் உள்ள வேறு இடங்களிலும் அணிந்து கொண்டு. இயல்புடை - இறைவனை வணங்கும் இயல்பைப் பெற்ற. இருவருக்கும் - திருநாவுக்கரசினுடைய அன்னையார், தகப்பனார் ஆகிய இரண்டு பேர்களுக்கும். பொருந்திய - பொருத்தமாக உள்ள. நீறு - விபூதியை நல்கி - வழங்கியருளி. ப் : சந்தி. புதல்வர்க்கும் - திருநாவுக்கரசு அல்லாத மற்ற குமாரர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். அளிக்கும் - விபூதியை வழங்கியருளும். போழ்தில் - சமயத்தில்.

பிறகு வரும் 32 - ஆம் செய்யுளின் கருத்து வருமாறு :

'ஆதி காலத்தில் தோன்றிய இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்ற நான்கு வேதங்களாகிய சாத்திரங்கள் கூறும் உண்மைகளைத் தெரிந்து கொண்ட வேதியராகிய அப்பூதியடிகள் நாயனாரைப் பார்த்துத் திருநாவுக்கரசு நாயனார்,

"புதல்வர்களுக்குள் இவருக்கு மூத்த புதல்வரையும் மேன்மையையும் தகுதியையும் பெற்ற விபூதியை அணிந்து கொள்வதற்காகக் காட்டுவீர்களாக" என்று அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தவுடன் நடந்த பான்மையாகிய மூத்த திருநாவுக்கரசு பாம்பு கடித்து இறந்து போய் விட்ட செய்தியை எதை ஒன்றேனும் திருவாய் மலர்ந்தருளிச் செய்யாதவர்களாகி "இந்த நேரத்தில் இந்த இடத்தில் அந்த மூத்த திருநாவுக்கரசு உதவமாட்டான்." என்று அந்தத் திருநாவுக்கரசினுடைய அன்னையாரும் தகப்பனாரும் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்கள் ' பாடல் வருமாறு :

'ஆதிநான் மறைநூல் வாய்மை
அப்பூதி யாரை நோக்கி,
'காதலர் இவர்க்கு மூத்த
சேயையும் காட்டும் முன்னே
மேதகு பூதி சாத்த'
என்றலும் விளைந்த தன்மை,
யாதுமொன் றுரையார், 'இப்போ
திங்கவன் உதவான்.' என்றார்."

ஆதி - ஆதி காலத்தில் தோன்றிய. நான்மறை - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்ற நான்கு வேதங்களாகிய. மறை : ஒருமை பன்மை மயக்கம். நூல் - சாத்திரங்கள் கூறும்; ஒருமை பன்மை மயக்கம். வாய்மை - உண்மைகளைத் தெரிந்து கொண்டிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். அப்பூதியாரை-வேதியராகிய அப்பூதியடிகள் நாயனாரை. நோக்கி- திருநாவுக்கரசு நாயனார் பார்த்தருளி. க் : சந்தி. காதலர் - புதல்வர்களுக்குள்; ஒருமை பன்மை மயக்கம். இவர்க்கு - இவருக்கு. மூத்த சேயையும் - மூத்த புதல்வராகிய திருநாவுக்கரசையும். முன் - திருவமுது யான் செய்வதற்கு முன்னால். ஏ : அசைநிலை. மேதகு - மேன்மையையும் தகுதியையும் பெற்ற. பூதி - விபூதியை.

சாத்த - அணிய. காட்டும் - எனக்குக் காட்டுவீர்களாக' என்றலும் - என்று அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்தவுடன். விளைந்த தன்மை - நடந்த பான்மையாகிய மூத்த திருநாவுக்கரசு பாம்பு கடித்து இறந்து போய் விட்ட செய்தியை. யாதும் ஒன்று - எதை ஒன்றேனும். உரையார் - திருவாய் மலர்ந்தருளிச் செய்யாதவர்களாகி; ஒருமை பன்மை மயக்கம். அவர்கள் திருநாவுக்கரசினுடைய அன்னை யாரும் தகப்பனாரும் ஆவர். இப்போது - இந்த நேரத்தில். இங்கு - இந்த இடத்தில். அவன் - அந்த மூத்த திருநாவுக் கரசு. உதவான் - உதவ மாட்டான். என்றார் - என்று அவ்னுடைய அன்னையாரும் தகப்பனாரும் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

அடுத்து வரும் 33 - ஆம் கவியின் கருத்து வருமாறு:

'அப்பூதியடிகள் நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த அந்த வார்த்தைகளை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் கேட்ட சமயத்திலேயே அழகிய கண்களைப் பெற்றவராகிய சிவபெருமானார் வழங்கிய திருவருளால் திருவதிகை வீரட்டானேசுவரருடைய பக்தராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் செம்மையாக உள்ள தம்முடைய திருவுள்ளத்தில் ஒரு தடுமாற்றம் உண்டாக அந்த அப்பூதி யடிகள் நாயனாரைப் பார்த்து, "நீர் கூறிய இந்த வார்த் தைகளை அடியேனுடைய உள்ளம் சகிக்காது; அவன் என்ன செய்தான்? இந்தச் சமயத்திற்கு ஏதோ ஒரு செயல் இருக்கிறது; உண்மையை எடுத்துக் கூறுவீராக." என்று திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய அந்த அப்பூதியடிகள் நாயனார் நடுக்கத்தை அடைந்து பயப்பட்டுத் திருவாய் மலர்ந்தருளிச் செய்பவரானார்.' பாடல் வருமாறு:

"அவ்வுரை கேட்ட போதே
அங்கணர் அருளால் அன்பர்

**செவ்விய திருவுள் ளத்தோர்**
**தடுமாற்றம் சேர நோக்கி,**
**'இவ்வுரை பொறாதென் உள்ளம்;**
**என்செய்தான் இதற்கொன் றுண்டால்;**
**மெய்விரித் துரையும்' என்ன**
**விளம்புவார் விதிர்ப்புற் றஞ்சி.''**

அவ்வுரை - அப்பூதியடிகள் நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த அந்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். கேட்ட போதே - அந்தத் திருநாவுக்கரசு நாயனார் கேட்ட சமயத்திலேயே. அம் - அழகிய. கணர்-கண்களைப் பெற்றவராகிய சிவபெருமானார். கணர்: இடைக்குறை. கண்: ஒருமை பன்மை மயக்கம். அருளால் - வழங்கிய திருவருளால். அன்பர் - திருவதிகை வீரட்டானேசுவரருடைய பக்தராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். செவ்விய - செம்மையாக உள்ள, திருவுள்ளத்து - தம்முடைய திருவுள்ளதில், ஓர் - ஒரு. தடுமாற்றம் சேர - குழப்பம் உண்டாக. நோக்கி - அந்த அப்பூதியடிகள் நாயனாரைப் பார்த்து. இவ்வுரை - நீர் கூறிய இந்த வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். என் - அடியேனுடைய. உள்ளம் - மனம். பொறாது - சகிக்காது. என் - என்ன. செய்தான் - அந்தத் திருநாவுக்கரசு புரிந்தான். இதற்கு - இந்தச் சமயத்திற்கு. ஒன்று - ஏதோ ஒரு செயல். உண்டு - இருக்கிறது. ஆல்: அசை நிலை. மெய் - உண்மையை. விரித்து - விரிவாக எடுத்து. உரையும் - நீர் கூறுவீராக. என்ன - என்று அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. விதிர்ப்புற்று - அந்த அப்பூதியடிகள் நாயனார் நடுக்கத்தை அடைந்து. அஞ்சி - பயப்பட்டு, விளம்புவார் - பின் வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்பவர் ஆனார்.

அடுத்து உள்ள 34 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'"இந்தப் பெருமையைப் பெற்றவராகிய திருநாவுக் கரசு நாயனார் அடியேனுடைய திருமாளிகையில் திருவமுது புரிந்தருளும் பாக்கியமாகிய இது தவறுமாறு என்ன வருவது?" என அந்த அப்பூதியடிகள் நாயனார் உண்மையை எடுத்துத் திருவாய் மலர்ந்தருளிச் செய்யா விட்டாலும் பெரிய தவத்தைப் புரிந்த தவசியாராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் கேட்டருள, உண்மையை அந்த நாயனார் அறிந்து கொள்ளுமாறு கூற வேண்டும் என்ற நல்ல பண்பினால் அந்த அப்பூதியடிகள் நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் வருத்தத்தை அடைந்து அன்போடு அந்தத் திருநாவுக்கரசு நாயனாரைத் தரையில் விழுந்து பணிந்து விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு தம்முடைய புதல்வராகிய மூத்ததிருநாவுக் கரசுக்கு உண்டான துன்பத்தை எடுத்துத் திருவாய் மலர்ந் தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு :

**"'பெரியவர் அமுது செய்யும்**
**பேறிது பிழைக்க என்னோ**
**வருவ'தென் றுரையா ரேனும்**
**மாதவர் வினவ வாய்மை**
**தெரிவுற உரைக்க வேண்டும்**
**சீலத்தால் சிந்தை நொந்து**
**பரிவோடு வணங்கி மைந்தர்க்**
**குற்றது பகர்ந்தார் அன்றே."**

பெரியவர் - அந்தப் பெருமையைப் பெற்றவராகிய திருநாவுக்கரசு நாயனார். அமுது செய்யும் - அடியேனு டைய திருமாளிகையில் திருவமுது புரிந்தருளும். பேறு இது - பாக்கியமாகிய இது. பிழைக்க - தவறுமாறு. என்னோ வருவது - என்ன வருவது. ஓ : அசை நிலை. என்று - என. உரையாரேனும் - அந்த அப்பூதியடிகள் நாயனார் அந்தத் திருநாவுக்கரசு நாயனாருக்கு உண்மையை எடுத்துத் திருவாய் மலர்ந்தருளிச் செய்யாவிட்டாலும். மாதவர் - பெரியதவத்தைப் புரிந்த தவசியாராகிய அந்தத் திருநாவுக்

கரசு நாயனார். வினவ - கேட்டருள. வாய்மை - உண்மையை. தெரிவுற - அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அறிந்து கொள்ளுமாறு. உரைக்க வேண்டும் - கூற வேண்டும். சீலத்தால் - என்னும் நல்ல பண்பினால். சிந்தை - தம்முடைய திருவுள்ளத்தில். நொந்து - வருத்தத்தை அடைந்து. பரிவோடு - பக்தியோடு. வணங்கி - அந்தத் திருநாவுக்கரசு நாயனாரைத் தரையில் விழுந்து பணிந்து. மைந்தர்க்கு - தம்முடைய புதல்வராகிய மூத்த திருநாவுக்கரசுக்கு. உற்றது - உண்டான துன்பத்தை. பகர்ந்தார் - அந்தத் திருநாவுக்கரசு நாயனாரிடம் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார். அன்று, ஏ: இரண்டும் ஈற்றசை நிலைகள்.

பிறகு வரும் 35 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த அப்பூதியடிகள் நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த வார்த்தைகளை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் கேட்டருளி, "நீர் செய்த விதம் நன்றாக இருக்கிறது! வேறு யார் இந்தப் பான்மையான செயலைச் செய்திருக்கிறார்?" என அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்துவிட்டு முன்னால் தன்னுடைய ஆசனப் பலகையிலிருந்து எழுந்து போய் உயிர் நீங்கிய அந்த மூத்த திருநாவுக்கரசினுடைய பிணத்தைப் பார்த்து தலைவராகிய சிவபெருமானார் தம்முடைய திருவருளை வழங்குமாறு பாசுரங்கள் அடங்கிய உரிய பண் அமைந்த ஒரு திருப்பதிகத்தை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி அந்தப் பாம்பு கடித்த நஞ்சைப் போக்கியருளினார்.' பாடல் வருமாறு:

**"நாவினுக் கரசர் கேளா**
**'நன்றுநீர் புரிந்த வண்ணம்!**
**யாவர்இத் தன்மை செய்தார்?'**
**என்றுமுன் எழுந்து சென்றே**

ஆவிதீர் சவத்தை நோக்கி
அண்ணலார் அருளும் வண்ணம்
பாவிசைப் பதிகம் பாடிப்
பணிவிடம் பாற்று வித்தார்.''

நாவினுக்கரசர் - திருநாவுக்கரசு நாயனார். கேளா - அந்த அப்பூதியடிகள் நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த வார்த்தைகளைக் கேட்டருளி. நீர் - நீங்கள். புரிந்த வண்ணம் - செய்த விதம். நன்று - நன்றாக இருக்கிறது. 'நன்றாக இல்லை' என்பது குறிப்பு. யாவர் - உம்மையல்லாமல் வேறு எவர். இத்தன்மை - இந்தப் பான்மையான செயலை; ஆகு பெயர். செய்தார் - புரிந்திருக்கிறார். என்று - என அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. முன் - முன்னால். எழுந்து - தாம் அமர்ந்திருந்த ஆசனப் பலகையிலிருந்து எழுந்து. சென்று - போய். ஏ : அசை நிலை. ஆவி - உயிர். தீர் - நீங்கிய. சவத்தை - அந்த மூத்த திருநாவுக்கரசினுடைய பிணத்தை. நோக்கி - பார்த்து. அண்ணலார் - தலைவராகிய சிவபெருமானார். 'அண்ணலார் - பெருமையைப் பெற்றவர்' எனலும் ஆம். அருளும் வண்ணம் - திருவருளை வழங்குமாறு. பா - பாசுரங்கள் அடங்கிய; ஒருமை பன்மை மயக்கம். இசைப் பதிகம் - உரிய பண் அமைந்த ஒரு திருப்பதிகத்தை. பாடி - அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி. ப் : சந்தி. பணி - அந்தப் பாம்பு கடித்த. விடம் - நஞ்சை. பாற்றுவித்தார் - போக்கியருளினார்.

அவ்வாறு அந்தத் திருநாவுக்கரசு நாயனார் விடத்தைத் தீர்த்த போது பாடியருளிய திருப்பதிகப் பாசுரங்கள் வருமாறு. இவை இந்தளப் பண் அமைந்தவை:

(1) ''ஒன்றுகொ லாமவர் சிந்தை உயர்வரை
ஒன்றுகொ லாமுய ரும்மதி ஆடுவர்
ஒன்றுகொ லாமிடு வெண்டலை கையது
ஒன்றுகொ லாமவர் ஊர்வது தானே.''

(2) " இரண்டுகொ லாமிமை யோர்தொழு பாதம்
இரண்டுகொ லாமிலங் குங்குழை
பெண்ணாண்
இரண்டுகொ லாமுரு வஞ்சிறு மான்மழு
இரண்டுகொ லாமவர் எய்தின தாமே."

(3) மூன்றுகொ லாமவர் கண்ணுதல் ஆவன
மூன்றுகொ லாமவர் சூலத்தின்
மொய்யிலை
மூன்றுகொ லாங்கணை கையது வில்நாண்
மூன்றுகொ லாம்புரம் எய்தின தாமே."

(4) " நாலுகொ லாமவர் தம்முகம் ஆவன
நாலுகொ லாஞ்சன னம்முதற் தோற்றமும்
நாலுகொ லாமவர் ஊர்தியின் பாதங்கள்
நாலுகொ லாம்மறை பாடின தாமே."

(5) " அஞ்சுகொ லாமவர் ஆடர வின்படம்
அஞ்சுகொ லாமவர் வெல்புல னாவன
அஞ்சுகொ லாமவர் காயப்பட் டான்கணை
அஞ்சுகொ லாமவர் ஆடின தாமே."

(6) ஆறுகொ லாமவர் அங்கம் படைத்தன
ஆறுகொ லாமவர் தம்மக னார்முகம்
ஆறுகொ லாமவர் தார்மிசை வண்டின்கால்
ஆறுகொ லாஞ்சுவை ஆக்கின தாமே."

(7) " ஏழுகொ லாமவர் ஊழி படைத்தன
ஏழுகொ லாமவர் கண்ட இருங்கடல்
ஏழுகொ லாமவர் ஆளும் உலகங்கள்
ஏழுகொ லாம்இசை ஆக்கின தாமே."

(8) " எட்டுக்கொ லாமவர் ஈறில் பெருங்குணம்
எட்டுக்கொ லாமவர் சூடும் இனமலர்
எட்டுக்கொ லாமவர் தோளிணை ஆவன
எட்டுக்கொ லாந்திசை ஆக்கின தாமே."

(9) " ஒன்பது போலவர் வாசல் வகுத்தன
ஒன்பது போலவர் மார்பினில் நூலிழை
ஒன்பது போலவர் கோலக் குழற்சடை
ஒன்பது போலவர் பாரிடம் தானே."

(10) " பத்துக்கொ லாமவர் பாம்பின்கண் பாம்பின்பல்
பத்துக்கொ லாமெயி றுந்நெறிந் துக்கன
பத்துக்கொ லாமவர் காயப்பட் டான்தலை
பத்துக்கொ லாமடி யார்செய்கை தானே."

பிறகு வரும் 36 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

"தீய பாம்பு கடித்த நஞ்சு அகன்று போக உயிர் பிழைத்த அழகிய வேதியராகிய அப்பூதியடிகள் நாயனாருடைய மூத்த புதல்வனாகிய திருநாவுக்கரசும் தான் அடைந்த துயிலிலிருந்து நீங்கி விழித்துக் கொண்டு வேகமாக எழுந்திருப்பவனைப் போல இடப வாகனத்தை ஓட்டுபவராகிய திருவதிகை வீரட்டானேசுவரர் தடுத்து ஆட்கொண்ட திருநாவுக்கரசு நாயனாருடைய சிவப்பாக உள்ள செந்தாமரை மலர்களைப் போன்ற திருவடிகளை அந்த மூத்த திருநாவுக்கரசு பணிய அதைப் பார்த்து அவனுக்குத் தூயதாகிய விபூதியை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் வழங்கியருளினார்." பாடல் வருமாறு :

" தீவிடம் நீங்க உய்ந்த
திருமறை யவர்தம் சேயும்
மேவிய உறக்கம் நீங்கி
விரைந்தெழு வானைப் போன்று
சேவுகைத் தவர்ஆட் கொண்ட
திருநாவுக் கரசர் செய்ய
பூவடி வணங்கக் கண்டு
புனிதநீ றளித்தார் அன்றே."

தீ - தீய; 'நெருப்பைப் போன்ற' எனலும் ஆம். விடம் - பாம்பு கடித்த நஞ்சு. நீங்க - அகன்று போக. உய்ந்த - தன்னுடைய உயிர் பிழைத்த. திரு - அழகிய; 'செல்வத்தைப் பெற்ற' எனலும் ஆம். மறையவர்தம் - வேதியராகிய அப்பூதியடிகள் நாயனாருடைய. தம் : அசைநிலை. சேயும் - மூத்த புதல்வனாகிய திருநாவுக்கரசும். மேவிய - தான் அடைந்த. உறக்கம்-துயிலிலிருந்து. நீங்கி-அகன்று விழித்துக் கொண்டு. விரைந்து - வேகமாக. எழுவானைப் போன்று - எழுந்திருப்பவனைப் போல. சே - இடபவாகனத்தை. உகைத்தவர் - ஓட்டுபவராகிய திருவதிகை வீரட்டானேசுவரர். ஆட்கொண்ட - தடுத்து ஆட்கொண்ட. திருநாவுக்கரசர் - திருநாவுக்கரசு நாயனாருடைய. செய்ய - சிவப்பாக உள்ள. பூ - செந்தாமரை மலர்களைப் போன்ற; ஒருமை பன்மை மயக்கம். வணங்க - அந்த மூத்த திருநாவுக்கரசு பணிய. க் : சந்தி. கண்டு - அதைப் பார்த்து. புனித - பரிசுத்தமான. நீறு - விபூதியை. அளித்தார் - அந்தத் திருநாவுக்கரசு நாயனார் அந்த மூத்த திருநாவுக்கரசுக்கு வழங்கியருளினார். அன்று, ஏ : இரண்டும் ஈற்றசை நிலைகள்.

அடுத்து வரும் 37 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'பிரிந்து போன உயிரை மீண்டும் பெற்ற தம்முடைய மூத்த புதல்வனாகிய திருநாவுக்கரசைப் பார்ப்பவர்கள் ஆகிய அவனுடைய அன்னையாரும் தகப்பனாரும் சிவபெருமானுக்கு உரிய திருத்தொண்டின் வழியைப் பாதுகாத்துப் புரிந்து கொண்டு வாழ்ந்தார்கள்; அங்கே நின்று கொண்டிருந்த அந்தத் திருநாவுக்கரசைப் பெற்றெடுத்த அன்னையாரும் தகப்பனாரும் ஆகிய இரண்டு பேர்களும் தாங்கள், ''தெரிந்து கொள்வதற்கு அருமையாக இருக்கும் பெருமையைப் பெற்ற திருவதிகை வீராட்டானேசுவரருடைய பக்தராகிய திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்தருளுவதற்குச் சிறிது நேரம் தாமதம் ஆதலாகிய துன்பத்தை இந்தத் திருநாவுக்கரசு

புரிந்து விட்டான்,'' என எண்ணி தங்களுடைய திருவுள்ளங்களில் வருத்தத்தை அடைந்தார்கள்." பாடல் வருமாறு :

"பிரிவுறும் ஆவி பெற்ற
பிள்ளையைக் காண்பார் தொண்டின்
நெறியினைப் போற்றி வாழ்ந்தார் ;
நின்றஅப் பயந்தார் தாங்கள்
'அறிவரும் பெருமை அன்பர்
அமுதுசெய் தருளு தற்குச்
சிறிதிடை யூறு செய்தான்
இவன்' என்று சிந்தை நொந்தார்.''

பிரிவு உறும் - உடம்பிலிருந்து பிரிவை அடைந்திருக்கும். ஆவி - தன்னுடைய உயிரை. பெற்ற - மீண்டும் பெற்ற. பிள்ளையை - அப்பூதியடிகள் நாயனாருடைய மூத்த புதல்வனாகிய திருநாவுக்கரசை. க் : சந்தி. காண்பார் - பார்த்த அவனுடைய அம்மையாரும் தகப்பனாரும். 'பார்த்த மக்கள்' எனலும் ஆம்; ஒருமை பன்மை மயக்கம். தொண்டின் நெறியினை - சிவபெருமானுக்கு உரிய திருத்தொண்டின் வழியை. ப் : சந்தி. போற்றி - பாதுகாத்துப் புரிந்து கொண்டு. வாழ்ந்தார் - வாழ்ந்து வந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம். நின்ற - அந்த இடத்தில் நின்று கொண்டிருந்த. அப்பயந்தார் - மூத்த திருநாவுக்கரசைப் பெற்றவர்களாகிய அந்த அப்பூதியடிகள் நாயனாரும், அவருடைய தர்ம பத்தினியாரும்; ஒருமை பன்மை மயக்கம். 'தாங்கள்' என்றது அந்த இருவரையும். அறிவரும் - தெரிந்து கொள்வதற்கு அருமையாக இருக்கும். பெருமை - பெருமையைப் பெற்ற. அன்பர் - திருவதிகை வீரட்டானேசுவரருடைய பக்தராகிய திருநாவுக்கரசு நாயனார். அமுது செய்தருளுதற்கு - திருவமுது செய்தருளுவதற்கு. ச் : சந்தி. சிறிது - சிறிது நேரம். இடையூறு - தாமதம் ஆதலாகிய துன்பத்தை. செய்தான் இவன் - இந்த மூத்த திருநாவுக்கரசு புரிந்து விட்டான். என்று -

என அவர்கள் எண்ணி. சிந்தை - தங்களுடைய திருவுள்ளங் களில்; ஒருமை பன்மை மயக்கம். நொந்தார் - வருத்தத்தை அடைந்தார்கள்; ஒருமை பன்மை மயக்கம்.

பிறகு உள்ள 38 - கவியின் உள்ளுறை வருமாறு :

"அவ்வாறு அந்த அப்பூதியடிகள் நாயனாரும் அவருடைய தர்ம பத்தினியாரும் அடைந்த வாட்டத்தைத் தெரிந்து கொண்டு வார்த்தைகளுக்கு அரசராகிய திருநாவுக்கரசு நாயனாரோடு கூட அந்த இருவரும் தாங்கள் வாழும் உயரமாக ஓங்கி நிற்கும் தம்முடைய திருமாளிகையை அடைந்து அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்தருள்வதற்கு அமைந்த பக்குவத் தோடு இருக்க, மூன்று புரிகளைக் கொண்ட பூணூல் புரண்டு பழகும் அழகிய மார்பைப் பெற்ற வேதியராகிய அப்பூதியடிகள் நாயனாரும் தம்முடைய திருவுள்ளத்தில் சுமந்து கொண்டிருந்த ஆனந்தத்தோடும் திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்வதற்குத் தக்கவையாகிய திருவமுதையும், பல கறியமுதுகளையும், பாயசத்தையும், ஆசனப் பலகையையும், கைகளைக் கழுவத் தண்ணீர் நிரம்பிய செம்பையும், கால்களைக் கழுவுவதற்குத் தண்ணீரை நிரப்பிய குடத்தையும், வாயைத் துடைத்துக் கொள்வதற்குச் சிறிய துண்டையும், திருவமுது செய்த பிறகு கைகளைக் கழுவிக் கொள்ள நீரை நிரப்பியுள்ள செம்பையும், திருவமுது செய்த பிறகு அமர்வதற்கு வேறோர் ஆசனப் பலகையையும், தரித்துக் கொள்வதற்கு வெற்றிலை, பாக்கு, சுண்ணாம்பு, ஏலம், கிராம்பு, ஜாதிக் காய், ஜாதி முந்திரி முதலியவற்றையும் அமைத்து வைத்து விட்டுத் திருநாவுக்கரசு நாயனாரிடம் அடைபவரானார்."

பாடல் வருமாறு :

"ஆங்கவர் வாட்டம் தன்னை
அறிந்துசொல் அரசர் கூட
ஓங்கிய மனையில் எய்தி
அமுதுசெய் தருள உற்ற

> பாங்கினில் இருப்ப முந்நூல்
> பயில்மணி மார்பர் தாமும்
> தாங்கிய மகிழ்ச்சி யோடும்
> தருவன சமைத்துச் சார்வார்.''

ஆங்கு - அவ்வாறு. அவர் - அந்த அப்பூதியடிகள் நாயனாரும் அவருடைய தர்மபத்தினியாரும் ஆகிய அவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வாட்டம் தன்னை - அடைந்த வாட்டத்தை. தன் : அசை நிலை. வாட்டம் - முகம் வாடியிருத்தல். அறிந்து - தெரிந்துகொண்டு. சொல் - வார்த்தைகளுக்கு; ஒருமை பன்மை மயக்கம். அரசர் கூட - அரசராகிய திருநாவுக்கரசு நாயனாரோடு கூட. ஓங்கிய - அந்த இருவரும் தாங்கள் வாழும் உயரமாக ஓங்கி நிற்கிற. மனையில் - திருமாளிகையை; உருபு மயக்கம். எய்தி - அடைந்து. அமுது செய்தருள - அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்தருளுவதற்கு. உற்ற - அமைந்த. பாங்கினில் - பக்குவத்தோடு; உருபு மயக்கம். இருப்ப - அந்த அப்பூதியடிகள் நாயனார் இருக்க. முந்நூல் - மூன்று புரிகளைக் கொண்ட பூணூல். பயில் - புரண்டு பழகும். மணி - அழகிய. மார்பர் தாமும் - மார்பைப் பெற்ற வேதியராகிய அப்பூதியடிகள் நாயனாரும். தாம் : அசைநிலை. தாங்கிய - தம்முடைய திருவுள்ளத்தில் சுமந்து கொண்டிருந்த. மகிழ்ச்சியோடும் - ஆனந்தத்தோடும். தருவன - திருநாவுக்கரசு நாயனார் திருவமுது செய்தருளுவதற்குத் தக்கவையாகிய திருவமுதையும், பல கறியமுதுகளையும், பாயாசத்தையும், மோர்க்குழம்பையும், ரஸத்தையும், மிளகுத் துவையலையும், தேங்காய்த் துவையலையும், நாரத்தங்காய் ஊறுகாயையும், கிடாரங்காய் ஊறுகாயையும், வெந்தய ஊறுகாயையும், மாங்காய் ஊறுகாயையும், மாம்பழ பச்சடியையும், மாம்பழத்தையும், பலாச்சுளைகளையும், தயிரையும், ஆசனப் பலகையையும், கைகளைக் கழுவத் தண்ணீர் நிரம்பிய செம்பையும், கால்களைக் கழுவுவதற்குத்

தண்ணீரை நிரப்பிய குடத்தையும், வாயைத் துடைத்துக் கொள்வதற்குச் சிறிய துண்டையும், உடுத்துக் கொள்ளப் புதிய ஆடையையும், அங்க வஸ்திரத்தையும், திருவமுது செய்த பிறகு கைகளைக் கழுவிக் கொள்ள நீரை நிரப்பியுள்ள செம்பையும், திருவமுது செய்த பிறகு அமர்வதற்கு வேறோர் ஆசனப் பலகையையும், பூசிக் கொள்வதற்கு அரைத்த சந்தனத்தையும், இட்டுக் கொள்ள விபூதியையும், தரித்துக் கொள்வதற்கு வெற்றிலை, பாக்கு, வாசனைச் சுண்ணாம்பு, ஏலம், கிராம்பு, ஜாதிக்காய், சத்தைக் காம்பு முதலிய வற்றையும். சமைத்து - அமைத்து வைத்து விட்டு. ச் : சந்தி, சார்வார் - திருநாவுக்கரசு நாயனாரைத் திருவமுது செய்தருளுவதற்காக அழைக்கும் பொருட்டு அந்த இடத்தை அந்த அப்பூதியடிகள் நாயனார் அடைவாரானார்.

பிறகு உள்ள 39 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'சான்றோர்கள் புகழ்ந்து கூறிய கோமயமாகிய சாணத்தைக் கரைத்த புனலால் தரையை விளங்குமாறு துடைத்து விளங்கிய வெண்மையாக உள்ள சுண்ணச் சாந்தையும் வைத்துச் சிறப்பைப் பெற்ற திருவிளக்கை ஏற்றி வைத்து, தம்முடைய திருமாளிகையின் பின்புறத் தோட்டத்தில் வளர்ந்து நிற்கும் அந்த வாழைமரத்தில் நீளமாக உள்ள குருத்திலையை வைத்துத் தண்ணீரினால் மகிழ்ச்சியை அடைந்து உடனே துடைத்துச் சுத்தம் செய்து அறுத்த வாழை இலையின் பக்கத்தை வலப்பக்கத்தில் இருக்குமாறு முறைப்படி வைத்தார் அந்த அப்பூதியடிகள் நாயனார்.' பாடல் வருமாறு :

**" புகழ்ந்தகோ மயத்து நீரால்**
**பூமியைப் பொலிய நீவித்**
**திகழ்ந்தவான் சுதையும் போக்கிச்**
**சிறப்புடைத் தீபம் ஏற்றி**

**நிகழ்ந்தஅக் கதலி நீண்ட**
**குருத்தினை விரித்து நீரால்**
**மகிழ்ந்துடன் விளக்கி ஈர்வாய்**
**வலம்பெற மரபின் வைத்தார்.''**

புகழ்ந்த - சான்றோர்கள் புகழ்ந்து கூறிய. கோமயத்து - கோமயமாகிய பசுமாட்டினுடைய சாணத்தைக் கரைத்த. நீரால் - புனலால். பூமியை - தரையை. ப்: சந்தி. பொலிய - விளங்குமாறு. நீவி - துடைத்து விட்டு. த்: சந்தி. திகழ்ந்த - விளங்கிய. வான் - வெண்மையாகிய. சுதையும் - சுண்ணச் சாந்தையும். போக்கி - வைத்து விட்டு. ச்: சந்தி. சிறப்புடை - சிறப்பைப் பெற்ற. த்: சந்தி. தீபம் - திருவிளக்கை. ஏற்றி - ஏற்றி வைத்து. நிகழ்ந்த-தம்முடைய திருமாளிகையின் பின் புறத்தில் உள்ள தோட்டத்தில் வளர்ந்து நிற்கும். அக்கதலி - அந்த வாழை மரத்தில். நீண்ட - நீளமாக உள்ள. குருத்தினை - குருத்திலையை. விரித்து - விரித்து வைத்து. நீரால் - தண்ணீரால். மகிழ்ந்து - மகிழ்ச்சியை அடைந்து. உடன் - உடனே. விளக்கி - துடைத்துச் சுத்தம் செய்து. ஈர் - அறுத்த வாழையிலையினுடைய. வாய் - பக்கத்தை. வலம் பெற - வலப்பக்கத்தில் இருக்குமாறு. மரபின் - முறைப் படி. வைத்தார் - அந்த அப்பூதியடிகள் நாயனார் வைத்தார். அப்பூதியடிகள் நாயனார்: தோன்றா எழுவாய்.

அடுத்து உள்ள 40-ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அந்த அப்பூதியடிகள் நாயனார் தமக்குத் திருத்தமாக உள்ள நறுமணம் கமழும் நல்ல தண்ணீரை வழங்கத் தம்முடைய அழகிய கைகளைத் துடைத்துக் கொள்ளும் பெருமையைப் பெற்ற தவசியாராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார், அந்த வேதியராகிய அப்பூதியடிகள் நாயனாரை அவருடைய புதல்வர்களோடு பார்த்து, "உம்முடைய பெறுவதற்கு அருமையாக விளங்கும் குமாரர்

களும் நீரும் இந்த இடத்தில் திருவமுது செய்வீர்களாக'' என்று அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய விருப்பத்தை அடைந்த திருவுள்ளத்தோடு அந்த அப்பூதியடிகள் நாயனார் மேம்பாட்டைப் பெற்றவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார் தமக்கு இட்ட கட்டளையின்படி திருவமுது செய்வாரானார்.' பாடல் வருமாறு :

'' திருந்திய வாச நன்னீர்
அளித்திடத் திருக்கை நீவும்
பெருந்தவர் மறையோர் தம்மைப்
பிள்ளைக ளுடனே நோக்கி
'அரும்புதல் வர்களும் நீரும்
அமுதுசெய் வீர்இங்' கென்ன
விரும்பிய உள்ளத் தோடு
மேலவர் ஏவல் செய்வார்.''

திருந்திய - அந்த அப்பூதியடிகள் நாயனார் தமக்குத் திருத்தமாக உள்ள. வாச - நறுமணம் கமழும். நல் - நல்ல. நீர் - தண்ணீரை. அளித்திட - வழங்க. த் : சந்தி. திரு - தம்முடைய அழகிய. க் : சந்தி. கை - கைகளை; ஒருமை பன்மை மயக்கம். நீவும் - துடைத்துக் கொள்ளும். பெருந்தவர் - பெரிய தவத்தைப் புரிந்த தவசியாராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். மறையோர் தம்மை - அந்த வேதியராகிய அப்பூதியடிகள் நாயனாரை. தம் : அசைநிலை. ப் : சந்தி. பிள்ளைகளுடன் - அவருடைய புதல்வர்களோடு. ஏ : அசை நிலை. நோக்கி - பார்த்து. அரும் - பெறுவதற்கு அருமையாக விளங்கும். புதல்வர்களும் - உம்முடைய குமாரர்களும். நீரும் - நீங்களும். இங்கு - இந்த இடத்தில். அமுது செய்வீர் - திருவமுது செய்வீர்களாக; ஒருமை பன்மை மயக்கம். என்ன - என்று அந்தத் திருநாவுக்கரசு நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. விரும்பிய - அவ்வாறு செய்வதற்கு விருப்பத்தை அடைந்த. உள்ளத்தோடு - திருவுள்ளத்தோடு. மேலவர் -

மேம்பாட்டைப் பெற்றவராகிய அந்தத் திருநாவுக்கரசு நாயனார். ஏவல் - தமக்கு இட்ட கட்டளையின்படி. செய்வார் - அந்த அப்பூதியடிகள் நாயனார் செய்வாரானார்.

அடுத்து உள்ள 41 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய புதல்வர்களும், வேதியராகிய தாமும், திருநாவுக்கரசு நாயனாருடைய பக்கத்தில் அமர்ந்து கொண்டு திருவமுது செய்ய தம்முடைய திருவுள்ளத்தில் மகிழ்ச்சியை மிகுதியாக அடைந்து அந்தத் திருமாளிகையில் உள்ள இல்லறத்துக்குரிய அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய அழகைப் பெற்ற தர்ம பத்தினியார் திருவமுதை எடுத்துக் கொண்டு வந்து வழங்கிப் படைக்க, கொத்துக்கள் மலர்ந்த கொன்றை மலர் மாலையைச் சூடியிருக்கும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய நடராஜப் பெருமானாருடைய அடியவராகிய அந்த அப்பூதியடிகள் நாயனாரோடும் அழகிய செந்தமிழ் மொழியை ஆட்சி புரியும் அரசராகிய திருநாவுக்கரசு நாயனார் அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய திருமாளிகையில் திருவமுது செய்தருளினார்.' பாடல் வருமாறு :

"மைந்தரும் மறையோர் தாமும்
    மருங்கிருந் தமுது செய்யச்
சிந்தைமிக் கில்ல மாதர்
    திருவமு தெடுத்து நல்கக்
கொந்தவிழ் கொன்றை வேணிக்
    கூத்தனார் அடியா ரோடும்
அந்தமி ழாளி யார்அங்
    கமுதுசெய் தருளி னாரே."

மைந்தரும் - அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய புதல்வர்களும்; ஒருமை பன்மை மயக்கம். மறையோர் தாமும் - வேதியராகிய தாமும். 'தாமும்' என்றது 'அப்பூதியடிகள் நாயனாரும்' என்றபடி. மருங்கு -

திருநாவுக்கரசு நாயனாருடைய பக்கத்தில். இருந்து - அமர்ந்து கொண்டு. அமுது செய்ய - திருவமுது செய்ய. ச் : சந்தி. சிந்தை - தம்முடைய திருவுள்ளத்தில். மிக்கு - மகிழ்ச்சியை மிகுதியாக அடைந்து. இல்ல மாதர் - அந்தத் திருமாளிகையில் உள்ள இல்லறத்துக்கு உரிய அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய அழகைப் பெற்ற தர்மபத்தினியார். திருவமுது - திருவமுதை. எடுத்து - சமையலறையிலிருந்து எடுத்துக் கொண்டு வந்து. நல்க - வழங்கி நுனி வாழையிலையில் படைக்க. க் : சந்தி. கொந்து - கொத்துக்கள்; ஒருமை பன்மை மயக்கம். அவிழ் - மலர்ந்த. கொன்றை-கொன்றைமலர் மாலையை; ஆகுபெயர். வேணி - சூடியிருக்கும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேல் பெற்றவராகிய. க் : சந்தி. கூத்தனார் - நடராஜப் பெருமானாருடைய. அடியாரோடும் - அடியவராகிய அந்த அப்பூதியடிகள் நாயனாரோடும். அம் - அழகிய. தமிழ் - செந்தமிழ் மொழியை. ஆளியார் - ஆட்சி புரியும் அரசராகிய திருநாவுக்கரசு நாயனார். அங்கு - அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய திருமாளிகையில். அமுது செய்தருளினார்-திருவமுது செய்தருளினார். ஏ : ஈற்றசைநிலை.

பிறகு வரும் 42 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'பெருமையைப் பெற்ற தவத்தைப் புரிந்த வேதியராகும் அப்பூதியடிகள் நாயனாருடைய பல வகையான செல்வங்கள் நிரம்பியுள்ள திருமாளிகையில் திருவமுது செய்துவிட்டு, தம் மனத்தில் உண்டான காதலையும் நட்பையும் அவர்களுக்கு அளித்து, அப்பூதியடிகள் நாயனாருடனும் மற்றும் அவர் பத்தினியாரோடும் மைந்தர்களோடும் பல நாட்கள் உடன் தங்கியிருந்த பின்னர், மேன்மை தங்கியிருக்கும் நாக்குக்கு அரசராகிய திருநாவுக்கரசு நாயனார் பழமையான ஊராகிய திருப்பழனத்தில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஆபத்சகாயேசுவரருடைய திருப்பாதங்களைச் சேர்ந்து

நல்ல தமிழ் மொழியில் அமைந்த திருப்பதிகங்களைப் பாடியருளுபவரானார்.' பாடல் வருமாறு:

"மாதவ மறையோர் செல்வ மனையிடை அமுது செய்து
காதல்நண் பளித்துப் பன்னாள் கலந்துடன் இருந்த பின்றை
மேதகு நாவின் மன்னர் விளங்கிய பழன மூதூர்
நாதர்தம் பாதம் சேர்ந்து நற்றமிழ்ப் பதிகம் செய்வார்."

மா - பெருமையைப் பெற்ற. தவ - தவத்தைப் புரிந்த. மறையோர் - வேதியராகிய அப்பூதியடிகள் நாயனாருடைய. செல்வ - பல வகையான செல்வங்கள் நிரம்பியிருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். மனையிடை - திருமாளிகையில். அமுது செய்து - திருவமுது செய்து அருளி. காதல் - தம் மனத்தில் உண்டான விருப்பத்தையும். நண்பு - நட்பையும். அளித்து - அவர்களுக்கு வழங்கி. ப்: சந்தி. பன்னாள் - பல நாட்கள். கலந்து உடன் - அவர்களோடு சேர்ந்து. இருந்த - தங்கியிருந்த. பின்றை - பின்னர். மேதகு - மேன்மை பொருந்தியிருக்கும். நாவின் - நாக்குக்கு. மன்னர் - அரசராகிய திருநாவுக்கரசு நாயனார். விளங்கிய - நிலை பெற்றிருக்கும். பழன மூதூர் - பழமையான ஊராகிய திருப்பழனத்தில். நாதர் தம் - கோயில் கொண்டிருக்கும் ஆபத்சகாயேசுவரருடைய. தம்: அசைநிலை. பாதம் - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். சேர்ந்து - அடைந்து. நல் - நல்ல. தமிழ் - செந்தமிழ் மொழியில் அமைந்த. ப்: சந்தி. பதிகம் - திருப்பதிகங்களை; ஒருமை பன்மை மயக்கம். செய்வார் - பாடியருளுபவரானார்.

பின்பு வரும் 43 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திங்களூரில் வாழும் அப்பூதியடிகள் நாயனாருடைய அடிமைத்திறத்தைச் சிறப்பாக எடுத்து ஓதி அமைந்த தம்முடைய திருமேனி முழுவதும் விபூதியைப் பூசிக் கொண்டவராகிய அந்த அப்பூதியடிகள்

நாயனாரை தாம் விழையும் "சொன்மாலை" என்னும் சொற்றொடர் அமைந்த ஒரு திருப்பதிகத்தை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி இந்த ஐசுவரி யத்தைப் பெற்றிருக்கும் நல்லவராகிய அந்த அப்பூதியடிகள் நாயனாருடைய வரம்பு இல்லாத பக்தியால் என்றைக்கும் கூறுகின்ற இலாபத்தைப் பெற்றுக் கொண்டவரைப் போலத் திருநாவுக்கரசு நாயனாருடைய திருவடிகளைப் பற்றுக்கோடாக அந்த அப்பூதியடிகள் நாயனார் பற்றிக் கொண்டார்.' பாடல் வருமாறு :

"அப்பூதி அடிக ளார்தம்
அடிமையைச் சிறப்பித் தான்ற
மெய்ப்பூதி அணிந்தார் தம்மை
விரும்பு,'சொன் மாலை' வேய்ந்த
இப்பூதி பெற்ற நல்லோர்
எல்லையில் அன்பால் என்றும்
செப்பூதி யங்கைக் கொண்டார்
திருநாவுக் கரசர் பாதம்."

அப்பூதியடிகளார் தம் - அந்தத் திங்களூரில் வாழும் அப்பூதி அடிகள் நாயனாருடைய. தம் : அசைநிலை. அடிமையை - அடிமைத் திறத்தை. ச் : சந்தி. சிறப்பித்து - சிறப்பாக எடுத்து ஓதி. ஆன்ற-அமைந்த, மெய்- தம்முடைய திருமேனி முழுவதும். ப் : சந்தி. பூதி - விபூதியை. அணிந்தார் தம்மை - பூசிக் கொண்டவராகிய அந்த அப்பூதியடிகள் நாயனாரை. தம் : அசை நிலை. விரும்பு - தாம் பாடியருள விழையும். 'சொன் மாலை' வேய்ந்த - 'சொன்மாலை' என்னும் சொற்றொடர் அமைந்த ஒரு திருப்பதிகத்தை அந்தத் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளி. இப்பூதி - இந்த ஐசுவரியத்தை. என்றது திருநாவுக்கரசு நாயனாரைத் தம்முடைய திரு மாளிகையில் அமுது செய்விக்கும் பாக்கியத்தை. பெற்ற - அடைந்த. நல்லோர் - நல்லவராகிய அந்த அப்பூதி

யடிகள் நாயனாருடைய. எல்லை - வரம்பு. இல் - இல்லாத; கடைக்குறை. அன்பால் - பக்தியினால். என்றும் - எந்தக் காலத்திலும். செப்பு - சான்றோர்கள் கூறுகின்ற. ஊதியம் - இலாபத்தை. கைக் கொண்டார் - பெற்றுக் கொண்டவரைப் போல; உவம ஆகுபெயர். திருநாவுக்கரசர் - திருநாவுக்கரசு நாயனாருடைய. பாதம் - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். கைக் கொண்டார் - பற்றுக் கோடாக அந்த அப்பூதியடிகள் நாயனார் பற்றிக் கொண்டார்.

அடுத்து உள்ள 44 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'இவ்வாறு அந்த அப்பூதியடிகள் நாயனார் திருநாவுக் கரசு நாயனாருடைய திருநாமத்தைத் துதித்து எந்த வகை யான செல்வமும் ஒவ்வொரு நாளும் அந்த அருமையான தவத்தைப் புரிந்த தவசியாராகிய திருநாவுக்கரசு நாயனா ருடைய தவத்தைப் போன்ற திருவடிகளே என்று தெரிந்து கொண்டு அடைபவர் போகும் செவ்வையாகிய வழி அந்தச் சைவ சமய வழியே ஆக எண்ணி அழகிய தில்லையாகிய சிதம்பரத்தில் உள்ள திருக்கோயிலில் விளங்கும் திருச்சிற்றம் பலமாகிய சிற்சபையில் திரு நடனம் புரிந்தருளும் மானினு டைய அழகிய கண்களைப் போன்ற விழிகளைப் பெற்ற சிவகாமியம்மையைத் தம்முடைய வாம பாகத்தில் எழுந்தருளுமாறு செய்தருளிய நடராஜப் பெருமானு டைய நல்ல வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் திருவடிகளை அந்த அப்பூதியடிகள் நாயனார் அடைந் தார்.' பாடல் வருமாறு :

" இவ்வகை அரசின் நாமம்
ஏத்திஎப் பொருளும் நாளும்
அவ்வருந் தவர்பொற் றாளே
எனஉணர்ந் தடைவார் செல்லும்
செவ்விய நெறிய தாகத்
திருத்தில்லை மன்றுள் ஆடும்

**நல்லியங் கண்ணாள் பங்கர்**
**நற்கழல் நண்ணி னாரே.''**

இவ்வகை - இவ்வாறு. அரசின் - அந்த அப்பூதியடிகள் நாயனார் திருநாவுக்கரசு நாயனாருடைய. அரசு: திணை மயக்கம். நாமம் - திருநாமத்தை. ஏந்தி - துதித்து. எப்பொருளும் - எந்த வகையான செல்வமும். நாளும் - ஒவ்வொரு நாளும். அவ்வருந்தவர் - அந்த அருமையாகிய தவத்தைப் புரிந்த தவசியாராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய. பொன் - தங்கத்தைப் போன்ற; உவம ஆகுபெயர். தாளே - திருவடிகளே; ஒருமை பன்மை மயக்கம். என - என்று; இடைக்குறை. உணர்ந்து - தெரிந்து கொண்டு. அடைவார் - அடைபவர். செல்லும் - போய்ச் சேரும். செவ்விய - செவ்வையாகிய. நெறி - வழி. அது ஆக - அந்தச் சைவ சமய வழியே ஆக எண்ணி. த்: சந்தி. திரு - அழகிய; 'செல்வர்கள் வாழும்' எனலும் ஆம். த்: சந்தி. தில்லை - தில்லையாகிய சிதம்பரம் ஆலயத்தில் விளங்கும். மன்றுள் - திருச்சிற்றம்பலமாகிய சிற்சபையில். ஆடும் - திரு நடனம் புரிந்தருளும். நவ்வி - மானினுடைய கண்களைப் போன்ற; ஆகு பெயர். அம் - அழகிய. கண்ணாள் - கண்களைப் பெற்றவளாகிய சிவகாம சுந்தரியை. கண்: ஒருமை பன்மை மயக்கம். பங்கர் - தம்முடைய வாம பாகத்தில் எழுந்தருளச் செய்தவராகிய நடராஜப் பெருமானாருடைய. நல்-பிறவிப் பிணியைத் தீர்க்கும் நல்ல. கழல் - வெற்றிக் கழலைப் பூண்டுகொண்டு விளங்கும் திருவடிகளை; ஆகு பெயர். நண்ணினார் - அந்த அப்பூதியடிகள் நாயனார் அடைந்தார்; சிவகதியை அடைந்தார். ஏ: ஈற்றசை நிலை.

இந்த அப்பூதியடிகள் நாயனார் புராணத்தில் இறுதியாக வரும் 45 - ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

'மான் குட்டியை ஏந்தும் திருக்கரத்தைப் பெற்ற வராகிய நடராஜப் பெருமானாருடைய தங்கத்தைப்

போன்ற திருவடிகளை வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய சம்பந்தத்தால் பெற்றிருக்கும் மேம்பாட்டை உடைய அப்பூதியடிகள் நாயனாராகும் அந்தணருடைய திருவடிகளை வாழ்த்தி வணங்கிவிட்டு, தாள்களைப் பெற்ற செந்தாமரை மலர்களும், வெண்டாமரை மலர்களும் மலர்ந்துள்ள வாவியும், வயல்களும் சுற்றி யிருக்கும் சாத்த மங்கையில் வாழும் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றியவராகிய திருநீல நக்க நாயனார் ஆற்றிய திருத்தொண்டுகளாகிய வேலைகளை இனிமேல் பாடத் தொடங்கினேன்.' பாடல் வருமாறு :

**'' மான்மறிக் கையர் பொற்றாள்**
**வாகீசர் அடைவால் பெற்ற**
**மேன்மைஅப் பூதி யாராம்**
**வேதியர் பாதம் போற்றிக்**
**கான்மலர்க் கமல வாவிக்**
**கழனிசூழ் சாத்த மங்கை**
**நான்மறை நீல நக்கர்**
**திருத்தொழில் நவில லுற்றேன்.''**

இந்தப் பாடல் அடுத்து வரும் திரு நீல நக்க நாயனார் புராணத்திற்குத் தோற்றுவாயாகச் சேக்கிழார் பாடி யருளியது.

மான்மறி - மான் குட்டியை ஏந்தும். க் : சந்தி. கையர் - திருக்கரத்தைப் பெற்றவராகிய நடராஜப் பெருமானாருடைய. பொன் - தங்கத்தைப் போன்ற; உவம ஆகு பெயர். தாள் - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். வாகீசர் - வாகீசராகிய திருநாவுக்கரசு நாயனாருடைய. அடைவால்-சம்பந்தத்தால். பெற்ற-பெற்றுள்ள. மேன்மை - மேம்பாட்டை உடைய. அப்பூதியாராம் - அப்பூதியடிகள் நாயனாராம். வேதியர் - அந்தணரினுடைய. பாதம்-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். போற்றி_

வாழ்த்தி வணங்கிவிட்டு. க் : சந்தி. தாள் - தாள்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மலர்க்கமல - செந்தாமரை மலர்களும், வெண்டாமரை மலர்களும் மலர்ந்துள்ள; ஒருமை பன்மை மயக்கம். வாவி - வாவியையும். வாவி: வாபீ என்னும் வட சொல்லின் திரிபு. க் : சந்தி. கழனி - வயல்களும்; ஒருமை பன்மை மயக்கம். சூழ் - சுற்றியிருக்கும். சாத்த மங்கை - சாத்த மங்கை என்னும் சிவத்தலத்தில் வாழும். நான் மறை - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் ஆகிய நான்கு வேதங்களையும் முறைப்படி அத்தியயனம் செய்து நிறைவேற்றியவராகிய; ஆகு பெயர். நீல நக்கர் - திருநீல நக்க நாயனார். திருத்தொழில் - புரிந்த திருத் தொண்டுகளாகிய வேலைகளை; ஒருமை பன்மை மயக்கம். நவிலலுற்றேன் - அடியேன் இனிமேல் பாடத் தொடங்கினேன்.

**சாத்தமங்கை** : இது சோழ நாட்டிலுள்ள சிவத்தலம். இங்கே திருக்கோயில் கொண்டிருப்பவர் அயவந்தீசுவரர். அம்பிகை மலர்க்கண்ணம்மை. இந்தச் சிவத்தலத்தில் விளங்கும் திருக்கோயிலுக்கு அயவந்தி என்பது பெயர். இந்தச் சிவத்தலம் திருநள்ளாற்றுக்குத் தென் மேற்குத் திசையில் 5 மைல் தூரத்தில் உள்ளது. இது திருநீலநக்க நாயனாருடைய திருவவதாரத் தலம். அந்த நாயனார் அயவந்தீசுவரரைத் தரிசிப்பதற்காகத் தம்முடைய பத்தினியாரோடு ஆலயத்துக்குச் சென்ற சமயத்தில் ஒரு சிலந்திப் பூச்சி சிவலிங்கத்தின் மேல் விழ, அந்தத் திருநீல நக்க நாயனாருடைய தர்ம பத்தினியார் அன்பு மிகுதியினால் அந்தப் பூச்சியைத் தம்முடைய திருவாயினால் ஊதி அகற்ற, அந்தத் திருநீல நக்க நாயனார் தம்முடைய பத்தினியார் அவ்வாறு செய்தது உசிதமற்ற செயல் என்று எண்ணி தம்முடைய மனைவியாரை ஒழித்து வைத்து இருக்க, அயவந்தீசுவரர் அந்த நாயனாருடைய கனவில் தோன்றி அவருடைய பத்தினியார் ஊதிய இடத்தைத்

தவிர மற்ற இடங்களில் அந்தச் சிலந்திப் பூச்சியினால் கொப்புளங்களாக இருப்பதைக் காட்டியருளி அந்தப் பெண்மணியாருடைய அன்பை வெளிப்படுத்தி அந்த மாதரசியாரை மீண்டும் திருநீல நக்க நாயனாரோடு சேர்த்தருளிய தலம் இது. "அடிகள் நக்கன் பரவ அயவந்தி அமர்ந்தவனே.", "நிறையினால் நீல நக்கன் நெடுமா நகரென்று தொண்டர், அறையும் ஊர் சாத்தமங்கை" என்று தேவாரத்தில் வருவதைக் காண்க.

இந்தத் தலத்தைப் பற்றிய ஒரு பாசுரம் வருமாறு:

"பொடிதனைப் பூசும் மார்பிற்
புரிநூலொரு பாற்பொருந்தக்
கொடியன சாய வாளா
டுடனாயதும் கூடுவதே
கடிமணம் மல்கி நாளும்
கமழும்பொழிற் சாத்தமங்கை
அடிகள்நக் கன்பரவ் வயந்தி
அமர்ந்தவனே."

இந்தத் தலத்தைப் பற்றி பஞ்சமப் பண்ணில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு:

"திருமலர்க் கொன்றை மாலை
திளைக்கும் மதிசென்னி வைத்தீர்
இருமலர்க் கண்ணி தன்னோ
டுடனாவதும் ஏற்ப தொன்றே
பெருமலர்ச் சோலை மேகம்
உரிஞ்சும் பெருஞ்சாத்த மங்கை
அருமலர் ஆதி மூர்த்தி
அயவந்தி அமர்ந்த வனே."

# திருநீல நக்க நாயனார் புராணம்

**பெரிய புராணத்தில் 5 - ஆவதாக உள்ள திருநின்ற** *சருக்கத்தில் 6 - ஆவதாக இருப்பது திருநீல நக்க நாயனார் புராணம். அதில் வரும் முதற் பாடலின் உள்ளுறை வருமாறு :*

*'மலர்ந்த தாமரை மலரின் நடுவில் உள்ள கொட்டையின் மேல் ஒன்றோடு ஒன்று மோதும் கயல் மீன்கள் துள்ளிக் குதிக்கும் முற்றி விளைந்த சம்பா நெற் பயிர்கள் விளையும் வயல்கள் காடுகளைப் போலச் சுற்றியிருக்கும் காவிரியாறு பாயும் சோழ நாட்டில் சாத்தமங்கை என்று இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள் எல்லாரும் புகழைக் கூறும் தகுதியை உடையது, வாய்ப்பாக அமைந்த மங்கல காரியங்களை நடத்தும் வேதியர்கள் வாழும் முதன்மையைப் பெற்ற சிவத்தலத்தினுடைய அழகு இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள் புகழைக் கூறும் தகுதியை உடையது.' பாடல் வருமாறு :*

**"பூத்த பங்கயப் பொருட்டின்மேற்**
**பொருகயல் உகளும்**
**காய்த்த செந்நெலின் காடுசூழ்**
**காவிரி நாட்டுச்**
**சாத்த மங்கைஎன்று லகெலாம்**
**புகழ்வுறும் தகைத்தால்**
**வாய்த்த மங்கல மறையவர்**
**முதற்பதி வளப்பு."**

பூத்த - மலர்ந்த. பங்கய - தாமரை மலரில். ப் : சந்தி. பொருட்டின் மேல் - நடுவில் உள்ள கொட்டையின் மேல். பொரு - ஒன்றனோடு ஒன்று மோதிக் கொள்ளும். கயல் - கயல் மீன்களும்; ஒருமை பன்மை மயக்கம். உகளும் - துள்ளிக் குதிக்கும். காய்த்த செந்நெலின் - சம்பா நெற் பயிர்கள் விளைந்த. காடு - வயல்கள் காடுகளைப் போல; ஒருமை பன்மை மயக்கம். சூழ் - சுற்றியிருக்கும். காவிரி - காவிரியாறு பாயும். நாட்டு - சோழ வள நாட்டில். ச் : சந்தி. சாத்த மங்கை என்று - சாத்த மங்கை என. வாய்த்த - வாய்ப்பாக அமைந்த. மங்கல - மங்கலக் காரியங்களைச் செய்யும். அவையாவன: குழந்தை பிறந்த போது புண்யாஹவாசனம் செய்தல், சிறுவர்களுக்கு உபநயனம் செய்வித்தல், கன்னிகைகளுக்குத் திருமணம் செய்து வைத்தல், பிரமசாரிகளுக்குத் திருமணம் செய்து வைத்துத் தம்முடைய மனைவிமாருடன் இல்லற வாழ்க்கையை நடத்துமாறு புரிதல், சாந்தி முகூர்த்தத்தை நடத்துதல் முதலியன. மறையவர் - வேதியர்கள் வாழும்; ஒருமை பன்மை மயக்கம். முதல் - முதன்மையைப் பெற்ற. பதி - சிவத்தலமாகிய. வனப்பு - அழகு. உலகு - இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். எலாம் - எல்லாரும்; இடைக் குறை. புகழ்வுறும் - புகழைக் கூறும். தகைத்து - தகுதியை உடையது. ஆல் : அசைநிலை.

பிறகு வரும் 2 - ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு :

'நன்மைகள் பல அமைந்திருக்கும் அந்தச் சிவத்தலமாகிய சாத்த மங்கையில் நறுமணம் கமழும் நெற்றிகளைப் பெற்ற மடப்பத்தைக் கொண்ட பெண்மணிகள் மென்மையாக உள்ள செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், ஆம்பல் மலர், அல்லி மலர், குமுத மலர் முதலிய மலர்கள் மலர்ந்திருக்கும் தடாகத்தில் படிந்து நீராட அந்தப் பெண் மணிகளோடு கலந்து அன்னப் பறவை துறைக்கு முன்னால் ஆடும்; நாகணவாய்ப் புட்கள் பல வேத பாட சாலைகளில்

பிரமசாரிகள் அத்தியயனம் செய்யும் சாம வேதத்தை அவர்களோடு பழகும்.' பாடல் வருமாறு :

"நன்மை சாலும்அப் பதியிடை
நறுநுதல் மடவார்
மென் மலர்த்தடம் படியமற்
றவருடன் விரவி
அன்னம் முன்றுறை ஆடுவ;
பாடுவ சாமம்
பன்ம றைக்கிடை யுடன்பயிற்
றுவபல பூவை."

நன்மை - நன்மைகள்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன : நன்மக்கள் வாழ்ந்திருத்தல், சிறந்த திருமாளிகைகளை உடையதாக விளங்குதல், நீர்வளம் அமைதல், நிலவளம் அமைந்திருத்தல், ஆலயங்கள் பல விளங்குதல், விருந்தினர்களை உபசரித்து இல்லத்தார் விருந்துணவை வழங்குதல் முதலியவை. சாலும் - அமைந் திருக்கும். அப்பதியிடை - அந்தச் சிவத்தலமாகிய சாத்த மங்கையில். நறு - நறுமணம் கமழும். நுதல் - நெற்றி களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மடவார் - மடப்பத்தை உடைய பெண்மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். மென் - மென்மையாகிய மலர் - செந்தாமரை மலர், வெண்டாமரை மலர், ஆம்பல் மலர், அல்லி மலர், குமுத மலர், நீலோற்பல மலர், செங்குவளை மலர் முதலிய நீர்ப் பூக்கள் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். த் : சந்தி. தடம் - தடாகத்தில். படிய - படிந்து நீராட. மற்று : அசைநிலை. அவருடன் - அந்தப் பெண்மணிகளோடு; ஒருமை பன்மை மயக்கம். விரவி - கலந்து. அன்னம் - அன்னப் பறவைகள்; ஒருமை பன்மை மயக்கம். முன்துறை - நீர் நிலைத் துறைக்கு முன்னால். ஆடுவ - ஆடிக் கொண்டிருப்பவையாக விளங்கும். பல பூவை - பல நாகணவாய்ப் புட்கள், மைனாக் குருவிகள்; ஒருமை பன்மை மயக்கம். பல் - பல. மறைக் கிடையுடன் - வேத

பாடசாலைகளில் அத்தியயனம் செய்யும் பிரமசாரி களோடு; திணை மயக்கம். சாமம் - சாம வேதத்தை. பயிற்றுவ - பழகுவனவாக இருக்கும்.

பிறகு வரும் 3 - ஆம் பாடலின் கருத்து வருமாறு ;

' ''சான்றோர்கள் ஆராய்ந்து உணர்ந்த உண்மையான பொருள் விபூதி'' என்று எண்ணி அந்த விபூதியை வளர்த்து வரும் அந்தச் சிவத்தலமாகிய சாத்த மங்கையில் அமைந்த ஆகவனீயம், காருக பத்தியம், தாட்சிணாக்கினி என்ற மூன்று நெருப்புக்களையும் வளர்த்துக் கொண்டு இருப்பவர்கள் இரண்டு பிறப்புக்களைப் பெற்ற துவிஜர் களாகிய வேதியர்கள்; நல்ல தருமங்களாகிய கடலில் நீந்திச் செல்கின்ற பான்மையைப் போல தாங்கள் வளர்த்து வரும் அந்த மூன்று நெருப்புக்களை தம்மிடம் வாய்ப்பாக அமைந்த கற்பு எனும் தீயோடு நான்கு தீக்கள் என்று கூறுமாறு வளர்த்து வருகிறவர்கள் மடப்பத்தைக் கொண்ட பெண்மணிகள்.' பாடல் வருமாறு ;

"'ஆய்ந்த மெய்ப்பொருள் நீ'றென
வளர்க்கும் அக்காப்பில்
ஏய்ந்த மூன்றுதீ வளர்த்துள்ளார்
இருபிறப் பாளர்;
நீந்து நல்லறம் நீர்மையின்
வளர்க்கும் அத்தீயை
வாய்ந்த கற் புடன்
வளர்ப்பர்கள் மடவார்.''

ஆய்ந்த - சான்றோர்கள் ஆராய்ந்து தெரிந்து கொண்ட. மெய் - உண்மையாகிய. ப் : சந்தி. பொருள் - செல்வம். நீறு - விபூதியே. என - எண்ணி; இடைக்குறை. வளர்க்கும் - அந்த விபூதியை வளர்த்து வரும்; என்றது அனைவரும் விபூதியை அணிந்து கொள்ளச் செய்தலை. அக்காப்பில் - அந்தச் சிவத்தலமாகிய சாத்த மங்கையில். ஏய்ந்த - தமக்கு அமைந்த. மூன்று தீ - ஆகவனீயம், காருக பத்தியம், தட்சிணாக்கினி என்னும் மூன்று நெருப்புக்

களையும். தீ : ஒருமை பன்மை மயக்கம். வளர்த்துள்ளார் - வளர்த்துக் கொண்டு இருப்பவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். உளார் : இடைக்குறை. இருபிறப்பாளர் - பூணூலை அணிவதற்கு முன்பு ஒரு பிறப்பையும் அதற்குப் பிறகு மற்றொரு பிறப்பையும் பெறும் துவிஜர்களாகிய அந்தணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பிறப்பு: ஒருமை பன்மை மயக்கம். நீந்து நல்லறம் - நல்ல தருமங்களாகிய கடலில் நீந்திச் செல்கின்ற; உருவகம்- அறம் - முப்பத்திரண்டு தருமங்கள்; ஒருமை பன்மை மயக்கம். அவை இன்ன என்பதை வேறோரிடத்தில் கூறினோம், ஆண்டுக் கண்டுணர்க. நீர்மையின் - பான்மையைப் போல. வளர்க்கும் - தாங்கள் வளர்த்து வரும். அத்தீயை - அந்த மூன்று நெருப்புக்களையும்; ஒருமை பன்மை மயக்கம். வாய்ந்த - வாய்ப்பாக அமைந்த. கற்புடன்-கற்பு என்னும் தீயோடு; "அல்கியான் என்னை இவ்வன்னை நூற்பெறும், பொங்கு வெந்தீச்சுட." (மீனாட்சிப் படலம், 91) என்று கம்பராமாயணத்தில் வருவதைக் காண்க. மடவார் - மடப்பத்தை உடைய பெண்மணிகள்; ஒருமை பன்மை மயக்கம். வளர்ப்பர்கள் - வளர்த்து வருவார்கள்.

அடுத்து உள்ள 4 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'நல்ல பண்புகளைப் பெற்றுத் தங்களுடைய வாழ்க்கையை நடத்தி வந்த அந்த அழகிய வேதியர்கள் வாழும் செல்வச் செழிப்பைப் பெற்ற பழைய ஊராகிய சாத்தமங்கலத்தில் இந்த மண்ணுலகத்தில் மிகுதியாக உள்ள இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களினுடைய அர்த்தத்தை விளக்கமாக எடுத்துக் கூறிய நன்மையைப் பெற்றவர், ஆலகால விடத்தை தங்க வைத்திருக்கும் திருக் கழுத்தைப் பெற்றவராகிய அயவந்தீசுவரருடைய திருத் தொண்டராக விளங்கும் பக்தர் திருநீலநக்க நாயனார் என்னும் திருநாமத்தைப் பெற்றவர் அந்தச் சாத்த

மங்கையில் தம்முடைய இல்வாழ்க்கையை நடத்தி வந்திருப்பவராக ஆனார்.' பாடல் வருமாறு :

"சீலம் உய்த்தஅத் திருமறை
யோர்செழு மூதூர்
ஞாலம் மிக்கநான் மறைப்பொருள்
விளக்கிய நலத்தார்
ஆலம் வைத்தகண் டத்தவர்
தொண்டராம் அன்பர்
நீல நக்கனார் என்பவர்
நிகழ்ந்துளார் ஆனார்."

சீலம் - நல்ல பண்புகளைப் பெற்று; ஒருமை பன்மை மயக்கம். உய்த்த - தங்களுடைய வாழ்க்கையை நடத்தி வந்த. அத்திரு - அந்த அழகிய. திரு-'செல்வத்தைப் பெற்ற' எனலும் ஆம். மறையோர் - வேதியர்கள் வாழும்; ஒருமை பன்மை மயக்கம். செழு - செல்வச் செழிப்பைப் பெற்ற. மூதூர் - பழைய ஊராகிய சாத்தமங்கையில். ஞாலம் - இந்த மண்ணுலகத்தில். மிக்க - மிகுதியாக உள்ள. நான்மறை - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களினுடைய. மறை : ஒருமை பன்மை மயக்கம். ப் : சந்தி. பொருள் - அர்த்தத்தை. விளக்கிய - விளக்கமாக எடுத்துக் கூறிய. நலத்தார் - நல்ல தன்மையைப் பெற்றவர். ஆலம் - ஆலகால விடத்தை. வைத்த - தங்க வைத்த. கண்டத்தவர் - திருக்கழுத்தைப் பெற்றவராகிய அயவந்தீசுவரருடைய. தொண்டராம் - திருத்தொண்டராக விளங்கும். அன்பர் - பக்தர். நீலநக்கனார் - திருநீல நக்க நாயனார். என்பவர் - என்னும் திருநாமத்தைப் பெற்றவர். நிகழ்ந்துளார் - அந்தச் சாத்தமங்கையில் தம்முடைய இல் வாழ்க்கையை நடத்தி வந்திருப்பவராக. உளார் : இடைக்குறை. ஆனார் - ஆயினார்.

பிறகு வரும் 5 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்தத் திருநீலநக்க நாயனார், "இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களுக்கு உள்ளே தங்கும் பரம் பொருள் ஆக விளங்குபவை பரவிய கங்கையாற்றின் நீரைத் தங்க வைத்த சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்ற தலைவராகிய அயவந்தீசுவரரையும் அந்த ஈசுவரருடைய அடியவர்களையும் விரும்பி அவர்களுடைய திருவடிகளுக்கு அருச்சனையைச் செய்வதும், அவர்களுடைய திருவடிகளில் விழுந்து வணங்குவதும் ஆகும்" என எண்ணி விருப்பத் தோடு அந்த அருச்சனையைச் செய்வதும், அந்த அடியவர் களை வணங்குவதும் ஆகிய செயல்களையுமே புரியும் திருவுள்ளத்தைப் பெற்றவர் அந்தத் திருநீலநக்க நாயனார்.' பாடல் வருமாறு :

"'வேத உள்ளுறை ஆவன
விரிபுனல் வேணி
நாதர் தம்மையும் அவரடி
யாரையும் நயந்து
பாதம் அருச்சனை புரிவதும்
பணிவதும்' என்றே
காத லால்அவை இரண்டுமே
செய்கருத் துடையார்."

வேத - அந்தத் திருநீலநக்க நாயனார், இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். உள்ளுறை - உள்ளே தங்கும் பரம் பொருள். ஆவன - ஆக விளங்குபவை. விரி - பரவிய. புனல் - கங்கையாற்றினு டைய நீரை. வேணி - தங்க வைத்த சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்ற. நாதர் தம்மையும் - தலைவராகிய அயவந்தீசுவரரையும். தம் : அசை நிலை. அவர் - அந்த ஈசுவரருடைய. அடியாரையும் - அடியவர் களையும்; ஒருமை பன்மை மயக்கம். நயந்து - விரும்பி. பாதம் - அவர்களுடைய திருவடிகளுக்கு; ஒருமை பன்மை

மயக்கம். அருச்சனை - மலர்களால் அருச்சனையை. புரிவதும் - செய்தலும். பணிவதும் - அவர்களுடைய திருவடிகளில் விழுந்து அவற்றை வணங்குவதும் ஆகும். என்று - என எண்ணி. ஏ: அசை நிலை. காதலால் - விருப்பத்தோடு; உருபு மயக்கம். அவை இரண்டுமே - அவர்களுடைய திருவடிகளுக்கு அருச்சனையைச் செய்வதும், அவர்களுடைய திருவடிகளில் விழுந்து வணங்குவதும் ஆகிய இரண்டு நல்ல செயல்களை யுமே. செய்-புரியும். கருத்து-திருவுள்ளத்தை. உடையார் - பெற்றவர் அந்தத் திருநீலநக்க நாயனார். திருநீலநக்க நாயனார்: தோன்றா எழுவாய்.

பிறகு வரும் 6 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'உண்மையைப் பெற்ற சைவ ஆகமங்கள் விதித்த விதிகளின் வழியில் வேதங்களைப் படைத்த காரணராகிய அயவந்தீசுவரரை ஒவ்வொரு நாளும் பூசையை அந்தத் திருநீலநக்க நாயனார் செய்து எழுந்து அமைந்த நிய மங்களையும் புரிந்து கொண்டே தந்தையாரைப் போன்ற வராகிய அந்த அயவந்தீசுவரருடைய பக்தர்களுக்குத் திருவமுது செய்யச் செய்வது முதலாக உள்ள எந்த வகையான திருப்பணிகளையும் அவர்களை வரவேற்று அவர்களுக்கு எதிரில் புரிவார்.' பாடல் வருமாறு:

"மெய்த்த ஆகம விதிவழி
வேதகா ரணரை
நித்தல் பூசனை புரிந்தெழு
நியமமும் செய்தே
அத்தர் அன்பருக் கமுதுசெய்
விப்பது முதலா
எத்தி றத்தன பணிகளும்
ஏற்றெதிர் செய்வார்."

மெய்த்த - உண்மையைப் பெற்ற. ஆகம - சைவ ஆகமங்கள்; ஒருமை பன்மை மயக்கம். அந்த ஆகமங்

களாவன : காமிகாகமம், சாரியாகமம், காரணாகமம், மிருகேந்திர ஆகமம், தத்புருஷ ஆகமம் முதலியவை. விதி - விதித்த விதிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். வழி - வழியில். வேத காரணரை - வேதங்களைப் படைத்த காரணராகிய அயவந்தீசுவரருடைய, நித்தல் - ஒவ்வொரு நாளும். பூசனை - மலர்களால் பூசனையை. புரிந்து - அந்தத் திருநீலநக்க நாயனார் செய்து. எழு - எழுந்து அமைந்த. எழுந்து - துயிலிலிருந்து எழுந்து. நியமமும் - நியமங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். அவையாவன ; நீராடுதல், உடையை உடுத்தல், சந்தியா வந்தனம் புரிதல், ஆசனத்தில் அமர்தல், பூசை புரிதல் முதலியவை. செய்தே - புரிந்து கொண்டே. அத்தர் - தந்தையாரைப் போன்றவராகிய அந்த அயவந்தீசுவரருடைய. அன்பருக்கு - பக்தர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். அமுது செய்விப்பது - திருவமுது செய்யுமாறு செய்விப்பது. முதலா - முதலாக உள்ள. எத்திறத்தன - எந்த வகையான. பணிகளும் - திருப்பணிகளையும்; ஒருமை பன்மை மயக்கம். ஏற்று - அந்த அடியவர்களை வரவேற்று. எதிர் - அந்த அடியவர்களுக்கு எதிரில்; செய்வார் - புரிவார்.

அடுத்து வரும் 7 - ஆம் கவியின் கருத்து வருமாறு :

'அத்தகையவை ஆகிய செய்கைகளைச் செய்து வருவதோடு அந்தத் திருநீலநக்க நாயனார் தம்முடைய திருமாளிகையில் தங்கியிருக்கும் காலத்தில் திருவாதிரை நட்சத்திரத்தில் மேவிய பூசையாகிய அயவந்தீசுவரருக்கு வரை முறையான செயலைச் செய்ய வேண்டிய விதியோடு செய்து நிறைவேற்றிவிட்டுப் பரிசுத்தமான திருத்தொண்டராகிய அந்தத் திருநீலநக்க நாயனார் பழங்கால முதல் நெடுங்காலமாக விளங்கும் அயவந்தி என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருந்த நாயனாராகிய அயவந்தீசுவரருக்கும் அருச்சனையைச் செய்ய அந்த நாயனார் விரும்பினார்.'

பாடல் வருமாறு :

"ஆய செய்கையில் அமரும்நாள்
ஆதிரை நாளில்
மேய பூசனை நியதியை
விதியினால் முடித்துத்
தூய தொண்டனார் தொல்லைநீ
டயவந்தி அமர்ந்த
நாய னாரையும் அருச்சனை
புரிந்திட நயந்தார்."

ஆய - அத்தகைய ஆகிய. செய்கையில் - செய்கைகளைச் செய்து வருவதோடு; உருபு மயக்கம். அமரும் - அந்தத் திருநீலநக்க நாயனார் தம்முடைய திருமாளிகையில் தங்கியிருக்கும். நாள் - காலத்தில். ஆதிரை - திருவாதிரையாகிய. நாளில் - நட்சத்திரத்தில். மேய - மேவிய. பூசனை - பூசையாகிய. நியதியை - வரையறையான செயலை. விதியினால் - அயவந்தீசுவரருக்கு விதியோடு; உருபு மயக்கம். முடித்து - செய்து நிறைவேற்றிவிட்டு. த் : சந்தி. தூய - பரிசுத்தமாகிய. தொண்டனார்-திருத்தொண்டராகிய அந்தத் திருநீலநக்க நாயனார். தொல்லை - பழங்காலம் முதல். நீடு - நெடுங்காலமாக விளங்கும். அயவந்தி - சாத்தமங்கையில் உள்ள அயவந்தி என்னும் திருக்கோயிலில். அமர்ந்த - எழுந்தருளியிருந்த. நாயனாரையும் - நாயனாராகிய அயவந்தீசுவரருக்கும்; உருபு மயக்கம். அருச்சனை - மலர்களால் அருச்சனையை. புரிந்திட - செய்ய. நயந்தார் - அந்த நாயனார் விரும்பினார்.

பிறகு வரும் 8 - ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு :

'ஒரு வரம்பு - இல்லாத தவத்தைப் புரிந்த தவசியாராகிய அந்தத் திருநீலநக்க நாயனார் தாம் தங்கும் இடமாகிய திருமாளிகையிலிருந்தும் ஒருமைப் பாட்டைப் பெற்ற பக்தியை அடைந்த முறையோடு பரம்பரை பரம்பரையாக நடந்து வரும் பூசைக்கும் முழுவதும்

வேண்டிய பொருட்களைச் சிறிதும் குறைபாடு இல்லாமல் எடுத்துக் கொண்டு தம்முடைய தர்மபத்தினியாரோடும் கூட இறைவராகிய அயவந்தீசுவரர் எழுந்தருளியிருக்கும் அயவந்தி என்னும் திருக்கோயிலுக்கு வந்து அடைந்தார்."
பாடல் வருமாறு :

"உறையு ளாகிய மனைநின்றும்
ஒருமை அன்புற்ற
முறைமை யால்வரு பூசைக்கும்
முற்றவேண் டுவன
குறைவறக் கொண்டு மனைவியார்
தம்மொ டும்கூட
இறைவர் கோயில்வந் தெய்தினர்
எல்லையில் தவத்தோர்."

இந்தப் பாடலில் விற்பூட்டுப் பொருள் கோள் அமைந்துள்ளது. எல்லை - ஒரு வரம்பு. இல் - இல்லாத; கடைக்குறை. தவத்தோர் - தவத்தைப் புரிந்த தவசியாராகிய அந்தத் திருநீலநக்க நாயனார். உறையுள் ஆகிய - தாம் தங்கும் இடமாகிய. மனை நின்றும் - தம்முடைய திருமாளிகையிலிருந்தும். ஒருமை - ஒருமைப் பாட்டைப் பெற்ற. அன்பு - பக்தியை. உற்ற - அடைந்த. முறைமையால் - முறையோடு; உருபு மயக்கம். வரு - பரம்பரை பரம்பரையாக நடந்து வரும். பூசைக்கும் - அயவந்தீசுவரர் புரியும் பூசைக்கும். முற்ற - முழுவதும். வேண்டுவன - வேண்டிய பொருட்களை. அவையாவன : ஆசனப் பலகை, அட்சதை, அரைத்த மஞ்சள், அறுகம்புல், அருச்சனைக்கு உரிய பலவகை மலர்கள், தூபக்கால், சாம்பிராணி, மட்டிப்பால், ஊதுவத்தி, கற்பூரத் தட்டு, ஆரத்தி எடுக்கும் தாம்பாளம், ஆரத்தி, ஆரத்தியைக் கரைக்கும் மஞ்சளும் சுண்ணாம்பும் முதலியவை. குறைவு அற - ஒரு குறைபாடும் இல்லாமல். க் : சந்தி. கொண்டு - எடுத்துக் கொண்டு. மனைவியார் தம்மொடும் - தம்முடைய தர்ம பத்தினியாரோடும். தம் : அசைநிலை.

கூட - தாமும் கூடச் சேர்ந்து கொண்டு; 'தாம்' என்றது திருநீலநக்க நாயனாரை. இறைவர் - இறைவராகிய அயவந்தீசுவரர். கோயில் - எழுந்தருளியிருக்கும் கோயிலாகிய அயவந்திக்கு. வந்து எய்தினர் - வந்து சேர்ந்தார்.

பிறகு வரும் 9 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு அடைவதற்காக வந்து ஆலயத்துக்குள் நுழைந்து சாத்தமங்கையில் உள்ள அயவந்தி என்னும் ஆலயத்தில் எழுந்தருளியுள்ள அமுதத்தைப் போன்ற அயவந்தி ஈசுவரருடைய வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் இரண்டு செந்தாமரை மலர்களைப் போன்ற திருவடிகளை அந்தத் திருநீலநக்க நாயனார் வணங்கி விட்டு அந்த அயவந்தி ஈசுவரரைப் பூசை புரிவதற்கு ஆரம்பித்து சேர நின்று கொண்டு அந்தத் திருக்கோயிலில் பூசைக்கு வேண்டிய பொருட்களைத் தம்முடைய தர்மபத்தினியார் எடுத்துக் கொண்டு வர உணர்ச்சியை மிகுதியாகப் பெற்றவராகிய அந்தத் திருநீலநக்க நாயனார் அருச்சனையை முறைப்படி நடத்தினார்.' பாடல் வருமாறு:

"அணைய வந்துபுக் கயவந்தி
மேவிய அமுதின்
துணைம லர்க்கழல் தொழுதுபூ
சனைசெயத் தொடங்கி
இணைய நின்றங்கு வேண்டுவ
மனைவியார் ஏந்த
உணர்வில் மிக்கவர் உய்ந்தஅர்ச்
சனைமுறை உய்த்தார்."

அணைய - அவ்வாறு அடைவதற்காக. வந்து புக்கு - வந்து ஆலயத்துக்குள் நுழைந்து. அயவந்தி - சாத்தமங்கையிலுள்ள அயவந்தி என்னும் திருக்கோயிலில். மேவிய - எழுந்தருளியுள்ள. அமுதின் - அமுதத்தைப் போன்ற அயவந்தி ஈசுவரனுடைய; உவம ஆகு பெயர். துணை

மலர்க் கழல் - வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் இரண்டு செந்தாமரை மலர்களைப் போன்ற திருவடிகளை. கழல் : ஆகு பெயர். மலர் : ஒருமை பன்மை மயக்கம். தொழுது - அந்தத் திருநீலநக்க நாயனார் வணங்கிவிட்டு. திருநீலநக்க நாயனார்:தோன்றாஎழுவாய். பூசனை செய-அந்த அயவந்தி ஈசுவரரைப்பூசை புரிவதற்கு. செய : இடைக்குறை. த் : சந்தி. தொடங்கி - ஆரம்பித்து. இணைய - சேர; ஒருங்கே. நின்று - நின்று கொண்டு. அங்கு - அந்தத் திருக்கோயிலில். வேண்டுவ - பூசைக்கு வேண்டிய பொருட்களை. மனைவியார் - அந்தத் திருநீல நக்க நாயனாருடைய தர்மபத்தினியார். ஏந்த - எடுத்துக் கொண்டு வர. உணர்வில்-உணர்ச்சியை; உருபு மயக்கம். மிக்கவர் - மிகுதியாகப் பெற்றவராகிய அந்தத் திருநீல நக்க நாயனார். அர்ச்சனை - அருச்சனையை. முறை - முறைப்படி. உய்த்தார் - நடத்தினார்.

அமுதத்தைப் போன்றவர் : ''தேனுமாய் அமுதுமாய்த் தெய்வமும் தானாய்.'', ''தேனுமாய் அமுதாகி நின்றான்.'', ''எம்பிரான் எனக் கமுதம் ஆவானும்.'', ''இன்னமுதெந்தைஎம்பெருமான்.'', ''கருகாவூர் அமுதர்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''பத்தர் நெஞ்சுள் தேனும் இன்னமுதும் ஆனார்.'', ''பாரகத் தமுதம் ஆனார் பழனத்தெம் பரமனாரே.'', ''அம்பனை அமுதை ஆற்றை.'', ''அம்மானை அமுதன் தன்னை.'', ''தில்லையுட் கூத்தனை ஆர்கிலா அமுதை.'', ''உள்ளத் தேறல் அமுத ஒளி.'', ''பருகா அமுதமாம் பாலின் நெய்யாம்.'', ''அடியேன துள்ளே நின்ற தேனமுதை.'', ''அம்மை பயக்கும் அமிர்து கண்டாய்.'', ''அடியார்க் கென்றும் ஆரமுதாய் கண்ணிக்கும் ஐயாற்றன்.'', ''அற்றவர்கட் காரமுதம் ஆனாய்போற்றி.'', ''கரும்புதரு கட்டியை இன்னமிர்தைத் தேனை.'', ''ஆரா அமுதம் ஆனார்.'', ''அனலாடி ஆரமுதே.'', ''அடியார்கட் கார முதே.'', ''அடியார்கட் காரமுதம் ஆனான் கண்டாய்.'',

"தேனும் இன்னமுதும் ஆனார் திருச் செம்பொன் பள்ளியாரே.", "பாகத் தமுதம் ஆனார் பழனத் தெம் பரமனாரே", "வேலையின் அமுதர் வீழி மிழலையுள் விகிர்தனாரே.", "பக்தர்கட் கமுதாய பரத்தினை.", "பத்தி செய் வித்தகர்க் கண்ணித்தாகும் அமுதினை.", "அடியார்கட் காரமுதம் ஆகித் தோன்றும்.", "எனதுள்ளே நின்ற தேனமுதை.", "அடியார்கட் காரமுதே என்றேன் நானே.", "அடியார்கட் காரமுதம் ஆனான் கண்டாய்.", "தேனாய் அமுதானாய் நீயே.", "சார்ந்தார்க் கின்னமுதானே." "அடியார்கட் காரமுதே ஆனேறேறும் செம்பொனே.", "சார்ந்தார்க் கமுதானான் காண்.", "சார்ந்தார்க் கின்னமுதானான் காண்.", "அனலாடிகாண் அடியார்க் கமுதானான் காண்.", "அத் தேனை அமுதத்தை ஆவின்பாலை.", "என் பிறவித் துயர் தீர்ப்பானை இன்னமுதை.", "அடைந்தவர்கட் கமுதொப் பானை."; "ஆராத இன்னமுதை அம்மான் தன்னை.", "பல்லுயிர்க்கும் பரிவோன் தன்னைஆராத இன்னமுதை.", "ஆரூரில் அம்மான் தான் காண் அடியார்கட் காரமுதம் ஆயினான் காண்.", "ஆராத இன்னமுதை அடியார் தம்மேல் வரும் துயரம் தவிர்ப்பானை.", "ஆவின்கீழ் இருந்தானை அமுதானானை." என்று திருநாவுக்கரசு நாயனாரும், "ஆராத இன்னமுதை அடியேனையும் அஞ்சலென்னே.", "அடிகேள் என் அமுதே எனக்கார் துணை நீயலதே.", "இறைவா என் அமுதே.", "வீரட்டானத்தாரா என்னமுதே.", "ஐயா என்அமுதே.", "அண்ணா என் அமுதே.", "அறியாய் என் அமுதே.", "அயனே என் அமுதே.", "ஆரூர் அத்தா ஐயாற்றமுதே.", "இன்னமுதாய் என்னுடைய தோழனுமாய்.", "அரும்பினை அவரினை அமுதினைத் தேனை.", "தேனங்கைத் தமுதாகி.", "கோதிலா அமுதே அருள் பெருகு கோலமே.", "என்னுயிர்க் கின்னமுதை என்று கொல் எய்துவதே." என்று சுந்தரமூர்த்தி நாயனாரும், "தேசனே

தேனார் அமுதே சிவபிரானே.'', ''ஆரா அமுதே அளவிலாப் பெம்மானே,'' ''ஊற்றான உண்ணு அமுதே உடையானை.'', ''அரைசே போற்றி அமுதே போற்றி.'', ''கண்ணாரமுதக் கடலே போற்றி.'', ''ஆரா அமுதே அருளே போற்றி.'', ''மாலமுதப் பெருங் கடலே.'', ''அறிவனே அமுதே.'', ''தேவனே அமுதே கரும்பின் தெளிவே.'', ''தேவனே ஆரமுதே சிந்தைக் கரியாய்.'', ''தேனே அமுதே கரும்பின் தெளிவே தித்திக்கு மானே.'', ''அப்பனே எனக்கமுதே.'', ''தேனையும் பாலையும் கன்னலையும் அமுதத்தையும் ஒத்து.'',''அத்தன் ஆனந்தன் அமுதன்.'', ''என்னானை என்னரையன் இன்னமுது.'', ''அங்கண் அரசை அடியோங்கட் காரமுதை.'', ''கண்ணா ரமுதமுமாய் நின்றான்.'', ''என் உளம் புகுந்த ஆரா அமுதாய்.'', ''தேன் வந்தமுதின் தெளிவந்த.'', ''தேனாய் அமுதமுமாய்த் தீங்கரும்பின் கட்டியுமாய்.'', ''என்னானை என்னப்பன் என்பார்கட் கின்னமுதை.'', ''என்னுடை ஆரமுதெங்கள் அப்பன்.'', ''மனத்தமுதாம் சங்கரனை.'', ''பாலும் அமுதமும் தேனுடனாம் பராபரமாய்.'', ''உத்தர கோச மங்கை ஆரா அமுதின் அருட்டாளிணை பாடி.'', ''அது பழச்சுவை யென அமுதென.'', ''திரைபொரா மன்னும் அமுதத் தெண் கடலே.'', ''குறைவிலா நிறைவே கோதிலா அமுதே.'', ''அமுதூறித் தித்தித்து.'', ''ஆரா அமுதே ஆசைப்பட்டேன்.'', ''தன்னைத் தந்த என்னாரமுதை.'', ''நிறையின் அமுதை அமுதின் சுவையை.'', ''அந்தமில் அமுதே அரும்பெரும் பொருளே ஆரமுதே.'', ''உள்கு வார் மனத்தின் ஊறுசுவை அளிக்கும் ஆரமுதே.'', ''கோதில் அமுதானானைக் குலாவுதில்லை கண்டேனே.'', ''குரை கடல் வாய் அமுதென்கோ.'', ''பாண்டியற் காரமுதாம் ஒருவரை.'', ''அன்பினில் விளைந்த ஆரமுதே.'', ''ஆளானார்க் குண்ணார்த்த ஆரமுதே.'', ''தேனாய் இன்னமுதமுமாய்த் தித்திக்கும் சிவபெருமான்.'',

"கருத்தில் உருத்தமுதாம் சிவபதத்தை.", "இன்னமுதாய ஆனந்த வெள்ளத்தான்.", "அடியார்க் கமுதன்."; "ஆருருவாய என் ஆரமுதே.", "ஆராய் அமுதாய் அமைந்தன்றே.", "எங்கும் நிறைந்தமுதூறு பரஞ்சுடர்." என்று மாணிக்க வாசகரும், "அப்பனே அம்பலத்தமுதே.", "மணி நீல கண்டத்தென் அமுதே.", "ஆடரவாட ஆடும் அம்பலத் தமுதே." என்று திருமாளிகைத் தேவரும், "இமையவர்க் கரசை என் உயிர்க்கமுதினை.", "ஐயா திருவாவடுதுறை அமுதே.", "தேனே அமுதே என் சித்தமே.", "பாலும் அமுதமும் தேனுமாய் ஆனந்தம் தந்து." என்று சேந்தனாரும், "புவன நாயகனே அகவுயிர்க்கமுதே.", "எனக்கே கன்னலும் பாலும் தேனும் ஆரமுதும் கனியுமாய் இனிமை ஆயினையே.", "பாலுமாய் அமுதாய் பன்னகா பரணன்.", "கன்னலே தேனே அமுதமே.", "முதற்பகவனாம் அக உயிர்க் கமுதாம்.", "அன்பரானவர்கள் பருகும் ஆரமுதே.", "அட்ட ஆரமிர்தர்." என்று கருவூர்த் தேவரும், "பருகுதோறமுதம் ஒத்து." என்று பூந்துருத்தி நம்பி காட நம்பியும், "தில்லை அம்பலத்துள் என்னாரமுதை எங்கள் கோவை.", "உன்னடியார்க்கருளும் தெளிவாரமுதே." என்று கண்டராதித்தரும், "அருவாய் உருவாய் ஆரா அமுதமாய்.", "பாலினை இன்னமுதைப் பரமாய பரஞ்சுடரை." என்று திருவாலியமுதனாரும் பாடிய திருவிசைப் பாக்களையும், "என் அகம் நெக ஊறும் அமிர்தினுக்கு.", "கூத்தாடும் ஆவிக்கமுதை.", "மெக்கமுதாம் எம்பிரான்." என்று சேந்தனார் பாடியருளிய திருப்பல்லாண்டில் வருவனவற்றையும், "அப்பனை நந்தியை ஆரா அமுதினை." என்று திருமூலரும், "அனல் புனல் ஆரூர் அமர்ந்துறை அமுதன்." (திருவாரூர் மும்மணிக் கோவை, 16) என்று சேரமான் பெருமாள் நாயனாரும், "களிவந்தமுதூறி." (கோயில் நான்மணி மாலை, 3), "அலைதொறும் சிறக்கும் அமிர்தே போற்றி." (திரு

வொற்றியூர் ஒருபா ஒருபது, 4 : 5) என்று பட்டினத்துப் பிள்ளையாரும், "அமுதத் திரு நடர்க்கு." (திருத் தொண்டர் திருஅந்தாதி, 1) என்று நம்பியாண்டார் நம்பியும், "உணர்வு தந்துய்யக் கொண்ட கோதிலா அமுதே.", "அடியவர் தம் கண்ணாரமுதை.", "கோதிலா ஆரமுதைக் கோமளக் கொம்புடன்கூடக் கும்பிட்டேத்தி.", "தேவர் தேவனைத் திருக்கபாலச் சரத்தமுதை." என்று சேக்கிழாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 10-ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

'அந்தத் திருநீலநக்க நாயனார் நெடு நேரமாகப் புரிந்த அயவந்தி ஈசுவரருக்குச் செய்தருளிய பூசை நிறை வேறினாலும் பக்தியில் தம்முடைய திருவுள்ளத்தில் நிறைவு பெறாதவராகி பக்கத்தில் சுற்றியுள்ள ஆலயத் தினுடைய பிராகாரத்தில் வலமாக வந்து மீண்டும் திருக் கோயிலுக்குள் நுழைந்து அந்த அயவந்தி ஈசுவரரைப் பணிந்து அவருடைய சந்நிதியில் அவரைத் துதித்துத் திரு மாலும் பிரம தேவனும் தேடும் பெருமையைப் பெற்று விளங்கும் வேதங்களினுடைய அர்த்தமாக விளங்கும் அந்த ஈசுவரரைத் தெளிவு உண்டாகுமாறு தரிசித்து தாம் என்றும் விரும்பும் ந,ம,சி,வா,ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தை உணர்ச்சியுடன் உண்டாகு மாறு அந்த ஈசுவரருடைய சந்நிதியில் அமர்ந்து கொண்டு ஓதினார்.' பாடல் வருமாறு :

"நீடு பூசனை நிரம்பியும்
அன்பினால் நிரம்பார்
மாடு சூழ்புடை வலங்கொண்டு
வணங்கிமுன் வழுத்தித்
தேடு மாமறைப் பொருளினைத்
தெளிவுற நோக்கி
நாடும் அஞ்செழுத் துணர்வுற
இருந்துமுன் நவின்றார்."

நீடு - அந்தத் திருநீலநக்க நாயனார் நெடு நேரமாகப் புரிந்த. திருநீல நக்க நாயனார்: தோன்றா எழுவாய். பூசனை - அயவந்தி ஈசுவரருக்குப் புரிந்தருளிய பூசை. நிரம்பியும்-நிறைவேறிவிட்டாலும். அன்பினால்-பக்தியில்; உருபு மயக்கம். நிரம்பார் - தம்முடைய திருவுள்ளத்தில் நிறைவு பெறாதவராகி; முற்றெச்சம். மாடு - பக்கத்தில். சூழ்-சுற்றியுள்ள. புடை-ஆலயத்தினுடைய பிராகாரத்தில். வலம் கொண்டு - வலமாக வந்து. வணங்கி - மீண்டும் திருக்கோயிலுக்குள் நுழைந்து அந்த அயவந்தி ஈசுவரரைப் பணிந்து. முன் - அந்த ஈசுவரருடைய சந்நிதியில். வழுத்தி - அந்த ஈசுவரரைத் துதித்து. த்: சந்தி. தேடு - திருமாலும் பிரம தேவனும் தேடும். மா - பெருமையைப் பெற்று விளங்கும். மறை - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங் களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். ப்: சந்தி. பொருளினை - அர்த்தமாக விளங்கும் அந்த ஈசுவரரை. த்: சந்தி. தெளிவுஉற - தம்முடைய திருவுள்ளத்தில் தெளிவு உண்டாகுமாறு. நோக்கி - அந்த ஈசுவரரைத் தரிசித்து. நாடும் - தாம் என்றும் விரும்பும். அஞ்சு எழுத்து - ந,ம,சி,வா,ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தை. எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். உணர்வு உற - உணர்ச்சி உண்டாகுமாறு. இருந்து முன் - அந்த ஈசுவரருடைய சந்நிதியில் அமர்ந்து கொண்டு. நவின்றார் - ஓதினார்.

பிறகு வரும் 11 - ஆம் கவியின் கருத்து வருமாறு:

'தொலைதல் இல்லாததும் தாம் புரிந்ததும் ஆகிய தவத்தின் பயனைப் பெற்ற திருத்தொண்டராகிய அந்தத் திருநீலநக்க நாயனார் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்கள் முதலாக விளங்கும் சாஸ்திரங்கள் கூறிய மெய்யாகத் திகழும் ந,ம,சி,வா,ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தையும் உருப்போட்டு

எண்ணுகின்ற சமயத்தில் தம்முடைய நிலையிலிருந்து அந்த அயவந்தி ஈசுவரருடைய சந்நிதியில் தவறுமாறு உயரமாக உள்ள தங்கமலையாகிய மேருமலையை வில்லாக ஏந்திய வராகிய அயவந்தி ஈசுவரருடைய திருமேனியின்மேல் ஒரு சிலந்திப் பூச்சி விழுந்து விட்டது.' பாடல் வருமாறு :

"தொலைவில் செய்தவத் தொண்டனார்
 சுருதியே முதலாம்
கலையின் உண்மையாம் எழுத்தஞ்சும்
 கணிக்கின்ற காலை
நிலையில் நின்றுமுன் வழுவிட
 நீண்டபொன் மேருச்
சிலையி னார்திரு மேனிமேல்
 விழுந்ததோர் சிலம்பி.''

தொலைவு - தம்மிடமிருந்து அகலுதல். இல் - இல்லாத; கடைக்குறை. செய் - தாம் புரியும். தவ - தவத்தின் பயனை; ஆகுபெயர். த் : சந்தி. தொண்டனார் - பெற்ற திருத்தொண்டராகிய அந்தத் திருநீலநக்க நாயனார். சுருதி - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்கள்; ஒருமை பன்மை மயக்கம். ஏ : அசை நிலை. முதலாம் - முதலாக விளங்கும். கலையின் - சாத்திரங்கள் கூறிய; ஒருமை பன்மை மயக்கம். உண்மையாம் - மெய்யாகத் திகழும். எழுத்து அஞ்சும் - ந, ம, சி வா, ய என்னும் ஐந்து எழுத்துக்கள் அடங்கிய பஞ்சாட்சரத்தையும். எழுத்து: ஒருமை பன்மை மயக்கம். கணிக்கின்ற - அந்த நாயனார் உருப்போட்டு எண்ணுகின்ற. காலை - சமயத்தில். நிலையில் நின்று - அவ்வாறு உருப்போடுகின்ற நிலையிலிருந்து. முன் - அந்த அயவந்தி ஈசுவரருடைய சந்நிதியில். வழுவிட - தவறுமாறு. நீண்ட - உயரமாக உள்ள. பொன் - தங்க மலையாகிய; ஆகு பெயர். மேரு - மேரு மலையை. ச் : சந்தி. சிலையினார் - வில்லாக ஏந்தியவராகிய அயவந்தி ஈசுவரருடைய. திருமேனி மேல் -

திருமேனியின் மேல். ஓர் - ஒரு. சிலம்பி - சிலந்திப்பூச்சி. விழுந்தது - விழுந்து விட்டது.

பிறகு வரும் 12 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அவ்வாறு அந்தச் சிலந்திப்பூச்சி அயவந்தி ஈசுவரருடைய திருமேனியின் மேல் விழுந்த சமயத்தில் அந்த இடத்தில் பக்கத்தில் நின்று கொண்டிருந்த திருநீலநக்க நாயனாருடைய தர்மபத்தினியார் வேகமாகச் சென்று தம்முடைய திருவுள்ளத்தில் தோன்றிய பயத்தோடு இளமைப் பருவத்தை உடைய தம்முடைய குழந்தையின் மேல் விழும் சிலந்திப்பூச்சி அந்த இடத்திலிருந்து விட்டுப் போகுமாறு தம்முடைய வாயினால் ஊதி முன்னால் உமிழ்பவரைப் போல மழையைப் போலச் சொரிந்த பக்தியோடு தம்முடைய வாயினால் அந்த அயவந்தி ஈசுவரருடைய திருமேனியின் மேல் அந்தச் சிலந்திப் பூச்சி போகுமாறு தம்முடைய வாயிலிருந்து எச்சிலை உமிழ்ந்தார்.' பாடல் வருமாறு :

**" விழுந்த போதில்அங் கயல்நின்ற**
**மனைவியார் விரையுற்**
**றெழுந்த அச்சமோ டிளங்குழ**
**வியில்விழும் சிலம்பி**
**ஒழிந்து நீங்கிட ஊதிமுன்**
**துமிப்பவர் போலப்**
**பொழிந்த அன்பினால் ஊதிமேல்**
**துமிந்தனர் போக."**

விழுந்த - அவ்வாறு அந்தச் சிலந்திப்பூச்சி அயவந்தி ஈசுவரருடைய திருமேனியின் மேல் விழுந்த. போதில் - சமயத்தில். அங்கு - அந்த இடத்தில். அயல் - சமீபத்தில். நின்ற - நின்று கொண்டிருந்த. மனைவியார் - திருநீலநக்க நாயனாருடைய தர்மபத்தினியார். விரைவுற்று - வேகமாகச் சென்று. எழுந்த - தம்முடைய திருவுள்ளத்தில்

தோன்றிய. அச்சமோடு - பயத்தோடு. இளம் - இளமைப் பருவத்தை உடைய. குழவியில் - தம்முடைய குழந்தையின் மேல்; உருபு மயக்கம். விழும் சிலம்பி - விழும் சிலந்திப் பூச்சி. ஒழிந்து - அந்த இடத்திலிருந்து விட்டு. நீங்கிட - போகுமாறு. ஊதி - தம்முடைய வாயினால் ஊதி. முன் - முன்னால். துமிப்பவர் போல - எச்சிலை உமிழ்பவரைப் போல. ப் : சந்தி. பொழிந்த - மழையைப் போலச் சொரிந்த. அன்பினால் - பக்தியோடு; உருபு மயக்கம். மேல் ஊதி - தம்முடைய வாயினால் அந்த அயவந்தி ஈசுவரருடைய திருமேனியின் மேல் ஊதி. போக - அந்தச் சிலந்திப் பூச்சி போகுமாறு. துமிந்தனர் - எச்சிலை உமிழ்ந்தனர்.

அடுத்து உள்ள 13 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அந்தத் திருநீலநக்க நாயனாருடைய தர்மபத்தினியார் பதைபதைத்துப் போய் அந்த அயவந்தி ஈசுவரருக்கு மேல் விழுந்த சிலந்திப் பூச்சியைத் தம்முடைய வாயினால் ஊதி எச்சிலை உமிழ்ந்த அந்தச் செயலினால் முன் பிறவியில் புரிந்த அந்தப் பாச பந்தத்தைச் சிதையுமாறு செய்யும் பெருமையைப் பெற்று விளங்கும் தவத்தைப் புரிந்த தவசியாராகிய அந்த அழகிய வேதியராகிய திருநீலநக்க நாயனார் பார்த்து விட்டுத் தம்முடைய கண்களைத் தம்முடைய கைகளால் மூடிக்கொண்டு, ''அறிவு இல்லாதவளே, இந்தத் தகாத செயலை நீ புரிந்தது என்ன பைத்தியக்காரத்தனம்!'' என்று அந்தத் திருநீலநக்க நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய அவருடைய தர்மபத்தினியார், ''சுண்ணாம்பைப் போல வெண்மையாக உள்ள அந்தச் சிலந்திப் பூச்சி அயவந்தி ஈசுவரருடைய திருமேனியின்மேல் விழவே, அந்தப் பூச்சியை அடியேனுடைய வாயினால் ஊதி எச்சிலை உமிழ்ந்தேன்'' என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு :

"பதைத்த செய்கையால் மனைவியார்
முற்செயப் பந்தம்
சிதைக்கும் மாதவத் திருமறை
யவர்கண்டு தம்கண்
புதைத்து, 'மற்றிது செய்ததென்
பொறியிலாய்!' என்னச்
'சுதைச்சி லம்பிமேல் விழஊதித்
துமிந்தனள்' என்றார்."

பதைத்த - அந்தத் திருநீல நக்கனாருடைய தர்ம பத்தினியார் பதைபதைத்துப் போய் அந்த அயவந்தி ஈசுவரருடைய திருமேனியின் மேல் விழுந்த சிலந்திப் பூச்சியைத் தம்முடைய வாயினால் ஊதி எச்சிலை உமிழ்ந்த. செய்கையால் - அந்தச் செயலினால். மனை வியார் - அந்தத் திருநீலநக்க நாயனாருடைய தர்மபத்தினி யார். முன் - முன் பிறவியில். செய் - புரிந்திருக்கும். அப்பந்தம் - அந்தப் பாச பந்தத்தை. சிதைக்கும் - சிதையு மாறு செய்யும். மா - பெருமையைப் பெற்று விளங்கும். தவ - தவத்தைப் புரிந்த தவசியாராகிய. த் : சந்தி. திரு - அழகிய. மறையவர் - அந்த வேதியராகிய திருநீல நக்க நாயனார். கண்டு - பார்த்துவிட்டு; தம்முடைய பத்தினியார் அயவந்தி ஈசுவரருடைய திருமேனியின் மேல் தம்முடைய வாயிலிருந்து ஊதி எச்சிலை உமிழ்ந்ததைப் பார்த்து விட்டு. தம் - தம்முடைய. கண் - இரண்டு கண் களையும்; ஒருமை பன்மை மயக்கம். புதைத்து - தம்முடைய கைகளால் மூடிக் கொண்டு. மற்று : அசை நிலை. இது - இந்தத் தகாத செயலை. பொறியிலாய் - அறிவு இல்லாதவளே. இலாய் : இடைக்குறை. செய்தது - நீ புரிந்தது. என் - என்ன பைத்தியக்காரத்தனம். என்ன - என்று அந்தத் திருநீலநக்க நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. ச் : சந்தி. சுதை - அவருடைய தர்மபத்தினியார் சுண்ணாம்பைப் போல வெண்மையாக உள்ள; உவம ஆகுபெயர். ச் : சந்தி. சிலம்பி - அந்தச்

சிலந்திப் பூச்சி. மேல் - அயவந்தி ஈசுவரருடைய திரு மேனியின் மேல். விழ - விழுந்ததனால். ஊதி - அடியேன் அந்தச் சிலந்திப் பூச்சியை அடியேனுடைய வாயினால் ஊதி. த் : சந்தி. துமிந்தனன் - எச்சிலை உமிழ்ந்தேன். என்றார் - என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

பிறகு உள்ள 14 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'தம்முடைய தர்மபத்தினியார் புரிந்ததற்குக் காரண மாகிய பக்தியைத் தம்முடைய திருவுள்ளத்தில் தக்கதென்று ஏற்றுக் கொள்ளாதவராகி பூணூலை அணிந்திருக்கும் அழகிய மார்பைப் பெற்றவராகி அந்தத் திருநீலநக்க நாயனார் தம்முடைய அயவந்தி ஈசுவரருக்குப் புரியும் பூசையின் திறத்தில், "இத்தகைய செயல் இந்த இடத்தில் உசிதமற்றதாகும்" என்று தம்முடைய திருவுள்ளத்தில் நினைக்கும் எண்ணத்தினால் அந்தத் தம்முடைய தர்மபத்தினியாரை விட்டுவிட்டுப் போய்விட துறந்து விடுவாரானார்.' பாடல் வருமாறு :

"மனைவியார் செய்த அன்பினை
மனத்தினிற் கொள்ளார்
புனையும் நூல்மணி மார்பர்தம்
பூசனைத் திறத்தில்
'இனைய செய்கை இங்கநுசிதம்
ஆம்'என எண்ணும்
நினைவினால் அவர் தம்மைவிட்
டகன்றிட நீப்பார்."

மனைவியார் - தம்முடைய தர்மபத்தினியார். செய்த - புரிந்த செயலுக்குக் காரணமாகிய. அன்பினை - பக்தியை. மனத்தினில் - தம்முடைய திருவுள்ளத்தில். கொள்ளார் - தக்க செயலென்று ஏற்றுக் கொள்ளாத வராகி; முற்றெச்சம். புனையும் நூல் - பூணூலை அணிந் திருக்கும். மணி - அழகிய. மார்பர் - மார்பைப் பெற்ற வராகிய அந்தத் திருநீலநக்க நாயனார். தம் - தம்முடைய.

பூசனைத் திறத்தில் - அயவந்தி ஈசுவரருக்குப் புரியும் பூசையினுடைய திறத்தில். இனைய - இத்தகைய. செய்கை - அடியேனுடைய மனைவி செய்த செயல். இங்கு - இந்த இடத்தில். அநுசிதம்ஆம் - உசிதமற்றதாகும். என - என்று. எண்ணும் - தம்முடைய திருவுள்ளத்தில் நினைக்கும். நினைவினால் - எண்ணத்தினால். அவர் தம்மை - தம்முடைய அந்தத் தர்ம பத்தினியாரை. தம் : அசை நிலை. விட்டு - விட்டுவிட்டு. அகன்றிட - அகன்று போய்விட. நீப்பார் - துறந்து விடுபவரானார்.

அடுத்து உள்ள 15-ஆம் கவியின் கருத்து வருமாறு :

' ''மின்னலைப் போல ஒளி வீசும் நீளமாக இருக்கும் சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்ற ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களும் இல்லாதவராகிய அயவந்தி ஈசுவரருடைய திருமேனியின் மேல் விழுந்த நூலைத் தன்னுடைய வாயிலிருந்து வெளியிடும் அந்தச் சிலந்திப் பூச்சியை வேறாகிய ஒரு முறையினால் போக்குவதை விட்டு விட்டு முன்னால் ஓடி வந்து ஊதி உன்னுடைய வாயில் உள்ள எச்சில் நீர் அந்த அயவந்தி ஈசுவரருக்கு மேல் விழுமாறு ஓர் அடாத காரியத்தை நீ செய்தாய்; ஆதலால் உன்னை நான் இனிமேல் இந்தத் திருமாளிகையிலிருந்து துறந்து விட்டேன்'' என்று அந்தத் திருநீலநக்க நாயனார் தம்முடைய தர்ம பத்தினியாரிடம் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.' பாடல் வருமாறு :

'' 'மின்னெடுஞ்சடை விமலர்மேல்
விழுந்த நூற்சிலம்பி
தன்னை வேறொரு பரிசினால்
தவிர்ப்பது தவிர
முன்அணைந் துவந் தூதிவாய்
நீர்ப்பட முயன்றாய்;

**உன்னை நான்இனித் துறந்தனன்**
**ஈங்'கென உரைத்தார்.''**

மின் - மின்னலைப் போல ஒளியை வீசும்; உவம ஆகு பெயர். நெடும் - நீளமாக விளங்கும். சடை - சடா பாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்ற. விமலர் - ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களும் இயல்பாகவே இல்லாதவராகிய அயவந்தி ஈசுவரருடைய. மேல் - திருமேனியின் மேல். விழுந்த நூல் - விழுந்த நூலைத் தன்னுடைய வாயிலிருந்து வெளியிடும். சிலம்பி தன்னை - அந்தச் சிலந்திப் பூச்சியை. தன் : அசை நிலை. வேறு ஒரு - வேறாகிய ஒரு. பரிசினால் - முறையினால். தவிர்ப்பது - போக்குவதை. தவிர - விட்டு விட்டு; எச்சத் திரிபு. முன் - முன்னால். அணைந்து - ஓடி வந்து. ஊதி வாய் நீர்ப்பட - ஊதி உன்னுடைய வாயில் உள்ள எச்சில் நீர் அந்த அயவந்தி ஈசுவரருடைய திருமேனியின் மேல் விழுமாறு. முயன்றாய் - ஓர் அடாத காரியத்தை நீ செய்தாய். உன்னை - நின்னை. நான் - யான். இனி - இனிமேல். த் : சந்தி. ஈங்கு - இந்தத் திருமாளிகை யிலிருந்து. துறந்தனன் - துறந்து விட்டேன். என - என்று; இடைக்குறை. உரைத்தார் - அந்தத் திருநீலநக்க நாயனார் தம்முடைய தர்மபத்தினியாரிடம் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார்.

அடுத்து உள்ள 16 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு அந்தத் திருநீலநக்க நாயனார் தம்முடைய தர்மபத்தினியாரிடம், ''உன்னை யான்துறந்து விட்டேன்'' என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்த அந்தச் சமயத்தில் சூரியன் அத்தமன மலையின் மேல் சென்று மறைந்து விட்டான்; தமக்குத் தம்முடைய கணவனாராகிய திருநீல நக்க நாயனார் இட்ட கட்டளையின்படி அவருடைய தர்ம பத்தினியார் ஒரு வழியில் அவரை விட்டுவிட்டு அகன்று செல்ல முழுவதும் வேண்டிய பண்டங்களைச் சிறிதேனும்

குற்றம் இல்லாமல் தீர்ந்த அயவந்தி ஈசுவரருடைய பூசையை அந்த நாயனார் நிறைவேற்றிவிட்டு கத்தையாகிய சடாபாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய அயவந்தி ஈசுவரருடைய திருத்தொண்டராகிய அந்த நாயனாரும் தம்முடைய காவலைப் பெற்ற திருமாளிகைக்குள் நுழைந்தார்.' பாடல் வருமாறு:

**"மற்ற வேலையிற் கதிரவன்**
**மலைமிசை மறைந்தான்;**
**உற்ற ஏவலின் மனைவியார்**
**ஒருவழி நீங்க**
**முற்ற வேண்டுவ பழுதுதீர்**
**பூசனை முடித்துக்**
**கற்றை வேணியார் தொண்டரும்**
**கடிமனை புகுந்தார்."**

மற்று: அசை நிலை. அ வேலையில்-அவ்வாறு அந்தத் திருநீலநக்க நாயனார் தம்முடைய தர்மபத்தினியாரிடம், 'உன்னை யான் துறந்து விட்டேன்' என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்த அந்தச் சமயத்தில். கதிரவன் - சூரியன். மலை மிசை - அத்தமனமலையின் மேற் சென்று. மறைந்தான் - அத்தமனமாகி மறைந்து விட்டான். உற்ற - தமக்குத் தம்முடைய கணவராகிய திருநீலநக்க நாயனார் இட்ட. ஏவலின் - கட்டளையின்படி. மனைவியார் - அந்த நாயனாருடைய தர்மபத்தினியார். ஒரு வழி - ஒரு வழியில். நீங்க - அந்த நாயனாரை விட்டு விட்டு அகன்று செல்ல. முற்ற - முழுவதும். வேண்டுவ - வேண்டிய பண்டங்களை; அவையாவன: ஆசனப் பலகை, அட்சதை, அரைத்த மஞ்சள், அருச்சனைக்கு வேண்டிய பல வகையான மலர்கள், உடுத்துக் கொள்ள புதிய ஆடை, அங்கவஸ்திரம், வாயைத் துடைத்துக் கொள்ளச் சிறிய துண்டு, கையைக் கழுவிக் கொள்ள நீர் நிரம்பிய செம்பு, கால்களைக் கழுவுவதற்கு நீரை நிரப்பிய குடம், கற்பூரத் தட்டு, கற்பூரம், அபிடேக திரவியங்களாகிய தூயநீர்,

தேன், விபூதி, அரைத்த சந்தனம் முதலியவை, ஆராத்தியைக் கரைக்க அரைத்த மஞ்சள், சுண்ணாம்பு முதலியவை. பழுது - சிறிதேனும் குற்றம் இல்லாமல். தீர் - தீர்ந்த. பூசனை - அயவந்தி ஈசுவரருடைய பூசையை. முடித்து - அந்த நாயனார் செய்து நிறை வேற்றிவிட்டு. க் : சந்தி. கற்றை - கத்தையாகிய. வேணியார் - சடாபாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய அயவந்தி ஈசுவரருடைய. தொண்டரும் - திருத்தொண்டராகிய அந்தத் திருநீலநக்க நாயனாரும். கடி - பாதுகாப்பைப் பெற்ற. மனை - தம்முடைய திருமாளிகைக்குள். புகுந்தார் - நுழைந்தார்.

பிறகு வரும் 17 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'பயத்தை அடைந்திருக்கும் திருவுள்ளத்தோடு தம்முடைய கணவராகிய அந்தத் திருநீலநக்க நாயனாருடைய பக்கத்தில் அடையுமாறு போக முடியாத வராகி ஆலகால விடத்தை விழுங்கியவராகிய அயவந்தி ஈசுவரர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்குச் சென்று திருநீலநக்க நாயனாருடைய தர்மபத்தினியாராகிய அந்த நங்கையார் அந்தக் கோயிலில் தங்கிக் கொண்டிருந்தார்; செம்மையான சொற்கள் அடங்கிய இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றியவராகிய அந்தத் திருநீலநக்க நாயனார் அன்று இரவில் பஞ்சைப் புகுத்திச் செய்த மென்மையான மெத்தையாகிய படுக்கையில் படுத்துக் கொண்டு உறங்கு பவர் ஆனார்.' பாடல் வருமாறு :

" அஞ்சும் உள்ளமோ டவர்மருங்
கணைவுற மாட்டார்
நஞ்சம் உண்டவர் கோயிலில்
நங்கையார் இருந்தார்;

செஞ்சொல் நான்மறைத் திருநீல
நக்கர்தாம் இரவு
பஞ்சின் மெல்லணைப் பள்ளியிற்
பள்ளிகொள் கின்றார்.''

அஞ்சும் - பயத்தை அடைந்திருக்கும். உள்ளமோடு - திருவுள்ளத்தோடு. அவர் - தம்முடைய கணவராகிய அந்தத் திருநீலநக்க நாயனாருடைய. மருங்கு - பக்கத்தில். அணைவுற - அடையுமாறு போக. மாட்டார் - முடியாதவராகி; முற்றெச்சம். நஞ்சம் - திருமால் பள்ளி கொண்டருளிய பாற்கடலில்தோன்றிய ஆலகாலவிடத்தை. உண்டவர் - விழுங்கியவராகிய அயவந்தி ஈசுவரர். கோயிலில் - எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்குச் சென்று. கோயிலில்: உருபு மயக்கம். நங்கையார் - திருநீலநக்க நாயனாருடைய தர்மபத்தினியாராகிய அந்த நங்கையார். இருந்தார் - தங்கிக் கொண்டிருந்தார். செம் - செம்மையான; சிறப்பைப் பெற்றவையான. சொல் - சொற்கள் அடங்கிய; ஒருமை பன்மை மயக்கம். நான்மறை - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் முறையாக அத்தியயனம் செய்து நிறைவேற்றியவராகிய. மறை : ஒருமை பன்மை மயக்கம். த் : சந்தி. திருநீலநக்கர் தாம் - திருநீலநக்க நாயனார். தாம் : அசை நிலை. இரவு - அன்று இரவில். பஞ்சின் - இலவம் பஞ்சைப் புகுத்திச் செய்த. மெல் அணை - மென்மையான மெத்தையாகிய. ப் : சந்தி. பள்ளியில் - படுக்கையில். பள்ளி கொள்கின்றார் - அந்த நாயனார் படுத்துக் கொண்டு உறங்குபவரானார்.

பிறகு வரும் 18 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அவ்வாறு அந்தத் திருநீலநக்க நாயனார் படுத்துக் கொண்டிருக்கும் சமயத்தில் சாத்தமங்கையில் விளங்கும் அயவந்தி என்னும் திருக்கோயிலில் எழுந்தருளி,

யிருக்கும் பரமேசுவரராகிய அயவந்தி ஈசுவரர் அந்தத் திரு நீலநக்க நாயனாருடைய சொப்பனத்தில் வெள்ளமாகிய நீரைப் பெற்ற கங்கையாற்றைத் தங்க வைத்திருக்கும் சடாபாரத்தோடு நின்று கொண்டு தம்முடைய திரு மேனியை அந்த நாயனாருக்குக் காட்டியருளி, "திருவுள்ளத்தில் பக்தியை வைத்துக் கொண்டு எம்மை உன்னுடைய தர்மபத்தினியார் தம்முடைய வாயினால் ஊதி முன்பு தம்முடைய வாயின் எச்சில் நீரை உமிழ்ந்த பக்கத்தைத் தவிர யாம் கொண்டிருக்கும் வேறான இந்தப் பக்கம் அந்தச் சிலந்திப் பூச்சியினால் உண்டாகிய கொப்புளம் இருக்கிறது" என்று அந்த அயவந்தீசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய.' பாடல் வருமாறு :

**"பள்ளி கொள்பொழு தயவந்திப்**
**பரமர்தாம் கனவில்**
**வெள்ள நீர்ச்சடை யொடுநின்று**
**மேனியைக் காட்டி,**
**'உள்ளம் வைத்தெமை ஊதிமுன்**
**துமிந்தபால் ஒழியக்**
**கொள்ளும் இப்புறம் சிலம்பியின்**
**கொப்புள்'என் றருள."**

இந்தப் பாடல் குளகம். பள்ளி - அவ்வாறு அந்தத் திருநீலநக்க நாயனார் படுக்கையில். கொள் - படுத்துக் கொண்டிருக்கும். பொழுது - சமயத்தில். அயவந்தி - சாத்தமங்கையில் விளங்கும் அயவந்தி என்னும் திருக்கோயிலில். ப் : சந்தி. பரமர் தாம் - எழுந் தருளியிருக்கும் பரமேசுவரராகிய அயவந்தி ஈசுவரர். தாம் : அசை நிலை. கனவில் - அந்தத் திருநீலநக்க நாயனாருடைய சொப்பனத்தில். வெள்ள - வெள்ள மாகிய. நீர் - நீரைப் பெற்ற கங்கையாற்றைத் தங்க வைத்திருக்கும். ச் : சந்தி. சடையொடு - சடாபாரத் தோடு. நின்று - அந்தத் திருநீலநக்க நாயனாருக்கு முன்னால் நின்று கொண்டு. மேனியை - தம்முடைய திரு

மேனியை. க் : சந்தி. காட்டி - அந்த நாயனாருக்குக் காட்டியருளி. உள்ளம் - தம்முடைய திருவுள்ளத்தில். வைத்து - பக்தியை வைத்துக் கொண்டு. எமை - எம்மை ; இடைக்குறை. ஊதி - உன்னுடைய தர்மபத்தினியார் தம்முடைய வாயினால் ஊதி. முன் - முன்பு. துமிந்த - தம்முடைய வாயில் ஊறிய எச்சில் நீரை உமிழ்ந்த. பால் - பக்கத்தை. ஒழிய - தவிர. க் : சந்தி. கொள்ளும் - யாம் கொண்டிருக்கும். இப்புறம் - வேறாகிய இந்தப் பக்கத்தில். சிலம்பியின் - அந்தச் சிலந்திப் பூச்சியினால் உண்டாகிய. கொப்புள் - கொப்புளம் இருக்கிறது; பார்ப்பாயாக. என்று - என. அருள - அந்த அயவந்தி ஈசுவரர் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய.

பிறகு வரும் 19 - ஆம் பாடலின் கருத்து வருமாறு : 'அயவந்தீசுவரருடைய திருத்தொண்டராகிய அந்தத் திருநீலநக்க நாயனார் அந்தச் சொப்பனத்தைப் பார்த்த அந்தச் சமயத்தில் அந்தப் பெரியதாக இருக்கும் சொப்பனத்தை உண்மையான நிகழ்ச்சியல்லாமல் வெறும் சொப்பனம் என்று எண்ணித் தாம் தம்முடைய திருவுள்ளத்தில் மேற்கொண்ட பயத்தோடு தம்முடைய கரங்களைத் தம்முடைய தலையின்மேல் அஞ்சலியாகக் குவித்துக் கும்பிட்டுவிட்டு உடனே துயிலிலிருந்து விழித்துக் கொண்டு அந்த அயவந்தி ஈசுவரரை வணங்கிக் கூத்தாடினார்; பாடல்களைப் பாடினார்; தோத்திரங்களைக் கூறினார்; எல்லாத் தேவர்களுக்கும் தலைவராகிய அயவந்தி ஈசுவரருடைய கருணையை வாழ்த்தித் தரையில் விழுந்து அந்த ஈசுவரரை வணங்கிவிட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு புலம்பினார்.' பாடல் வருமாறு :

" கண்ட அப்பெருங் கனவினைக்
கனவெனக் கருதிக்
கொண்ட அச்சமோ டஞ்சலி
குவித்துடன் விழித்துத்

**தொண்ட னார்தொழு தாடினார்;**
**பாடினார்; துதித்தார்;**
**அண்டர் நாயகர் கருணையைப்**
**போற்றிநின் றழுதார்.''**

*தொண்டனார்* - அயவந்தீசுவரருடைய திருத்தொண்டராகிய அந்தத் திருநீலநக்க நாயனார். *கண்ட* - அந்தச் சொப்பனத்தைப் பார்த்த. *அப்பெரும்* - அந்தப் பெரியதாக இருக்கும். *கனவினை* - சொப்பனத்தை. *க்* : சந்தி. *கனவு என* - சொப்பனம் என்று. *என* : இடைக்குறை. *க்* : சந்தி. *கருதி* - எண்ணி. *க்* : சந்தி. *கொண்ட* - தாம் தம்முடைய திருவுள்ளத்தில் மேற்கொண்ட. *அச்சமோடு* - பயத்தோடு. *அஞ்சலி குவித்து* - தம்முடைய கரங்களைத் தம்முடைய தலையின் மேல் அஞ்சலியாகக் குவித்துக் கும்பிட்டுவிட்டு. *உடன்* - உடனே. *விழித்து* - துயிலிலிருந்து விழித்துக்கொண்டு. *த்* : சந்தி. *தொழுது* - அந்த அயவந்தி ஈசுவரரை வணங்கி. *ஆடினார்* - கூத்தாடினார். *பாடினார்* - பாடல்களைப் பாடினார். *துதித்தார்* - தோத்திரங்களைத் திருவாய் மலர்ந்தருளிச் செய்தார். *அண்டர்* - எல்லாத் தேவர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். *நாயகர்* - தலைவராகிய அயவந்தி ஈசுவரர். *கருணையை* - வழங்கிய கருணையை. *ப்* : சந்தி. *போற்றி* - வாழ்த்தித் தரையில் விழுந்து அந்த ஈசுவரரை வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து. *நின்று* - நின்று கொண்டு. *அழுதார்* - புலம்பினார்.

அடுத்து உள்ள 20 - ஆம் கவியின் கருத்து வருமாறு :

'இரவு நேரம் கழிந்து இருட்டுப்போய் விடியற் காலம் வர அந்தத் திருநீலநக்க நாயனார் அயவந்தீசுவரருடைய திருக்கோயிலுக்குள் நுழைந்து எல்லாத் தேவர்களுக்கும் முதல் தலைவராகிய அயவந்தி என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியுள்ள அழகிய கண்களைப் பெற்றவராகிய அயவந்தி ஈசுவரருடைய திருவடிகளாகிய மூலப் பொருள்

களை வணங்கித் தரையில் விழுந்து பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு அந்த ஈசுவரருடைய சந்நிதியில் அந்த ஈசுவரரைத் துதித்துத் தம்முடைய தர்மபத்தினியாராகிய அழகு மருவிய பெண்மணியாரையும் அழைத்துக் கொண்டு தம்முடைய திருமாளிகைக்கு மறுபடியும் திரும்பி வந்து சேர்ந்தார்.' பாடல் வருமாறு:

"போது போய்இருள் புலர்ந்திடக்
கோயிலுட் புகுந்தே
ஆதி நாயகர் அயவந்தி
அமர்ந்தஅங் கணர்தம்
பாத மூலங்கள் பணிந்துவிழ்ந்
தெழுந்து முன்பரவி
மாத ராரையும் கொண்டுதம்
மனையில்மீண் டணைந்தார்."

போது - இரவு நேரம். போய் - கழிந்து. இருள் - இருட்டு. புலர்ந்திட - போய் விடியற்காலம் வந்து சேர. க்: சந்தி. கோயிலுள் - அந்தத் திருநீலநக்க நாயனார் சாத்தமங்கையில் விளங்கும் அயவந்தி ஈசுவரருடைய திருக்கோயிலுக்கு உள்ளே. புகுந்து - நுழைந்து. ஏ: அசை நிலை. ஆதி - எல்லாத் தேவர்களுக்கும் முதல், நாயகர் - தலைவராகிய. அயவந்தி - அயவந்தி என்னும் திருக்கோயிலில். அமர்ந்த - எழுந்தருளியுள்ள. அங்கணர் தம் - அழகிய கண்களைப் பெற்றவராகிய அயவந்தி ஈசுவரருடைய. கணர்: இடைக்குறை. கண்: ஒருமை பன்மை மயக்கம். தம்: அசைநிலை. பாத - திருவடிகளாகிய; ஒருமை பன்மை மயக்கம். மூலங்கள் - மூலப் பொருள்களை; எல்லா உயிர்களும் தோன்றுவதற்கு மூலமான பரம்பொருளை. பணிந்து வீழ்ந்து - தரையில் விழுந்து வணங்கி விட்டு. எழுந்து - பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு. முன் - அந்த ஈசுவரருடைய சந்நிதியில். பரவி - அந்த ஈசுவரரைத் துதித்து. மாதராரையும் - தம்முடைய தர்மபத்தினியாராகிய அழகு

மருவிய பெண்மணியாரையும். கொண்டு - தம்மோடு அழைத்துக் கொண்டு. தம் - தம்முடைய. மனையில் - திருமாளிகைக்கு; உருபு மயக்கம். மீண்டு - மறுபடியும் திரும்பி வந்து. அணைந்தார் - சேர்ந்தார்.

அடுத்து வரும் 21 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்தத் திருநீலநக்க நாயனார் தம்முடைய திரு மாளிகைக்கு எழுந்தருளிய பிறகு முன்னைக் காட்டிலும் பெருகி எழுந்த ஆனந்தம் தம்முடைய திருவுள்ளத்தில் வந்து அடைய இன்பத்தை அடையும் திறத்தில் ஒரு வரம்பு இல்லாத பூசையை அந்த அயவந்தி ஈசுவரருக்குப் புரிந்து பக்தி மேம்பட்டு விளங்கும் அடியவர்கள் மிகுதியாகத் தம்முடைய திருமாளிகையை அடைபவர்களுக்கு முன்பு செய்ததைப் போல அந்த அடியவர்கள் விரும்பும் செயல் களை விருப்பத்தோடு செய்து நிறைவேற்றுவார்.' பாடல் வருமாறு :

"பின்பு முன்னையின் பெருகிய
மகிழ்ச்சிவந் தெய்த
இன்பு றும்திறத் தெல்லையில்
பூசனை இயற்றி
அன்பு மேம்படும் அடியவர்
மிகஅணை வார்க்கு
முன்பு போலவர் வேண்டுவ
விருப்புடன் முடிப்பார்."

பின்பு - அந்தத் திருநீலநக்க நாயனார் தம்முடைய திருமாளிகைக்கு மறுபடியும் எழுந்தருளிய பிறகு. முன்னையின் - முன்பைக் காட்டிலும். பெருகிய - பெருகி எழுந்த. மகிழ்ச்சி - ஆனந்தம். வந்து எய்த - தம்முடைய திருவுள்ளத்தில் வந்து அடைய. இன்புறும் - இன்பத்தை அடையும். திறத்து - விதத்தில். எல்லை - ஒரு வரம்பு. இல் - இல்லாத; கடைக்குறை. பூசனை - பூசையை. இயற்றி - அந்த அயவந்தி ஈசுவரருக்குப் புரிந்து. அன்பு - பக்தி. மேம்படும் - மேம்பாட்டை அடைந்து விளங்கும்.

அடியவர் - அடியவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். மிக - மிகுதியாக. அணைவார்க்கு - தம்முடைய திருமாளிகையை அடைபவர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். முன்பு போல் - முன்பு செய்ததைப் போல. அவர் - அந்த அடியவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வேண்டுவ - விரும்பும் செயல்களை; என்றது தங்களுடைய பெண்களுக்குத் திருமணம் செய்ய வேண்டும் என்பதை, தங்களுடைய புதல்வர்களுக்கு உபநயனம் செய்து வைக்க வேண்டும் என்பதையும், தங்களுடைய குமாரர்களுக்கு அழகும் அறிவும் உள்ள கன்னிகைகளைத் திருமணம் செய்து வைக்க வேண்டும் என்பதையும், இவை போன்ற மற்றவைகளையும். விருப்புடன் - விருப்பத்தோடு. முடிப்பார் - செய்து நிறைவேற்றுவார்.

அடுத்து வரும் 22 - ஆம் கவியின் கருத்து வருமாறு :

'அந்தத் திருநீலநக்க நாயனார் அத்தகைய பான்மையோடு சாத்தமங்கையில் தங்கிக் கொண்டு இனிமையோடு வாழ்ந்து வரும் அந்தக் காலத்தில் புகழோடு நிலைபெற்று விளங்கும் பூந்தராயாகிய சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய வேதியரும் ஆளுடைய பிள்ளையாரும் ஆகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய பெருமையைப் பல தடவைகளும் கூறி இந்த உலகத்தில் வாழும் மக்கள் வாழ்த்துமாறு அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருவடிகளைத் தம்முடைய தலையின் மேல் வைத்துக் கும்பிட்டு அவரோடு சேரும் விருப்பத்தில் தலை சிறந்து விளங்கினார்.' பாடல் வருமாறு :

"அன்ன தன்மையில் அமர்ந்தினி
தொழுகும்அந் நாளில்
மன்னு பூந்தராய் வருமறைப்
பிள்ளையார் பெருமை
பன்னி வையகம் போற்றிட
மற்றவர் பாதம்

**சென்னி வைத்துடன் சேர்வுறும்**
**விருப்பினிற் சிறந்தார்.''**

அன்ன - அந்தத் திருநீலநக்க நாயனார் அத்தகைய. திருநீலநக்க நாயனார்: தோன்றா எழுவாய். தன்மையில் - பான்மையோடு; உருபு மயக்கம். அமர்ந்து - சாத்த மங்கையில் தங்கிக் கொண்டு. இனிது - இனிமையோடு. ஒழுகும் - தம்முடைய இல்லற வாழ்க்கையை நடத்தி வரும். அந்நாளில் - அந்தக் காலத்தில். மன்னு - புகழோடு நிலைபெற்று விளங்கும். பூந்தராய் - பூந்தரா யாகிய சீகாழியில். வரு - திருவவதாரம் செய்தருளி வரும். மறை - வேதியரும்; திணை மயக்கம். ப்: சந்தி. பிள்ளையார் - ஆளுடைய பிள்ளையாரும் ஆகிய திரு ஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய. பெருமை - பெருமையை. பன்னி - பல தடவைகளும் எடுத்துக் கூறி. வையகம் - இந்த உலகத்தில் வாழும் மக்கள்; இடவாகு பெயர். போற்றிட - வாழ்த்துமாறு. மற்று: அசைநிலை. அவர் - அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய. பாதம் - திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். சென்னி வைத்து - தம்முடைய தலையின் மேல் வைத்துக் கும்பிட்டு. உடன் - அந்த நாயனாரோடு. சேர்வுறும் - சேரும். விருப்பினில் - விருப்பத்தில். சிறந்தார் - தலை சிறந்து விளங்கினார்.

பின்பு வரும் 23 - ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'நல்ல குணங்களில் மேம்பாட்டை அடைந்து விளங்கும் அத்தகைய நிலைமையில் வாழ்ந்து வருபவராகிய அந்தத் திருநீலநக்க நாயனார் அவ்வாறு வாழ்ந்து வரும் அந்தக் காலத்தில் இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள் தாங்கள் முன் பிறவியில் புரிந்த பெரியதாக இருக்கும் பயனைப் பெறுமாறு இந்தச் செந்தமிழ் நாட்டில் உள்ள நல்ல சிவத்தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் ஆகாயத்தில் விளங்கும் கங்கை நீரைத் தங்க வைத்திருக்கும் சடா

பாரத்தைத் தம்முடைய தலையின் மேற் பெற்றவராகிய சிவபெருமானாரை வணங்குவதற்காக அந்த நாயனார் அடைபவராகி சண்பையாகிய சீகாழியை ஆட்சி புரியும் அரசராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும் திருநீல நக்க நாயனார் வாழ்ந்து கொண்டிருக்கும் சாத்த மங்கைக்கு எழுந்தருளி வந்து சேர்ந்தார்.' பாடல் வருமாறு :

**" பண்பு மேம்படு நிலைமையார்**
**பயிலும் அப்பருவம்**
**மண்பெ ருந்தவப் பயன்பெற**
**மருவுநற் பதிகள்**
**விண்பி றங்குநீர் வேணியார்**
**தமைத்தொழ அணைவார்**
**சண்பை மன்னரும் சாத்தமாங்**
**கையில்வந்து சார்ந்தார்."**

பண்பு - நல்ல குணங்களில்; ஒருமை பன்மை மயக்கம். மேம்படு - மேம்பாட்டை அடைந்து விளங்கும். நிலைமை யார் - அத்தகைய நிலைமையில் வாழ்ந்து வருபவராகிய அந்தத் திருநீலநக்க நாயனார். பயிலும் - அவ்வாறு வாழ்ந்து வரும். அப்பருவம் - அந்தக் காலத்தில். மண் - இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். பெரும் - தாங்கள் முற்பிறவியில் புரிந்த பெரியதாக இருக்கும். தவப்பயன் - தவத்தினுடைய பிரயோசனத்தை. பெற - அடையுமாறு. மருவு - இந்தச் செந்தமிழ் நாட்டில் உள்ள. நல்-நல்ல. பதிகள் - சிவத்தலங்களில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும்; ஆகு பெயர். விண் - ஆகாயத்தில். பிறங்கு - விளங்கும். நீர் - கங்கையாற்றில் நீரைத் தங்க வைத்திருக்கும். வேணியார் தமை - சடா பாரத்தைத் தம்முடைய தலையின்மேற் பெற்றவராகிய சிவபெருமானாரை. தமை : இடைக்குறை. தம் : அசை நிலை. த் : சந்தி. தொழ - வணங்குவதற்காக. அணை

வார் - அடைபவராகி; முற்றெச்சம். சண்பை - சண்பை யாகிய சீகாழியை. மன்னரும் - ஆட்சி புரிந்தருளும் அரசராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும். சாத்தமங்கையில் - சாத்தமங்கைக்கு; உருபு மயக்கம். வந்து - எழுந்தருளி வந்து. சார்ந்தார் - சேர்ந்தார்.

பிறகு உள்ள 24 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'நெடுங்காலமாக உள்ள சீர்த்தியைப் பெற்ற திருநீலகண்டத்து யாழ்ப்பெரும்பாண நாயனார், இதழ்களைப் பெற்ற மலர்கள் நிலவும் கூந்தலைப் பெற்ற தம்முடைய தர்மபத்தினியாராகிய விறலியார் தம்மோடு வரத் திருத் தொண்டர்கள் கூட்டமாகக் கூடியிருக்கும் அந்தப் பெருமையைப் பெற்று விளங்கும் கூட்டத்தோடும் புகலியாகிய சீகாழியில் வாழும் மக்களுடைய தலைவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தம்முடைய ஊருக்குப் பக்கத்தில் எழுந்தருளி வந்த பான்மையைக் கேள்விப்பட்டுத் தம்முடைய திருவுள்ளத்தில் மகிழ்ச்சியைப் பெற்ற அந்தத் திருநீலநக்க நாயனார்.' பாடல் வருமாறு :

**" நீடு சீர்த்திரு நீலகண் டப்பெரும் பாணர்**
**தோடு லாம்குழல் விறலியார் உடன்வரத் தொண்டர்**
**கூடும் அப்பெரும் குழாத்தொடும் புகலியர் பெருமான்**
**மாடு வந்தமை கேட்டுளம் மகிழ்நீல நக்கர்."**

இந்தப் பாடல் குளகம். நீடு - நெடுங்காலமாக உள்ள. சீர் - சீர்த்தியைப் பெற்ற. த் : சந்தி. திருநீலகண்டப் பெரும்பாணர் - திருநீலகண்டத்து யாழ்ப்பெரும்பாண நாயனார். தோடு - இதழ்களைப் பெற்ற மலர்கள்; ஆகு பெயர். தோடு : ஒருமை பன்மை மயக்கம். உலாம் - நிலவும். குழல் - கூந்தலைப் பெற்ற. விறலியார் - தம்முடைய தர்மபத்தினியாராகிய விறலியார். விறலி - சத்துவம் பட ஆடிப் பாடுகிறவள். உடன்வர - தம்மோடு வர. த் : சந்தி. தொண்டர் - சிவபெருமானுடைய திருத் தொண்டர்கள்; ஒருமை பன்மை மயக்கம். கூடும் -

கூட்டமாகக் கூடியிருக்கும். அப்பெரும் - அந்தப் பெருமையைப் பெற்று விளங்கும். குழாத்தொடும் - கூட்டத்தோடும். புகலியர் - புகலியாகிய சீகாழியில் வாழும் மக்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். பெருமான் - தலைவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். மாடு வந்தமை - தம்முடைய ஊருக்குப் பக்கத்தில் எழுந்தருளி வந்த பான்மையை. கேட்டு - கேள்விப்பட்டு. உளம் - தம்முடைய திருவுள்ளத்தில்; இடைக்குறை. மகிழ் - மகிழ்ச்சியைப் பெற்ற; முதல் நிலைத் தொழிற் பெயர். நீலநக்கர் - திருநீலநக்க நாயனார்.

அடுத்து வரும் 25 - ஆம் செய்யுளின் கருத்து வருமாறு :

'அவ்வாறு திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தம்முடைய ஊருக்குப் பக்கத்தில் எழுந்தருளி வந்த செய்தியைக் கேள்விப்பட்ட அந்தச் சமயத்திலேயே அந்தத் திருநீலநக்க நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் பெருகி எழுந்த மகிழ்ச்சியினால் கிளர்ச்சியை அடைந்து இதழ்களைக் கொண்ட மலர் மாலைகளையும், துவசங்களையும் தொங்கவிட்டு அலங்காரத்தைப் புரிந்து தோரணங்களை நட்டு வைத்து நீளமாக உள்ள நடைப் பந்தலை அமைத்து தம்முடைய நல்ல உறவினர்கள் கூடிய கூட்டத்தையும் தம்மோடு அழைத்துக் கொண்டு வந்து தாமும் முன்னால் அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கு எதிரில் சென்று வரவேற்பதற்காக எழுந்து சென்றார்.' பாடல் வருமாறு :

"கேட்ட அப்பொழு தேபெரு
மகிழ்ச்சியிற் கிளர்ந்து
தோட்ட லங்கலும் கொடிகளும்
புனைந்து தோரணங்கள்
நாட்டி நீள்நடைக் காவணம்
இட்டுநற் சுற்றத்

**ஈட்டமும் கொடு தாமும்முன்
எதிர்கொள எழுந்தார்.''**

கேட்ட - அவ்வாறு திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தம்முடைய ஊராகிய சாத்தமங்கைக்குப் பக்கத்தில் எழுந்தருளி வந்த செய்தியைக் கேள்விப்பட்ட. அப்பொழுதே - அந்தச் சமயத்திலேயே. பெரு - அந்தத் திருநீலநக்க நாயனார் தம்முடைய திருவுள்ளத்தில் பெருகி எழுந்த. மகிழ்ச்சியில் - மகிழ்ச்சியினால்; உருபு மயக்கம். கிளர்ந்து - கிளர்ச்சியை அடைந்து. தோட்டு - இதழ்களை பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். அலங்கலும் - மலர் மாலைகளையும்; ஒருமை பன்மை மயக்கம். கொடிகளும் - துவசங்களையும். புனைந்து - தொங்கவிட்டு அலங்காரத்தைப் புரிந்து. தோரணங்கள் - தோரணங்களை. தோரணம் - மாவிலைகளையும், தென்னங் குருத்துக்களையும், மலர்களையும் கட்டித் தொங்க விட்டது. நாட்டி - நட்டு வைத்து. நீள் - நீளமாகிய. நடைக்காவணம் - நடைப் பந்தலை, மக்கள் நடக்கும் போது நிழல் தரும் பந்தல். இட்டு - அமைத்து. நல் - நல்ல. சுற்றத்து - தம்முடைய உறவினர்கள்; திணை மயக்கம். ஈட்டமும் - கூடிய கூட்டத்தையும். கொடு - அழைத்துக் கொண்டு வந்து. தாமும் என்றது திருநீலநக்க நாயனாரை. முன் - முன்னால். எதிர்கொள - அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கு எதிரில் சென்று வரவேற்பதற்காக. கொள: இடைக்குறை. எழுந்தார் - எழுந்து சென்றார்.

பிறகு வரும் 24-ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அவ்வாறு அந்தத் திருநீலநக்க நாயனார் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை வரவேற்கும் பொருட்டுப் போய் அந்த ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் எழுந்தருளிச் செல்லும் திருத் தொண்டர்களுடைய திருக்கூட்டத்தோடு கலந்து

கொண்டு அந்த இடத்தில் அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கு எதிரில் சென்று அந்த நாயனாரை வரவேற்றுத் தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழுந்த ஆனந்தத்தால் ஒரு வகையாக அல்லாமல் பலவிதமாகக் கூத்தாடியும், பாடல்களைப் பாடியும் அந்தத் திருநீலநக்க நாயனார் அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருவடிகளில் விழுந்து வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு அடைபவராகித் தங்கத்தைப் பதித்து விளங்கும் தம்முடைய உயரமாக நிற்கும் திருமாளிகைக்குள் அந்த திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரைத் தம்மோடு அழைத்துக் கொண்டு சென்று நுழைந்தார்.' பாடல் வருமாறு :

**"சென்று பிள்ளையார் எழுந்தரு**
**ளும்திருக் கூட்டம்**
**ஒன்றி அங்கெதிர் கொண்டுதம்**
**களிப்பினால் ஒருவா**
**றன்றி ஆடியும் பாடியும்**
**தொழுதெழுந் தணைவார்**
**பொன்த யங்குநீள் மனையிடை**
**உடன்கொடு புகுந்தார்."**

சென்று - அவ்வாறு அந்தத் திருநீலநக்க நாயனார் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை வரவேற்கும் பொருட்டுப் போய். பிள்ளையார் - ஆளுடைய பிள்ளையாராகிய அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். எழுந்தருளும் - எழுந்தருளிச் செல்லும். திருக் கூட்டம் - திருத் தொண்டர்களுடைய திருக்கூட்டத்தோடு. ஒன்றி - கலந்து கொண்டு. அங்கு - அந்த இடத்தில். எதிர் கொண்டு - அந்தத் திருஞான சம்பந்த நாயனாருக்கு எதிரில் சென்று அந்த நாயனாரை வரவேற்று. தம் - தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழுந்த. களிப்பினால் - ஞானத்தால். ஒருவாறு - ஒரு வகை. அன்றி - அல்லாமல். ஆடியும் - பலவிதமாக கூத்தாடியும், பாடியும் - பாடல்களைப்

பாடியும். தொழுது - அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருவடிகளில் விழுந்து வணங்கி விட்டு. எழுந்து - பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு. அணைவார் - அடைபவராகி; முற்றெச்சம். பொன் - தங்கத்தைப் பதித்து. தயங்கு - விளங்கும். நீள் - உயரமாக நிற்கும். மனையிடை - தம்முடைய திருமாளிகைக்கு உள்ளே. உடன் - அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை தம்மோடு. கொடு - அழைத்துக் கொண்டு சென்று. புகுந்தார் - நுழைந்தார்.

பிறகு வரும் 27 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

'அந்த ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளி வந்த பெருமையைப் பெற்ற நிகழ்ச்சிக்குத் தக்கவாறு வெள்ளத்தைப் போலக் கூடிய அடியவர்களுடைய கூட்டமும் விரும்புமாறு தம்முடைய திருவுள்ளத்தில் பேராவல் ஓங்கி எழ புகழோடு ஓங்கி வளரும் அந்தத் திரு நீலநக்க நாயனார் சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய வள்ளலாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரைத் தம்முடைய திருமாளிகையில் திருவமுது செய்யுமாறு அந்தத் திருநீலநக்க நாயனார் செய்தார்.' பாடல் வருமாறு:

"பிள்ளை யாரெழுந் தருளிய
பெருமைக்குத் தக்க
வெள்ள மாகிய அடியவர்
கூட்டமும் விரும்ப
உள்ளம் ஆதர வோங்கிட
ஓங்குசீ காழி
வள்ள லாரைத்தம் மனையிடை
அமுதுசெய் வித்தார்."

பிள்ளையார் - அந்த ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். எழுந்தருளிய -

தம்முடைய திருமாளிகைக்கு எழுந்தருளி வந்த. பெருமைக்கு - பெருமையைப் பெற்ற நிகழ்ச்சிக்கு. த் : சந்தி. தக்க - தக்கவாறு. வெள்ளமாகிய - வெள்ளத்தைப் போலக் கூடிய. அடியவர் - அடியவர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். கூட்டமும் விரும்ப - கூட்டமும் விரும்புமாறு. உள்ளம் - தம்முடைய திருவுள்ளத்தில். ஆதரவு-பேராவல். ஓங்கிட-ஓங்கி எழ. ஓங்கு - புகழோடு ஓங்கி வளரும். சீகாழி - சீகாழியில் திருவவதாரம் செய்தளிய. வள்ளலாரை - வள்ளலாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை. த் : சந்தி. தம் - தம்முடைய; என்றது திருநீலநக்க நாயனாருடைய என்றபடி. மனையிடை-திருமாளிகையில். அமுது செய்வித்தார்- திருவமுது செய்யுமாறு அந்தத் திருநீலநக்க நாயனார் செய்தார்.

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரை வள்ளலார் என்றல்: ''பெருகு ஞான வள்ளலார்.'', ''மண்ணுலகு செய்த தவப் பயனாயுள்ள வள்ளலார்.'', ''வள்ளலார் எழுக என.'', ''வள்ளலார் மற்ற வளம்பதி மருவுதல் மகிழ்ந்து.'', ''வையகம் உய்ய வந்த வள்ளலார்.'', ''வள்ளலார் அவர்தம் பின்பு மன்னன்மா ஏறிச் சென்றான்.'', ''வள்ளலார் மற்றவர் அருளின் வாய்மை கூறின் வரம்பென்னாம்.'' என்று சேக்கிழாரும், ''வள்ளல் நீ.'', ''உள்ளமே கோலாக ஊன்றினான் வள்ளல்.'' என்று நம்பியாண்டார் நம்பியும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு வரும் 28 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அவ்வாறு திருநீலநக்க நாயனாருடைய திருமாளிகையில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவமுது செய்த பிறகு பகலைச் செய்யும் சூரியன் மேற்குத் திசையில் உள்ள சமுத்திரத்தை அடைந்து அத்தமனம் ஆக குமுத மலர்கள் மலர்ந்திருக்கும் வாவியில் குளிர்ச்சியைப் பெற்ற சந்திரனுடைய கிரணங்கள் அடையும் சமயத்தில் இமய

மலையரசனுடைய புதல்வியாகிய பெரிய நாயகியம்மை அழகிய தன்னுடைய கொங்கைகளிலிருந்து ஒரு பொற் கிண்ணத்தில் கறந்து சிவஞானத்தைக் குழைத்து வைத்த பாலை உண்டவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் இரவு நேரத்திலும் தம்முடைய சீர்த்தியைப் பெற்ற திருமாளிகையில் தங்குவதற்கு வேண்டியவற்றை அந்தத் திருநீலநக்க நாயனார் அமைத்து வைத்தார்." பாடல் வருமாறு:

**"அமுது செய்தபின் பகலவன்**
**மேல்கடல் அணையக்**
**குமுத வாவியிற் குளிர்மதிக்**
**கதிரணை போதில்**
**இமய மங்கைதன் திருமுலை**
**அமுதுண்டார் இரவும்**
**தமது சீர்மனைத் தங்கிட**
**வேண்டுவ சமைத்தார்."**

அமுது செய்தபின் - அவ்வாறு திருநீலநக்க நாயனாருடைய திருமாளிகையில் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவமுது செய்தபிறகு. பகலவன் - பகலைச் செய்யும் சூரியன்; 'திவாகரன்' என்று அவனுக்கு ஒரு பெயர் இருப்பதை அறிக. "பகற் செய்யும் செஞ் ஞாயிறும்." என்று வருவதையும் காண்க. மேல் கடல் - மேற்குத் திசையில் உள்ள சமுத்திரத்தை. அணைய - அடைந்து அத்தமனமாக. க் : சந்தி. குமுத - குமுத மலர்கள் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். வாவியில் - வாவியில். குளிர் - குளிர்ச்சியைப் பெற்ற. ம தி - ச ந் தி ர னு டை ய. க் : சந்தி. கதிர் - கிரணங்கள்; ஒருமை பன்மை மயக்கம். அணை - அடையும். போதில் - சமயத்தில். இமயமங்கை தன் - இமய மலையரசனுடைய புதல்வியாகிய பெரிய நாயகி அம்மை; இமயம் : திணை மயக்கம். தன் : அசைநிலை. திரு - அழகிய. முலை -

தன்னுடைய கொங்கைகளிலிருந்து ஒரு பொற் கிண்ணத்தில் கறந்து சிவஞானத்தை குழைத்து வைத்த. முலை : ஒருமை பன்மை மயக்கம். அமுது - பாலை. உண்டார் - குடித்தருளியவராகிய திருஞான சம்பந்தமூர்த்தி நாயனார். இரவும் - இரவு நேரத்திலும். தமது - தம்முடைய. சீர் - சீர்த்தியைப் பெற்ற. மனை - திருமாளிகையில். த் : சந்தி. தங்கிட - தங்குவதற்காக. வேண்டுவ - வேண்டியவற்றை. அவையாவன : ஆசனப் பலகை, மெத்தை முதலியவை. அமைத்தார் - அந்தத் திருநீலநக்க நாயனார் அமைத்து வைத்தார்.

பிறகு உள்ள 29 - கவியின் உள்ளுறை வருமாறு : 'நல்ல பண்புகளைப் பெற்ற உண்மையான திருத்தொண்டராகிய திருநீலநக்க நாயனாரோடு திருவமுது செய்தருளிவிட்டு இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள் உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம் தம்முடைய பத்தினியாகிய பெரிய நாயகியோடு நம்பராகிய தோணியப்பர் வந்து சேரும் சமயம் முன்னால் அந்தப் பெரிய நாயகியம்மை தம்முடைய கொங்கைகளிலிருந்து கறந்த பாலை ஒரு பொற் கிண்ணத்தில் வைத்துச் சிவஞானத்தை அதனோடு குழைத்து வழங்கியருளிய அந்தப் பாலை முன் ஒரு நாளில் பெறுவதற்காக அழுதருளியவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தம்மை அழைத்தருள வேகமாக திருநீலநக்க நாயனார் அந்த திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரிடம் எழுந்தருளி வந்து அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருவடிகளைத் தரையில் விழுந்து வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கு முன்னால் நின்று கொண்டிருந்தார்.' பாடல் வருமாறு :

''சீல மெய்த்திருத் தொண்டரோ
டமுதுசெய் தருளி
ஞாலம் உய்ந்திட நாயகி
யுடன்நம்பர் நண்ணும்

காலம் முற்பெற அழுதவர்
அழைத்திடக் கடிது
நீல நக்கனார் வந்தடி
பணிந்துமுன் நின்றார்.''

சீல - நல்ல பண்புகளைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மெய் - உண்மையான. த் : சந்தி. திருத் தொண்டரோடு - அயவந்தி ஈசுவரருடைய திருத்தொண்டராகிய, திருநீலநக்க நாயனாரோடு. அமுது செய் தருளி - திருவமுது செய்தருளிவிட்டு. ஞாலம் - இந்த மண்ணுலகத்தில் வாழும் மக்கள்; இட ஆகுபெயர். உய்ந்திட - உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம். நாயகியுடன் - தம்முடைய பத்தினியாகிய பெரிய நாயகியோடு. நம்பர் - தம்முடைய அடியவர்களுக்குப் பலவகையான நம்பிக்கைகளை உண்டாக்குபவராகிய தோணியப்பர். அந்த நம்பிக்கைகள் இன்னவென்பதை வேறு ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. நண்ணும் - சீகாழியில் உள்ள ஒரு கட்டுமலையில் பெரிய நாயகியோடு வீற்றிருக்கும் அந்தத் தோணியப்பர் வந்து சேரும்; காலம் - சமயம் முன் - முன்னால். பெற - அந்தப் பெரியநாயகியம்மையார் தம்முடைய கொங்கைகளிலிருந்து கறந்த பாலை ஒரு பொற் கிண்ணத்தில் வைத்துச் சிவஞானத்தை அதனோடு குழைத்து வழங்கியருளிய அந்தப் பாலை முன்பு ஒரு நாளில் பெறுவதற்காக. அழுதவர்-அழுதருளியவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். அழைத்திட - தம்மை அழைத்தருள. க் : சந்தி. கடிது - வேகமாக. நீலநக்கனார் - திருநீலநக்க நாயனார். வந்து - எழுந்தருளி வந்து. அடி - அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். பணிந்து - தரையில் விழுந்து வணங்கி விட்டு. முன் - பிறகு தரையிலிருந்து எழுந்து அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருக்கு முன்னால். நின்றார் - நின்று கொண்டிருந்தார்.

பிறகு வரும் 30 - ஆம் செய்யுளின் கருத்து வருமாறு :

'அவ்வாறு தமக்கு முன்னால் நின்று கொண்டிருந்த அயவந்தி ஈசுவரருடைய பக்தராகிய திருநீலநக்க நாயனாரைப் பார்த்துத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார், "திருநீலகண்டத்து யாழ்ப்பெரும்பாண நாயனாருக்கு இன்றைக்குத் தங்குவதற்காக ஓர் இடத்தை உம்முடைய திருமாளிகையில் வழங்கியருளுவீராக" என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்ய நன்றாக இன்பத்தை அடைந்து தம்முடைய திருமாளிகையில் நடுவில் உள்ள யாக சாலைத் திண்ணையின் பக்கத்திற்குப் போய் அந்தத் திருநீல கண்டத்து யாழ்ப்பெரும்பாண நாயனாருக்கு அழகிய வேதியராகிய அந்தத் திருநீலநக்க நாயனார் ஓர் இடத்தை வழங்கியருளினார்.' பாடல் வருமாறு :

> "நின்ற அன்பரை, 'நீலகண்
> டப்பெரும் பாணர்க்
> கின்று தங்கஓர் இடம்கொடுத்
> தருளுவீர்.' என்ன
> நன்றும் இன்புற்று நடுமனை
> வேதியின் பாங்கர்ச்
> சென்று மற்றவர்க் கிடம்கொடுத்
> தனர்திரு மறையோர்."

நின்ற - அவ்வாறு தமக்கு முன்னால் நின்று கொண்டிருந்த. அன்பரை - அயவந்தி ஈசுவரருடைய பக்தராகிய திருநீலநக்க நாயனாரைப் பார்த்துத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். நீலகண்டப் பெரும்பாணர்க்கு- திருநீலகண்டத்து யாழ்ப்பெரும்பாண நாயனாருக்கு. இன்று - இன்றைக்கு. தங்க - தங்குவதற்காக. ஓர் இடம் - உம்முடைய திருமாளிகையில் உள்ள ஓர் இடத்தை. கொடுத்தருளுவீர் - வழங்கியருளுவீராக. என்ன - என்று திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. நன்றும் - நன்றாக. 'உம்மை' வேண்டாவழி வந்தது. இன்புற்று - ஆனந்தத்தை

அடைந்து. நடுமனை - தம்முடைய திருமாளிகையின் நடுவில் உள்ள. வேதியின் - யாகசாலைத்திண்ணையினுடைய பாங்கர் - பக்கத்தில்; ச் : சந்தி. சென்று - போய். மற்று : அசைநிலை. அவர்க்கு - அந்தத் திருநீலகண்டத்து யாழ்ப் பெரும்பாண நாயனாருக்கு. இடம் - ஓர் இடத்தை. திரு - அழகிய; 'செல்வத்தைப் பெற்ற' எனலும் ஆம். மறை யோர் - வேதியராகிய அந்தத் திருநீலநக்க நாயனார். கொடுத்தனர் - வழங்கியருளினார்.

அடுத்து வரும் 31 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'திருநீலநக்க நாயனாருடைய திருமாளிகையில் உள்ள அந்த இடத்தில் விளங்கும் யாகசாலைத் திண்ணையில் எப்போதும் அவியாமல் உள்ள சிவந்த நெருப்பு வலமாகச் சுழித்துக் கொண்டு மேல் நோக்கி ஓங்கி முன்பு இருந்ததைக் காட்டிலும் ஒரு வகையில் உள்ளது அல்லாமல் பலவகை யாகப் பிரகாசத்தை வீசத் தம்முடைய திருமார்பில் பூணூலை உடையவராகிய அந்தத் திருநீலநக்க நாயனார் மகிழ்ச்சியை அடையுமாறு சகோடயாழின் தலைவராகிய திருநீலகண்டத்து யாழ்ப்பெரும்பாண நாயனார் தம்முடைய பக்கத்தில் தம்முடைய தர்ம பத்தினியாராகிய பாணினியாரோடு அயவந்தி ஈசுவரர் வழங்கிய திருவருளால் படுத்துக் கொண்டார்.' பாடல் வருமாறு :

"ஆங்கு வேதியில் அறாதசெந்
 தீவலம் சுழிவுற்
றோங்கி முன்னையில் ஒருபடித்
 தன்றியே ஒளிரத்
தாங்கு நூலவர் மகிழ்வுறச்
 சகோடயாழ்த் தலைவர்
பாங்கு பாணியா ருடன்அரு
 ளாற்பள்ளி கொண்டார்."

ஆங்கு - திருநீலநக்க நாயனாருடைய திருமாளிகையில் உள்ள அந்த இடத்தில் விளங்கும். வேதியில் - யாகசாலைக் குண்டத்தில். அறாத - எப்போதும் அவியாமல் உள்ள. செந்தீ - சிவந்த நிறத்தைப் பெற்று விளங்கும் நெருப்பு. வலம்சுழிவுற்று - வலமாகச் சுழித்துக் கொண்டு. ஓங்கி - மேல் நோக்கி ஓங்கி. முன்னையில் - முன்பு இருந்ததைக் காட்டிலும். ஒரு படித்தன்றி - ஒருவகையில் உள்ள தல்லாமல் பல வகையாக. ஏ : அசைநிலை; ஒளிர - பிரகாசத்தை வீச. த் : சந்தி. தாங்கு - தம்முடைய திருமார்பில் தரிக்கும். நூலவர் - பூணூலைப் பெற்ற வராகிய அந்தத் திருநீலநக்க நாயனார். மகிழ்வுற - மகிழ்ச்சியை அடையுமாறு. ச் : சந்தி. சகோட யாழ்த் தலைவர் - சகோடயாழினுடைய தலைவராகிய திருநீல கண்டத்து யாழ்ப்பெரும்பாண நாயனார். பாங்கு - தம்முடைய பக்கத்தில். பாணியாருடன் - தம்முடைய தர்மபத்தினியாராகிய பாணினியாரோடு; பாணருடைய மனைவியார்; விறலியார்; சத்துவம் பெற ஆடிப்பாடுகிற பெண் மணி. அருளால் - அயவந்தி ஈசுவரர் வழங்கிய திருஅருளால். பள்ளி கொண்டார் - படுக்கையில் படுத்துக் கொண்டார்.

பிறகு உள்ள 32 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அன்று இரவு நேரத்தில் திருநீலகண்டத்து யாழ்ப் பெரும்பாண நாயனார் தம்முடைய பத்தினியாராகிய விறலியாரோடு படுக்கையில் படுத்துக் கொண்ட பிறகு கவுண்டின்ய கோத்திரத்தில் பிறந்த வேதியர்களுக்குத் தலைவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் மதுரை மாநகரத்திலிருந்து எழுந்தருளுபவராகிச் சாத்தமங்கையில் விளங்கும் அயவந்தி என்னும் திருக்கோயிலில் விரும்பி எழுந்தருளியுள்ள பிறைச்சந்திரனைத் தன்னுடைய தலையின்மேல் அணிந்தவனாகிய அயவந்தி ஈசுவரனையும், திருநீலநக்க நாயனாரையும் சிறப்பாக எடுத்துச் சொல்லி சொற்சுவை, பொருட்சுவை பொங்கி எழும் செந்தமிழ் மொழியில் அமைந்த ஒரு

திருப்பதிகமாகிய மாலையை அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அணிந்தார்.' பாடல் வருமாறு :

"கங்கு லிற்பள்ளி கொண்டபின்
கவுணியர்க் கிறைவர்
அங்கு நின்றெழுந் தருளுவார்
அயவந்தி அமர்ந்த
திங்கள் சூடியை நீலநக்
கரைச்சிறப் பித்தே
பொங்கு செந்தமிழ்த் திருப்பதி
கத்தொடை புனைந்தார்."

கங்குலில் - அன்று இரவு நேரத்தில். பள்ளி கொண்ட பின் - அந்தத் திருநீலகண்டத்து யாழ்ப்பெரும்பாண நாயனார் தம்முடைய பத்தினியாராகிய விறலியாரோடு படுக்கையில் படுத்துக் கொண்ட பிறகு. கவுணியர்க்கு - கவுண்டின்ய கோத்திரத்தில் பிறந்த வேதியர்களுக்கு. இறைவர் - தலைவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். அங்கு நின்று - அந்த மதுரை மாநகரத்தி லிருந்து. எழுந்தருளுவார் - எழுந்தருளுபவராகி. அயவந்தி - சாத்தமங்கையில் உள்ள அயவந்தி என்னும் திருக்கோயிலில். அமர்ந்த - எழுந்தருளியுள்ள. திங்கள் சூடியை - பிறைச் சந்திரனைத் தன்னுடைய தலையின்மேல் அணிந்தவனாகிய அயவந்தி ஈசுவரனையும். நீலநக்கரை - திருநீலநக்க நாயனாரை. ச் : சந்தி. சிறப்பித்து - சிறப் பாக எடுத்துச் சொல்லி. ஏ : அசைநிலை. பொங்கு - சொற்சுவை, பொருட்சுவை பொங்கி எழும். செந்தமிழ்- செந்தமிழ் மொழியில் அமைந்த. த் : சந்தி. திருப்பதிகத் தொடை - திருப்பதிகமாகிய மாலையை. புனைந்தார் - அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அணிந்தார்.

அவ்வாறு திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருநீலநக்க நாயனாரைச் சிறப்பித்துப் பஞ்சமப் பண்ணில் பாடியருளிய பாசுரங்கள் வருமாறு :

"பொடிதனைப் பூசும் மார்பிற்புரி
நூலொரு பாற் பொருந்தக்
கொடியன சாயலா ளோ
டுடனா வதும் கூடுவதே
கடிமணம் மல்கிநாளும் கம
ழும்பொழிற் சாத்த மங்கை
அடிகள்நக் கன்பரவ அயவந்தி
அமர்ந் தவனே."

"மறையினார் மல்கு காழித்தமிழ்
ஞானசம் பந்தன் மன்னும்
நிறையினார் நீலநக்கன் நெடு
மாநகர் என்று தொண்டர்
அறையும்ஊர் சாத்தமங்கை அய
வந்திமேல் ஆய்ந்த பத்தும்
முறைமையால் ஏத்த வல்லார்இமை
யோரிலும் முந்துவரே."

பிறகு வரும் 33 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அவ்வாறு அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய திருப்பதிகமாகிய அன்றலர்ந்த மலரைக் கொண்டு தம்முடைய தலைவனாகிய அயவந்தி ஈசுவரனுடைய வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் திருவடிகளை வாழ்த்தி வணங்கிவிட்டு மிகுதியாக விளங்கும் நட்பை அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அந்தத் திருநீலநக்க நாயனாருக்கு வழங்கியருளி எல்லாக் காலங்களிலும் புதியவையாகிய செந்தமிழ் மொழியில் அமைந்த பழைய வேதமாகிய திருப்பதிகங்களைத் திருவாய் மொழிந்தருளிய அந்தணராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் எதிரில் பக்தர்களைக் கொண்டு விளங்கும் சிவத்தலங்களுக்கு எழுந்தருளினார்.'

பாடல் வருமாறு :

"பதிக நான்மலர் கொண்டுதம்
பிரான்கழல் பரவி

அதிக நண்பினை நீலநக்
கருக்களித் தருளி
எதிர்கொ ளும்பதி களில் எழுந்
தருளினார் என்றும்
புதிய செந்தமிழ்ப் பழமறை
மொழிந்தபூ சுரனார்.''

பதிக - அவ்வாறு அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பாடியருளிய திருப்பதிகமாகிய. நான்மலர் கொண்டு - அன்றலர்ந்த மலரைக் கொண்டு. தம் - தம்முடைய. பிரான் - தலைவனாகிய அயவந்தி ஈசுவரனுடைய. கழல் - வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் திருவடிகளை; ஆகுபெயர். பரவி - வாழ்த்தி வணங்கி விட்டு. அதிக - மிகுதியாக விளங்கும். நண்பினை - நட்பை. நீலநக்கருக்கு - அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் அந்தத் திருநீலநக்க நாயனாருக்கு. அளித்தருளி - வழங்கியருளி. என்றும் - எல்லாக் காலங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். புதிய - புதியவை ஆகிய. செந்தமிழ் - செந்தமிழ் மொழியில் அமைந்த. ப்: சந்தி. பழமறை - பழைய வேதமாகிய திருப்பதிகங்களை; உவம ஆகுபெயர். மொழிந்த - திருவாய் மொழிந்தருளிய. பூசுரனார் - அந்தணராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். பூசுரன் - பூமியில் வாழும் தேவன். எதிர் - தங்களுக்கு எதிரில். கொளும் - பக்தர்களைக் கொண்டு விளங்கும்; இடைக்குறை. பதிகளில் - சிவத்தலங்களுக்கு; உருபு மயக்கம். எழுந்தருளினார் - எழுந்தருளிச் சென்றார்.

பிறகு உள்ள 34 - ஆம் பாடலின் கருத்து வருமாறு:

'அவ்வாறு ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் பல சிவத்தலங்களுக்கு எழுந் தருளிச் செல்ல அந்த அயவந்தி ஈசுவரருடைய திருத் தொண்டராகிய திருநீலநக்க நாயனார் பிறகு தம்மை உந்தித் தள்ளும் பக்தியோடு திருஞான சம்பந்த மூர்த்தி

நாயனாரோடு கொண்ட நட்பும் தவிர்க்க முடியாதவை என்றாலும் வள்ளலாராகிய அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்த வார்த்தைகளை வலிந்து தள்ள முடியாமையினால் தம்முடைய திருவுள்ளத்தை அந்தச் சாத்தமங்கைக்கு உடனே போகச் செய்து திரும்பி வந்து ஒருவாறு அந்தச் சாத்தமங்கையில் அந்தத் திருநீலநக்க நாயனார் தங்கிக் கொண்டிருந்தார்.' பாடல் வருமாறு :

"பிள்ளை யார்எழுந் தருளஅத்
தொண்டர்தாம் பின்பு
தள்ளும் அன்புடன் கேண்மையும்
தவிர்ப்பில் எனினும்
வள்ள லார்திரு வருளினை
வலியமாட் டாமை
உள்ளம் அங்குடன் போக்கிமீண்
டொருவகை இருந்தார்."

பிள்ளையார்-அவ்வாறு ஆளுடைய பிள்ளையாராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். எழுந்தருள - பல சிவத்தலங்களுக்கு எழுந்தருளிச் செல்ல. அத்தொண்டர் தாம் - அந்த அயவந்தி ஈசுவரருடைய திருத் தொண்டராகிய திருநீலநக்க நாயனார். தாம் : அசை நிலை. பின்பு - பிறகு. தள்ளும் - தம்மைப் பிடர்பிடித்து உந்தித் தள்ளும். அன்புடன் - பக்தியோடு. கேண்மையும்- திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடு பூண்ட நட்பும். தவிர்ப்பில் - தவிர்க்க முடிதலை இல்லாதவை; தவிர்க்க முடியாதவை. எனினும் - என்றாலும்; இடைக்குறை. வள்ளலார் - வள்ளலாராகிய அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். திருவருளினை - திருவாய் மலர்ந் தருளிச் செய்த வார்த்தைகளை; ஆகுபெயர். வலிய - வலிந்து தள்ளுவதற்கு. மாட்டாமை - முடியாமையினால். உள்ளம் - தம்முடைய திருவுள்ளத்தை. அங்கு - அந்தச் சாத்தமங்கைக்கு. உடன் - உடனே. போக்கி - போகச்

செய்து. மீண்டு - திரும்பி வந்து. ஒருவகை - ஒருவாறு. இருந்தார் - அந்தச் சாத்த மங்கையில் அந்தத் திருநீலநக்க நாயனார் தங்கிக் கொண்டிருந்தார்.

அடுத்து உள்ள 35 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அவ்வாறு அந்தத் திருநீலநக்க நாயனார் சாத்த மங்கையில் தங்கிக் கொண்டிருந்த காலத்தில் அந்த மறைய வராகிய திருநீலநக்க நாயனார் முன்பு செய்ததைப் போல தாம் விழையும் கெடுதல் இல்லாத அந்த அயவந்தி ஈசுவரருக்குப் பூசை முதலாக உள்ள செயல்கள் இடந் தோறும் சிறப்பைப் பெற்று விளங்க இடபவாகனத்தின் மேல் எழுந்தருள்பவராகிய பிரமபுரீசருடைய புதல் வராகும் அழகிய அந்தணச் சிறுவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தம்முடைய செந்தாமரை மலர் களைப் போன்ற திருவடிகள் பல சிவத்தலங்களில் அமைந்த உணர்ச்சியோடும் வாழ்ந்து வந்தார்.' பாடல் வருமாறு :

"மேவும் நாளில்அவ் வேதியர்
முன்புபோல் விரும்பும்
தாவில் பூசனை முதற்செய்கை
தலைத்தலை சிறப்பச்
சேவின் மேலவர் மைந்தராம்
திருமறைச் சிறுவர்
பூவ டித்தலம் பொருந்திய
உணர்வொடும் பயின்றார்."

மேவும் - அவ்வாறு அந்தத் திருநீலநக்க நாயனார் சாத்தமங்கையில் விரும்பித் தங்கிக் கொண்டிருந்த. நாளில் - காலத்தில். அவ்வேதியர் - அந்த மறைய வராகிய திருநீலநக்க நாயனார். முன்புபோல் - முன்பு செய்ததைப் போல. விரும்பும் - தாம் விழையும். தா - கெடுதல். இல் - இல்லாத; கடைக்குறை. பூசனை - அந்த அயவந்தி ஈசுவரருக்குப் பூசை. முதல் - முதலாக உள்ள. செய்கை - செயல்கள்; ஒருமை பன்மை மயக்கம். அவை

யாவன : அடியவர்களை வரவேற்று உபசரித்து விருந்துணவை உண்ணச் செய்தல், அவர்களுக்கு ஆடைகளையும் செல்வத்தையும் வழங்குதல் முதலியவை. தலைத்தலை - ஒவ்வோர் இடத்திலும். சிறப்ப - சிறப்பைப் பெற்று விளங்க. ச் : சந்தி. சேவின் மேலவர் - இடப வாகனத்தின் மேல் எழுந்தருளுபவராகிய பிரமபுரீசருடைய. மைந்தர் ஆம் - புதல்வர் ஆகும். திரு - அழகிய. மறை - வேதியராகிய; திணை மயக்கம். ச் : சந்தி. சிறுவர் - இளைஞராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். பூ அடித்தலம் - செந்தாமரை மலர்களைப் போன்ற திருவடிகள் பல சிவத்தலங்களில். பூ: ஒருமை பன்மை மயக்கம். அடி : ஒருமை பன்மை மயக்கம். தலம் : ஒருமை பன்மை மயக்கம். பொருந்திய - அமைந்த. உணர்வொடும் - உணர்ச்சியோடும். பயின்றார் - வாழ்ந்து வந்தார்.

சேவின் மேலவர் மைந்தர் : "இமையப் பாவை திருமுலைப்பால் தேசம் உய்ய உண்டவர் தாம் திருமாமகனார் ஆதலினாற், சாகவாசியுடன் பெற்றார்.", "புரமெரித்தார் திருமகனார்.", "புரமெரித்தார் திருமகனார் அப்பர் இந்தப் புனனாட்டில் எழுந்தருளியிருப்பீர் என்று.", "நஞ்சணி கண்டர்தம் திருமகனாருடன்.", "செய்ய மேனியர் திருமகனார் உறை மடத்தில்.", "ஆறு சூடினார் திருமகனார்." என்று சேக்கிழார் பாடியருளியவற்றைக் காண்க.

அடுத்து வரும் 36 - ஆம் செய்யுளின் கருத்து வருமாறு:

'சண்பையாகிய சீகாழியை ஆட்சி புரிபவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் எழுந்தருளிச் செல்லும் எந்தச் சிவத்தலத்திற்கும் அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடு தாம் பூண்டிருக்கும் நட்பு மேம்பாட்டை அடைந்து விளங்க இடையில் சில தினங்களைப் போக விட்டு விட்டு அப்பால் அடைந்து வண்மையினால் பெருமை பெற்று விளங்கும் புகழைப்

பெற்றவராகிய அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடு பழகி மகிழ்ச்சியை அடைந்து உறுதியையும் பெருமையையும் பெற்றவராக விளங்கும் அயவந்தீசுவரருடைய திருத்தொண்டராகிய திருநீலநக்க நாயனார் அந்தச் சாத்தமங்கையில் தங்கிக் கொண்டிருந்தார்.'

பாடல் வருமாறு :

"சண்பை யாளியார் தாமெழுந்
தருளுமெப் பதியும்
நண்பு மேம்பட நாளிடைச்
செலவிட்டு நண்ணி
வண்பெ ரும்புக ழவருடன்
பயின்றுவந் துறைந்தார்
திண்பெ ருந்தொண்ட ராகிய
திருநீல நக்கர்."

சண்பை - சண்பையாகிய சீகாழியை. ஆளியார் தாம்- ஆட்சி புரிபவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார். தாம் : அசை நிலை. எழுந்தருளும் - எழுந்தருளிச் செல்லும். எப்பதியும் - எந்தச் சிவத்தலத்திற்கும். நண்பு - அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடு தாம் பூண்டிருக்கும் நட்பு. மேம்பட - மேம்பாட்டை அடைந்து விளங்க. நாள் இடை - நடுவில் சில தினங்களை. நாள் : ஒருமை பன்மை மயக்கம். செலவிட்டு - போக விட்டு விட்டு. செல: இடைக் குறை. நண்ணி - அப்பால் அடைந்து. வண் பெரும் புகழவருடன் - வண்மையினால் பெருமையையும் புகழையும் பெற்று விளங்குபவராகிய அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடு. பயின்று - பழகி. உவந்து- மகிழ்ச்சியை அடைந்து. திண் - உறுதியையும். பெரும் - பெருமையையும். தொண்டராகிய - பெற்றவராக விளங்கும் அயவந்தி ஈசுவரருடைய திருத்தொண்டராகிய. திருநீலநக்கர் - திருநீலநக்க நாயனார். உறைந்தார் - அந்தச் சாத்தமங்கையில் தங்கிக் கொண்டிருந்தார்.

பிறகு வரும் 37 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'தம்முடைய திருவுள்ளத்தில் பெருகி எழுந்த விருப் பத்தினால் பிறகு நீண்ட தினங்கள் முறைப்படி கழிந்து விளங்கச் சாத்தமங்கையில் திருவவதாரம் செய்தருளிய பெருமையைப் பெற்று விளங்கும் தவத்தைப் புரிந்த வேதியராகிய திருநீலநக்க நாயனார் சீகாழியில் திருவவ தாரம் செய்தருளிய ஒப்பற்றவராகிய திருஞான சம்பந்த மூர்த்திநாயனாருடைய திருமணத்தில் அந்த நாயனாரோடு அவருடைய திருமணத்தின் சிறப்பைத் தரிசித்து அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருவடிகளை வணங்கிவிட்டு நம்பராகிய கைலாசபதியாருடைய திரு வடிகளை அடைந்தார்.' பாடல் வருமாறு :

"பெருகு காதலிற் பின்னெடு
நாள்முறை பிறங்க
வருபெ ருந்தவ மறையவர்
வாழிசீ காழி
ஒருவர் தம்திருக் கல்லியா
ணத்தினி லுடனே
திரும ணத்திறம் சேவித்து
நம்பர்தாள் சேர்ந்தார்."

பெருகு - தம்முடைய திருவுள்ளத்தில் பெருகி எழுந்த காதலில் - விருப்பத்தினால்; உருபு மயக்கம். பின் - பிறகு. நெடு - நீண்ட. நாள் - தினங்கள்; ஒருமை பன்மை மயக்கம். முறை - முறைப்படி கழிந்து. பிறங்க - விளங்க. வரு - சாத்தமங்கையில் திருவவதாரம் செய்தருளிய. பெரும் - பெருமையைப் பெற்று விளங்கும். தவ-தவத்தைப் புரிந்த. மறையவர் - வேதியராகிய திருநீலநக்க நாயனார். வாழி : அசைநிலை. சீகாழி - சீகாழியில் திருவவதாரம் செய்தருளிய. ஒருவர் தம்-ஒப்பற்றவராகிய திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய. தம் : அசை நிலை. திருக் கல்லியாணத்தினில் - திருமணத்தில். 'கல்யாணம்' என்பது, 'கல்லியாணம்' எனச் செய்யுள் ஓசையை நோக்கி நின்றது. உடன் - அந்தத்

திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரோடு. ஏ : அசைநிலை. திருமணத்திறம் - திருமணத்தினுடைய சிறப்பை. சேவித்து - தரிசித்து அந்தத் திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாருடைய திருவடிகளை வணங்கி விட்டு. நம்பர் - தம்முடைய அடியவர்களுக்குப் பலவகையான நம்பிக்கைகளை உண்டாக்குபவராகிய கைலாசபதி யாருடைய. அந்த நம்பிக்கைகள் இன்ன என்பதை வேறு ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. தாள் திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். சேர்ந்தார் - அடைந்தார்; சிவலோக பதவியை அடைந்தார் என்பது கருத்து.

இந்தத் திருநீலநக்க நாயனார் புராணத்தில் இறுதியில் வரும் 38 - ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு :

'இரப்பவர்களுக்கு ஈயும் தொழிலாகிய திருத் தொண்டினைப் புரியும் அழகிய வேதியராகிய திருநீலநக்க நாயனாரும் சாத்தமங்கை என்னும் சிவத்தலத்தில் திருவவதாரம் செய்தருளிய முதன்மையான பெருமையைப் பெற்று விளங்கும் திருநீலநக்க நாயனாருடைய திருவடி களைப் பணிந்து விட்டு இரண்டு பிறப்புக்களைப் பெற்ற வேதியரும், இடபமாகிய துவசத்தை உயர்த்திப் பிடித்த வராகிய சிவபெருமானாரிடத்தில் ஒருமைப்பாட்டோடு தம்முடைய வாழ்நாள்களைச் செலுத்தி உணரும் நமி நந்தியடிகள் நாயனார் செய்தருளிய வேலைகளாகிய திருத் தொண்டுகளை இனிமேல் யாம் பாடுவோம்.' பாடல் வருமாறு :

"தருதொ ழில்திரு மறையவர்
சாத்தமங் கையினில்
வருமு தற்பெருந் திருநீல
நக்கர்தாள் வணங்கி

இருபி றப்புடை அந்தணர்
ஏறுயர்த் தவர்பால்
ஒருமை உய்த்துணர் நமிநந்தி
யார்தொழில் உரைப்பாம்.''

இது சேக்கிழார் அடுத்து வரும் நமிநந்தி யடிகள் நாயனார் புராணத்திற்குத் தோற்றுவாயாகப் பாடி யருளியது. தரு - இரப்பவர்களுக்கு ஈயும். தொழில் - தொழிலாகிய திருத்தொண்டினைப் புரியும். திரு - அழகிய; 'செல்வத்தைப் பெற்ற' எனலும் ஆம். மறையவர் - வேதியராகிய திருநீலநக்க நாயனாரும். சாத்த மங்கையினில் - சாத்தமங்கை என்னும் சிவத் தலத்தில். வரும் - திருவவதாரம் செய்தருளிய. முதல் - முதன்மையாகிய. பெரும் - பெருமையைப் பெற்று விளங்கும். திருநீலநக்கர் - திருநீலநக்க நாயனாருடைய. தாள்-திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். வணங்கி - பணிந்துவிட்டு. இருபிறப்பு உடை - உபநயனம் செய்து கொள்வதற்கு முன்பு ஒரு பிறப்பையும் அதன் பிறகு மற்றொரு பிறப்பையும் பெற்ற. பிறப்பு: ஒருமை பன்மை மயக்கம். இருப்பிறப்புடையவர் - துவிஜர். அந்தணர் - வேதியர். ஏறு - இடபமாகிய. உயர்த்தவர்பால் - துவசத்தை உயர்த்திப் பிடித்தவராகிய சிவபெருமானாரிடத்தில். ஒருமை - ஒருமைப் பாட்டோடு. உயத்து - தம்முடைய வாழ்நாள்களைச் செலுத்தி. உணர் - உணரும்; ''ஒருநெறிய மனம் வைத்துணர் ஞான சம்பந்தன்'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனார் தம்மைக் குறிப்பிடுவதைக் காண்க. நமிநந்தி யார் - நமிநந்தியடிகள் நாயனார் செய்தருளிய. தொழில் - வேலைகளாகிய திருத்தொண்டுகளை; ஒருமை பன்மை மயக்கம். உரைப்பாம் -இனிமேல் யாம் பாடுவோம்.

# நமிநந்தியடிகள் நாயனார் புராணம்

**பெரிய புராணத்தில் 5 - ஆவதாக உள்ள திருநின்ற** *சருக்கத்தில் வரும் 7 - ஆவது புராணம் நமிநந்தியடிகள் நாயனார் புராணம். அதில் வரும் முதற் செய்யுளின் உள்ளுறை வருமாறு :*

*'இந்த மண்ணுலகத்தை ஆட்சி புரிந்து பாதுகாக்கும் ஒப்பற்ற செங்கோலைச் செலுத்தும் சோழ அரசர்கள் ஆண்ட பொன்னைக் கொழிக்கும் காவிரியாறு பாயும் செல்வம் மலிந்த சோழநாட்டில் செந்தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும் விசாலமான வயல்களும், செழிப்பைப் பெற்ற நீர் நிரம்பிய தடாகமும், தன்னுடைய பக்கங்களில் பெற்றதாகிப் பொய் வார்த்தைகளைப் பேசுவதிலிருந்தும் அகன்ற உண்மை வார்த்தைகளையே பேசும் ஓதுவதற்கு அருமையாக இருக்கும் இருக்கு வேதம், யஜுர் வேதம். சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங் களாகிய சாத்திரங்களை விரும்பி அத்தியயனம் செய்து நிறைவேற்றிய நல்ல பண்புகளைப் பெற்றதனால் உண்டாகிய புகழினால் தான் அடைந்திருக்கும் பெருமை கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வட மேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு. என்னும் எட்டுத் திசைகளிலும் ஏறிய சிவத்தலம் ஏமப்பேறூர் என்னும் ஊர் ஆகும்.' பாடல் வருமாறு :*

**" வையம் புரக்கும் தனிச்செங்கோல்**
**வளவர் பொன்னித் திருநாட்டுச்**

செய்ய கமலத் தடம்பணையும்
செழுநீர்த் தடமும் புடைஉடைத்தாய்ப்
பொய்தீர் வாய்மை அருமறைநூல்
புரிந்த சீலப் புகழதனால்
எய்தும் பெருமை எண்டிசையும்
ஏறூர் ஏமப் பேறூரால்.''

வையம் - இந்த மண்ணுலகத்தை. புரக்கும் - ஆட்சி புரிந்து பாதுகாக்கும். தனி - ஒப்பற்ற. ச் : சந்தி. செங்கோல் - செங்கோலைச் செலுத்தும். வளவர் - சோழ அரசர்கள் ஆண்டு வந்த; ஒருமை பன்மை மயக்கம். பொன்னி - பொன்னைக் கொழிக்கும் காவிரியாறு; ''பொன்னி பொன் கொழிக்கும்'' என்று வருதலைக் காண்க. த் : சந்தி. திரு - பாயும் செல்வம் மலிந்த. நாட்டு - சோழநாட்டில். ச் : சந்தி. செய்ய கமல - செந் தாமரை மலர்கள் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். த் : சந்தி. தடம் - விசாலமாக விளங்கும். பணையும் - வயல்களும்; ஒருமை பன்மை மயக்கம். செழு- செழிப்பைப் பெற்ற. நீர் - நீர் நிரம்பிய. த் : சந்தி, தடமும் - தடாகமும். புடை - தன்னுடைய பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். உடைத்தாய் - பெற்றதாகி, ப் : சந்தி. பொய் - பொய் வார்த்தைகளைப் பேசுவதி லிருந்தும்; ஒருமை பன்மை மயக்கம்; ஆகுபெயர். தீர் - அகன்ற. வாய்மை - உண்மைவார்த்தைகளையே பேசும்; ஒருமை பன்மை மயக்கம். அரு - ஓதுவதற்கு அருமையாக இருக்கும். மறை - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங் களாகிய; ஒருமை பன்மை மயக்கம். நூல் - சாத்திரங் களை; ஒருமை பன்மை மயக்கம். புரிந்த - விரும்பி அத்தியயனம் செய்து நிறைவேற்றிய. சீல - நல்ல குணங் களைப் பெற்றதனால்; ஒருமை பன்மை மயக்கம். ப் : சந்தி. புகழதனால் - உண்டாகிய புகழினால். அது : பகுதிப் பொருள் விகுதி. எய்தும் - அடைந்திருக்கும்.

பெருமை - பெருமையானது. எண் திசையும் - கிழக்கு, மேற்கு, வடக்கு, தெற்கு, வடகிழக்கு, வடமேற்கு, தென்கிழக்கு, தென்மேற்கு என்னும் எட்டுத் திசை களிலும். திசை : ஒருமை பன்மை மயக்கம். ஏறு - ஏறிய. ஊர் - சிவத்தலம். ஏமப்பேறூர் - ஏமப்பேறூர் என்னும் ஊர் ஆகும். ஆல் : ஈற்றசை நிலை.

பிறகு உள்ள 2- ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்த ஏமப்பேறூரில் மலர் மாலைகளைத் தொங்க விட்டிருக்கும் தோரணங்கள் பக்கங்களில் தொங்கி விளங்கும் அழகிய திருவீதிகள் இருக்கும்; சமுத்திரத்தில் நிரம்பி யிருக்கும் நீரைக் குடிக்கும் மேகங்கள் தவழும் மாடங்கள் அந்த ஊரில் உயரமாக நிற்கும்; சோலைகளில் அடர்த்தி யான மரங்கள் இருப்பதால் உண்டான குளிர்ச்சியை அடைந்த இருட்டு நிரம்பியிருக்கும்; வண்டுகள் அருமையாக வளர்ந்து நிற்கும் கமுக மரங்களில் மொய்த்துக் கொண்டு ரீங்காரம் செய்யும்; காலை நேரத்தில் பிரமசாரிகள் அத்தியயனம் செய்து பழகும் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களின் இனிய கானம் கேட்கும்; செழிப்பான நீர் பாயும் வயல்களில் செங்கழுநீர் மலர்கள் மிகுதியாக மலர்ந்து விளங்கும்.' பாடல் வருமாறு :

**"மாலை பயிலும் தோரணங்கள்**
**மருங்கு பயிலும் மணிமறுகு;**
**வேலை பயிலும் புனல்பருகு**
**மேகம் பயிலும் மாடங்கள்;**
**சோலை பயிலும் குளிர்ந்தஇருள்**
**சுரும்பு பயிலும் அரும்பூகம்;**
**காலை பயிலும் வேதஒலி;**
**கழுநீர் பயிலும் செழுநீர்ச்செய்."**

மாலை - அந்த ஏமப்பேறூரில் மலர் மாலைகளை; ஒருமை பன்மை மயக்கம். பயிலும் - தொங்கவிட்டிருக்கும்.

தோரணங்கள் - மாவிலைகளையும் தென்னங்குருத்துக்களையும் மலர்களையும் கட்டிய தோரணங்கள். மருங்கு - பக்கங்களில்; ஒருமை பன்மை மயக்கம். பயிலும் - தொங்கி விளங்கும். மணி - அழகிய. மறுகு - திருவீதிகள் இருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். வேலை - சமுத்திரத்தில். பயிலும் - நிரம்பியிருக்கும். புனல் - நீரை. பருகு - குடிக்கும். மேகம் - மேகங்கள்; ஒருமை பன்மை மயக்கம். பயிலும் - தவழும். மாடங்கள் - பல மாடங்கள் அந்த ஊரில் உயரமாக நிற்கும். சோலை - பூம்பொழில்களில்; ஒருமை பன்மை மயக்கம். பயிலும் - அடர்த்தியான மரங்கள் வளர்ந்து நிற்பதால் உண்டான. குளிர்ந்த - குளிர்ச்சியை அடைந்த. இருள் - இருட்டு நிரம்பியிருக்கும். சுரும்பு - வண்டுகள்; ஒருமை பன்மை மயக்கம். பயிலும் அரும்பூகம் - அருமையாக வளர்ந்து நிற்கும் கமுக மரங்களில்; ஒருமை பன்மை மயக்கம். பயிலும் - மொய்த்துக் கொண்டு ரீங்காரம் செய்யும். காலை - காலை நேரத்தில். பயிலும்-செய்யும். வேதஒலி - பிரமசாரிகள் அத்தியயனம் செய்து பழகும் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களின் இனிய கானம் கேட்கும். வேத : ஒருமை பன்மை மயக்கம். செழு - செழிப்பை உடைய. நீர் - நீர் பாயும். ச் : சந்தி. செய் - வயல்களில்; ஒருமை பன்மை மயக்கம். கழுநீர் - செங்கழுநீர் மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பயிலும் - மிகுதியாக மலர்ந்து விளங்கும்.

பிறகு வரும் 3 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்த ஏமப்பேறூரில் உள்ள வயல்களில் விளைந்து நிற்கும் குறுவை நெற்பயிர்களினுடைய விரிவான இடத்தின் மேல் படரும் சிவந்த தளிர்களைப் பெற்ற மென்மையான செந்தாமரை மலர்கள் நடுநடுவில் ஒளியை வெளிவிட்டு எழுந்து தோன்றுபவை தங்களுடைய மார்புகளில் அணிந்திருக்கும் வெண்மையாகிய புரிகள் அடங்கிய பூணூலைப்

பெற்றவர்களாகிய வேதியர்கள் புரியும் யாகசாலையில் அலங்காரம் செய்த யாககுண்டத்தின் மேல் மணலைப் பரப்பிய வெண்மையான பரப்புக்கு நடு நடுவில் அந்த வேதியர்கள் யாககுண்டத்தில் வளர்த்த சிவந்த நெருப்பை ஒத்து விளங்கும்.' பாடல் வருமாறு :

> **" பணையில் விளைந்த வெண்ணெல்லின்**
> **பரப்பின் மீது படர்செய்ய**
> **துணர்மென் கமலம் இடைஇடையே**
> **சுடர்விட் டெழுந்து தோன்றுவன**
> **புணர்வெண் புரிநூ லவர்வேள்விக்**
> **களத்தில் புனைந்த வேதிகைமேல்**
> **மணல்வெண் பரப்பின் இடைஇடையே**
> **வளர்த்த செந்தீ மானுமால்."**

பணையில் - அந்த ஏமப்பேறூரில் உள்ள வயல்களில்; ஒருமை பன்மை மயக்கம். விளைந்த - விளைந்து நிற்கிற. வெண்ணெல்லின் - குறுவை நெற்பயிர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பரப்பின் மீது - விரிவான இடத்திற்கு மேல். படர் - படரும். செய்ய - சிவந்த. துணர் - பூங்கொத்துக்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். மென் - மென்மையான. கமலம் - செந்தாமரை மலர்கள்; ஒருமை பன்மை மயக்கம். இடை இடை - நடு நடுவில். ஏ: அசை நிலை. சுடர்விட்டு - ஒளியை வெளி விட்டு. எழுந்து தோன்றுவன - எழுந்து தோன்றுபவை. புணர்-தங்களுடைய மார்புகளில் அணிந்திருக்கும். வெண் - வெண்மையாகிய. புரி - புரிகள் அடங்கிய; ஒருமை பன்மை மயக்கம். நூலவர் - பூணூலைப் பெற்றவர் களாகிய வேதியர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வேள்விக்களத்தில் - தாங்கள் புரியும் யாகசாலையில். புனைந்த - அலங்காரம் செய்த. வேதிகை மேல் - யாக குண்டத்தின்மேல். மணல் வெண் - மணலைப் பரப்பிய வெண்மையான. பரப்பின் - பரப்புக்கு, இடை இடை -

நடுநடுவில். ஏ : அசைநிலை. வளர்த்த - அந்த வேதியர்கள் யாககுண்டத்தில் வளர்த்த. செம் - சிவப்பாக விளங்கும். தீ - நெருப்பை. மானும் - ஒத்து விளங்கும். ஆல் : ஈற்றசை நிலை.

பிறகு உள்ள 4 - ஆம் கவியின் கருத்து வருமாறு :

'பெருமையோடு திகழும் அந்தச் சிவத்தலமாகிய ஏமப் பேறூரில் விரும்பிப் பாதுகாக்கும் விபூதியைப் பூசிக் கொள்ளும் சைவ சமய வழியில் ஒருமைப்பாட்டைப் பெற்ற வழியில் வாழும் வேதியர்களுடைய புகழ் ஓங்கி வளரும் குடும்பத்தில் திருவவதாரம் செய்தருளியவர் இம்மை மறுமை ஆகிய இரண்டு உலகங்களிலும் பரமேசுவரருடைய வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் திருவடிகளை வணங்கித் துதிக்கும் பாக்கியத்தைப் பெற்ற தவத்தினால் அருமையாக உள்ள செய்கைகளைப் புரிபவர் நமிநந்தியடிகள் நாயனார் என்னும் திருநாமத்தை உடையவர் ஆனார்.' பாடல் வருமாறு :

"பெருமை விளங்கும் அப்பதியிற்
பேணும் நீற்றுச் சைவநெறி
ஒருமை நெறிவாழ் அந்தணர்தம்
ஓங்கு குலத்தி னுள்வந்தார்
இருமை உலகும் ஈசர்கழல்
இறைஞ்சி ஏத்தப் பெற்றதவத்
தருமை புரிவார் நமிநந்தி
அடிகள் என்பார் ஆயினார்."

பெருமை - பெருமையோடு. விளங்கும் - திகழும். அப்பதியில் - அந்தச் சிவத்தலமாகிய ஏமப்பேறூரில். பேணும் - விரும்பிப் பாதுகாக்கும். நீற்று - விபூதியைப் பூசிக் கொள்ளும். ச் : சந்தி. சைவ நெறி - சைவ சமய வழியில். ஒருமை-ஒருமைப்பாட்டைப் பெற்ற. நெறி - வழியில். வாழ் - தங்களுடைய வாழ்க்கையை நடத்தும். அந்தணர் தம் - வேதியர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம்.

தம் : அசை நிலை. ஓங்கு - புகழ் ஓங்கி வளரும். குலத்தினுள் - குடும்பத்தில். 'சாதியில்' எனலும் ஆம். வந்தார் - திருவவதாரம் செய்தருளியவர். இருமை - இம்மை உலகாகிய இந்தப் பூவுலகத்திலும், மறுமை உலகாகிய தேவலோகத்திலும். ஈசர் - பரமேசு வரருடைய. கழல் - வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் திருவடிகளை; ஆகுபெயர். இறைஞ்சி - வணங்கி. ஏத்தப் பெற்ற - துதிக்கும் பாக்கியத்தைப் பெற்ற. தவத்து - தாம் புரிந்த தவத்தினால். அருமை - அருமையாக உள்ள செயல்களை; ஆகுபெயர். புரிவார் - செய்பவர். நமிநந்தி அடிகள் - நமிநந்தி அடிகள் நாயனார். என்பார் - என்னும் திருநாமத்தைப் பெற்றவர். ஆயினார் - ஆனார்.

அடுத்து உள்ள 5 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்த நமிநந்தி அடிகள் நாயனார் உண்மைகளை எடுத்துச் சொல்லும் இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களாகிய சாத்திரங்கள் கூறும் நல்ல பண்புகளோடு தாம் ஔபாசனம் செய்யும் போது வார்க்கும் சிவந்த நெருப்பு என்று கூறும் தகுதியைப் பெற்றவர், பரிசுத்தமான விபூதியினுடைய சம்பந்தமே உண்மையான பொருள் எனத் தெரிந்து கொண்டிருக்கும் உறுதியைத் திருவுள்ளத்தில் கொண்டவர், சாம வேதத்தைக் கானம் செய்தருளும் கழுத்தைப் பெற்ற வராகிய சிவபெருமானாருடைய செந்தாமரை மலர் களைப் போலச் சிவந்து விளங்குபவையும், வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு பொலிபவையும் ஆகிய திருவடி களை வழிபாடு செய்து தம்முடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு வரும் தலைமையாகிய நிலையிலிருந்து யாமங் களைப் பெற்ற இரவு நேரத்திலும் பகல் நேரத்திலும் உணர்தல் நீங்காத ஆனந்தத்தை அந்த நாயனார் அடைந்தார்.' பாடல் வருமாறு :

"வாய்மை மறைநூல் சீலத்தால்
வளர்க்கும் செந்தீ எனத்தருவார்;
தூய்மைத் திருநீற் றடைவேமெய்ப்
பொருளென் றறியும் துணிவினார்;
சாமகண்டர் செய்யகழல்
வழிபட் டொழுகும் தலைமைநிலை
யாம இரவும் பகலும்உணர்
வொழியா இன்பம் எய்தினார்."

வாய்மை - அந்த நமிநந்தியடிகள் நாயனார் உண்மை களை எடுத்துக் கூறும். வாய்மை: ஒருமை பன்மை மயக்கம். நமிநந்தியடிகள் நாயனார்: தோன்றா எழுவாய். மறை - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங் களாகிய; ஒருமை பன்மை மயக்கம். நூல் - சாத்திரங்கள் விதிக்கும்; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். சீலத் தால்-நல்ல பண்புகளோடு; ஒருமை பன்மை மயக்கம்; உருபு மயக்கம். வளர்க்கும் - தாம் ஒவ்வொரு நாளும் இரண்டு வேளைகளிலும் ஔபாசனம் செய்யும் போது வளர்க்கும். செம்-சிவப்பாகத் தோன்றும். தீ-நெருப்பு. எனத் தருவார்- என்று கூறும் தகுதியைப் பெற்றவர். என : இடைக்குறை. தூய்மை - பரிசுத்தமாகிய. திருநீற்று - விபூதியை. அடைவே - பூசிக் கொள்ளும் சம்பந்தமே. மெய் - உண்மை யான. ப்:சந்தி. பொருள் என்று - செயல் என. அறியும் - தெரிந்து கொண்டிருக்கும். துணிவினார் - உறுதியைத் தம்முடைய திருவுள்ளத்தில் கொண்டவர். சாம - சாம வேதத்தைக் கானம் செய்தருளும். கண்டர் - திருக் கழுத்தைப் பெற்றவராகிய சிவபெருமானாருடைய. செய்ய - செந்தாமரை மலர்களைப் போலச் சிவந்த. கழல் - வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் திருவடிகளை; ஆகுபெயர். வழிபட்டு - வழிபாடு புரிந்து. ஒழுகும் - தம்முடைய வாழ்க்கையை நடத்தும். தலைமை - தலைமையாகிய. நிலை - நிலையிலிருந்து. யாம -

யாமங்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். இரவும் - இராத்திரி நேரத்திலும். பகலும் - பகல் நேரத்திலும். உணர்வு - உணர்தல். ஒழியா - நீங்காத. இன்பம் - ஆனந்தத்தை. எய்தினார் - அந்த நாயனார் அடைந்தார்.

சாம கண்டர்: ''சாம வேதமோர் கீதம் ஓதி.'', ''சாமமும் ஓதுவதுடையார்.'', ''சாம நல் வேதனும்.'' என்று திருஞான சம்பந்த மூர்த்தி நாயனாரும், ''பாடினார் சாமவேதம்.'' என்று திருநாவுக்கரசு நாயனாரும், ''சாம வேதனைத் தன் ஒப்பிலானை'' என்று சுந்தர மூர்த்தி நாயனாரும் பாடியருளியவற்றைக் காண்க.

பிறகு உள்ள 6 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்த நமிநந்தி அடிகள் நாயனார் அந்த ஏமப்பேறூரி லிருந்தும் திருவாரூருக்கு எழுந்தருள்பவராகி, தம்முடைய அடியவர்கள்பால் வரும் கொடிய துன்பங்களைப் போக்கி யருளும் பெருமானாராகிய தியாகராஜருடைய நறுமணம் சுற்றிக் கமழும் செந்தாமரை மலர்களைப் போன்ற திருவடி களை வணங்குதல் எந்த வகையான இலாபமும் ஆகும் என்று நினைத்துக் கொள்ளும் எண்ணத்தைப் பெற்ற வராகிய அந்த நமிநந்தியடிகள் நாயனார் பல தினங்களும் தம்முடைய பகைவர்களாகிய தாரகாட்சன், வித்யுன்மாலி, வாணன் என்னும் மூன்று அசுரர்களுக்கு உரிய பறக்கும் கோட்டைகளாகிய மூன்று புரங்களை எரித்த மேருமலை யாகிய வில்லை ஏந்தியவராகிய அந்தத் தியாகராஜப் பெருமானாருடைய அழகிய திருவடிகளை அந்த நாயனார் பணிந்தார்.' பாடல் வருமாறு :

'' அவ்வூர் நின்றும் திருவாரூ
 ரதனை அடைவார் அடியார்மேல்
வெவ்வூ றகற்றும் பெருமான்தன்
 விரைசூழ் மலர்த்தாள் பணிவுறுதல்
எவ்வூ தியமும் எனக்கொள்ளும்
 எண்ணம் உடையார் பலநாளும்

**தெவ்வூர் எரித்த வரைச்சிலையார்**
**திருப்பா தங்கள் வணங்கினார்.''**

அவ்வூர் நின்றும் - அந்த நமிநந்தியடிகள் நாயனார் அந்த ஏமப்பேறூரிலிருந்தும். திருவாரூரதனை - திருவாரூருக்கு; உருபு மயக்கம். அது : பகுதிப் பொருள் விகுதி. அடைவார் - எழுந்தருள்பவராகி; முற்றெச்சம். அடியார் மேல் - தம்முடைய அடியவர்களிடம்; ஒருமை பன்மை மயக்கம். வெவ்வூறு - வரும் கொடிய துன்பங் களை. ஊறு: ஒருமை பன்மை மயக்கம். அகற்றும் - போக்கியருளும். பெருமான் தன் - சிவபெருமானாராகிய தியாகராஜருடைய; ஒருமை பன்மை மயக்கம். தன் : அசை நிலை. விரை சூழ் - நறுமணம் சுற்றிக் கமழும் - மலர்த்தாள் - செந்தாமரை மலர்களைப் போன்ற திருவடி களை. மலர் : ஒருமை பன்மை மயக்கம். தாள் : ஒருமை பன்மை மயக்கம். பணிவுறுதல் - வணங்குதல். எவ்வூதியமும் - எந்த விதமான இலாபமும் ஆகும். என - என்று; இடைக்குறை. க் : சந்தி. கொள்ளும் எண்ணம் - எண்ணத்தை. உடையார் - பெற்றவராகிய அந்த நமிநந்தி அடிகள் நாயனார். பல நாளும் - பல தினங்களும். நாளும்: ஒருமை பன்மை மயக்கம். தெவ் - பகைவர் களாகிய தாரகாட்சன், வித்யுன்மாலி, வாணன் என்னும் மூன்று அசுரர்களுடைய; ஒருமை பன்மை மயக்கம். ஊர்- பறக்கும் கோட்டைகளாகிய மூன்று புரங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். எரித்த - எரித்தருளிய. வரை - மேருமலையாகிய. ச் : சந்தி. சிலையார் - வில்லை ஏந்தியவராகிய அந்தத் தியாகராஜப் பெருமானாருடைய. திரு - அழகிய. ப் : சந்தி. பாதங்கள் - திருவடிகளை. வணங்கினார் - அந்த நாயனார் பணிந்தார்.

பிறகு வரும் 7 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அந்த நமிநந்தியடிகள் நாயனார் திருவாரூரில் விளங்கும் ஆலயத்தில் உள்ள சிவப்பாக ஒளிரும் தங்கத்தைப்

போன்ற பாம்புப் புற்றில் எழுந்தருளியிருக்கும் மாணிக்கம் வீசும் செழுமையான சோதியைப் போன்றவராகிய வன்மீக நாதரை நேராகத் தரிசித்து வணங்கும் நல்ல குணத்தை அந்த நாயனார் தம்முடைய பற்றுக்கோடாக எண்ணி அந்த வன்மீக நாதரை அடைந்து தரையில் விழுந்து அந்த நாதரைப்ப ணிந்து விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு மகிழ்ச்சியை அடைந்து மேலே எழுந்தருளிச் சென்று அழகிய தங்கத்தைப் பதித்திருக்கும் திருமதிலினுடைய அழகிய முற்றத்தை அந்த நாயனார் அடைவாராகி பக்கத்தில் உள்ள ஒப்பற்ற திருவாரூர் அருனெறியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் நம்பராகிய அகிலேசுவரருக்கு வாழும் இடமாகும் திருக்கோயிலுக்குள் நுழைந்து அந்த அகிலேசுவரரைப் பணியும் பொருட்டு எழுந்தருளிச் சென்றார்.' பாடல் வருமாறு :

"செம்பொற் புற்றின் மாணிக்கச்
செழுஞ்சோ தியைநேர் தொழும்சீலம்
தம்பற் றாக நினைந்தணைந்து
தாழ்ந்து பணிந்து வாழ்ந்துபோந்
தம்பொற் புரிசைத் திருமுன்றில்
அணைவார் பாங்கோர் அரனெறியின்
நம்பர்க் கிடமாம் கோயிலினுட்
புக்கு வணங்க நண்ணினார்."

செம் - அந்த நமிநந்தியடிகள் நாயனார் திருவாரூரில் விளங்கும் ஆலயத்தில் உள்ள சிவப்பாக ஒளிரும். பொன் - தங்கத்தைப் போன்ற; உவமை ஆகு பெயர். புற்றில் - பாம்புப் புற்றில் எழுந்தருளியிருக்கும். மாணிக்கச் செழும் சோதியை - மாணிக்கம் வீசும் செழுமையான சோதியைப் போன்றவராகிய வன்மீக நாதரை; உவம ஆகு பெயர். நேர் - நேராக. தொழும் - தரிசித்து வணங்கும். சீலம் - நல்ல குணத்தை, தம் - அந்த நாயனார் தம்முடைய. பற்றாக - பற்றுக்கோடாக. நினைந்து - எண்ணி.

அணைந்து - அந்த வன்மீக நாதரை அடைந்து. தாழ்ந்து-தரையில் விழுந்து அந்த நாதரைப் பணிந்து-பணிந்து விட்டு. வாழ்ந்து - பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு மகிழ்ச்சியை அடைந்து. போந்து - மேலே எழுந்தருளிச் சென்று. அம் - அழகிய. பொற் - தங்கத்தைப் பதித் திருக்கும். புரிசை - திருமதிலினுடைய. த் : சந்தி. திரு - அழகிய. முன்றில் - முற்றத்தை. முன்றில் - இல்முன்; முன்பின்னாகத் தொக்க தொகை. அணைவார் - அந்த நாயனார் அடைவாராகி; முற்றெச்சம். பாங்கு - பக்கத்தில் உள்ள. ஓர் - ஒப்பற்ற. அரனெறியின் - திருவாரூர் அரநெறியில் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். நம்பர்க்கு - தம்முடைய அடியவர் களுக்குப் பல வகையபண நம்பிக்கையை உண்டாக்கு பவராகிய அகிலேசுவரருக்கு. அந்த நம்பிக்கைகள் இன்ன என்பதை வேறோர் இடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. இடமாம் - எழுந்தருளியிருக்கும் இடமாகும். கோயிலினுள் - திருக்கோயிலுக்கு உள்ளே. புக்கு - நுழைந்து. வணங்க - அந்த அகிலேசுவரரைப் பணியும் பொருட்டு. நண்ணினார் - திருக்கோயிலுக்குள் எழுந் தருளிச் சென்றார்.

திருவாரூர் அரனெறி : இது சோழ நாட்டில் திரு வாரூரில் உள்ள சிவத்தலம். இங்கே கோயில் கொண்டிருப்ப வருடைய திருநாமங்கள் அகிலேசுவரர், அப்பு நெய்யானவர், அரனெறியப்பர் என்பவை. அம்பிகையின் திருநாமங்கள் புவனேசுவரி, வண்டார் குழலி என்பவை. இந்தச் சந்நிதி திருவாரூரில் திருமூலட்டானம் என்று உள்ள பெரிய திருக்கோயிலில் இரண்டாம் பிராகாரத்தில் மேற்குத் திசையில் உள்ளது. நமிநந்தியடிகள் நாயனார் தண்ணீரால் திருவிளக்கை ஏற்றி வைத்த சிவத்தலம் இது. அந்த நமிநந்தியடிகள் நாயனாரைச் சிறப்பித்துத் திருநாவுக்கரசு நாயனார் திருவாரூர் அரநெறியைப் பற்றிய ஒரு திருத்தாண்டகத்தில் பாடியருளியுள்ளார். அந்தத் திருத்தாண்டகம் வருமாறு :

" நந்திபணி கொண்டருளும் நம்பன் தன்னை
நாகேச்ர சமிடமா நண்ணி னானைச்
சந்திமல ரிட்டணிந்து வானோர் ஏத்தும்
தத்துவனைச் சக்கரம்மாற் கீந்தான் தன்னை
இந்துநுழை பொழிலாரூர் மூலட்டானம்
இடம்கொண்ட பெருமானை இமையோர் போற்றும்
அந்தணனை அரநெறியின் அப்பன் தன்னை
அடைந்தடியேன் அறுவினைநோய் அறுத்த வாறே."

அந்த நாயனாரே தாம் பாடியருளிய திருவாரூரைப் பற்றிய திருவிருத்தத்தில்,

" ஆராய்ந் தடித்தொண்டர் ஆணிப்பொன்
ஆரூர் அகத்தடக்கிப்
பாரூர பரிப்பத்தம் பங்குனி
உத்திரம் பாற்படுத்தான்
நாரூர் நறுமலர் நாதன்
அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை
நீணா டறியும்அன்றே."

என வருவதையும் காண்க.

இந்தத் தலத்தைப் பற்றி இந்தளப் பண்ணில் திருநாவுக்கரசு நாயனார் பாடியருளிய ஒரு பாசுரம் வருமாறு :

" பாலை நகுபனி வெண்மதி பைங்கொன்றை
மாலையும் கண்ணியும் ஆவன சேவடி
காலையும் மாலையும் கைதொழு வார்மனம்
ஆலயம் ஆரூர் அரநெறி யார்க்கே."

பிறகு வரும் 8 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்த நமிநந்தியடிகள் நாயனார் அவ்வாறு திருவாரூர் அரநெறி என்னும் திருக்கோயிலை அடைந்து அகிலேசுவரரை வணங்கி விட்டு பக்தியோடு விருப்பத்தை அடைந்து தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழுந்த விருப்பத்தோடு தலைவராகிய அந்த அகிலேசரைத் தரையில் விழுந்து வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுபவராகி

தமக்கு அடுத்த நிலைமையினுடைய எண்ணத்தினால் தாம் புரியும் திருத்தொண்டுகளினுடைய பகுதிகள் பலவற்றைப் புரிந்து பழகி துதித்து இருப்பவராகிக் கணக்கு இல்லாத திரு விளக்குக்களை ஏற்றுவதற்காகத் தொடங்கிய எண்ணத் தோடு இணங்கித் தம்முடைய திருமாளிகையிலிருந்து எழுந்து செல்வாரானார்.' பாடல் வருமாறு :

"நண்ணி இறைஞ்சி அன்பினால்
நயப்புற் றெழுந்த காதலுடன்
அண்ண லாரைப் பணிந்தெழுவார்
அடுத்த நிலைமைக் குறிப்பினால்
பண்ணும் தொண்டின் பாங்குபல
பயின்று பரவி விரவுவார்
எண்ணில் தீபம் ஏற்றுவதற்
கெடுத்த கருத்தின் இசைந்தெழுவார்."

நண்ணி - அந்த நமிநந்தியடிகள் நாயனார் அவ்வாறு திருவாரூர் அரநெறி என்னும் திருக்கோயிலை அடைந்து. இறைஞ்சி - அகிலேசுவரரை வணங்கி விட்டு. அன்பினால் - பக்தியோடு; உருபு மயக்கம். நயப்பு உற்று - விருப்பத்தை அடைந்து. எழுந்த - தம்முடைய திருவுள்ளத்தில் பொங்கி எழுந்த. காதலுடன் - விருப்பத்தோடு. அண்ணலாரை - தலைவராகிய அந்த அகிலேசுவரரை. 'அண்ணலார் - பெருமையைப் பெற்றவர்' எனலும் ஆம். ப் : சந்தி. பணிந்து - தரையில் விழுந்து வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து. எழுவார் - எழுபவராகி; முற்றெச்சம். அடுத்த - தமக்கு வந்த. நிலைமை - நிலைமையினுடைய. க் : சந்தி. குறிப்பினால் - எண்ணத்தினால். பண்ணும் - தாம் புரிந்து வரும். தொண்டின் - திருத்தொண்டு களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பாங்கு-பகுதிகள்; ஒருமை பன்மை மயக்கம். பல - பலவற்றை. பயின்று - புரிந்து பழகி. பரவி - அந்த அகிலேசுவரரைத் துதித்துக் கொண்டு. விரவுவார் - இருப்பவராகி; முற்றெச்சம். எண் - கணக்கு. இல் - இல்லாத; கடைக்குறை. தீபம் -

திருவிளக்குக்களை; ஒருமை பன்மை மயக்கம். ஏற்றுவதற்கு - ஏற்றுவதற்காக. எடுத்த - தொடங்கிய. கருத்தின் - எண்ணத்தோடு. இசைந்து - இணங்கி; ஒருப்பட்டு. எழுவார் - அந்த நாயனார் தம்முடைய திருமாளிகையிலிருந்து எழுந்து செல்வாரானார்.

பின்பு வரும் 9 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அவ்வாறு தம்முடைய திருமாளிகையிலிருந்து அந்த நமிநந்தியடிகள் நாயனார் எழுந்து சென்ற சமயத்தில் பகல் நேரத்தில் அந்த ஏமப்பேறூரில் சூரியன் இறங்கி வரும் மாலை நேரம் அடைந்தவுடன் செல்வச் செழிப்பைப் பெற்றிருக்கும் குளிர்ச்சியைப் பெற்ற சிவத்தலமாகிய அந்த ஏமப்பேறூருக்கு அப்பால் போனால் பகற் நேரம் போய் விடும் என்று எண்ணி அவ்வாறு செல்லுதலை விட்டுவிட்டு அந்த ஊரில் உள்ள ஒரு திருமாளிகையில் வாழ்பவர்களிடம் தாம் ஏற்றும் திருவிளக்குக்களுக்கு வேண்டிய நெய்யைப் பெறுவதற்கு விரும்பி அந்தத் திருமாளிகைக்கு உள்ளே நுழைந்தவுடன் அறிவு அழிந்து விட்ட நிலையைப் பெற்ற ஒரு சமணருடைய வீடாக இருந்தது; அந்த வீட்டில் வாழும் அந்தச் சமணர் பின் வருமாறு கூறுவாரானார்.' பாடல் வருமாறு :

**" எழுந்த பொழுது பகற்பொழுதங்**
**கிறங்கும் மாலை எய்துதலும்**
**செழுந்தண் பதியி னிடையப்பாற்**
**செல்லிற் செல்லும் பொழுதென்ன**
**ஒழிந்தங் கணைந்தோர் மனையில்விளக்**
**குறுநெய் வேண்டி உள்புகலும்**
**அழிந்த நிலைமை அமணர்மனை**
**ஆயிற் றங்கண் அவர்உரைப்பார்."**

எழுந்த - அவ்வாறு தம்முடைய திருமாளிகையிலிருந்து அந்த நமிநந்தியடிகள் நாயனார் எழுந்து சென்ற. பொழுது - சமயத்தில். பகற்பொழுது - பகல் நேரத்தில்.

அங்கு - அந்த ஏமப்பேறூரில். இறங்கும் - சூரியன் வானத்தில் இறங்கி வரும். மாலை - மாலை நேரம். எய்துதலும் - அடைந்தவுடன். செழும் - செல்வச் செழிப்பைப் பெற்று விளங்கும். தண் - பூம்பொழிலால் குளிர்ச்சியைப் பெற்ற. பதியினிடை - சிவத்தலமாகிய அந்த ஏமப்பேறூருக்கு; உருபுமயக்கம். அப்பால் செல்லின் - அப்பாற் போனால். செல்லும் பொழுது - பகல் நேரம் போய் விடும். என்ன - என்று எண்ணி. ஒழிந்து - அவ்வாறு செல்லுதலை விட்டு விட்டு. அங்கு - அந்த ஏமப்பேறூரில் உள்ள. அணைந்து ஓர் மனையில் - ஒரு திருமாளிகையில். விளக்கு - வாழ்பவர்களிடம் தாம் ஏற்றும் திருவிளக்குக் களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். உறு - வேண்டி யிருக்கும். நெய் - நெய்யை. வேண்டி - பெறுவதற்கு விரும்பி. உள் - அந்தத் திருமாளிகைக்கு உள்ளே. புகலும் - நுழைந்தவுடன். அழிந்த - அறிவு அழிந்துவிட்ட. நிலைமை - நிலையைப் பெற்ற. அமணர் - ஒரு சமணருடைய. மனை ஆயிற்று - வீடாகியிருந்தது. அங்கண் - அந்த வீட்டில் வாழும். அவர் - அந்தச் சமணர். உரைப்பார் - பின் வருமாறு கூறுவாரானார்.

அடுத்து உள்ள 10-ஆம் கவியின் உள்ளுறை வருமாறு:

' "உண்மையைத் தெரிந்து கொள்ளாமல் ஒரு பொருளே நாந்தியும் அஸ்தியும் ஆகும்" என்னும் கருத்தைத் தம்முடைய உள்ளத்தில் மேற்கொண்டிருக்கும் குற்றத்தைப் பெற்ற சமண சமய வழியில் வாழ்பவராகிய அந்தச் சமணர் நமிநந்தியடிகள் நாயனாரை நோக்கி, "தம்முடைய கையில் திகழும் நெருப்பை உடையவராகிய உங்களுடைய கடவுளாராகிய சிவனாருக்கு ஒரு திருவிளக்கு மிகையானது என்று தெரிந்து கொள்ளுவீராக; எங்களுடைய இந்த வீட்டில் நீர் கேட்ட நெய் இல்லை; நீர் திருவிளக்கை எரிப்பவரானால் குளத்தில் உள்ள புனலை மொண்டு கொண்டு வந்து அந்தத் திருவிளக்கில் விட்டு

எடுப்பதைச் செய்வீராக.'' என அகிலேசருடைய திருத் தொண்டராகிய அந்த நமிநந்தியடிகள் நாயனாரிடம் கூறினார்.' பாடல் வருமாறு :

''கையில் விளங்கு கனலுடையார்
    தமக்கு விளக்கு மிகைகாணும்;
நெய்யிங் கில்லை; விளக்கெரிப்பீ
    ராகில் நீரை முகந்தெரித்தல்
செய்யும்' என்று திருத்தொண்டர்க்
    குரைத்தார் தெளியா, 'தொருபொருளே
பொய்யும் மெய்யும் ஆம்' என்னும்
    பொருள்மேற் கொள்ளும் புரைநெறியார்.''

தெளியாது - உண்மையைத் தெளிவாகத் தெரிந்து கொள்ளாமல். ஒரு பொருளே-ஒரு வஸ்துவே. பொய்யும் - நாந்தியும். மெய்யும் - அஸ்தியும். ஆம் - ஆகும். என்னும் பொருள் - என்னும் கருத்தை. மேற்கொள்ளும் - தம்முடைய உள்ளத்தில் மேற்கொண்டிருக்கும். புரை - குற்றத்தைப் பெற்ற. நெறியார் - சமண சமய வழியில் வாழ்பவராகிய அந்தச் சமணர் நமிநந்தியடிகளை நோக்கி. கையில் - தம்முடைய கையில். விளங்கு - திகழும். கனல் - நெருப்பை. உடையார் தமக்கு - உடையவராகிய உங்களுடைய கடவுளராகிய சிவனாருக்கு. தம் : அசை நிலை. விளக்கு - ஒரு விளக்கு. மிகை - மிகையானது. காணும் - என்று நீர் தெரிந்து கொள்வீராக. நெய் இங்கு இல்லை - எங்களுடைய இந்த வீட்டில் நீர் கேட்ட நெய் இல்லை. விளக்கு - நீர் திருவிளக்கை. எரிப்பீராகில் - எரிப்பவர் ஆனால். நீரை முகந்து - ஒரு குளத்தில் உள்ள புனலை மொண்டு கொண்டு வந்து. எரித்தல் செய்யும் - அந்தத் திருவிளக்கில் விட்டு எரிப்பதைச் செய்வீராக. என்று - என. திருத்தொண்டர்க்கு - அகிலேசுவரருடைய திருத்தொண்டராகிய அந்த நமிநந்தி நாயனாரிடம்; உருபு மயக்கம். உரைத்தார் - அந்தச் சமணர் கூறினார்.

பிறகு வரும் 11-ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அருகத் பரமேஷ்டியை வணங்கும் அந்தச் சமணர் தம்மை மதிக்காமல் கூறிய வார்த்தைகளைப் பொறாத வராகி அந்தச் சமயத்திலேயே தம்முடைய திருவுள்ளத்தில் பெருகி எழுந்த வருத்தத்தோடு அந்த இடத்திலிருந்து அகன்று எழுந்தருளிச் சென்று பிறைச் சந்திரனைத் தம்முடைய தலையின் மேல் புனைந்து கொண்டிருக்கும் நறுமணம் பரவும் கொன்றை மலர்மாலையை அணிந்து கொண்டிருக்கும் தலையைப் பெற்றவராகிய அகிலேசு வருடைய திருக்கோயிலுக்கு முன்னால் சென்று அடைந்து உருக்கத்தை அடையும் பக்தியைப் பெற்ற அந்த நமிநந்தி யடிகள் நாயனார் அந்த அகிலேசுவரரை வணங்கித் தரையில் விழ அப்போது ஓர் அசரீரி வாக்கு உயரமாக உள்ள ஆகாயத்தில் எழுந்தது.' பாடல் வருமாறு :

"அருகர் மதியா துரைத்தஉரை
ஆற்றா ராகி அப்பொழுதே
பெருக மனத்தில் வருத்தமுடன்
பெயர்ந்து போந்து பிறையணிந்த
முருகு விரியும் மலர்க்கொன்றை
முடியார் கோயில் முன்எய்தி
உருகும் அன்பர் பணிந்துவிழ
ஒருவாக் கெழுந்த துயர்விசும்பில்."

அருகர் - அருகத் பரமேஷ்டியை வணங்கும் அந்தச் சமணர். மதியாது - தம்மை மதிக்காமல். உரைத்த - கூறிய. உரை - வார்த்தைகளை; ஒருமை பன்மை மயக்கம். ஆற்றாராகி - சகிக்காதவராகி. அப்பொழுதே - அந்தச் சமயத்திலேயே. பெருக மனத்தில் - தம்முடைய திருவுள்ளத்தில் பெருகி எழுந்த. வருத்தமுடன் - வருத்தத் தோடு. பெயர்ந்து - அந்த இடத்திலிருந்து அகன்று. போந்து - எழுந்தருளிச் சென்று. பிறை - பிறைச் சந்திரனை. அணிந்த - தம்முடைய தலையின்மேல்

புனைந்து கொண்டிருக்கும். முருகு - நறுமணம். விரியும் - விரிந்து பரவும். மலர்க் கொன்றை - கொன்றை மலர் மாலையை அணிந்து கொண்டிருக்கும். கொன்றை : ஆகு பெயர். முடியார் - தலையைப் பெற்றவராகிய அகிலே சுவரருடைய. கோயில் - திருக்கோயிலுக்கு. முன் - முன்னால். எய்தி - எழுந்தருளி அடைந்து உருகும் - பக்தியினால் உருக்கத்தை அடையும். அன்பர் - பக்தராகிய அந்த நமிநந்தியடிகள் நாயனார். பணிந்து - வணங்கி. விழ - தரையில் விழ. ஒரு வாக்கு - அப்போது ஓர் அசரீரி வாக்கு. உயர் - உயரமாக உள்ள. விசும்பில் எழுந்தது - ஆகாயத்தில் எழுந்து கேட்டது.

பிறகு வரும் 12 - ஆம் கவியின் கருத்து வருமாறு :

' "நீர் உமக்கு உண்டான இந்த மனக் கவலையை விட்டுவிடுவீராக; இனிமேல் அவியாத திருவிளக்குக்களை ஏற்றி வைக்கும் திருப்பணியை நீர் செய்ய இந்தப் பக்கத்தில் உள்ள குளத்தில் நிரம்பியிருக்கும் புனலை ஒரு குடத்தில் மொண்டு கொண்டு வந்து ஏற்றுவீராக" என்று செவ்வந்தி நேரத்தில் உதயமாகும் பிறைச் சந்திரனைத் தம்முடைய தலையின்மேல் புனைந்து கொண்டிருக்கும் தலைவராகிய அகிலேசுவரர் வழங்கிய திருவருளால் ஆகாயத்தில் எழுந்து கேட்ட அந்த அசரீரி வாக்கைக் கேட்டருளித் தம்முடைய திருவுள்ளத்தில் மகிழ்ச்சியை அடைந்து அந்த நமிநந்தி அடிகள் நாயனார் இன்னதைச் செய்வது என்று தெரிந்து கொள்ளாமல் மயங்கினார்.' பாடல் வருமாறு :

**" ' வந்த கவலை மாற்றும்இனி**
**மாறா விளக்குப் பணிமாற**
**இந்த மருங்கில் குளத்துநீர்**
**முகந்து கொடுவந் தேற்றும்.' என**
**அந்தி மதியம் அணிந்தபிரான்**
**அருளால் எழுந்த மொழிகேளாச்**

**சிந்தை மகிழ்ந்து நமிநந்தி
அடிகள் செய்வ தறிந்திலரால்.''**

வந்த - நீர் உமக்கு உண்டான. கவலை - இந்த மனக்கவலையை. மாற்றும் - விட்டு விடுவீராக. இனி - இனிமேல். மாறா - அவியாத. விளக்கு - திருவிளக்குக் களை ஏற்றி வைக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ப் : சந்தி. பணி - திருப்பணியை. மாற - நீர் செய்ய. இந்த மருங்கில் - இந்தத் பக்கத்தில் உள்ள. குளத்து - குளத்தில் நிரம்பியிருக்கும். நீர் - புனலை. முகந்து கொடு - ஒரு குடத்தில் மொண்டு கொண்டு. வந்து ஏற்றும் - வந்து அந்த விளக்குக்களை ஏற்றுவீராக. என - என்று; இடைக்குறை. அந்தி - செவ்வந்தி நேரத்தில். மதியம் - உதயமாகும் பிறைச் சந்திரனை. அணிந்த - தம்முடைய தலையின்மேல் புனைந்து கொண்டிருக்கும். பிரான் - தலைவர் ஆகிய அகிலேசுவரர்; ஒருமை பன்மை மயக்கம். அருளால் - வழங்கிய திருவருளால். எழுந்த - ஆகாயத்தில் எழுந்து கேட்ட. மொழி - அந்த அசரீரி வாக்கை. கேளா - கேட்டருளி. ச் : சந்தி. சிந்தை - தம்முடைய திருவுள்ளத்தில். மகிழ்ந்து - மகிழ்ச்சியை அடைந்து. நமிநந்தியடிகள் - அந்த நமிநந்தி அடிகள் நாயனார். செய்வது - இன்னதைச் செய்வது என்று. அறிந் ரி - தெரிந்து கொள்ளாமல் மயங்கினார். ஆல் : ஈற்றசை நிலை.

அடு துவரும் 13 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந் நமிநந்தி அடிகள் நாயனார் தம்முடைய தலையின் மேல் கங்கையாற்றின் புனலைத் தங்க வைத்த தலைவராகிய அகிலேசுவரர் வழங்கிய திருவருளையே தம்முடைய திருவுள்ளத்தில் தியானித்து எழுந்து செல்வாராகி நல்ல புனல் நிரம்பிய ஒரு பொய்கையின் நடுவில் இறங்கித் தம்முடைய தலைவராகிய அகிலேசு வரருடைய திருநாமத்தை ஓதி அந்த ஈசுவரரைத் துதித்து

விட்டு அந்தப் பொய்கையில் உள்ள புனலை ஒரு குடத்தில் மொண்டு கொண்டு அந்தப் பொய்கையின் கரையின் மேல் ஏறி வந்து தம்முடைய தந்தையாரைப் போன்றவராகிய அந்த அகிலேசுவரர் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்கு அந்த நாயனார் எழுந்தருளிச் சென்று அங்கே இருந்த அகல்களுக்கு உள்ளே முந்நீராகிய சமுத்திரம் சூழ்ந்த இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள் வியப்பை அடையுமாறு முறுக்கிச் செய்யும் திரிகளின் மேல் தாம் கொண்டு வந்திருந்த புனலைப் பெய்தார்.' பாடல் வருமாறு :

"சென்னி மிசைநீர் தரித்தபிரான்
அருளே சிந்தை செய்தெழுவார்
நன்னீர்ப் பொய்கை நடுப்புக்கு
நாதர் நாமம் நவின்றேத்தி
அந்நீர் முகந்து கொண்டேறி
அப்பர் கோயில் அடைந்தகலுள்
முந்நீர் உலகம் அதிசயிப்ப
முறுக்கும் திரிமேல் நீர்வார்த்தார்."

சென்னி - அந்த நமிநந்தி அடிகள் நாயனார் தம்முடைய தலையின். மிசை - மேல். நீர் - கங்கையாற்றின் புனலை. தரித்த - தங்க வைத்த. பிரான் - தலைவராகிய அகிலேசுவரர்; ஒருமை பன்மை மயக்கம். அருளே - வழங்கிய திருவருளையே. சிந்தை - தம்முடைய திருவுள்ளத்தில். செய்து - தியானித்து. எழுவார் - எழுந்து செல்பவராகி; முற்றெச்சம். நல் - நல்ல. நீர் - புனல் நிரம்பிய. ப் : சந்தி. பொய்கை - மனிதர் ஆக்காத நீர் நிலையின். நடு - நடுவில். ப் : சந்தி. புக்கு - இறங்கி. நாதர் - தம்முடைய தலைவராகிய அகிலேசுவரருடைய. நாமம் - திருநாமத்தை. நவின்று - ஓதி. ஏத்தி - அந்த ஈசுவரரைத் துதித்து விட்டு. அந்நீர் - அந்தப் பொய்கையில் உள்ள புனலை. முகந்து கொண்டு - ஒரு குடத்தில் மொண்டு கொண்டு. ஏறி - அந்தப் பொய்கையின் கரையின் மேல் ஏறி வந்து. அப்பர் - தம்முடைய தந்தை

யாரைப் போன்றவராகிய அந்த அகிலேசுவரர்; உவம ஆகுபெயர். கோயில் - எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்கு. அடைந்து - அந்த நாயனார் எழுந்தருளிச் சென்று. அகலுள் - அங்கே வைத்திருந்த அகல்களுக்கு உள்ளே; ஒருமை பன்மை மயக்கம். முந்நீர் - படைத்தல், காத்தல், அழித்தல் என்னும் மூன்று தொழில்களைப் பெற்ற சமுத்திரம் சூழ்ந்த. உலகம் - இந்தப் பூமண்டலத்தில் வாழும் மக்கள்; இட ஆகு பெயர். அதிசயிப்ப - வியப்பை அடையுமாறு. முறுக்கும் - முறுக்கிச் செய்யும். திரிமேல் - விளக்குத் திரிகளின் மேல்; ஒருமை பன்மை மயக்கம். நீர் - தாம் கொண்டு வந்திருந்த புனலை. வார்த்தார் - அந்த நாயனார் பெய்தார்.

பிறகு வரும் 14-ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு :

'அந்த நமிநந்தியடிகள் நாயனார் ஒளியை வீசும் திருவிளக்கு ஒன்றை ஏற்றி வைத்தவுடன் அது ஒளியை வெளியிட்டு எழுந்து விளங்கியது; அந்த விளக்கைப் பார்த்து எல்லாத் தேவர்களுக்கும் ஆதி முதல்வராகிய திருவாரூர் அரநெறி என்னும் திருக்கோயிலில் எழுந்தருளியிருக்கும் அகிலேசுவரருடைய திருக்கோயில் முழுவதும் திருவிளக்குக்களை ஏற்றி வைத்து விட்டு, தமக்குத் துன்பத்தைச் செய்வதற்கு எண்ணிய அந்த அருகத் பரமேஷ்டியை வணங்கும் சமணருக்கு எதிரில் முதிர்ச்சியை அடைந்து விளங்கும் ஆனந்தத்தோடு தம்முடைய தலைவராகிய அகிலேசுவரர் வழங்கிய திருவருளினால் அந்த நாயனார் திருவிளக்குக்களைப் புனலினால் இந்தச் செந்தமிழ் நாட்டில் வாழும் மக்கள் தெரிந்து கொண்டு வியக்குமாறு எரியுமாறு செய்தார்.' பாடல் வருமாறு :

"சோதி விளக்கொன் றேற்றுதலும்
சுடர்விட் டெழுந்த ததுநோக்கி
ஆதி முதல்வர் அரனெறியார்
கோயில் அடைய விளக்கேற்றி

ஏதம் நினைந்த அருகந்தர்
எதிரே முதிரும் களிப்பினுடன்
நாதர் அருளால் திருவிளக்கு
நீரால் எரித்தார் நாடறிய.''

சோதி - அந்த நமிநந்தியடிகள் நாயனார் ஒளியை வீசும். விளக்கு ஒன்று - திருவிளக்கு ஒன்றை. ஏற்றுதலும் - ஏற்றி வைத்தவுடன். சுடர் - அந்த விளக்கு ஒளியை. விட்டு- வெளியிட்டு; வெளிப் படுத்தி. எழுந்தது - எழுந்து விளங்கியது. அது - அந்த விளக்கை. நோக்கி - பார்த்து. ஆதிமுதல்வர்-எல்லாத் தேவர்களுக்கும் ஆதிமுதல்வராகிய. அரனெறியார் - திருவாரூர் அரநெறி என்னும் திருக் கோயிலில் எழுந்தருளியிருக்கும் அகிலேசுவரருடைய. கோயில் - திருக்கோயில். அடைய - முழுவதும். விளக்கு - திருவிளக்குக்களை; ஒருமை பன்மை மயக்கம். ஏற்றி-அந்த நாயனார் ஏற்றி வைத்து விட்டு. ஏதம் - தமக்குத் துன்பத்தைச் செய்வதற்கு. நினைந்த - எண்ணிய. அருகந்தர் - அருகத் பரமேஷ்டியை வணங்கும் அந்தச் சமணருக்கு. எதிர் - எதிரில். ஏ : அசைநிலை. முதிரும் - முதிர்ச்சியை அடைந்து விளங்கும். களிப்பினுடன் - ஆனந்தத்தோடு. நாதர் - தம்முடைய தலைவராகிய அகிலேசுவரர். அருளால் - வழங்கிய திருவருளால். திரு விளக்கு - திருவிளக்குக்களை; ஒருமை பன்மை மயக்கம். நீரால் - அந்தப் பொய்கையிலிருந்து தாம் கொண்டு வந்திருந்த புனலால். நாடு - இந்தச் செந்தமிழ் நாட்டில் வாழும் மக்கள்; இடஆகுபெயர். அறிய - தெரிந்து கொண்டு வியக்குமாறு. எரித்தார் - எரியுமாறு செய்தார்.

அடுத்து உள்ள 15 - ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு :

'அந்த நமிநந்தி அடிகள் நாயனார் தண்ணீரால் நிறைந்திருக்கும் இயல்போடு ஏற்றி வைத்த திரு விளக்குக்கள் இரவு நேரம் விடிகிற வரையிலும் நின்று

எரிந்து கொண்டிருக்க நீர் குறையும் அகல்கள் எல்லா வற்றிற்கும் அவை கொள்ளுவதற்கு வேண்டியிருக்கும் புனலைப் பெய்து இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங் களினுடைய அர்த்தமாகிய அகிலேசுவரரை அருச்சனை புரியும் இல்லற வாழ்க்கையில் வரையறை பிழையாமல் தாம் தங்கியிருந்து வாழும் சிவத்தலமாகிய ஏமப்பேறூரில் அன்று இரவு நேரத்திலேயே அடைபவராகி, அந்த அகிலேசுவரரை வணங்கி விட்டு வெளியில் செல்ல எண்ணினார்.' பாடல் வருமாறு :

"நிறையும் பரிசு திருவிளக்கு
விடியு மளவும் நின்றெரியக்
குறையும் தகளி களுக்கெல்லாம்
கொள்ள வேண்டும் நீர்வார்த்து
மறையின் பொருளை அருச்சிக்கும்
மனையின் நியதி வழுவாமல்
உறையும் பதியின் அவ்விரவே
அணைவார் பணிவுற் றொருப்பட்டார்."

நிறையும் - அந்த நமிநந்தியடிகள் நாயனார் தண்ணீரால் நிறைந்திருக்கும். பரிசு - இயல்போடு. திருவிளக்கு - ஏற்றி வைத்த திருவிளக்குக்கள்; ஒருமை பன்மை மயக்கம். விடியும் அளவும் - அந்த இரவு நேரம் விடிகிற வரையிலும். நின்று எரிய - அவியாமல் நின்று எரிந்து கொண்டிருக்க. க்: சந்தி. குறையும் - நீர் குறையும். தகளிகளுக்கு எல்லாம் - அகல்கள் எல்லாவற்றிற்கும். கொள்ள வேண்டும் - அவை கொள்ளுவதற்கு வேண்டி யிருக்கும். நீர் - புனலை. வார்த்து - பெய்து. மறையின் - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பொருளை - அர்த்தமாகிய அகிலேசு வரரை. அருச்சிக்கும் - அருச்சனை புரியும். மனையின் - இல்லற வாழ்க்கையினுடைய. நியதி - வரையறை.

வழுவாமல் - பிழையாமல். உறையும் - தாம் தங்கிக் கொண்டிருந்து வாழும். பதியின் - சிவத்தலமாகிய ஏமப் பேறூரில். அவ்விரவே - அன்று இரவு நேரத்திலேயே. அணைவார் - அடைபவராகி; முற்றெச்சம். பணிவுற்று - அந்த அகிலேசுவரரை வணங்கி விட்டு. ஒருப்பட்டார் - வெளியில் செல்ல எண்ணினார்.

பிறகு உள்ள 16 - ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு :

'அந்த நமிநந்தி அடிகள் நாயனார் இரவு நேரம் கடந்த பிறகு தம்முடைய ஊராகிய ஏமப்பேறூரை அடைந்து தம்முடைய திருமாளிகைக்கு உள்ளே நுழைந்து என்றைக்கும் தாம் செய்ததைப் போல அன்றும் வரையறை யான வேலைகளை முறைப்படி புரிந்து ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களும் இயல்பாகவே இல்லாத வராகிய அகிலேசுவரருக்கு அருச்சனையைப் புரிந்து அந்த ஈசுவரரைத் துதித்து விட்டுத் திருவமுது செய்தருளிப் படுக்கையில் அன்று இரவு நேரத்தில் படுத்துக் கொண்டு துயின்று விடியும் காலத்தில் பாம்புகளைப் புனைபவராகிய அந்த அகிலேசுவரருக்குப் பூசையைப் புரிந்து விட்டு அந்த நாயனார் திருவாரூர் நகரத்தை மறுபடியும் அடைந்தார்.' பாடல் வருமாறு :

"இரவு சென்று தம்பதியில்
 எய்தி மனைப்புக் கென்றும்போல்
விரவி நியமத் தொழில்முறையே
 விமலர் தம்மை அருச்சித்துப்
பரவி அமுது செய்தருளிப்
 பள்ளி கொண்டு புலர்காலை
அரவம் அணிவார் பூசைஅமைத்
 தாரூர் நகரில் மீண்டணைந்தார்."

இரவு - அந்த நமிநந்தியடிகள் நாயனார் இரவு நேரம். சென்று - கடந்த பிறகு. தம் - தம்முடைய. பதியில் - ஊராகிய ஏமப்பேறூரை; உருபு மயக்கம். எய்தி -

அடைந்து. மனை - தம்முடைய திருமாளிகைக்குள். ப்: சந்தி. புக்கு - நுழைந்து. என்றும் போல் - தாம் என்றைக்கும் செய்ததைப் போல. விரவி நியமத் தொழில்- அன்றும் வரையறையான வேலைகளைப் புரிந்து. தொழில் : ஒருமை பன்மை மயக்கம். அவையாவன : சந்தியாவந்தனம், மாத்யான்ஹிகம் ஆகியவற்றைப் புரிதல், நீராடுதல், பூசை புரிதல் முதலியவை. முறையே - முறைப்படி. விமலர்தம்மை - ஆணவம், கன்மம், மாயை என்னும் மூன்று மலங்களும் இயல்பாகவே இல்லாதவராகிய அகிலேசுவரருக்கு; உருபு மயக்கம். தம் : அசை நிலை. அருச்சித்து - அருச்சனையைப் புரிந்து. ப் : சந்தி. பரவி - அந்த ஈசுவரரைத் துதித்து விட்டு. அமுது செய்தருளி - திருவமுது செய்தருளி; உணவை உண்டு விட்டு. ப் : சந்தி. பள்ளி கொண்டு - அன்று இரவு நேரத்தில் படுக்கையில் படுத்துக் கொண்டு துயின்று. புலர் காலை - இராத்திரி நேரம் விடியும் விடியற் காலத்தில். அரவம் - பாம்புகளை; ஒருமை பன்மை மயக்கம். அணிவார் - புனைபவராகிய அந்த அகிலேசுவரருக்கு. பூசை - பூசையை. அமைத்து - வேண்டிய பொருள்களை வைத்துக் கொண்டு புரிந்து விட்டு. ஆரூர் - திருவாரூராகிய. நகரில் - நகரத்தை; உருபு மயக்கம். மீண்டு - மறுபடியும் ஏமப்பேறூரிலிருந்து. அணைந்தார் - அடைந்தார்.

பிறகு வரும் 17-ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு :

'அந்த வேதியராகிய நமிநந்தியடிகள் நாயனார் அவ்வாறு திருவாரூர் நகரத்திற்கு எழுந்தருளி வந்து அகிலேசுவரரைப் பணிந்துவிட்டுத் திருவாரூர் அரனெறியில் எழுந்தருளியிருப்பவராகிய அந்த அகிலேசுவரர் மகிழ்ச்சியை அடைந்து எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலை வலமாக வந்து தம்முடைய திருவுள்ளம் மகிழ்ச்சியை அடையுமாறு அந்த ஈசுவரரைத் தரையில் விழுந்து வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு அந்தத் திருக்கோயிலுக்கு வெளியிடங்களிலும், உள் இடங்

களிலும் பல திருப்பணிகளை முற்பட்டுப் புரிந்து பகல் நேரம் முழுவதும் அந்தத் திருப்பணிகளை முறைப்படியே புரிந்து அந்த நேரத்தில் அருமையாக உள்ள திருவிளக்குக் களைத் திருக்கோயிலில் உள்ள எந்த இடங்களிலும் ஏற்றி வைத்து விட்டு அந்த நாயனார் அந்த அகிலேசுவரருடைய திருவடிகளை வணங்குபவரானார்." பாடல் வருமாறு :

" வந்து வணங்கி அரனெறியார்
மகிழும் கோயில் வலங்கொண்டு
சிந்தை மகிழப் பணிந்தெழுந்து
புறம்பும் உள்ளும் திருப்பணிகள்
முந்த முயன்று பகல்எல்லாம்
முறையே செய்து மறையவனார்
அந்தி அமையத் தரியவிளக்
கெங்கும் ஏற்றி அடிபணிவார்."

மறையவனார் - அந்த வேதியராகிய நமிநந்தியடிகள் நாயனார். வந்து - அவ்வாறு திருவாரூர் நகரத்திற்கு எழுந்தருளி வந்து. வணங்கி - அகிலேசுவரரைப் பணிந்து விட்டு. அரனெறியார் - திருவாரூர் அரனெறியில் எழுந்தருளியிருப்பவராகிய அகிலேசுவரர். மகிழும் - மகிழ்ச்சியை அடைந்து எழுந்தருளியிருக்கும். கோயில் - திருக்கோயிலை. வலம் கொண்டு - வலமாக வந்து. சிந்தை - தம்முடைய திருவுள்ளம். மகிழ - மகிழ்ச்சியை அடையுமாறு. ப் : சந்தி. பணிந்து - அந்த ஈசுவரரைத் தரையில் விழுந்து வணங்கி விட்டு. எழுந்து - பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு. புறம்பும் - திருக்கோயிலுக்கு வெளியில் உள்ள இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். உள்ளும் - திருக்கோயிலுக்கு உள்ளே உள்ள இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். திருப் பணிகள் - பல திருப்பணிகளை. முந்த - முற்பட்டு. முயன்று - முயன்று செய்து. பகல் எல்லாம் - பகல் நேரம் முழுவதும. முறையே - முறைப்படியே. செய்து - அந்தத் திருப்பணிகளைப் புரிந்து விட்டு. அந்தி அமையத்து - அந்தி

நேரத்தில்; இரவுக்கு முந்திய மாலை வேளையில். அரிய - அருமையாக உள்ள; தண்ணீரால் எரிந்தமையால் அருமை உடையவை ஆயின. விளக்கு - திருவிளக்குக்களை; ஒருமை பன்மை மயக்கம். எங்கும் - திருக்கோயிலில் உள்ள எந்த இடங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். ஏற்றி - ஏற்றி வைத்து விட்டு. அடி - அந்த நாயனார் அந்த அகிலேசுவரருடைய திருவடிகளை; ஒருமை பன்மை மயக்கம். பணிவார் - வணங்குபவர் ஆனார்.

பிறகு வரும் 18 - ஆம் செய்யுளின் கருத்து வருமாறு :

'எல்லாத் தேவர்களுக்கும் தலைவராகிய தியாகராஜப் பெருமானாருடைய திருத்தொண்டர்களினுடைய வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் திருவடிகளைத் தேவலோகத்தில் வாழும் தேவர்கள் வந்து வணங்கும் அழகைப் பெற்ற திருவாரூர் நகரத்தில் முன் காலத்தில் செய்ததைப் போல பல தினங்களிலும் தாம் புரிந்து பழகும் திருப்பணிகளைப் புரிந்து கொண்டு அந்த நமிநந்தியடிகள் நாயனார் தம்முடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு போக தண்டியடிகள் நாயனாரால் சமணர்கள் கலக்கத்தை அடைந்து தமக்கு ஒரு சார்பு இல்லாத அந்தச் சமணர்களாகிய இழிந்த குணங்களையும் இழிந்த செயல்களைச் செய்யும் இயல்பையும் பெற்றவர்கள் அடியோடு அழிந்து போக ஏழு உலகங்களிலும் பரவி யிருக்கும் பெருமை அமைந்தது.' பாடல் வருமாறு :

"பண்டு போலப் பலநாளும்
பயிலும் பணிசெய் தவர்ஒழுகத்
தண்டி அடிக ளால்அமணர்
கலக்கம் விளைந்து சார்பில்அமண்
குண்டர் அழிய ஏழுலகும்
குலவும் பெருமை நிலவியதால்;
அண்டர் பெருமான் தொண்டர்கழல்
அமரர் பணியும் அணியாரூர்."

இந்தப் பாடலில் விற்பூட்டுப் பொருள் கோள் அமைந்துள்ளது. அண்டர் - எல்லாத் தேவர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். பெருமான்-தலைவராகிய தியாகராஜப் பெருமானாருடைய; ஒருமை பன்மை மயக்கம். தொண்டர் - திருத்தொண்டர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். கழல் - வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் திருவடிகளை; ஆகு பெயர். அமரர் - தேவலோகத்தில் வாழும் தேவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். பணியும் - திருவாரூருக்கு வந்து வணங்கும். அணி - அழகைப் பெற்ற. ஆரூர் - திருவாரூர் நகரத்தில். பண்டு போல - முன்காலத்தில் செய்ததைப் போல. ப் : சந்தி. பல நாளும் - பல தினங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். பயிலும் - தாம் புரிந்து பழகும். பணி - திருப்பணிகளை; ஒருமை பன்மை மயக்கம். செய்து - புரிந்து கொண்டு. அவர் - அந்த நமிநந்தி அடிகள் நாயனார். ஒழுக - தம்முடைய வாழ்க்கையை நடத்திக் கொண்டு போக. த் : சந்தி. தண்டி அடிகளால் - தண்டி அடிகள் நாயனாரால். அமணர் - சமணர்கள்; ஒருமை பன்மை மயக்கம். கலக்கம் - கலக்கத்தை. விளைந்து - அடைந்து. சார்பு - நல்ல சார்பு. இல் - தமக்கு ஒன்றும் இல்லாத; கடைக்குறை. அமண் - சமணர்களாகிய; திணை மயக்கம். குண்டர் - இழிந்த குணங்களையும், இழிந்த செயல்களைச் செய்யும் இயல்பையும் பெற்றவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். அழிய - அடியோடு அழிந்து போக. ஏழு உலகம் - ஏழு உலகங்களிலும்; ஒருமை பன்மை மயக்கம். குலவும் - பரவியிருக்கும். பெருமை நிலவியது - பெருமை அமைந்திருந்தது. ஆல் : அசை நிலை.

அடுத்து உள்ள 19-ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு :

'இனிய ஓசையைப் பெற்ற இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும் ஆராய்ந்து அத்தியயனம் செய்து நிறைவேற்றிய வேதியராகிய அந்த நமிநந்தியடிகள் நாயனார்

நல்ல திருத்தொண்டுகள் ஆக எண்ணி எல்லா உயிர்களுக்கும் தலைவரும் திருவாரூரில் உள்ள ஆலயத்தில் விளங்கும் பாம்புப் புற்றைத் தாம் எழுந்தருளும் இடமாகக் கொண்டருளிய பரிசுத்தராகிய வன்மீக நாதருக்குத் திருவமுதைச் சமைப்பதற்கு வேண்டியிருக்கும் அரிசி முதலாக இருக்கும் பொருள்களை நீதி முறையோடு ஆட்சி புரியும் சோழ மன்னன் தான் விரும்பும் அறக்கட்டளைகள் பலவற்றையும் சிங்காதனத்தின்மேல் விளங்குமாறு அமர்ந்து கொண்டு வேதங்கள், சிவாகமங்கள் ஆகிய சாத்திரங்கள் விதித்துள்ள விதிகளின்படி விளங்குமாறு அமைத்து வைத்தான்.' பாடல் வருமாறு :

**"நாத மறைதேர் நமிநந்தி**
**அடிக ளார்நற் றொண்டாகப்**
**பூத நாதர் புற்றிடங்கொள்**
**புனிதர்க் கமுது படிமுதலாம்**
**நீதி வளவன் தான்வேண்டும்**
**நிபந்தம் பலவும் அரியணையின்**
**மீது திகழ இருந்தமைத்தான்**
**வேதா கமநூல் விதிவிளங்க."**

நாத - இனிய ஓசையைப் பெற்ற. மறை - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களையும்; ஒருமை பன்மை மயக்கம். தேர் - ஆராய்ந்து அத்தியயனம் செய்து நிறைவேற்றிய வேதியராகிய. நமிநந்தி அடிகளார் - நமிநந்தி அடிகள் நாயனார். நல் - நல்ல. தொண்டாக - திருத்தொண்டுகளாக எண்ணி; ஒருமை பன்மை மயக்கம், ப் : சந்தி. பூத - எல்லா உயிர்களுக்கும்; 'பூதங்களுக்கு' எனலும் ஆம்; ஒருமை பன்மை மயக்கம். நாதர் - தலைவரும். புற்று - திருவாரூரில் உள்ள ஆலயத்தில் விளங்கும் பாம்புப் புற்றை. இடம்கொள் - தாம் எழுந்தருளும் இடமாகக் கொண்ட. புனிதர்க்கு - பரிசுத்தராகிய வன்மீக நாதருக்கு. அமுது படி - திருவமுதைச் சமைப்பதற்கு

வேண்டியிருக்கும் அரிசி. முதலாம் - முதலாக இருக்கும் பொருள்களை. நீதி - நீதி முறையோடு ஆட்சி புரியும். வளவன் - சோழ மன்னன். தான் வேண்டும் - தான் விரும்பும். நிபந்தம் - அறக் கட்டளைகள்; ஒருமை பன்மை மயக்கம். பலவும் - பலவற்றையும். அரியணையின் மீது - சிங்காதனத்தின் மேல். திகழ - தன்னுடைய தோற்றப் பொலிவு விளங்குமாறு. இருந்து - அமர்ந்து கொண்டு. வேத - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களும்; ஒருமை பன்மை மயக்கம். ஆகம - சைவாகமங்களாகிய காரணா கமம், காமியாகமம், காமிகாகமம், தத்புருஷ ஆகமம், பௌஷ்கராகமம் முதலிய ஆகமங்களாகிய; ஒருமை பன்மை மயக்கம். நூல் - சாத்திரங்கள் விதித்துள்ள; ஒருமை பன்மை மயக்கம். விதி - விதிகளின்படி; ஒருமை பன்மை மயக்கம். விளங்க - விளங்குமாறு. அமைத்தான் - விளங்குமாறு அமைத்து வைத்தான்.

பிறகு வரும் 20-ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு :

'வெற்றியைப் பெற்ற இடபவாகனத்தை ஓட்டுபவரும், பிறைச் சந்திரனைத் தம்முடைய தலையின் மேல் உள்ள சடாபாரத்தில் தங்க வைத்தவரும் ஆகிய வீதிவிடங்கப் பெருமான் தாம் எந்தக் காலத்திலும் திருவாரூரை ஆட்சி புரிந்தருளும் இயல்பாகிய முறையின்படி திருவிளை யாட்டாகப் பொருந்தியிருக்கும் செயலையும், பங்குனி உத்திரமாகும் திருநட்சத்திரத்தில் திருவாரூரில் நடை பெறும் திருவிழாவினுடைய உயர்ச்சியைப் பெற்ற சிறப்பையும் நிலைத்து நின்று விண்ணப்பத்தைப் புரிந்த படியே புரிந்தருளும் நிலையை அந்த நமிநந்தியடிகள் நாயனார் அடைந்தார்.' பாடல் வருமாறு :

"வென்றி விடையார் மதிச்சடையார்
வீதி விடங்கப் பெருமான்தாம்
என்றும் திருவா ரூர்ஆளும்
இயல்பின் முறைமைத் திருவிளையாட்

டொன்றும் செயலும் பங்குனியுத்
திரமாம் திருநாள் உயர்சிறப்பும்
நின்று விண்ணப் பம்செய்த
படிசெய் தருளும் நிலைபெற்றார்.''

வென்றி - வெற்றியைப் பெற்ற. விடையார் - இடப வாகனத்தை ஓட்டுபவரும். மதிச்சடையார் - பிறைச் சந்திரனைத் தம்முடைய தலையின் மேல் உள்ள சடாபாரத்தில் தங்க வைத்தவரும் ஆகிய. வீதிவிடங்கப் பெருமாள் தாம் என்றும் - வீதிவிடங்கப் பெருமாள் தாம் எந்தக் காலத்திலும். திருவாரூர் - திருவாரூர் என்னும் நகரத்தை. ஆளும் - ஆட்சி புரிந்தருளும். இயல்பின் - இயல்பாகிய. முறைமை - முறையின்படி. த் : சந்தி. திருவிளையாட்டு - திருவிளையாடலாக. ஒன்றும் - பொருந்தியிருக்கும். செயலும் - செயலையும். பங்குனி உத்திரமாம் - பங்குனி மாதத்தில் வரும் உத்திர நட்சத்திர மாகும். திருநாள் - திரு நட்சத்திரத்தில். உயர் - திரு வாரூரில் நடைபெறும் திருவிழாவினுடைய உயர்ச்சியைப் பெற்ற. உயர்: முதல் நிலைத் தொழிற் பெயர். சிறப்பும் - சிறப்பையும். நின்று - நிலைத்து நின்று. 'நின்று கொண்டு' எனலும் ஆம். விண்ணப்பம் செய்த படி - விண்ணப்பத்தைப் புரிந்த படியே. செய்தருளும் - புரிந்தருளும். நிலை - நிலையை. பெற்றார் - அந்த நமிநந்தி அடிகள் நாயனார் அடைந்தார்.

பிறகு வரும் 21-ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு:

'இத்தகைய இயல்போடு திருப்பணிகள் பலவற்றையும் புரிந்து கொண்டே ஏழு உலகங்களிலும் நிலை பெற்று விளங்கும் பெருமையைப் பெற்ற திருவாரூர் என்னும் நகரத்தை ஆட்சி புரியும் அரசராகிய தியாகராஜப் பெருமானாருடைய அடியவர்கள் ஒழுகும் வழியில் நிற்பவராகி அத்தகைய முறையில் திருவிளையாடலைப் புரிந்தருளித் தம்முடைய திருவருளை வழங்க எந்தக் காலத்திலும் நன்மைகள் பெருகுமாறு நமிநந்தி அடிகள்

நாயனார் அடியேங்கள் உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம் அந்தத் தியாகராஜப் பெருமானாரை வணங்கினார்.' பாடல் வருமாறு:

"இன்ன பரிசு திருப்பணிகள்
பலவும் செய்தே ஏழுலகும்
மன்னும் பெருமைத் திருவாரூர்
மன்னர் அடியார் வழிநிற்பார்
அன்ன வண்ணம் திருவிளையாட்
டாடி அருள எந்நாளும்
நன்மை பெருக நமிநந்தி
அடிகள் தொழுதார் நாம்உய்ய."

இன்ன - இத்தகைய. பரிசு - இயல்போடு. திருப் பணிகள் பலவும் - திருப்பணிகள் பலவற்றையும். செய்தே - புரிந்து கொண்டே. ஏழு உலகும் - ஏழு உலகங்களிலும். உலகு: ஒருமை பன்மை மயக்கம். மன்னும் - நிலை பெற்று விளங்கும். பெருமை - பெருமையைப் பெற்ற. த்: சந்தி. திருவாரூர் - திருவாரூர் என்னும் நகரத்தை. மன்னர் - ஆட்சி புரியும் அரசராகிய தியாக ராஜப் பெருமானாருடைய. அடியார் - அடியவர்கள்; ஒருமை பன்மை மயக்கம். வழி - ஒழுகும் வழியில். நிற்பார் - நிற்பவராகி; முற்றெச்சம். அன்ன - அத்தகைய. வண்ணம் - முறையில். திருவிளையாட்டு ஆடி - திருவிளை யாடலைப் புரிந்தருளி. அருள - தம்முடைய திருவருளை வழங்க. எந்நாளும் - எந்தக் காலத்திலும். நன்மை - நன்மைகள்; ஒருமை பன்மை மயக்கம். பெருக - பெருகு மாறு. நமிநந்தி அடிகள் - நமிநந்தி அடிகள் நாயனார். நாம் - அடியேங்கள்; என்றது சேக்கிழார் தம்மையும் பிற தொண்டர்களையும் சேர்த்துக் கூறியது. உய்ய - உஜ்ஜீவனத்தை அடையும் வண்ணம். தொழுதார் - அந்தத் தியாகராஜப் பெருமானாரை வணங்கினார்.

பிறகு வரும் 22 - ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு

'எல்லாத் தேவர்களுக்கும் தலைவராகிய தியாகராஜப் பெருமானார் திருவாரூரிலிருந்து புறப்பட்டு எழுந்தருளும் செயலாக அழகிய மணலி என்னும் சிவத்தலத்துக்கு ஒரு தினத்தில் எழுந்தருளிச் செல்ல அவர் யார் என்று வினவாமல் அவரை உடனே வணங்கி எல்லாச் சாதிகளில் உள்ள மக்களும் வந்து சேரப் பக்தராகிய நமிநந்தியடிகள் நாயனாரும் அந்த மக்களோடு தியாகராஜப் பெருமானாரை வணங்கி விட்டுத் தம்முடைய திருமடத்தை அடைந்து தேவர்களினுடைய அரசராகிய தியாகராஜப் பெருமானாருடைய பவனியை அந்தத் திருவாரூரில் தரிசித்து அந்த நாயனார் ஆனந்தத்தை அடைந்தார்." பாடல் வருமாறு :

"தேவர் பெருமான் எழுச்சிதிரு
மணலிக் கொருநாள் எழுந்தருள
யாவ ரென்னா துடன்சேவித்
தெல்லாக் குலத்தில் உள்ளோரும்
மேவ அன்பர் தாமும்உடன்
சேவித் தணைந்து விண்ணவர்தம்
காவ லாளர் ஓலக்கம்
அங்கே கண்டு களிப்புற்றார்."

தேவர் - எல்லாத் தேவர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். பெருமான் - தலைவராகிய தியாகராஜப் பெருமானார்; ஒருமை பன்மை மயக்கம். எழுச்சி - திருவாரூரிலிருந்து புறப்பட்டு எழுந்தருளும் செயலாக. திரு - அழகிய; 'செல்வர்கள் வாழும்' எனலும் ஆம். திரு : திணை மயக்கம். மணலிக்கு - மணலி என்னும் சிவத்தலத்துக்கு. ஒருநாள் - ஒரு தினத்தில். எழுந்தருள - எழுந்தருளிச் செல்ல. யாவர் - அவர் யார். என்னாது - என்று வினவாமல். உடன் - உடனே. சேவித்து - அவரை வணங்கி. எல்லாக்குலத்தில் - எல்லாச் சாதிகளிலும். குலம் : ஒருமை பன்மை மயக்கம். உள்ளோரும் -

உள்ள மக்களும்; ஒருமை பன்மை மயக்கம். மேவ - வந்து சேர. அன்பர்தாமும் - பக்தராகிய நமிநந்தியடிகள் நாயனாரும். தாம் : அசை நிலை. உடன் - அந்த மக்களோடு. சேவித்து - தியாகராஜப் பெருமானாரை வணங்கி விட்டு. அணைந்து - தம்முடைய திருமடத்தை அடைந்து. விண்ணவர்தம் - தேவலோகத்தில் வாழும் தேவர்களினுடைய. விண்ணவர் : ஒருமை பன்மை மயக்கம். தம் : அசை நிலை. காவலாளர் - அரசராகிய தியாகராஜப் பெருமானாருடைய. ஓலக்கம் - திருவீதியில் எழுந்தருளும் பவனியை. அங்கு - அந்தத் திருவாரூரில். ஏ : அசை நிலை. கண்டு - தரிசித்து. களிப்புற்றார் - அந்த நாயனார் ஆனந்தத்தை அடைந்தார்.

பிறகு வரும் 23 - ஆம் பாடலின் கருத்து வருமாறு :

'அந்தப் பரிசுத்தராகிய நமிநந்தியடிகள் நாயனார் இராப் பொழுது விடிந்து விடியற்காலம் வர அந்தத் தியாகராஜப் பெருமானாரை வணங்கி விட்டு மறுபடியும் அந்தப் பெருமானார் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்குள் நுழைந்து அந்தத் தியாகராஜப் பெருமானாரை வணங்கி விட்டு அந்தத் திருவாரூரிலிருந்து புறப்பட்டுத் தம்முடைய ஊராகிய ஏமப்பேறூரின் பக்கத்தை அடைந்து பரிசுத்தமாக உள்ள தம்முடைய திருமாளிகைக்கு உள்ளே நுழையாமல் மெழுகைப் போலக் கருமையாகிய இருட்டு அடைந்த அன்று இரவு நேரத்தில் வெளியிடத்தில் அந்த நாயனார் உறக்கத்தை மேற்கொள்ள அவருடைய திருமாளிகையில் நாள் முழுவதும் முப்பத்திரண்டு அறங்களைச் செய்யும் அந்த நாயனாருடைய பத்தினியார் வந்து தாம் உறங்கும் இடத்துக்குள் நுழைய அவரைப் பார்த்து அந்த நாயனார் பின் வருமாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்கிறவர் ஆனார்.' பாடல் வருமாறு :

**" பொழுது வைகச் சேவித்துப்**
**புனிதர் மீண்டும் கோயில்புகத்**

தொழுது தம்மூர் மருங்கணைந்து
தூய மனையுட் புகுதாதே
இழுதும் இருள்சேர் இரவுபுறங்
கடையில் துயில் இல்லத்து
முழுதும் தருமம் புரிமனையார்
வந்துட் புகுத மொழிகின்றார்.''

புனிதர் - அந்தப் பரிசுத்தராகிய நமிநந்தியடிகள் நாயனார். பொழுது - இரவு வேளை. வைக - விடிந்து விடியற்காலம் வர. ச் : சந்தி. சேவித்து - அந்தத் தியாக ராஜப் பெருமானாரை வணங்கி விட்டு. ப் : சந்தி. மீண்டும் - மறுபடியும். கோயில் - அந்தப் பெருமானார் எழுந்தருளியிருக்கும் திருக்கோயிலுக்குள். புக - நுழைந்து; எச்சத்திரிபு. த் : சந்தி. தொழுது - மீண்டும் ஒரு முறை அந்தத் தியாகராஜப் பெருமானாரை வணங்கி விட்டு. தம் - தம்முடைய. ஊர் - ஊராகிய ஏமப்பேறூரின். மருங்கு - பக்கத்தை. அணைந்து - அந்தத் திருவாரூரி லிருந்து புறப்பட்டு அடைந்து. தூய - பரிசுத்தமாக உள்ள. மனையுள் - தம்முடைய திருமாளிகைக்கு உள்ளே. புகுதாது - நுழையாமல். ஏ : அசைநிலை. இழுதும் - மைக்குழம்பை ஒத்திருக்கும்; உவம ஆகுபெயர். இருள் - இருட்டு. சேர் - சேர்ந்த. இரவு - அன்று இராத்திரி நேரத்தில். புறங்கடையில் - தம்முடைய திருமாளிகைக்கு வெளியில் உள்ள ஓரிடத்தில். துயில - அந்த நமிநந்தி யடிகள் நாயனார் உறக்கத்தை மேற்கொள்ள. இல்லத்து - அந்த நாயனாருடைய திருமாளிகையில். முழுதும் - நாள் முழுவதும். தருமம் - முப்பத்திரண்டு அறங்களை; ஒருமை பன்மை மயக்கம். அந்த அறங்கள் இன்ன என்பதை வேறு ஓரிடத்தில் கூறினோம்; ஆண்டுக் கண்டுணர்க. புரி - செய்யும். மனையார் - அந்த நாயனாருடைய தர்ம பத்தினியார். வந்து உட்புகுத - தம்முடைய திருமாளிகை யிலிருந்து வந்து தாம் உறங்கும் இடத்துக்கு உள்ளே நுழைய. மொழிகின்றார் - அந்தப் பெண்மணியாரைப்

பார்த்து அந்த நாயனார் பின் வருமாறு திருவாய் மலர்ந் தருளிச் செய்கிறவர் ஆனார்.

பிறகு வரும் 24 - ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு :

'நமிநந்தியடிகள் நாயனாருடைய தர்மபத்தினியார் அந்த நாயனாரிடம், "பிறைச்சந்திரனைத் தம்முடைய தலையின் மேல் தங்க வைத்தவராகிய அகிலேசுவரருக்குத் தேவரீர் செய்ய வேண்டிய பூசைகளைச் செய்து நிறை வேற்றி விட்டு தேவரீர் ஒவ்வொரு நாளும் புரிந்து வரும் கடமைகளை முறைப்படி அக்கினி காரியத்தை விரும்பி ஔபாசனம் புரிந்துவிட்டுத் திருவமுது செய்துவிட்டுப் பிறகு படுக்கையில் படுத்து உறங்குவீராக!" என்று அந்தப் பெண்மணியார் திருவாய் மலர்ந்தருளிச் செய்யத் தம்முடைய தர்மபத்தினியாராகிய அந்த மாதரசியாரிடம், "தங்களுடைய தலைவனாகிய தியாகராஜப் பெருமான் செல்வர்கள் வாழும் மணலி என்னும் ஊருக்கு எழுந்தருள, அவ்வாறு எழுந்தருளியதைக் கண்டு அந்தத் தியாகராஜப் பெருமானாரை வணங்கி விட்டு அவரோடு எழுந்தருளிச் செல்வதற்காக எல்லா ஊர் களிலும் வாழும் எல்லாச் சாதியினரும் செல்ல அடியேனை அவ்வாறு செல்ல முடியாமல் தீட்டுக் கட்டிப் போட்டு விட்டது" என அந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு.' பாடல் வருமாறு :

"'திங்கள் முடியார் பூசனைகள்
முடித்துச் செய்யும் கடன் முறையால்
அங்கி தனைவேட் டமுதுசெய்து
பள்ளி கொள்வீர்' எனஅவர்க்குத்;
'தங்கள் பெருமான் திருமணலிக்
கெழுச்சி சேவித் துடன்களை
எங்கும் எல்லா ரும்போத
இழிவு தொடக்கிற் றெனை.'என்று."

இந்தப் பாடல் குளகம். திங்கள் - நமிநந்தியடிகள் நாயனாருடைய தர்மபத்தினியார் அந்த நாயனாரிடம்,

பிறைச் சந்திரனை. முடியார் - தம்முடைய தலையின் மேல் தங்க வைத்தவராகிய அகிலேசுவரருக்கு. பூசனைகள் - தேவரீர் செய்ய வேண்டிய பூசைகளை. முடித்து - செய்து நிறைவேற்றி விட்டு. ச் : சந்தி. செய்யும் - தேவரீர் ஒவ்வொரு நாளும் புரிந்து வரும். கடன் - கடமைகளை; ஒருமை பன்மை மயக்கம். அந்தக் கடமைகளாவன : நீராடுதல், ஆடையை உடுத்துக் கொள்ளுதல், காலையில் சந்தியாவந்தனம் புரிதல், மாத்யான்ஹிகம் புரிதல், உணவை உண்ணுதல், மாலையில் சந்தியாவந்தனம் புரிதல், இரண்டு வேளைகளிலும் ஔபாசனம் புரிதல் முதலியவை. முறையால் - முறைப்படி. அங்கிதனை - அக்கினி காரியத்தை. தன் : அசை நிலை; ஔபாசனத்தை. வேட்டு - விரும்பிப் புரிந்து. அமுது செய்து - பிறகு திருவமுது செய்துவிட்டு. பள்ளி கொள்வீர் - பிறகு தேவரீர் படுக்கையில் படுத்துக் கொண்டு உறங்குவீராக. என - என்று அந்தப் பெண்மணியார் திருவாய் மலர்ந் தருளிச் செய்ய; இடைக்குறை. அவர்க்கு - அந்த மாதரசியாரிடம்; உருபு மயக்கம். த் : சந்தி. தங்கள் - தங்களுடைய; என்றது திருவாரூரில் வாழும் மக்களை. பெருமான் - தலைவனாகிய தியாகராஜப் பெருமான். திரு - செல்வர்கள் வாழும்; திணை மயக்கம். மணலிக்கு - மணலி என்னும் ஊருக்கு. எழுச்சி - எழுந்தருள அவ்வாறு எழுந்தருளியதை. சேவித்து - தரிசித்து அந்தத் தியாக ராஜப் பெருமானாரை வணங்கி விட்டு. உடன் - அந்தப் பெருமானாரோடு. நண்ண - எழுந்தருளிச் செல்வதற் காக. எங்கும் - எல்லா ஊர்களிலும் வாழும்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாரும் - பள்ளர், பறையர், சக்கிலியர் முதலியவர்களோடு அந்தணர், க்ஷத்திரர், வைசியர், வேளாளர் ஆகிய யாவரும். போத - செல்ல. இழிவு - அந்த இழிந்த சாதியாரோடு அடியேன் சென்ற தனால் உண்டான தீட்டு. எனை - அடியேனை; இடைக் குறை. தொடக்கிற்று - கட்டிப் போட்டு விட்டது.

என்று - என அந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு.

பிறகு வரும் 25 - ஆம் செய்யுளின் கருத்து வருமாறு :

'அந்த நமிநந்தியடிகள் நாயனார் தம்முடைய தர்ம பத்தினியாரைப் பார்த்து, ''தீட்டுப் பட்டு விட்டது; ஆகை யால் அடியேன் முழுகிவிட்டு அடியேனுக்கு உண்டாகிய பரிசுத்தத்தைப் புரிந்து கொண்டு விட்டு, நம்முடைய திருமாளிகைக்கு உள்ளே நுழைந்து இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களினுடைய தலைவராகிய தியாகராஜப் பெருமானாருக்குப் புரியும் பூசையைச் செய்ய ஆரம்பிக்க வேண்டும்; அதற்காக நீ குளிர்ச்சியை உடைய நல்ல தீர்த்தம் முதலாக உள்ள பொருள்களை எடுத்துக் கொண்டு இந்த இடத்திற்கு வருவாயாக'' என்று அந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய, காதலைப் பெற்ற அவருடைய தர்மபத்தினியாரும் அவற்றை எடுத்துக் கொண்டு வரும் அந்தச் செயலைச் செய்வதற்காகச் சென்று வேகமாகத் திரும்பி வந்து சேர்ந்தார்.' பாடல் வருமாறு :

"'ஆத லாலே குளித்தடுத்த
தூய்மை செய்தே அகம்புகுந்து
வேத நாதர் பூசனையைத்
தொடங்க வேண்டும்; அதற்குநீ
சீத நன்னீர் முதலான
கொண்டிங் கணைவாய்' எனச்செப்பக்
காதல் மனையார் தாமும்அவை
கொணரும் அதற்குக் கடிதணைந்தார்."

ஆதலால் - அந்த நமிநந்தியடிகள் நாயனார் தம்முடைய தர்மபத்தினியாரைப் பார்த்து, "என் மேல் தீட்டுப் பட்டு விட்டது ஆகையால் ஏ : அசை நிலை. குளித்து - அடியேன் முழுகிவிட்டு. அடுத்த - அடியேனுக்கு

உண்டாகிய. தூய்மை - பரிசுத்தத்தை. செய்து - புரிந்து கொண்டு விட்டு. ஏ : அசை நிலை. அகம் - நம்முடைய திருமாளிகைக்கு உள்ளே. புகுந்து - நுழைந்து. வேத - இருக்கு வேதம், யஜுர் வேதம், சாம வேதம், அதர்வண வேதம் என்னும் நான்கு வேதங்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நாதர் - தலைவராகிய தியாக ராஜப் பெருமானாருக்கு. பூசனையை - புரியும் பூசையை. த் : சந்தி. தொடங்க வேண்டும் - அடியேன் செய்ய ஆரம்பிக்க வேண்டும். அதற்கு - அவ்வாறு அடியேன் செய்யும் பூசைக்கு. நீ சீத - நீ குளிர்ச்சியைப் பெற்ற. நல் - நல்ல. நீர் - தீர்த்தம். முதலான - முதலாக உள்ள பண்டங்களை. அவையாவன : ஆசனப் பலகை, தீர்த்த பாத்திரம், அரைத்த மஞ்சள், அட்சதை, அருச்சனைக்கு உரிய பலவகை மலர்கள், உடுத்துக்கொள்ள மடி வஸ்திரம், வாயைத் துடைத்துக் கொள்ளச் சிறியதுண்டு, அங்கவஸ்திரம், நிவேதனத்திற்குச் சுத்த அன்னம், அன்னத்தில் விட நெய், பருப்பு, பலவகைக் கறியமுதுகள், பருப்புக் குழம்பு, மோர்க் குழம்பு, ரஸம், பாயஸம், பச்சடி, பலவகை ஊறுகாய்கள், உண்ட பிறகு கால்களைக் கழுவத் தீர்த்தம் நிரம்பிய செம்பு முதலியவை. கொண்டு - எடுத்துக் கொண்டு. இங்கு - இந்த இடத்திற்கு. அணைவாய் - வருவாயாக. என - என்று; இடைக் குறை. ச் : சந்தி. செப்ப - அந்த நாயனார் திருவாய் மலர்ந்தருளிச் செய்ய. க் : சந்தி. காதல் - அவருடைய காதலைப் பெற்ற. மனையார் தாமும் - தர்மபத்தினியாரும். தாம் : அசை நிலை. அவை - அந்தப் பண்டங்களை. கொணரும் - எடுத்துக் கொண்டு வரும். அதற்கு - அந்தச் செயலைச் செய்வதற்காக. க் : சந்தி. கடிது - சென்று வேகமாக. அணைந்தார் - திரும்பி வந்து சேர்ந்தார்.

அடுத்து வரும் 26 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அவ்வாறு தம்முடைய தர்மபத்தினியார் பூசைக்கு வேண்டிய பண்டங்களை எடுத்துக் கொண்டு வருவதற்காகச் சென்றதாகிய அந்த நேரத்தில் தம்முடைய தலைவனாகிய தியாகராஜப்பெருமான் வழங்கிய திருவருளாலோ, அல்லது தம்முடைய திருமேனியில் உண்டாகியிருக்கும் தளர்ச்சியினால் உண்டாகிய சோர்வினாலோ, இன்னதென்று அடியேம் தெரிந்து கொள்ள முடியவில்லை; சிறிது நேரமும் தாமதம் செய்யாமல் தம்மை மேவிய நித்திரை வந்து சேர எல்லாத் தேவர்களுக்கும் தலைவனாகிய தியாகராஜப் பெருமானுடைய வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் திருவடிகளைத் தியானித்துக் கொண்டே பரிசுத்தமாக உள்ள தியாகராஜப் பெருமானாருக்குப் பக்தராகிய அந்த நமிநந்தியடிகள் நாயனார் உறக்கத்தை மேற்கொண்டார்; அவ்வாறு அந்த நாயனார் உறங்கும் சமயத்தில் அவருடைய சொப்பனத்தில்.' பாடல் வருமாறு :

"ஆய பொழுது தம்பெருமான்
அருளா லேயோ? மேனியினில்
ஏயும் அசைவின் அயர்வாலோ?
அறியோம்; இறையும் தாழாதே
மேய உறக்கம் வந்தணைய
விண்ணோர் பெருமான் கழல்நினைந்து
தூய அன்பர் துயில்கொண்டார்;
துயிலும் பொழுது கனவின்கண்."

இந்தப் பாடலும் குளகம். ஆய - அவ்வாறு தம்முடைய தர்மபத்தினியார் பூசைக்கு வேண்டிய பண்டங்களை எடுத்துக்கொண்டு வருவதற்காகச் சென்றதாகிய. பொழுது - அந்த நேரத்தில். தம் - தம்முடைய. பெருமான் - தலைவனாகிய தியாகராஜப் பெருமான். அருளாலேயோ - வழங்கிய திருவருளாலோ. ஓ : அசை நிலை. மேனியினில் - தம்முடைய திருமேனியில். ஏயும் - உண்டாகி

யிருக்கும். அசைவின் - தளர்ச்சியினால் உண்டாகிய. அயர்வாலோ - சோர்வினாலோ. அறியோம் - இன்னதென்று அடியேம் தெரிந்து கொள்ள வில்லை. 'அடியேம்' என்றவர் சேக்கிழார். இறையும் - கணநேரம். தாழாது - தாமதம் செய்யாமல். ஏ : அசை நிலை. மேய - தம்மை மேவிய. உறக்கம் - நித்திரை. வந்து அணைய - வந்து சேர. விண்ணோர் - தேவ லோகத்தில் வாழும் தேவர்களினுடைய; ஒருமை பன்மை மயக்கம். பெருமான் - தலைவனாகிய தியாகராஜப் பெருமானுடைய. கழல் - வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் திருவடிகளை; ஆகுபெயர். நினைந்து - தியானித்துக்கொண்டு. தூய - பரிசுத்தமான. அன்பர் - தியாகராஜப் பெருமானாருக்குப் பக்தராகிய அந்த நமிநந்தியடிகள் நாயனார். துயில் கொண்டார் - உறக்கத்தை மேற்கொண்டார். துயிலும் - அவ்வாறு அந்த நாயனார் உறங்கும். பொழுது - சமயத்தில். கனவின்கண் - அவர் கண்ட சொப்பனத்தில்.

பிறகு வரும் 27-ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு :

'மேம்பாட்டைப் பெற்ற பான்மை திகழும் திரு வாரூரில் உள்ள ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும் வீதி விடங்கப் பெருமாளுக்குப் பெருமையைப் பெற்ற தம்முடைய பக்தராகிய அந்த நமிநந்தியடிகள் நாயனார் புரியும் பூசைக்கு எழுந்தருளி வருபவரைப் போல அந்த வீதி விடங்கப் பெருமாள் எழுந்தருளி வந்து, "மெய்யான சிவஞானத்தைப் பெற்ற வேதியனாகிய நமிநந்தியே, திருவாரூரில் பிறந்தவர்கள் எல்லாரும் எம்முடைய கணங்கள் ஆக விளங்கும் இயல்பை நீ பார்ப்பாயாக." என அந்தப் பெருமாள் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு அந்த இடத்திலிருந்து அந்த நாயனாருக்கு எதிரில் அகன்று மறைந்தருளினார்.' பாடல் வருமாறு :

"மேன்மை விளங்கும் திருவாரூர்
வீதி விடங்கப் பெருமான்தாம்
மான அன்பர் பூசனைக்கு
வருவார் போல வந்தருளி
'ஞான மறையோய், ஆரூரில்
பிறந்தார் எல்லாம் நம்கணங்கள்
ஆன பரிசு காண்பாய்'என்
றருளிச் செய்தங் கெதிரகன்றார்."

மேன்மை - மேம்பாட்டைப் பெற்றிருக்கும் பான்மை. விளங்கும் - திகழும். திருவாரூர் - திருவாரூரில் உள்ள ஆலயத்தில் எழுந்தருளியிருக்கும். வீதிவிடங்கப் பெருமாள் தாம் - வீதி விடங்கப் பெருமாளுக்கு. தாம் : அசைநிலை. மான - பெருமையைப் பெற்ற. அன்பர் - தம்முடைய பக்தராகிய அந்த நமிநந்தி அடிகள் நாயனார். பூசனைக்கு - புரியும் பூசைக்கு. வருவார் போல - எழுந்தருளி வருபவரைப் போல. வந்தருளி - அந்த வீதிவிடங்கப் பெருமாள் எழுந்தருளி வந்து. ஞான - உண்மையான சிவஞானத்தைப் பெற்ற. மறையோய் - வேதியனாகிய நமிநந்தியே. ஆரூரில் - இந்தத் திருவாரூரில். பிறந்தார் - பிறந்த மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாம் - யாவரும். நம் - எம்முடைய. கணங்கள் - சிவகணங்கள். ஆன - ஆக விளங்கும். பரிசு - இயல்பை. காண்பாய் - நீ பார்ப்பாயாக. என்று - என. அருளிச் செய்து - அந்த வீதிவிடங்கப் பெருமாள் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு. அங்கு - அந்த இடத்திலிருந்து. எதிர் - அந்த நாயனாருக்கு எதிரில். அகன்றார் - அகன்று மறைந்தருளினார்.

பிறகு வரும் 28 - ஆம் பாடலின் உள்ளுறை வருமாறு:

'அவ்வாறு முதல் தேவராகிய அந்த வீதி விடங்கப் பெருமாள் எழுந்தருளி மறைந்து போக, அதனைத் தெரிந்து கொண்டவராகிய அந்த நமிநந்தியடிகள் நாயனார், "அடியேன் இந்த இராத்திரி வேளையில்

தியாகராஜப் பெருமானாருக்கு அருச்சனையைப் புரியாமல் தவறான எண்ணத்தை எண்ணிக் கொண்டிருந்தேன்.'' என்று அந்த நாயனார் எண்ணி அச்சத்தை அடைந்து துயிலிலிருந்து விழித்துக் கொண்டு எழுந்து நின்றவாறே அந்தத்தியாகராஜப் பெருமானாருக்கு உரிய வழிபாட்டைப் புரிந்து தம்முடைய தர்மபத்தினியாராகிய மாதரசி யாருக்கும் நடந்ததை நடந்தவாறு திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு இரவு அகன்று விடியற்காலம் வந்த போது வேகத்தோடு தம்முடைய தலைவராகிய தியாகராஜப் பெருமானார் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவாரூருக்குள் நுழையவே, தமக்கு எதிரில் அந்த நகரத்தை அந்த நாயனார் பார்ப்பவரானார்.' பாடல் வருமாறு :

**" ஆதி தேவர் எழுந்தருள**
**உணர்ந்தார், 'இரவர்ச் சனைசெய்யா**
**தேதம் நினைந்தேன்.' எனஅஞ்சி**
**எழுந்த படியே வழிபட்டு**
**மாத ரார்க்கும் புகுந்தபடி**
**மொழிந்து விடியல் விரைவோடு**
**நாத னார்தம் திருவாரூர்**
**புகுத எதிர்அந் நகர்காண்பார்.''**

ஆதி - அவ்வாறு முதல். தேவர் - தேவராகிய அந்த வீதிவிடங்கப் பெருமாள். எழுந்தருள - எழுந்தருளி மறைந்து போக. உணர்ந்தார் - அதனைத் தெரிந்து கொண்டவராகிய அந்த நமிநந்தியடிகள் நாயனார். இரவு-அடியேன் இந்த இராத்திரி வேளையில். அர்ச்சனை- தியாகராஜப் பெருமானாருக்கு அருச்சனையை செய்யாது - புரியாமல். ஏதம் - தவறான எண்ணத்தை, என்றது, 'தீட்டுப்பட்டு விட்டதே' என்று எண்ணிய எண்ணத்தை. நினைந்தேன் - எண்ணிக் கொண்டிருந் தேன். என - என்று; இடைக்குறை. அஞ்சி - அச்சத்தை அடைந்து. எழுந்த படியே - தாம் துயிலிலிருந்து விழித்துக்

கொண்டு எழுந்து நின்றவாறே. வழிபட்டு - அந்தத் தியாகராஜப் பெருமானாருக்கு உரிய வழிபாட்டைப் புரிந்து விட்டு. மாதரார்க்கும் - தம்முடைய தர்மபத்தினியாராகிய மாதரசியாருக்கும். புகுந்தபடி - நடந்ததை நடந்தவாறே மொழிந்து - திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு விடியல் - இராத்திரி நேரம் அகன்று விடியற்காலம் வந்த போது. விரைவோடு - வேகத்தோடு. நாதனார் தம் - தம்முடைய தலைவராகிய தியாகராஜப் பெருமானார் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். தம் : அசை நிலை. திருவாரூர் - திருவாரூருக்கு உள்ளே. புகுத - நுழையவே. எதிர் - தமக்கு எதிரில். அந்நகர் - அந்தத் திருவாரூர் நகரத்தை. காண்பார் - அந்த நாயனார் பார்ப்பவரானார்.

பிறகு உள்ள 29 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'எல்லாக் கடவுளர்களுக்கும் மேலானவராகிய வீதி விடங்கப் பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும் திருவாரூரில் பிறந்து வாழும் மக்கள் யாவரும் மையை வைத்தாற் போன்ற நீல மணியை ஒத்த திருக் கழுத்தை உடையவராகிய தியாகராஜப் பெரு மானாருடைய வடிவமே ஆகிப்பெருகி எழும்பிரகாசத்தால் வலிமையை வைத்துப் பொருந்திய திருமேனிகளைப் பெற்றவர்களாக விளங்கும் இயல்பைப் பார்த்து தம்முடைய தலையின்மேல் குவித்த கைகளை அஞ்சலியாக வைத்து அந்தத் தியாகராஜப் பெருமானாரைக் கும்பிட்டு விட்டு அச்சத்தை அடைந்து அந்த நமிநந்தியடிகள் நாயனார் தரையின் மேல் விழுந்து அந்தப் பெருமானாரை வணங்கி விட்டுப் பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு ஆனந்தத்தில் தலை சிறந்து நின்றார்.' பாடல் வருமாறு :

" தெய்வப் பெருமான் திருவாரூர்ப்
பிறந்து வாழ்வார் எல்லாரும்
மைவைத் தனைய மணிகண்டர்
வடிவே யாகிப் பெருகொளியால்

மொய்வைத் தமர்ந்த மேனியராம்
பரிசு கண்டு முடிகுவித்த
கைவைத் தஞ்சி அவனிமிசை
விழுந்து பணிந்து களிசிறந்தார்.''

தெய்வ - எல்லாக் கடவுளர்களுக்கும்; ஒருமை பன்மை மயக்கம். ப்: சந்தி. பெருமான் - மேலானவராகிய வீதி விடங்கப் பெருமான் திருக்கோயில் கொண்டு எழுந்தருளி யிருக்கும். திருவாரூர் - திருவாரூர் என்னும் சிவத்தலத்தில். ப்:சந்தி. பிறந்து - மானிடர்களாகப் பிறந்து. வாழ்வார் - வாழும் மக்கள்; ஒருமை பன்மை மயக்கம். எல்லாரும் - யாவரும். மை - மையை. வைத்தனைய - வைத்தாற் போன்ற. மணி-நீலமணியை ஒத்த. கண்டர்-திருக்கழுத்தை உடையவராகிய தியாகராஜப் பெருமானாருடைய. வடிவே ஆகி - வடிவமே ஆகி. ப்: சந்தி. பெருகு - பெருகி எழும்; ஒளியால் - பிரகாசத்தால். மொய் - வலிமையை. வைத்து அமர்ந்த - வைத்துப் பொருந்திய. மேனியர் ஆம் - திருமேனிகளைப் பெற்றவர் களாக விளங்கும். மேனியர்: ஒருமை பன்மை மயக்கம். பரிசு - இயல்பை. கண்டு - அந்த நமிநந்தியடிகள் நாயனார் பார்த்து. முடி - தம்முடைய தலையின் மேல். குவித்தகை - குவித்த கைகளை. கை: ஒருமை பன்மை மயக்கம். வைத்து - அஞ்சலியாக வைத்து அந்தத் தியாக ராஜப் பெருமானாரைக் கும்பிட்டு விட்டு. அஞ்சி - அச்சத்தை அடைந்து. அவனிமிசை - அந்த நாயனார் தரையின் மேல். விழுந்து - விழுந்து பிறகு. பணிந்து - அந்தப் பெருமானாரை வணங்கி விட்டு. களி - பிறகு தரையிலிருந்து எழுந்து நின்று கொண்டு ஆனந்தத்தில். சிறந்தார் - தலை சிறந்து நின்றார்.

பிறகு வரும் 30 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்த நமிநந்தியடிகள் நாயனார் அந்தத் திருவாரூரில் வாழும் மக்கள் சிவபெருமானுடைய வடிவங்களை உடையவர்களாக இருந்து பிறகு தங்களுடைய சிவ வடிவங்

களை மாற்றிக் கொண்டு பழைய படியே சாதாரண மக்களாக வாழ்வதையும் பார்த்து பரமேசுவரராகிய தியாகராஜப் பெருமானாரிடத்தில், "அடியேன் புரிந்த தவற்றைத் தேவரீர் பொறுத்துக் கொண்டு தேவரீருடைய திருவருளை வழங்க வேண்டும்." என்று திருவாய் மலர்ந் தருளிச் செய்து விட்டு அந்த நாயனார் அந்தத் தியாக ராஜப் பெருமானாரை வணங்கி விட்டு அந்தப் பெருமானார் வழங்கிய திருவருளினால் தம்முடைய குடியிருப்பையும் ஏமப்பேறூரிலிருந்து திருவாரூருக்கு மாற்றி அந்த நகரத்துக்குள் நுழைந்து தம்முடைய வாழ்க்கையை நடத்துபவராகி இந்தப் பூமண்டலத்தில் நீண்ட காலம் பெருகி விளங்கும் பல திருத்தொண்டுகளை நடக்குமாறு புரிந்து கொண்டு அந்தத் திருவாரூரில் வாழ்பவரானார்.' பாடல் வருமாறு :

" படிவம் மாற்றிப் பழம்படியே
நிகழ்வும் கண்டு பரமர்பால்
'அடியேன் பிழையைப் பொறுத்தருள
வேண்டும்.' என்று பணிந்தருளால்
குடியும் திருவா ரூரகத்துப்
புகுந்து வாழ்வார் குவலயத்து
நெடிது பெருகும் திருத்தொண்டு
நிகழச் செய்து நிலவுவார்."

படிவம் - அந்த நமிநந்தியடிகள் நாயனார் அந்தத் திருவாரூரில் வாழும் மக்கள் சிவபெருமானுடைய வடிவங் களைப் பெற்றவர்களாக இருந்து பிறகு தங்களுடைய சிவவடிவங்களை; ஒருமை பன்மை மயக்கம். மாற்றி - மாற்றிக் கொண்டு. ப் : சந்தி. பழம்படியே - முன்பு இருந்த வண்ணமே. நிகழ்வும் - சாதாரண மக்களாக வாழ்வதையும். கண்டு - அந்த நாயனார் பார்த்து. பரமர் பால் - பரமேசுவரராகிய தியாகராஜப் பெருமானாரிடத்தில்; அடியேன் பிழையை - அடியேன் புரிந்த தவற்றை. என்றது திருவாரூர்

வாழும் மக்களைச் சிவபெருமானுடைய வடிவங்களைப் பெற்றவர்கள் என்று எண்ணாததை. பொறுத்து-தேவரீர் பொறுத்துக் கொண்டு. அருளவேண்டும் - தேவரீருடைய திருவருளை வழங்க வேண்டும். என்று - எனத் திருவாய் மலர்ந்தருளிச் செய்து விட்டு, பணிந்து - அந்தத் தியாக ராஜப் பெருமானாரை வணங்கி விட்டு. அருளால் - அந்தப் பெருமானார் வழங்கிய திருவருளினால். குடியும் - தம்முடைய குடியிருப்பையும். திருவாரூரகத்து - ஏமப் பேறூரிலிருந்து திருவாரூருக்கு மாற்றி அந்த நகரத்துக்கு உள்ளே. புகுந்து - நுழைந்து. வாழ்வார் - தம்முடைய வாழ்க்கையை நடத்துபவராகி; முற்றெச்சம். குவலயத்து- இந்தப் பூமண்டலத்தில். நெடிது - நீண்ட காலம். பெருகும் - பெருகி விளங்கும். திருத்தொண்டு - பலவகை யான திருத்தொண்டுகளை; ஒருமை பன்மை மயக்கம். நிகழ - நடக்குமாறு. செய்து - புரிந்து கொண்டு. நிலவு வார் - அந்த நாயனார் அந்தத் திருவாரூரில் வாழ்பவரானார்.

பிறகு உள்ள 31 - ஆம் கவியின் உள்ளுறை வருமாறு :

'அந்த நமிநந்தியடிகள் நாயனார் திருநீற்றை அணிப வராகிய தியாகராஜப் பெருமானாருடைய அடியவர் களுக்கு நீண்ட காலம் வரையறையாகவே வேறு வேறாக அந்த அடியவர்கள் விரும்புபவையாகிய எல்லாச் செயல் களையும் புரிந்து கொண்டு அந்தத் திருவாரூரில் தம்முடைய வாழ்க்கையை நடத்தி வருவதால் மேலும் ஏறி வரும் சிறப்பைப் பெற்ற அழகிய பாம்புப் புற்றில் எழுந்தருளி யிருந்தவராகிய வன்மீக நாதருடைய தொண்டர்களுக்கு ஓர் உரையாணி என்று பாடப் பெறும் பாக்கியத்தைத் திரு நாவுக்கரசு நாயனார் பாடியருளப் பெறும் பாக்கியத்தை அடைந்த பெருமையைப் பெற்றவர் அந்த நாயனார்.' பாடல் வருமாறு :

"நீறு புனைவார் அடியார்க்கு
நெடுநாள் நியதி யாகவே

வேறு வேறு வேண்டுவன
எல்லாம் செய்து மேவுதலால்
ஏறு சிறப்பின் மணிப்புற்றில்
இருந்தார், 'தொண்டர்க் காணி' எனும்
பேறு திருநா வுக்கரசர்
விளம்பப் பெற்ற பெருமையினார்.''

*நீறு* - விபூதியை. *புனைவார்* - அணிபவராகிய தியாகராஜப் பெருமானாருடைய. *அடியார்க்கு* - அடியவர் களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். *நெடுநாள்* - நீண்ட காலம். *நியதியாகவே* - வரையறையாகவே. *வேறு வேறு* - வேறுவேறாக. *வேண்டுவன எல்லாம்* - அந்த அடியவர்கள் விரும்புபவையாகிய எல்லாச் செயல்களையும். *செய்து* - அந்த நமிநந்தியடிகள் நாயனார் புரிந்து கொண்டு. *மேவுதலால்* - அந்தத் திருவாரூரில் தம்முடைய வாழ்க்கையை நடத்தி வருவதால், *ஏறு* - மேலும் மேலும் ஏறி வரும். *சிறப்பின்* - சிறப்பைப் பெற்ற. *மணி* - அழகிய. ப்: சந்தி. *புற்றில்* - பாம்புப் புற்றில். *இருந்தார்* - எழுந்தருளியிருந்தவராகிய வன்மீக நாதருடைய. *தொண்டர்க்கு* - திருத்தொண்டர்களுக்கு; ஒருமை பன்மை மயக்கம். *ஆணி* - உரையாணிப் பொன். *எனும்* - என்று பாடப் பெறும்; இடைக்குறை. *பேறு* - பாக்கியத்தை. *திருநாவுக்கரசர்* - திருநாவுக்கரசு நாயனார். *விளம்ப* - பாடியருள. ப்: சந்தி. *பெற்ற* - பெறும் பாக்கியத்தை அடைந்த. *பெருமையினார்* - பெருமையைப் பெற்றவர் அந்த நமிநந்தியடிகள் நாயனார்.

இந்தப் பாடல் குறிப்பிட்ட அந்தக் கருத்தைப் புலப் படுத்தும் பாசுரம் திருநாவுக்கரசு நாயனார் திருவாரூரைப் பற்றிப் பாடிய திருவிருத்தங்களில் இரண்டாவதாக உள்ளது. அந்தத் திருவிருத்தம் வருமாறு:

'' ஆராய்ந் தடித்தொண்டர் ஆணிப்பொன்
ஆரூர் அகத்தடக்கிப்

பாரூர் பரிப்பந்தம் பங்குனி
உத்திரம் பாற்படுத்தான்
ஆரூர் நறுமலர் நாதன்
அடித்தொண்டன் நம்பிநந்தி
நீரால் திருவிளக் கிட்டமை
நீணா டறியும் அன்றே.''

அடுத்து உள்ள 32 - ஆம் செய்யுளின் உள்ளுறை வருமாறு :

'இத்தகைய விதங்களால் பல திருப்பணிகளை எல்லா உலகங்களில் வாழ்பவர்களும் வணங்கிப் பாராட்டுமாறு புரிந்து கொண்டு நல்ல பான்மைகள் தம்முடைய திருவுள்ளத்தில் பெருகி எழும் அந்த நமிநந்தி அடிகள் நாயனார் இனிமை நிரம்பிய திருவாரூரில் உள்ள ஓர் அழகிய தெருவில் தம்முடைய தலையின் மேல் பிறைச் சந்திரனும் அழகிய கங்கையாறும் அலையுமாறு எழுந்தருளு பவராகிய தியாகராஜப் பெருமானார் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும் திருவாரூரை ஆட்சி புரியும் அரசராகிய தியாகராஜப் பெருமானாருடைய திருவடி களின் நிழலில் மிக்கு விளங்கும் வளரும் தங்க நிறத்தைப் பெற்ற சோதியுருவமாக நிலை பெற்று அந்த நாயனார் விளங்கினார்.' பாடல் வருமாறு :

''இன்ன வகையால் திருப்பணிகள்
எல்லா உலகும் தொழச்செய்து
நன்மை பெருகும் நமிநந்தி
அடிகள் நயமார் திருவீதிச்
சென்னி மதியும் திருநதியும்
அலைய வருவார் திருவாரூர்
மன்னர் பாத நீழல்மிகும்
வளர்பொற் சோதி மன்னினார்.''

இன்ன - இத்தகைய. வகையால் - விதங்களால்; ஒருமை பன்மை மயக்கம். திருப்பணிகள் - பல திருப்பணி

களை. எல்லா உலகும் - எல்லா உலகங்களிலும் வாழ்பவர் களும். உலகம் : ஒருமை பன்மை மயக்கம்; இடஆகு பெயர். தொழ - வணங்கிப் பாராட்டுமாறு. ச் : சந்தி. செய்து - புரிந்து கொண்டு. நன்மை - நல்ல பான்மைகள்; ஒருமை பன்மை மயக்கம். பெருகும் - தம்முடைய திருவுள்ளத்தில் பெருகி எழும். நமிநந்தி அடிகள் - அந்த நமிநந்தி அடிகள் நாயனார். நயம் ஆர் - இனிமை நிரம்பிய. திரு - திருவாரூரில் உள்ள ஓர் அழகிய. வீதி - தெருவில். ச் ; சந்தி. சென்னி - தம்முடைய தலையின் மேல். மதியும் - பிறைச் சந்திரனும். திரு - அழகிய. நதியும் - கங்கையாறும். அலைய - அலையுமாறு. வரு வார் - எழுந்தருளி வருபவராகிய தியாகராஜப் பெருமானார் திருக்கோயில் கொண்டு எழுந்தருளியிருக்கும். திருவாரூர் - திருவாரூரை, மன்னர் - ஆட்சி புரிந்தருளும் அரசராகிய தியாகராஜப் பெருமானாருடைய. பாத - திருவடிகளினுடைய; ஒருமை பன்மை மயக்கம். நீழல் - நிழலில். மிகும் - மிகுதியாக விளங்கும். வளர் - வளரும். பொன் - தங்க நிறத்தைப் பெற்ற. சோதி - சோதி உருவமாக. மன்னினார் - அந்த நாயனார் நிலை பெற்று விளங்கினார்; சிவலோக பதவியைப் பெற்றார் என்பது கருத்து.

இந்த நமிநந்தி அடிகள் நாயனார் புராணத்தில் இறுதியில் வரும் 33 - ஆம் பாடல் சுந்தர மூர்த்தி நாயனாருடைய துதியாக அமைந்துள்ளது. அதன் கருத்து வருமாறு :

'இந்தச் செந்தமிழ் நாட்டில் வாழும் மக்கள் தெரிந்து கொள்ளும் வண்ணம் முன் ஒரு காலத்தில் நல்ல வாழ் நாள்கள் முடிந்து போன திருமாலுக்குரிய ஐந்து ஆயுதங் களாகிய கதை, சங்கு, சக்கரம், வாள், வில் என்னும் ஐம்படைத் தாலியைப் பூட்டுதல் நிரம்பிய மார்பைப் பெற்ற ஒரு வேதியரினுடைய சிறிய புதல்வனை அவனை விழுங்கிய ஓர் 'ஒப்பற்ற பெரிய புக்கொளியூர் அவிநாசியில்

உள்ள தாள்களைப் பெற்ற செந்தாமரை மலர்களும் வெண்டாமரை மலர்களும் மலர்ந்திருக்கும் ஒரு மடுவில் முதலை வாயிலிருந்தும் மீட்டருளியவராகிய சுந்தர மூர்த்தி நாயனாருடைய வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் திருவடிகளைத் தியானிப்பவர்களை மீண்டு வராத வழியிலிருந்து மீளுமாறு புரிபவை அந்தச் சுந்தர மூர்த்தி நாயனாருடைய திருவடிகள்.' பாடல் வருமாறு :

"நாட்டார் அறிய முன்னாளில்
நன்னாள் உவந்த ஐம்படையின்
பூட்டார் மார்பிற் சிறியமறைப்
புதல்வன் தன்னைப் புக்கொளியூர்த்
தாட்டா மரையின் மடுவின்கண்
தனிமா முதலை வாய்நின்றும்
மீட்டார் கழல்கள் நினைவாரை
மீளா வழியின் மீட்பனவே."

நாட்டார் - இந்தச் செந்தமிழ் நாட்டில் வாழும் ...கள்; ஒருமை பன்மை மயக்கம். அறிய - தெரிந்து ...ள்ளும் வண்ணம். முன் நாளில் - முன் ஒரு காலத்தில். ந...நாள் - தன்னுடைய நல்ல வாழ் நாள்கள்; ஒருமை பன்...ம மயக்கம். உவந்த - முடிந்து போன. ஐம்படையின் - திருப...வுக்கு உரிய கதை, சங்கு, சக்கரம், வாள், வில் என்னு... ஐம்படைத் தாலியினுடைய. பூட்டு - பூட்டுதல்; முதனில...த் தொழிற் பெயர். ஆர் - அமைந்த. மார்பின் மார்பைப் பெற்ற. சிறிய மறைப்புதல்வன் தன்னை - ...ரு வேதியனுடைய சிறிய குமாரனை. மறை : திணை ம...க்கம். தன் : அசை நிலை. ப் : சந்தி. புக்கொளியூர் - புக்கொளியூர் அவிநாசியில் உள்ள. தாள் - தாள்களைப் பெற்ற; ஒருமை பன்மை மயக்கம். தாமரையின் - செந்தாமரை மலர்களும், வெண்டாமரை மலர்களும் மலர்ந்திருக்கும்; ஒருமை பன்மை மயக்கம். மடுவின்கண் - ஒரு மடுவில். தனி - ஒப்பற்ற. மா -

பெரிய. முதலைவாய் நின்றும் - ஒரு முதலை வாயி லிருந்தும். மீட்டார் - மீட்டருளியவராகிய சுந்தர மூர்த்தி நாயனாருடைய. கழல்கள் - வெற்றிக் கழலைப் பூண்டு கொண்டு விளங்கும் திருவடிகளை; ஆகு பெயர். நினைவாரை - தியானிக்கும் மக்களை; ஒருமை பன்மை மயக்கம். மீளா - மீண்டு வாராத. வழியின் - வழியிலிருந்து. மீட்பன - மீளுமாறு புரிபவை அந்தச் சுந்தரமூர்த்தி நாயனாருடைய திருவடிகள். ஏ : சுற்றசை நிலை.

# பிழை திருத்தம்

| பக்கம் | வரி | பிழை | திருத்தம் |
|---|---|---|---|
| 58 | 1, 12, 21, 22 | நீதிபதி | நிதிபதி |
| 59 | 24 | ,, | ,, |
| 60 | 3, 18 | ,, | ,, |
| 61 | 3, 13, 28 | ,, | ,, |
| 72 | 5, 29 | 'அந்தப் பரமதத்தன்' என்பதை நீக்கி விடுக. | |
| | 13 | பரமதத்தர் | பரமன் அன்பர் |
| | 14 | ஒருவனுடைய | பரமதத்தருடைய |
| 73 | 9 | பரமதத்தர் | பரமனன்பர் |
| | 11, 12 | காரைக்காலில் வாழும் ஒரு பக்தருடைய | ஒரு பக்தர் |
| | 17, 19 | பரமதத்தருடைய | பரமனன்பருடைய |
| | 20 | 'தம்முடைய' என்பதை நீக்கி விடுக. | |
| 74 | 10 | பரமதத்தருடைய | பரமன் அன்பருடைய |
| 75 | 2 | அடியவராகிய பரமதத்தரே | அடியவரே |
| | 22 | அடியவராகிய பரமதத்தரே | அடியவரே |
| 76 | 1, 20 | தனதத்தன் | பரமதத்தன் |
| 78 | 22 | ,, | ,, |
| 79 | 13 | ,, | ,, |
| 96 | 22 | கடற்கரைப் -பட்டினமாகிய -நாகப்பட்டினத்துடைய | கடற்கரைப்பட்டினத்தின் |
| | 26 | நாகப்பட்டினத்தில், | பட்டினத்தில் |
| 97 | 2 | 'நாகப்பட்டினமாகிய' என்பதை நீக்கிவிடுக. | |
| | 15 | நாகப்பட்டினத்தில் | பட்டினத்தில் |
| | 26 | 'நாகப்பட்டினமாகிய' என்பதை நீக்கிவிடுக. | |
| 98 | 13 | 'நாகப்பட்டினத்தில்' | ஊரில் |
| 99 | 11 | ,, | ,, |
| | 31 | ,, | அந்நகரில் |
| 100 | 24 | ,, | ,, |
| 103 | 2, 3 | 'இந்த நாகப்பட்டினத்தை அடைந்து' என்பதை நீக்கி விடுக. | |
| | 22 | நாகப்பட்டினத்தில் | ஊரில் |
| 109 | 10, 30 | ஆட்கள் | ஆள் |
| 165 | 26 | விழுந்த | விழுந்து |
| 166 | 25 | விழுந்த | விழுந்து |

## சிறப்புப் பெயர்

## முதலியவற்றின்

# அகராதி

அகிலேசுவரர், 279, 294
அட்டமாசித்தி, 27
அப்பூதியடிகள் நாயனார், 142
அமணர், 283, 296
அயவந்தீசுவரர், 214
அருகத் பரமேஷ்டி, 14, 15, 285
அற்புதத்திருவந்தாதி, 119
அன்மொழித்தொகை, 58
அனல் வாதம், 16
ஆகமங்கள், 298
ஆகாய துந்துபி, 118
ஆகுபெயர், 53, 103, 106
ஆபத்சகாயேசுவரர், 148, 157, 158 202, 205
ஆண்டாள், 101
இந்தளப்பண், 191
இமயவல்லி, 126, 127
இருஞாலக் கொடை, 31
இலக்குமி, 48, 49
இளங்கோவடிகள், 99
உத்தர காண்டம், 26, 46, 51
உமாதேவி, 20
உரையாணி, 315
ஊர்த்துவதாண்டவ மூர்த்தி, 52, 54, 55, 67, 69-77
எண்திசை, 124
ஏமப்பேறூர், 270, 302
ஔபாசனம், 305
கண்டராதித்தர், 225
கம்பர், 26, 46, 99, 101
கயிலாயமலை, 126
கருவூர்த் தேவர், 225
கவுண்டின்ய கோத்திரம், 258
கன்னி நாடு, 96
காரைக்கால், 47, 48, 52, 65, 66, 93
காரைக்காலம்மை, 44, 45.
கிருபாபுரீசன், 22, 28
குபேரன், 100
குலச்சிறை நாயனார், 6, 7, 9, 10, 11
குலசேகரப் பெருமாள், 26
கொடுங்கோளூர், 29, 36
கொல்லிக் கௌவாணம், 23

கோவணம், 12
சங்கநிதி பதுமநிதி, 100
சங்கரன், 9
சண்பை, 245
சமணர்கள், 160
சாத்தமங்கை, 208, 210
சாமுத்திரிகா சாத்திரம், 56
சிலந்திப்பூச்சி, 229
சிவஞானமுனிவர், 26
சிவபிரான், 20
சிவபெருமான், 27, 29
சீகாழி, 15
சுந்தரமூர்த்தி நாயனார், 6, 7, 21, 22, 23, 24, 30, 41, 42
செட்டிப்பிள்ளை, 124
செந்தமிழ்நாடு, 108, 124
சேக்கிழார், 26
சேந்தனார், 225
சேரமான் பெருமாள் நாயனார், 31, 99
சோமசுந்தரக் கடவுள், 7, 13
தண்டியடிகள், 295, 296
தருக்கவாதம், 16
தனதத்தன், 48, 59, 62, 64
திங்களூர், 148, 203
தியாகராஜப் பெருமாள், 274
திரிசூலம், 125
திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார், 15, 16, 25, 45, 46, 49, 246—256
திருத்தக்க தேவர், 26
திருத்தொண்டத் தொகை, 23
திருநாவலூர், 41
திருநாவுக்கரசு நாயனார், 25, 45, 60, 144—187, 315
திருநாவுக்கரசு (அப்பூதி அடிகள் மகன்) 175—187
திருநீலகண்ட யாழ்ப்பாணர், 246
திருநீலநக்க நாயனார், 208, 209
திருப்பழனம், 148, 157, 158, 202, 203
திருமண மேற்குடி, 5
திருமூலர், 50, 225
திருமால், 23, 24
திருமாளிகை, 7, 8, 20, 21, 56, 57, 70, 71
திருவஞ்சைக்களம், 30, 31,
திருவதிகை வீரட்டானே சுவரர், 145, 147, 152, 155, 164
திருவாமூர், 172
திருவாரூர், 276, 293
திருவாரூர் அரநெறி, 279
திருவாலங்காடு, 115, 132, 135
திருவாலங்காட்டு மூத்த திருப்பதிகம், 138
திருவாலியமுதனார், 225

திருவிரட்டை மணி மாலை, 121
திருவெண்ணெய்நல்லூர், 28
திணை மயக்கம், 8, 65, 75, 169
தேவர் சிங்கப்பெருமான், 153
நக்கீரர், 45
நடராஜப் பெருமான், 52
நம்பியாண்டார் நம்பி, 26, 226
நம்மாழ்வார், 26
நமிநந்தியடிகள் நாயனார், 267
நாகப் பட்டினம், 57, 58, 65, 67, 68
நான்முகன், 24
நிதிபதி, 60, 61
நெடுமாறன், 12, 13
பங்கினியுத்திரம், 298, 299
பட்டமகிஷி, 14
பட்டினத்துப் பிள்ளையார், 26, 46, 50, 99, 226
பஞ்சசபை, 135
பஞ்சாட்சரம், 12
பரசுராமர், 31
பரமதத்தன், 59—65—104
பரவை, 23, 24
பலாமரம், 135
பழையனூர், 135
பாண்டிநாடு, 104
பார்வதிதேவியார், 128, 148, 149
பிரமநாடி, 43
புக்கொளியூர் அவிநாசி, 318
புண்யாகவாசனம், 211
புனல்வாதம், 16
புனிதவதி, 49—104
பூகம் கமுகு, 6
பூந்தராய், 243
பூந்துருத்திகாடவநம்பி, 225
பெரியாழ்வார், 26
பெருமிழலை, 17, 18
பெருமிழலைக்குறும்ப நாயனார், 16—23
மங்கையர்க்கரசி, 14
மணலி, 301
மாணிக்கவாசகர், 25, 50
முப்பத்திரண்டு அறம், 302, 303
மூன்று கோட்டைகள், 276
மூன்று நெருப்புகள், 213
மேருமலை, 157
வண்டார்குழலியம்மை, 135
வன்மீகநாதர், 278, 297
வன்தொண்டர், 6, 7, 41, 42
வாகீசர், 166, 167, 207
விற்பூட்டுப்பொருள்கோள், 133
வீதிவிடங்கப்பெருமாள், 299
வேதங்கள், 74


—: o :—